தமிழ் வாக்கியங்களின் பொருண்மை அமைப்பு

பேராசிரிர் முனைவர் ச. இராசேந்திரன்

அமிர்தா விஷ்வ வித்யாபீடம் (அமிர்தா பல்கலைக் கழகம்)

rajushush@gmail.com

கோயம்புத்தூர்

மே 2015

முன்னுரை

பல ஆண்டுகளாக எனது கணிப்பொறியில் தூங்கிக்கொண்டிருந்த "தமிழ் வாக்கியங்களின் பொருண்மை அமைப்பு" என்ற எனது ஆய்வேட்டிற்குத் தற்போது உயிர் அளித்துள்ளேன். இதைச் செம்மைப் படுத்தி நூலாக வெளியிடவேண்டும் என்பது எனது அவா. காலம் கடந்து கொண்டிருக்கின்றது. காலன் அழைத்துச் சென்றுவிடுவானோ என்ற பயம். பணி ஓய்வுக்குப் பின்னர் இத்தகைய ஆய்வுகளைச் செம்மைப் படுத்தி வெளியிடவேண்டும் என்று எண்ணியிருந்தேன். தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் 2011 ஜூனில் ஓய்வு பெற்ற உடன் அவ்வாண்டு ஜூலையிலேயே கோயம்புத்தூர் அமிர்தா பல்கலைக் கழகத்தில் பணிக்குச் சேர்ந்து பணியாற்ற வேண்டிய சூழல். எனவே எனது ஆய்வேட்டைத் திருத்த காலம் கிடைக்கவில்லை. இதில் பிழைகள் பல இருபது எனக்குத் தெரியும். டைமண்ட் பாண்டில் அன்று தட்டச்சு செய்தேன். இப்போது அதில் தட்டச்சு செய்ய என்னால் இயலாது. யுனிகோடுக்கு மாறிவிட்டேன். எனவே டைமண்ட் பாண்டில் பிழை திருத்தம் செய்ய இயலவில்லை. எனவே ஆய்வேட்டை பிடிஎஃப் ஆணவமாக மாற்றி இங்கு தருகின்றேன். ஆங்கிலம் அறியாமல் தமிழ் மட்டும் அறியும் மாணவர்களுக்கு இது பயன்படக்கூடும். பயன்பட்டால் வாழ்த்துங்கள்; இல்லையென்றால் வீழ்த்துங்கள் (பழிகூறுங்கள்).

அன்புடன்

ச. இராசேந்திரன்

பொருளடக்கம்

வரிசை எண்	தலைப்பு	பக்கம்
1	இயல் 1: அறிமுகம்	
2	இயல் 2: பொருண்மையியல்	
2.1	அறிமுகம்	
2.2	பங்கெடுப்பாளர்களும் பயனிலைகளும்	
2.3	அர்த்தம், குறிபொருள், குறிப்பு	
2.4	வாக்கியம், மொழிபு, கூற்று மற்றும் தேற்றக்கூற்று	
2.4.1	வாக்கியப் பொருண்மை: உண்மைக் கட்டுப்பாடு, தேற்றக்கூற்றுப் பொருளடக்கம்	
2.4.2	மொழிபுப் பொருள்	
2.4.2.1	தேற்றக்கூற்று	
2.4.2.2	அறிவாதாரக் கட்டுப்பாடு	
2.4.2.3	முழுமைபெறாத தேற்றக்கூற்று	
2.4.3	கூற்றுப் பொருண்மை	
2.4.4	அறிவிப்பு அல்லாதவைகள்	
2.5	வாக்கியங்களின் தர்க்கப் பண்புகள்	
2.5.1	வாக்கியங்களின் தர்க்கப் பண்புகள்	
2.5.1.1.	உட்படுத்தல் நிலை	

2.5.1.2	நிகர்நிலை	
2.5.1.3	ஒவ்வாநிலை	
2.5.1.4	முரண்நிலை	
2.5.1.5	சுதந்திர நிலை	
2.5.2	பகுநிலை, முரண், கூட்டிணைப்பு வாக்கியங்கள்	
2.5.2.1	பகுநிலை வாக்கியம்	
2.5.2.2	முரண் வாக்கியம்	
2.5.2.3	கூட்டிணைப்பு வாக்கியம்	
2.6	தர்க்க வகுப்புகள்	
2.6.1	வகுப்பு உறவுகள்	
2.6.1.1	ஒத்தல்	
2.6.1.2	உள்ளடங்கல்	
2.6.1.3	வேறுபடல்	
2.6.1.4	மேலுறல்	
2.6.1.5	இணைதல்	
2.6.2	வகுப்பு உறவுகளும் தேற்றக்கூற்று உறவுகளும்	
2.6.3	பொருத்தம்	
3	இயல் 3: லீச்சின் கோட்பாடு அடிப்படையில் தமிழ் வாக்கியங்களின் பொருண்மையியல் அமைப்பு	
3.1	முன்னுரை	

3.2	பொருண்மையின் கூறுகளும் முரண்பாடுகளும்	
3.2.1	பொருண்மைக் கூறுகள்	
3.2.2	பொருண்மை உறவுகள்	
3.2.3	பொருண்மைக் கருத்துச் சாயல் 'குறியன்'	
3.2.4	பொருண்மைக் கூறாய்வை நியாப்படுத்தல்	
3.2.5	வகைபாட்டியல் எதிர்நிலைகள்	
3.2.6	துருவ எதிர்நிலைகள்	
3.2.7	ஒத்தறி எதிர்நிலைகள்	
3.2.8	பிறவகையிலான எதிர்நிலைகள்	
3.3	வாக்கியங்களின் பொருண்மை அமைப்பு	
3.3.1	வினைப்பாடுகள், பங்கெடுப்பாளர்கள் மற்றும் பயனிலைகள்	
3.3.2	வினைப்பாடு ஆய்வு	
3.3.3	வினைப்பாட்டு ஆய்வுகள்	
3.3.4	உட்படுத்தமும் இசைவின்மையும்	
3.3.5	பூஜியப் பங்கெடுப்பாளர்கள்	
3.3.6	தேர்வுக் கட்டுப்பாடுகள்	
3.3.7	துணைநிலை வினைப்பாடுகள்	
3.3.8	பொருண்மை விலகல்	
3.3.9	சுருக்கவுரை	

3.4	மொழியில் தர்க்கம்	
3.4.1	தர்க்கவியல் ஒழுங்குமுறைகளும் இயல்பு மொழியும்	
3.4.2	உண்மையாக்கம்	
3.4.3	குறிப்புடைமை	
3.4.4	உடனிலைக் குறிப்பு	
3.4.5	பூஜிய வெளிப்பாடு	
3.4.6	உடனிலைக் குறிப்பும் பொருண்மையும்	
3.4.7	காலமும் நேரமும்	
3.4.8	தர்க்க இயக்கிகள்	
3.4.10	சுருக்க உரை	
3.5	பொருண்மையியலும் தொடரியலும்	
3.5.1	மொழியியல் மட்டங்கள்	
3.5.2	பொருண்மையியல் மற்றும் தொடரியல் நல்வடிவமாக்கம்	
3.5.3	வெளிப்பாடு விதிகளில் உள்ள செயல்பாடுகள்	
3.5.4	வடிவைப் பொருண்மையோடு பொருத்துதல்	
3.5.5	சுருக்கவுரை	
3.7	பொருண்மையியலும் அகராதியும்	
3.7.1	நடைமுறைசார் மற்றும் கோட்பாடுசார்	

	அகராதிகள்	
3.7.2	சொற்களஞ்சியம் அல்லது கோட்பாடுசார் அகராதி	
3.7.3	சொல்விதிகள்	
3.7.4	சொல்விதிகளைக் கூடுதல் உற்றுநோக்கல்	
4	இயல் 4: கருத்துரு வரைபட அடிப்படையில் தமிழ் வாக்கியங்களின் பொருண்மையியல் ஆய்வு	
4.1	முன்னுரை	
4.2	கருத்துரு வரைபடம்	
4.2.1	புலனுணர்வுகளும் கருத்துருக்களும்	
4.2.2	பொருண்மை வலை	
4.2.3	தனிநபர் மற்றும் பெயர்கள்	
4.2.4	வாய்பாட்டுக் கருத்துரு வரைபடம்	
4.2.5	பொதுமையாக்கமும் சிறப்பாக்கமும்	
4.2.6	சுருக்கமும் வரையறை விளக்கங்களு	
4.2.7	ஒன்று திரட்டலும் தனிநிலைப் படுத்தலும்	
4.3	திட்டவரைவும் முன்மாதிரியும்	
4.4	முடிவுரை	
5	இயல் 5: வினைகளும் பங்கெடுப்பாளர் அமைப்பும்	
5.1	பொதீக வினைகள்	

5.1.1	நிகழ்தலைக் குறிக்கும் வினைகள்	
5.1.2	சூரியன், சந்திரன் தொடர்பான வினைகள்	
5.1.3	திரவம் தொடர்பான வினைகள்	
5.1.4	மழைபெய்தல் தொடர்பான வினைகள்	
5.1.5	காற்றின் இயக்கம் தொடர்பான வினைகள்	
5.1.6	பரவுதல் குறித்த வினைகள்	
5.1.7	எரிதல் குறித்த வினைகள்	
5.1.8	அணைதல் குறித்த வினைகள்	
5.1.9	ஒளிர்தல் குறித்த வினைகள்	
5.1.10	நிறம் குறித்த வினைகள்	
5.1.11	தெளிதல் குறித்த வினைகள்	
5.1.12	மாற்றம் குறித்த வினைகள்	
5.1.13	காய்தல் குறித்த வினைகள்	
5.1.14	நனைதல் குறித்த வினைகள்	
5.1.15	குளிதல் குறித்த வினைகள்	
5.1.16	பலத்தல் குறித்த வினைகள்	
5.1.17	உறைதல் குறித்த வினைகள்	
5.1.18	இளகுதலைக் குறிக்கும் வினைகள்	
5.1.19	இறுக்கம் இழத்தலைக் குறிக்கும் வினைகள்	
5.1.20	உயர்தலைக் குறிக்கும் வினைகள்	

5.1.21	தாழ்தலைக் குறிக்கும் வினைகள்	
5.1.22	உருமாற்றம் குறித்த வினைகள்	
5.1.23	அளவில் கூடுதல் குறித்த வினைகள்	
5.1.24	எண்ணிக்கை அதிகரித்தல் குறித்த வினைகள்	
5.1.25	குறைதல் குறித்த வினைகள்	
5.2	அறிவு வினைகள்	
5.2.1	அறிதல் வினைகள்	
5.2.2	கற்றல் வினைகள்	
5.2.3	எண்ணுதல் குறித்த வினைகள்	
5.2.4	சிந்தித்தல் குறித்த வினைகள்	
5.3.5	நினைவு படுத்தல் குறித்த வினைகள்	
5.3.6	மறத்தலை குறித்த வினைகள்	
5.2.7	கற்பனை செய்தலைக் குறிக்கும் வினைகள்	
5.2.8	ஆய்தல் தொடர்பான வினைகள்	
5.2.9	ஒப்பிடுதல் குறித்த வினைகள்	
5.3.10	ஊகித்தலைக் குறிக்கும் வினைகள்	
5.2.11	நிரூபித்தலைக் குறிக்கும் வினைகள்	
5.2.12	நிச்சயித்தலைக் குறிக்கும் வினைகள்	
5.2.13	தீர்வுகாணுதல் குறித்த வினைகள்	
5.2.14	கண்டுபிடித்தல் குறித்த வினைகள்	

5.2.15	சம்மதித்தல் குறித்த வினைகள்	
5.2.16	கணக்கிடுதல் குறித்த வினைகள்	
5.3	தாக்க வினைகள்	
5.3.1	அடித்தல் வகை வினைகள்	
5.3.2	மோதுதல் வகை வினைகள்	
5.2.3	மிதித்தல் வகை வினைகள்	
5.3.4	அழுத்துதல் வகை வினைகள்	
5.3.5	திருப்புதல் வகை வினைகள்	
5.3.6	தொடுதல் வகை வினைகள்	
5.3.7	தீட்டுதல் வகை வினைகள்	
5.3.8	கடித்தல் வகை வினைகள்	
5.3.9	கிளறுதல் வகை வினைகள்	
5.3.10	துளைத்தல் வகை வினைகள்	
5.3.11	கலக்குதல் வகை வினைகள்	
5.3.12	கொல்லுதல் வகை வினைகள்	
5.3.13	இழுத்தல் /தள்ளுதல் வகை வினைகள்	
5.3.14	வெட்டுதல் வகை வினைகள்	
5.3.15	இடண்டுபடுதல் வகை வினைகள்	
5.3.16	உடைத்தல் வகை வினைகள்	
5.3.17	நசுக்குதல் வகை வினைகள்	

5.3.18	மெல்லுதல் வகை வினைகள்	
5.5	முடிவுரை	
6	இயல் 6: முடிவுரை	
	நோக்கீட்டு நூல்கள்	

இயல் 1

அறிமுகம்

ஒலியன், உருபன், சொல், தொடர், வாக்கியம் என்பன ஒரு மொழியைக் கட்டமைக்கின்றது. இதன் விளைவாக வெளிப்படுவது இக்கட்டமைப்பு உணர்த்தும் பொருண்மை ஆகும். மொழியில் பொருண்மையானது சொல் நிலையிலும் தொடர் நிலையிலும் வாக்கிய நிலையிலும் வெளிப்படுகிறது.

தமிழ்ப் பொருண்மையியல் குறித்த முன்னோடி ஆய்வுகள் பல மேற்கொள்ளப்பட்டு நூல்வடிவிலும் கட்டுரை வடிவங்களிலும் வெளிவந்துள்ளன. சண்முகம் (1981) அவர்கள் தமிழ்ப் பொருண்மையியல் குறித்து ஆய்ந்து 'பொருண்மையியல்' என்ற நூலை எழுதி வெளியிட்டுள்ளார். கடிகாசலம் (1996) என்பவரும் தமிழ்ப் பொருண்மையியலை ஆய்ந்து 'சொற்பொருள் கோட்பாடு' என்ற நூலை எழுதி வெளியிட்டுள்ளார். இராசேந்திரன் அவர்களும் தமிழ்ப் பொருண்மையியல் ஆய்வில் ஆழ்ந்து ஈடுபட்டு பல நூல்களையும் கட்டுரைகளையும் எழுதி வெளியிட்டுள்ளார். 'தற்கால தமிழ் சொற்களஞ்சியம்', 'தமிழ் மின் சொற்களஞ்சியம்' 'தமிழில் சொல்லாக்கம்' என்பன தமிழ்ப் பொருண்மையியலுக்கு இவர் தந்த ஆய்வு நூல்களாகும். தற்போது இவர் தமிழ்ச் சொல்வலை, தமிழில் ஆக்கமுறை அகராதி, தமிழில் கருத்துரு சார் அகராதி போன்ற தமிழ் பொருண்மையியல் ஆய்வுகளை மேற்கொண்டு கட்டுரைகள் எழுதி வெளியிட்டுள்ளார். மேலும் இவருடைய வழிகாட்டுதலின் கீழ் தமிழ்ப் பொருண்மையியல் தொடர்பான முனைவர் பட்ட ஆய்வேடுகளும் ஆய்வியல் நிறைஞர் ஆய்வேடுகளும் சமர்பிக்கப்பட்டுள்ளன. மேற்சொன்ன இவ்வாய்வுகள் எல்லாம் தற்போதைய ஆய்வுக்கு

முன்னோடிகளாகும். இருப்பினும் தமிழ் வாக்கியங்களின் ஒட்டு மொத்தமான பொருண்மையியல் அமைப்பை விளக்கும் ஆய்வுகள் இல்லாத காரணத்தினால் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆங்கில மொழிக்கு லீச் என்பவரால் வாக்கியங்களின் பொருண்மையியல் அமைப்பு குறித்த ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வெளிவந்துள்ளன (Leech 1971-1981). தமிழுக்கு இத்தகைய ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற பரந்துபட்ட நோக்கத்தில் இவ்வாய்வு அமைந்துள்ளது.

தமிழ் வாக்கியங்களின் பொருண்மையியல் அமைப்பை வாய்பாட்டு விதிகளாகத் தர முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. தமிழ் சொற்களைப் பொருண்மைக்கூறு ஆய்வு அடிப்படையில் ஆய்ந்து அவற்றிற்கிடையே உள்ள உறவுகளைத் தர்க்கப் பொருண்மையியல் உறவுகளாக வெளிப்படுத்த முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. தமிழ் வாக்கியங்களைத் தேற்றக்கூற்றுகளாகப் பகுத்து இத்தேற்றக் கூற்றுகளை வினைப்பாட்டின் பங்கெடுப்பாளர்களாகவும் பயனிலைகளாகவும் உருப்படுத்தம் செய்ய முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. மேலும் சொவாவின் (Sowa, 1984) கோட்பாடு அடிப்படையில் தமிழ் வாக்கியங்களைக் கருத்துருக்களாகவும் கருத்துரு உறவுகளாகவும் ஆய்ந்து கருத்துருவரைபடங்களாக மெய்படுத்தம் செய்யவும் முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.

ஆங்கில வாக்கியங்களின் பொருண்மையியல் அமைப்பு குறித்து லீச் என்பவர் ஆய்வு செய்து நூல்களாகவும் கட்டுரைகளாகவும் வெளியிட்டுள்ளார். இவர் சொற்களைப் பொருண்மைக் கூறு அடிப்படையில் ஆய்ந்து அவைகளுக்கிடையே வரும் உறவுகளைத் தர்க்க உறவுகளாக ஆய்ந்து விளக்குகிறார். வாக்கியங்களைத் தேற்றக்கூற்றுகளாகப் பகுத்து ஒரு வினைப்பாடு பயனிலையும் பங்கெடுப்பாளர்களாகவும் கொண்டிருப்பதாக ஆய்ந்து வாக்கியங்களின் பொருண்மை அமைப்பை விளக்குகிறார். இவருடைய கோட்பாட்டைப் பின்பற்றி தமிழ் வாக்கியங்களின் பொருண்மையியல் அமைப்பு குறித்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேற்சொன்ன கோட்பாட்டிலிருந்து வேறுபட்டு செயற்கை அறிவு வெளிப்படுத்தத்திற்கு பயன்படுத்தப்படும் கருத்துரு சார்ந்த அமைப்பு அடிப்படையிலான கோட்பாடு சொவா (Sowa, 1984) என்பவரால் விளக்கப்பட்டுள்ளது. இது முளையிலும் இயந்திரத்திலும் (கணிப்பொறியிலும்)

தகவலை ஆய்வதற்கான சாத்தியம் அடிப்படையில் அமைந்தது. இக்கோட்பாடு அடிப்படையில் ஒரு வாக்கியம் ஆறு வகையான தகவல் அடிப்படையில் ஆக்கப்படுகிறது.

1.கருத்துரு வரைபடம் (Conceptual graph): கருத்துரு வரைபடம் நபர்களுக்கும் (persons) பொருள்களுக்கும் (things) நிகழ்வுகளுக்கும் (events) இடையிலுள்ள உறவுகளைக் கூறும் தர்க்க வடிவங்களாகும்.

2. காலம் மற்றும் வினை நோக்கு (Tense and modality): காலமும் வினைநோக்கும் எவ்வாறு கருத்துரு வரைபடம் உண்மை உலகுடன் தொடர்புபடுத்தப்படுகின்றது என்று விளக்குகிறது. அவை ஒன்று நடத்திருக்கிறதா நடக்கவியலுமா நடக்குமா நடக்கவேண்டுமா என்று கூறுகின்றது.

3. முற்கோள் (Presupposition): முற்கோள் என்பது பேசுபவரும் கேட்பவரும் குறிப்பாகப் புரிந்துக் கொள்ளும் பின்னணித் தகவல்.

4. குவிய மையம் (Focus) : பேசுபவர் தரவிரும்புகிற புதிய செய்தி, குவிய மையம் ஆகும்.

5. இணைக்குறிப்புத் தொடர்புகள் (Coreference): இணைக்குறிப்புத் தொடர்புகள் எந்தக் கருத்துருக்கள் ஒரே இருப்பான்களைக் குறிப்பு செய்யும் என்று காட்டும். ஒரு வாக்கியத்தில் இத்தொடர்புகள் பதிலீடு பெயர்களாலும் பிற முற்சுட்டுக் குறிப்புகளாலும் வெளிப்படுத்தப்படும்.

6. உணர்ச்சி உணர்பொருள்கள் (Emotional Connotations): உணர்ச்சி உணர்பொருள்கள் பேசுபவர்களின் மற்றும் கேட்பவர்களின் உள்ளங்களின் (minds) தொடர்புகளால் தீர்மானிக்கப்படும்.

முதலில் லீச்சின் கோட்பாடு அடிப்படையில் தமிழ் வாக்கியங்களின் பொருண்மையியல் அமைப்பைத் தர முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. இது தான் இவ்வாய்வின் சிறப்பான பகுதிகளில் ஒன்றாகும். இங்கு லீச்சின் பொருண்மையியல் கோட்பாடு விளக்கப்பட்டு அவர் தம்கோட்பாடு அடிப்படையில் ஆங்கில வாக்கியங்களின் பொருண்மையியல் அமைப்பை விளக்கும் நெறிமுறைகளைப் புரிந்துகொண்டு தமிழ் வாக்கியங்களுக்கு இக்கோட்பாடு அடிப்படையில் பொருண்மையியல் அமைப்பைத் தருவதில் முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. லீச்சின் எழு வகைப் பொருண்மைகள் விளக்கப்பட்டுள்ளன. பொருண்மையின் பொருண்மைக் கூறுகளும் முரண்பாட்டுக் கூறுகளும் விளக்கப்பட்டுள்ளன. மேலும் வாக்கிய பொருண்மையியல் ஆய்வுக்கு அடிப்படையாக அமையும் பொருண்மைக் கூறாய்வு தமிழுக்கு உபயோகிக்கப்பட்டு அதன் சிக்கல்கள் விளக்கப்பட்டுள்ளன. இதன் அடிப்படையில் தமிழ் வாக்கியங்களின் பொருண்மை

அமைப்பு வாய்பாட்டு விதிகளாகத் தரப்பட்டுள்ளது. தமிழ் வாக்கியங்களின் தர்க்க உறவுகள் விளக்கப்பட்டுள்ளன. இவ்வாறு இவ்வியலில் தமிழ் வாக்கியங்களைத் தேற்றக் கூற்றுகளாக ஆய்ந்து, தேற்றக் கூற்றுகளுக்குக் கட்டுமானங்களாக அமையும் வினைப்பாட்டின் பயனிலைகளையும் பங்கெடுப்பாளர்களையும் விளக்கி தமிழ் வாக்கியங்களின் பொருண்மையியல் அமைப்பு விவரிக்கப்பட்டள்ளது. குறிப்பாகச் சொற்பொருண்மை, வாக்கிய பொருண்மை தேற்றக் கூற்று, பங்கெடுப்பாளர், பயனிலை, பொருண்மை உறவுகள், தர்க்க உறவுகள் என்பன குறித்து விளக்கம் தரப்பட்டுள்ளது. இது இவ்வாய்வில் பயன்படுத்தப்பட்டுள்ள பொருண்மையியல் குறித்த கலைச் சொற்களுக்கு வரையறை விளக்கமாகவும் வருணனையாகவும் அமையும்.

அடுத்ததாகக் கருத்துருவரைபட (conceptual graph) அடிப்படையில் தமிழ் வாக்கியங்களின் பொருண்மையியல் அமைப்பைத் தர முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. கருத்துவரைபட அமைப்பு உளவியல் அடிப்படையிலானது ஆகும். இது நபர்களுக்கும் பொருள்களுக்கும் அடைகளுக்கும் நிகழ்வுகளுக்கும் இடையில் உள்ள உறவுகளைக் கூறும் தர்க்க வடிவுகளாகும். காலமும் வினைநோக்கும் கருத்துரு வரைபடத்தை உண்மை உலகோடு தொடர்புபடுத்துகிறது. இது ஒன்று நடந்துவிட்டதா, நடக்க இயலுமா, நடக்குமா, நடக்கவேண்டுமா என்று விளக்குகிறது. முற்கோள், பேசுபவரும் கேட்பவரும் தமக்குள் கருதிக்கொள்ளும் பின்னணியின் தகவலாகும். கருத்துரு வரைபடம் வாக்கியங்களைத் தேற்றக் கூற்றுகளாகப் பகுத்து ஆய வழிவகை செய்கின்றது. ஒரு கருத்துரு வரைபடம் கருத்துருக்களாலும் அவற்றைத் தொடர்புபடுத்தும் உறவுகளாலும் அமைந்தது. கருத்துரு வரைபட அடிப்படையில் சொற்களுக்கு வரையறை விளக்கம் தரவோ சொற்களுக்கு இடையே உள்ள உறவுகளை விளக்கவோ இயலும். ஒரு வாக்கியத்தின் பொருண்மை அமைப்பைக் கருத்துருக்களாகவும் அவற்றைத் தொடர்புபடுத்தும் பொருண்மை உறவுகளாகவும் விவரிக்க இயலும். கருத்துரு வரைபடம் வகை, வரையறை விளக்கம், திட்டம் மற்றும் முன்மாதிரிகள் இவற்றை விளக்க இயலும். இவற்றைக் கொண்டு வாக்கியங்களின் பொருண்மை அமைப்பை மெய்ப்படுத்தம் செய்யலாம்.

மூன்றாவதாகத் தமிழ் வினைகள் பொருண்மைக் களங்களாகத் தொகுக்கப்பட்டு அவற்றின் பொருண்மை அமைப்புகள் விளக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினைக்கும் பயனிலை-

பங்கெடுப்பாளர் அமைப்பு தரப்படுள்ளது. இது முன்னர் தரப்பட்ட பகுதிகளுக்குத் துணையாக அமையும்.

இவ்வாய்வு தமிழ் வாக்கிய அமைப்பைப் பொருண்மையியல் அமைப்பில் தரும் முன்னோடியான ஆய்வாகும். இத்தகைய வாக்கியப் பொருண்மை அமைப்புகள் அறிவுப் பரிமாற்றத்திற்கும் செயற்கை அறிவு உருப்படுத்தத்திற்கும் அறிவுவள மேம்பாட்டிற்கும் கருத்துருசார் அகராதி உருவாக்கத்திற்கும் இயந்திர மொழிப்பெயர்ப்புக்கும் பயனுள்ளதாக அமையும். தகவல் மீட்பு அமைப்பொழுங்குகளிலும் செயற்கை அறிவு அமைப்பொழுங்குகளிலும் பயன்படும். இடைமொழி சார்ந்த இயந்திர மொழிப்பெயர்ப்புக்கு இது இன்றியமையாத இடைமுகமாக அமையும்.

இயல் 2

பொருண்மையியல்

2.1. அறிமுகம்

இவ்வியலில் வாக்கியத்தின் பொருண்மையியல் ஆய்வுக்கு அடிப்படையான கலைச்சொற்களும் தர்க்கப்பொருண்மையியல் அடிப்படையிலான விளக்கங்களும் தரப்பட்டுள்ளன.

2.2. பங்கெடுப்பாளர்களும் பயனிலைகளும்

தர்க்கத்திற்கும் பொருண்மையியலுக்கும் மிக அடிப்படையான கருத்துருகளின் மிக நெருக்கமாகப் பிணைக்கப்பட்ட இணைகள் பங்கெடுப்பாளர்களும் (arguments) பயனிலையுமாகும் (predicate). சுருக்கமாகக் கூறினால் பங்கெடுப்பாளர் எதாவது இருப்புப்பொருளை (entity) அல்லது இருப்புப்பொருளின் ஒரு குழுவைக் குறிப்பிடும்; ஆனால் பயனிலை பங்கெடுப்பாளர்களால் குறிப்பிடப்படும் இருப்புப்பொருளுக்கு இடையே உறவுகளைத் தரும். எடுத்துக்காட்டாக, ராணி அழகாய் இருக்கிறாள் என்பதில் நாம் ராணி என்பதை பங்கெடுப்பாளராகவும் அழகாய் இருக்கிறாள் என்பதை பயனிலையாகவும் அடையாளம் காணலாம். ராஜா ராணியை விரும்புகிறான் என்பதில் ராஜா, ராணி என்பன பங்கெடுப்பாளர்கள்; விரும்புகிறான் என்பது பங்கெடுப்பாளர்களால் குறிப்பிடப்படும்

இருப்புப்பொருளுக்கு இடையே உள்ள உறவைக் கற்பிக்கும் பயனிலை. ராஜா ராணிக்கு ஒரு ரோஜாப்பூவைக் கொடுத்தான் என்பதில் ராஜா, ராணி, ரோஜாப்பூ என்பன பங்கெடுப்பாளர்கள்; கொடுத்தான் என்பது பயனிலை. ஒரு பங்கெடுப்பாளரும் பயனிலையும் இணைந்து ஒரு தேற்றக்கூற்றை உருவாக்கும். ஒரு தேற்றக்கூற்றில் ஒரு பயனிலைதான் இருக்கும்; ஆனால் ஒன்றுக்கும் மேற்பட்ட பங்கெடுப்பாளர்கள் இருக்கலாம். ஒரு பயனிலை ஏற்கிற பங்கெடுப்பாளர்கள்களுக்கு கோட்பாடு அடிப்படையில் உச்ச எல்லை உண்டா என்பதில் தெளிவில்லை; ஆனால் மொழிப் பொருண்மையியல் விவாதங்களில் நாம் கூடுதலாக நான்கை நேரிட இயலும்:

எ.கா.

ராஜா ராணியிடமிருந்து ஒரு லட்சம் ரூபாய்க்கு கார் வாங்கினான்.

பங்கெடுப்பாளர்கள்: ராஜா, ராணி, ஒரு லட்சம் ரூபாய், கார்

பயனிலை: வாங்கினான்

பங்கெடுப்பாளர்களுக்கு கூடுதலாகவோ குறைவாகவோ கலவை நிலை அக அமைப்பு இருக்கலாம். எடுத்துக்காட்டாக, பங்கெடுப்பாளர்(கள்) மற்றும் பயனிலை உள்ள முழு தேற்றக்கூற்றே பங்கெடுப்பாளராக வரலாம்.

எ.கா.

ராஜா ராணி எவ்வளவு அழகாய் இருக்கிறாள் என்று ஆச்சரியப்பட்டான்.

பங்கெடுப்பாளர்1: 1. ராஜா, 2. ராணி எவ்வளவு அழகாய் இருக்கிறாள் என்று

பயனிலை: ஆச்சரியப்பட்டான்

பங்கெடுப்பாளர் 2: பங்கெடுப்பாளர்: ராணி

பயனிலை: எவ்வளவு அழகாய் இருக்கிறாள்

கலவைநிலை பங்கெடுப்பாளர்களின் உறுப்பாக தேற்றக்கூற்றுகளை உட்படுத்த பல வழிகள் இருக்கின்றன; கலவைநிலையின் விளைவு அளவில் எல்லை இல்லை.

பயனிலைகள் பொதுவாக அவை ஏற்கும் பங்கெடுப்பாளர்கள் எண்ணிக்கை அடிப்படையில் ஓரிடப் பயனிலை (one place predicate), ஈரிடப்பயனிலை (two place predicate),

மூவிடப்பயனிலை (three place predicate) என விவரிக்கப்படும். எடுத்துக்காட்டாக, *ராணி அழகாய் இருக்கிறாள்* என்பதில் *அழகாய் இருக்கிறாள்* என்பது ஓரிடப்பயனிலை; *ராஜா ராணியை விரும்பினான்* என்பதில் *விரும்பினான்* என்பது ஈரிடப்பயனிலை; *ராஜா எனக்கு ஆங்கிலம் கற்பித்தான்* என்பதில் *கற்பித்தான்* என்பது மூவிடப் பயனிலை. இருப்பினும் *கற்பி* என்பது மூவிடப்பயனிலை என்பதன் அர்த்தம் என்ன? நாம் எவ்வாறு ஒரு பயனிலை எத்தனை இடங்களைக் கொண்டிருக்கிறது என்பதைத் தீர்மானிக்கலாம்?

இவை சிக்கலான கேள்விகள் தான்; ஆனால் ஒரு சில வினைகளை ஆய்ந்து இவற்றிற்கு விடை காணலாம். நாம் கற்பி என்ற வினையை எடுத்துக்கொள்வோம். நாம் பின்வரும் எடுத்துக்காட்டுகளைப் பார்க்கும் போது சிக்கலின் ஒரு நோக்கு உடனியாகத் தெரியவரும்:

1. ராஜா ராணிக்கு ஆங்கிலம் கற்பித்தான.
2. ராஜா இரண்டு ஆண்டுகளாக ஆங்கிலம் கற்பித்தான்.
3. அ: ராஜா என்ன செய்கின்றான்?
   ஆ: அவன் கல்லூரியில் கற்பிக்கிறான் என்று எண்ணுகிறேன்.
4. சிறு குழந்தைகளுக்கு கற்பிக்கிறவர்களுக்கு இரண்டு மடங்கு சம்பளம் தரவேண்டும்.

நமக்கு *கற்பி* என்பது வாக்கியம் 1-இல் மூவிடமா, 2-இலும் 4-இலும் ஈரிடமா, 3-இல் ஓரிடமா என்ற கேள்விகள் எழலாம். இந்த கேள்வியில் நியாயம் இருந்தாலும் 1-இல் உள்ள பங்கெடுப்பாளர் அமைப்பு அடிப்படையானது என்று உள்ளுணர்வாகப் புலனாகின்றது; அதாவது யாராவது ஒருவர் கற்பிக்கவேண்டும், யாராவது ஒருவர் கற்பிக்கப்படவேண்டும் (அவர் உண்மையில் ஏதாவது கற்றாலும் கற்காவிட்டாலும் சரி) மற்றும் அறிவின் அல்லது திறனின் ஏதாவது கொஞ்சம் கற்பிக்கப்படுபவர் பெறுவதாக எடுத்துக்கொள்ளப்படவேண்டும். இந்தப் பங்கெடுப்பாளர்களின் தேவை பூர்த்தி செய்யப்படாமல், கற்பித்தலின் கருத்துச்சாயல் தர்க்க அடிப்படையில் இசைவுப் பொருத்தமாக இராது. கூறப்படாத பங்கெடுப்பாளர்களைக் கொள்கை அடிப்படையில் நாம் தரலாம்; ஆனால் பேசுபவர் அவை தற்போது தேவை இல்லை அல்லது சிலவற்றில் அவை மிக வெளிப்படை என்ற காரணத்தால் தரவில்லை என்று நாம் எடுத்துக்கொள்வதாகத் தோன்றுகின்றது. வாக்கியம் 2-இல் ராஜா ஆங்கிலத்தில் பேசிக்கொண்டிருக்கிறான் என்று நாம் மனதில் கொள்வதில்லை; வாக்கியம் 3-இல் நாம் ராஜா கேட்பவரும் தலைப்பும் இல்லாமல் ஏதோ தும்முவதுபோல் செய்துகொண்டிருக்கிறான் என்று

கற்பனை செய்வதில்லை; இதே காரணத்தின் அடிப்படையில் *ராஜா படிக்கிறான்* மற்றும் *ராஜா படிக்கக் கற்றுக்கொள்கிறான்* என்ற வாக்கியங்கள் இருந்தாலும் *படி* என்பது ஈரிட வினை என்று எடுத்துக்கொள்ளவேண்டும். யாராவது படித்தலைச் செய்யவும் மற்றும் குறியத்திறவு செய்ய ஏதோ குறியாக்கம் செய்யப்பட்ட குறி இருக்கவும் செய்யமலிருந்தால் நாம் *படி* என்பதை அர்த்தம் செய்துகொள்ள இயலாது. *வில்* என்பதை எடுத்துக்கொள்வோம். *ராஜா ராணிக்கு தன் காரை இரண்டு லட்சம் ரூபாய்க்கு விற்றான்* என்ற வாக்கியத்தில் உள்ளதுபோல் *வில்*-உக்கு நான்கு பங்கெடுப்பாளர்கள் தேவை. ராஜா பணம் வாங்கவில்லை என்றால் 'அவன் ராணிக்குக் காரைக் கொடுத்தான்' என்றுதான் பொருள்படும்; கார் இல்லையென்றால் 'ராணி ராஜாவுக்கு பணம் கொடுத்தாள்' என்றுதான் பொருள்படும்; யாரும் பணத்தைப் பெற்று காரின் உரிமையை விட்டுக்கொடுக்கவில்லை என்றால் 'ராணி பணத்தை எறிந்துவிட்டு காரின் உரிமையைப்' பெற்றாள் எனப் பொருள்படும். இவ்வாறு தர்க்க அடிப்படையில் ஒரு பயனிலையின் கூடுதலான பங்கெடுப்பாளாகளின் எண்ணிக்கையைக் கணிக்க இயலும்.

நம்முடைய சிக்கல் இன்னும் தீரவில்லை. படித்தல், கற்பித்தல், வீற்றல், என்ற செயல்கள் குறிப்பிட்ட காலங்களில் குறிப்பிட்ட இடங்களில் நடக்கும். இடம், காலம் இவை சாராத படித்தல் போன்ற செயல்கள் சாத்தியமானதல்ல. ஆம்பியன் சூட்டிற்கு இவ்வளவு மதிப்பு இருக்கின்றது என்ற நேர்வும் தேவை. ஒரு பயனிலைக்குக் குறைந்தது எத்தனை பங்கெடுப்பாளர்கள் தேவை என்பதை நிர்ணயிப்பது எளிது என்றாலும், எவ்வாறு கூடுதல் எத்தனை பங்கெடுப்பாளர் தேவை என்பதை நிர்ணயிப்பது என்பது கேள்விக்குரியதாகும். *ராஜா தும்மினான்* என்று அறியும் போது நாம் அந்த நிகழ்ச்சி ஒரு குறிப்பிட்ட இடத்தில் குறிப்பிட்ட காலத்தில் நடந்தது என்று அனுமானிக்க இயலும்; ராஜா தும்மியதில் தும்மிய இடத்திற்கும் காலத்திற்கும் இடையிலும் ராஜா கற்பிப்பதில் ராஜாவுக்கும் கற்பிக்கப்பட்ட விஷயத்திற்கும் இடையிலும் என்ன அந்தஸ்து வேறுபாடு என்பது கேள்வி. ராஜா தும்மிய நிகழ்ச்சியை தீர்மானிக்க நாம் ராஜாவுடன் தொடர்புடைய நிகழ்ச்சிகளைப் பார்த்தால் போதுமானது; நாம் காலம், நேரம், அல்லது சூடு இவற்றைக் கட்டுப்படுத்தத் தேவையில்லை. இவ்வாறு நாம் ஒரு பயனிலையின் பங்கெடுப்பாளர்களுக்கு என்று முன்னர் நிறுவிய குறைந்த எண்ணிக்கையைப் பொதுவாகக் கூடுதலானதாகும் என்று கட்டுப்படுத்த இயலும்.

2.3. அர்த்தம் (sense), குறிபொருள் (denotation), குறிப்பு (reference)

மொழியானது பொருள்கள், நிகழ்ச்சிகள் மற்றும் இந்த உலகில் உள்ள விஷயங்கள் ஆகியன பற்றி கருத்துப்பரிமாற்றம் செய்வதற்குப் பயன்படுகின்றது. பொருண்மையை ஆய்வதற்கான ஒரு வழி மொழியிலுள்ள வெளிப்பாடுகளை உலகிலுள்ள விஷயங்களுடன் தொடர்புபடுத்திப் பார்ப்பதாகும். இதற்குப் பொருண்மையின் நீட்சி அணுகுமுறை (extnesional approach to meaning) என்று பெயர்.

உலகிலுள்ள பொருளை அல்லது பொருள்களை ஒரு குறிப்பிட்ட வெளிப்படுத்தலால் குறிப்பது அதன் குறிப்பிடு பொருளாகும் (referent). *அந்தப் பூனை பசியாக இருக்கின்றது* என்று கூறும்போது நாம் ஒரு குறிப்பிட்ட பூனையைக் குறிப்பிடுகின்றோம். 'அந்தப் பூனை' என்பது *அந்தப் பூனை* என்ற வெளிப்பாட்டின் குறிப்பிடு பொருளாகும். முழுக் கூற்றும் அந்தப் பூனைக்கு ஒரு குறிப்பிட்ட நிலைமையைக் கற்பித்துக் கூறுகின்றது. நாம் *பூனை* என்ற சொல்லின் சாத்தியமான குறிப்பிடுபொருளாக ஒரு முழு வகுப்பை அதாவது பூனைகளின் வகுப்பைக் கருத இயலும்; இதுவும் *பூனை* என்ற சொல்லின் குறிப்பு (reference) என்று அழைக்கப்படும். ஆனால் இது *அந்தப் பூனை பசியாக இருக்கிறது* என்ற குறிப்பிட்ட ஒன்றின் பெயரிலிருந்து தெளிவாக வேறுபட்டது. இந்தக் குழப்பத்தை நீக்குவதற்காக லையான்ஸ் கூறியபடி பூனைகளின் வகுப்பு பூனை என்ற சொல்லின் குறிபொருளை உண்டாக்குகின்றது. எனவே *பூனை பசியாக இருக்கின்றது* என்பதில் *பூனை* என்ற சொல் பூனைகளின் வகுப்பைக் குறிக்கின்றது; ஆனால் *அந்தப் பூனை* ஒரு குறிப்பிட்ட பூனையைக் குறிப்பிடுகின்றது.

பொருண்மையின் வெளியுலக அணுகுமுறைக்குப் பதிலாக இருப்பது மன உருப்படுத்த அணுகுமுறையாகும் (intensional approach). *பூனை* என்ற சொல்லை எடுத்துக்கொள்வோம். நாம் அச்சொல்லை புலியையோ நாயையோ குறிப்பிட பயன்படுத்தாமல் ஏன் பூனையைக் குறிப்பிட பயன்படுத்துகின்றோம் என்பது நமது கேள்வியாகும். அந்தச் சொல் அதைப் பயன்படுத்திக் குறிப்பிட இயலும் பொருளின் வகையின் மன உருப்படுத்தத்தின் ஏதோ ஒரு வகையுடன் தொடர்புபடுத்தப்பட்டுள்ளது என்பது ஒரு விடையாகும்; மட்டுமன்றி *நாய், புலி* என்பன *பூனை* என்ற சொல்லுடன் தொடர்புபடுத்தப்பட்டுள்ள விவரணையுடன் பொருந்தாது. இந்த உருப்படுத்தம் அந்தச் சொல்லின் அர்த்தம் என்பதை உருவாக்கும். மொழி வெளிப்படுத்தங்களின் முக்கியச் செயல்பாடு கருத்துருக்களை நகரச்செய்வதாகும்; கருத்துருக்கள் அர்த்தத்தின் முக்கிய உறுப்புகளாகும்; அர்த்தங்கள் (அதாவது கருத்துருக்கள்) குறிப்பை கட்டுப்படுத்துகின்றது. ஜாண் லையான்ஸ் போன்றோர் அர்த்தம் என்பதை ஒரு மொழியில் ஒரு

சொல்லுக்கும் பிற சொல்லுக்கும் இடையே உள்ள உறவுகளின் விஷயமாகக் கருதுகின்றனர். எடுத்துக்காட்டாக, *பூனை* என்பதன் அர்த்தம் *நாய்* (பூனை என்பது நாயிடமிருந்து வேறுபட்டது), *விலங்கு* (பூனை ஒரு விலங்கு), *மியாவ்* (பூனை மியாவ் என்று சத்தமிடும் ஆனால் நாய் மியாவ் என்று சப்தமிடாது) என்ற பிற சொற்களுடன் உள்ள உறவுகளால் உருவாக்கப்படும்.

2.4. வாக்கியம், மொழிபு, கூற்று மற்றும் தேற்றக்கூற்று

2.4.1. வாக்கியப்பொருண்மை: உண்மைக்கட்டுப்பாடு, தேற்றக்கூற்றுப் பொருளடக்கம்

வாக்கியம் ஒரு இலக்கண அலகு; அதாவது வாக்கியம் மொழியின் இலக்கணத்தில் நல்லுருவாக்கக் கட்டுப்பாடுகள் குறிப்பிடப்பட்ட ஒரு குறிப்பிட்ட வகைச் சொற்களின் கோர்வை ஆகும். *பூனை பாயில் உட்கார்ந்திருக்கின்றது, ராஜன் தன் தொப்பியை மேஜை மேல் வைத்தான்* என்பன தமிழ் வாக்கியங்கள். *உட்கார்ந்திருக்கின்றது பாயில் பூனை, மேல் மேஜை ராஜன் வைத்தான் தொப்பியை தன்* என்பன வாக்கியங்கள் அல்ல. வாக்கியம் பிற இலக்கண அலகுகளான தொடர், சொல் என்பனவற்றிலிருந்து எவ்வாறு வேறுபடுகின்றன என்பதைப் பற்றி நாம் இங்கு விவாதிக்கப் போவதில்லை. வாக்கியத்தில் ஒரு சுயேட்சையான பெருந்தொடர் (அதாவது இலக்கணத் தன்மை பெற வேறு பொருந்தொடர் தேவைப்படாத பொருந்தொடர் = முற்றுத்தொடர்) இருக்கவேண்டும். ஒரு பொருந்தொடரில் குறைந்தது ஒரு பயனிலை அமைப்பு (predication) (அதாவது பங்கெடுப்போர்-பயனிலை அமைப்பு) இருக்கவேண்டும். வாக்கியம் என்பது கூற்றுச்சொல்லில் பயன்படுத்தப்படும் குறைந்த மொழியலகாகும். பின்வரும் கூற்றுகளை ஒப்பிடுட்டு அவற்றின் நேரான தன்மையும் அபரிதமான தன்மையும் கணவும்:

1. அ. நல்லதாய் ஒன்று கூறு.
   ஆ. சாக்லேட்.
   அ. என்ன கூறுகிறாய்?
   அ. நல்லதாய் ஒன்று கூறு.
   ஆ. சாக்லேட் நல்லதுதானே.
2. அ. நல்லதாய் ஒன்று கூறு.
   ஆ. அன்புதான் உலகமகா சக்தி.
   அ. ஆகா! எவ்வளவு உண்மை.

முதல் வாக்கியத்தில் உள்ள ஆ-வின் பதிலில் இருந்த அபத்தம் அது வெளிப்படையாக வாக்கியத்தை உருவாக்கவோ சூழலிலிருந்து பொருத்தமான வாக்கியத்தை மீட்டுருவாக்க அனுமதிக்கவோ செய்யவில்லை என்ற உண்மையில் அடங்குகிறது. பின்வரும் கூற்றுகளைக் கவனிக்கவும்:

3.அ. எனக்கு என்ன வேண்டும் என்று கேட்டான்.

ஆ. அதற்கு நீ என்ன சொன்னாய்?

அ. ஐஸ்கிரீம்.

இங்கு கூறுவதின் முழுச்சொல்லையும் அதாவது *எனக்கு ஐஸ்கிரீம் வேண்டும்* என்று கேட்டேன் என்பதை மீட்டுருவாக்கலாம். நாம் வாக்கியம் எதால் ஆக்கப்பட்டது என்பதை அறிய உள்ளுணர்வைப் பயன்படுத்தலாம்.

நாம் வாக்கியம் கூற்றுச்செயலில் பயன்படுத்தப்படுகின்றது என்று பார்த்தோம். உண்மையில் வாக்கியம் அதாகவே எதையும் கூறாது. *பூனை பாயில் உட்கார்ந்திருக்கின்றது* என்ற வாக்கியம் நமக்கு என்ன கூறுகின்றது? அதை அறிவதற்கு வேறு வழியில்லை; இந்தக் கேள்வியே அர்த்தமற்றது. தமாகவே வாக்கியங்களுக்கு உண்மை மதிப்புகள் இருக்கத் தேவையில்லை. இருப்பினும் பாரும் *பூனை பாயில் உட்கார்ந்திருக்கின்றது* என்பதற்குப் பொருள் இல்லை என்று கூறுவதில்லை. சூழல் மற்றும் பயன்பாட்டிற்குப் புறம்பாக நல்லுருவாக்கமம் செய்யப்பட்ட வாக்கியத் தன்மையால் ஒரு வாக்கியம் கொண்டிருக்கின்ற பொருண்மைப் பண்புகள் வாக்கியப் பொருண்மை என்று கூறப்படுகின்றது. ஒரு வாக்கியம் இந்தப் பொருண்மையை அது கொண்டிருக்கின்ற சொற்களின் தன்மையாலும் அவற்றின் இலக்கண வரிசை அமைப்பாலும் கொண்டிருக்கின்றது. (சொற்களுக்குக் கொஞ்சமாவது சூழல் சுதந்திரமான மரபு அடிப்படையில் தரப்பட்ட பொருண்மைப் பண்புகள் இருக்கின்றன என்று கருத இடமுண்டு.) மொழியின் இலக்கணம் இணைப்பாக்கத்தின் (composition) கொள்கையுடன் தொடர்புடையது; அதாவது கட்டமைப்பின் முழுப் பொருண்மையையும் பெற கட்டமைப்பின் உறுப்புகளின் பொருண்மைகளை எவ்வாறு சேர்ப்பது என்று கூறுகின்ற விதிகளுடன் தொடர்புடையது. *பெரிய பூனை சின்ன பாயில் உட்கார்ந்திருக்கின்றது* என்ற வாக்கியத்தில், சின்த்தன்மை பாய்க்கு அடையாக வருகின்றது, பெரியதன்மை பூனைக்கு அடையாக வருகின்றது

என்பன நமக்குத் தெரியும். மேலும் எம்மாதிரிப்பட்ட விலங்கு இதில் பங்கெடுக்கின்றது, வாக்கியத்தின் உண்மையான பயன்பாட்டில் ஒரே ஒரு குறிப்பிடுபொருள்தான் கருதப்படுகின்றது என்பன நமக்குத் தெரியும். ஓரளவுக்கு வெளிப்படையான அர்த்தத்தில், பொருண்மை கூடுதலான தனிப்பட்ட மரபுகளை அமைக்காமல் அது வரக்கூடிய பயன்பாட்டைக் கட்டுப்படுத்தும்.

வாக்கியத்திற்கு அதன் குறிப்பிட்ட பயன்பாட்டிற்கு வெளியே உண்மை மதிப்பீடு இல்லை என்றாலும் அதற்கு உண்மைக்கட்டுப்பாடுகள் இருக்கின்றன; அதாவது ஒரு உண்மையான மொழிபை செய்வதற்குப் பயன்படுத்த வாக்கியத்திற்குக் கட்டுப்பாடுகள் இருக்கின்றன. எனவே நாம் சில வேளையில் *பூனை பாயில் உட்கார்ந்திருக்கின்றது* என்று கூறுவதால் பூனை என்று ஒன்று இருக்கவேண்டும் அது தரையில் விரித்திருக்கின்ற பாயில் உட்கார்ந்திருக்கவேண்டும். ஒரு குறிப்பிட்ட சூழலில் ஒரு வாக்கியத்தைப் பயன்படுத்தி வெளிப்படுத்தும் கூற்று உண்மையா பொய்யா என்பதைத் தீர்மானிக்கும் வாக்கியத்தின் பொருளின் நோக்கங்கள் ஒரு சேர வாக்கியத்தின் தேற்றக்கூற்று பொருளடக்கம் எனப்படும்.

நிகரான தேற்றக்கூற்றுப் பொருளடக்கம் உள்ள இருவாக்கியங்கள் பயன்பாட்டின் எல்லா நேர்வுகளிலும் ஒரே உண்மை மதிப்பீட்டைக் கொண்ட மொழிபுகளை விளைவிக்கும்.

எ.கா.

ராஜா ஒரு பாம்பைக் கொன்றான்.

ஒரு பாம்பு ராஜால் கொல்லப்பட்டது.

இதேபோல், இரு வாக்கியங்களுக்கு வெவ்வேறான தேற்றக்கூற்று பொருளடக்கம் இருந்தால், அவை எதிரான உண்மை மதிப்புகள் உள்ள மொழிபுகளைத் தரும் ஏதாவது கருதத்தக்க சூழல் இருக்க வேண்டும்.

எ.கா.

ராணி வரவில்லை.

ராணி இன்னும் வரவில்லை.

தேற்றக் கூற்றுப் பொருளடக்கம் வாக்கியத்தின் முழுப்பொருண்மையையும் கொண்டிருப்பதில்லை. எடுத்துக்காட்டாக கேள்வியின் வினவும் பொருண்மை உட்படுத்தப்படுவதில்லை; கட்டளையின் ஏவல் பொருண்மை உட்படுத்தப்படுவதில்லை. (பொதுவாகக் கூறினால் செயற்கூற்றுப் பொருண்மை (illucutionary meaning) தேற்றக்கூற்றுப் பொருளடக்கத்திற்கு வெளியில் வரும்.) *இருப்பினும், ஏற்கனவே* போன்ற சொற்களின் வலு (சிலவேளைகளில் மரபு உட்கீடை என்று கூறப்படுவது (conventional implicature)) விலக்கி வைக்கப்படும். எடுத்துக்காட்டாகப் பின்வரும் இரு வாக்கியங்களின் உண்மைக்கட்டுப்பாடுகள் நிகரானவையாதலால் அவைகளுக்கு ஒரே தேற்றக்கூற்றுப் பொருளடக்கம் இருக்கும்.

எ.கா.
ராணி வரவில்லை.
ராணி இன்னும் வரவில்லை.

தேற்றக்கூற்றுப் பொருளடக்கத்தில் உட்படாத பொருண்மையின் பிற நோக்குகள் வெளிப்பாட்டுப் பொருண்மையும் (எ.கா.1) முறையான/பேச்சுவழக்கு வேறுபாடுகளான அடையாளப்படுத்தப்பட்ட வழக்கின் (register) பண்புக்கூறுகள் (எ.கா.2) ஆகும்.

எ.கா.1
இங்கு மிகக் குளிராய் இருக்கிறது.
இங்கு பயங்கர குளிராய் இருக்கிது.

எ.கா.2
அந்த வயதானவர் இறந்துவிட்டார்.
அந்தக் கிழவன் மண்டையைப் போட்டுவிட்டான்.

வாக்கியப் பொருண்மையின் பகுதியாக தகுதிபெற, ஒரு பொருண்மைப் பண்பு ஏதாவது மொழி வெளிப்பாட்டின் ஒரு நிரந்தர மரபுப்பண்பாக இருக்கவேண்டும். அது ஒவ்வொரு வெளிப்பாட்டின் பயன்பாட்டின் சந்தர்ப்பத்திலும் வெளிப்படவேண்டும் என்று எதிர்பார்கப்படுவதில்லை. சூழலுக்குக் கற்பித்துக் கூறப்பட்டாலும் அது சாத்தியமகச இருக்கின்றது என்பது போதுமானது.

நெருங்கிய நிகரான தேற்றக்கூற்றுப் பொருளடக்கம் கொண்ட வெளிப்பாடுகள் அந்தப் பண்பைக் கொண்டிருக்காது என்ற சாட்சியால் நாம் குறிப்பாக உணர்த்தப்படுகின்றோம். infant என்பதுடன் ஒப்பிடப்படும் baby என்ற சொல்லின் திறனான வெளிப்பாட்டு இயல்பு இதற்கு எடுத்துக்காட்டாகும்.

2.4.2. மொழிபுப்பொருள்

ஒருவர் கூற்று வடிவில் (declarative form) மட்டும் ஒரு வாக்கியத்தை உருவாக்கி ஒரு மொழிபைச் செய்வதில்லை. எடுத்துக்காட்டாக, வகுப்பறையில் தமிழ்க் கால இடநிலைகளில் பயிற்சிபெறுவோர் பின்வரும் வாக்கியங்களைக் கூறுவது தொடர்ச்சியான மொழிபுகளைச் செய்வதாகாது.

அந்தப் பூனை பாயில் அமர்ந்திருந்தது.
அந்தப் பூனை பாயில் அமர்ந்திருக்கிறது.
அந்தப் பூனை பாயில் அமரும்.

ஒரு மொழிபு செய்யப்படுவதற்கு முதல் தேவை ஒரு தேற்றக்கூற்று வெளிப்பட்டிருக்க வேண்டும் என்பதுதான்; தேற்றக்கூற்றின் உண்மைக்குப் பொருத்தமான கட்டுப்பாடு செய்யப்படவேண்டும் என்பது இரண்டாவது தேவை. நாம் தொடக்கத்தில் தேற்றக்கூற்று என்ற கருத்துச்சாயலைப் பார்ப்போம்.

2.4.2.1. தேற்றக்கூற்று

ஒரு தனிநிலைத் தேற்றக்கூற்று ஒரு இருப்புப்பொருளுக்கு ஒரு உறவைத் தருகின்றது. அது (யதார்த்தமாகவோ இயல்பாகவோ எது என்று தீர்மானிக்க இயலாத நிலையில் கூட) உண்மையாகவோ பொய்யாகவோ இருக்கலாம். உண்மை அல்லது பொய் என்பது ஒரு தேற்றக்கூற்று வெளிப்படுத்தப்பட்டது என்பதன் குறியாகும். தேற்றக்கூற்று என்பது குறிப்பிட்ட மொழி இருப்புப்பொருளல்ல. ஒரே தேற்றக்கூற்றை எல்லையற்ற எண்ணிக்கையுள்ள வாக்கியங்களால் வெளிப்படுத்தலாம்.

எ.கா.

ராஜா ராணியைப் பார்த்தான்.

ராஜா தன் மனைவியைப் பார்த்தான்.

ரமேஷ் மகன் தன் மனைவியைப் பார்த்தான்.

ரமேஷ் மகன் சுரேஷின் மகளைப் பார்த்தான்.

(ரமேஷின் மகன் ராஜாவாகவும் சுரேஷின் மகள் ராணியாகவும் ராஜாவின் மனைவி ராணியாகவும் இருந்தால்) இவ்வாக்கியங்கள் எல்லாம் ஒரே தேற்றக்கூற்றை வெளிப்படுத்த இயலும்.

அப்படியென்றால் ஏன் *அந்தப் பூனை பாயில் உட்கார்ந்திருக்கிறது* என்பது தேற்றக்கூற்றல்ல? அதன் நிலையைப் பொறுத்த வரையில் அது உண்மையாகவோ பொய்யோ அல்ல. அது ஒரு குறிப்பிட்ட பூனையை மற்றும் பாயை வலியுறுத்தும் போதுதான் அது உண்மையாகவோ பொய்யாகவோ மாறலாம். ஒரு வாக்கியத்தில் நிச்சயமான குறிப்பிடும் வெளிப்பாடுகளுக்கு குறிப்பிடுபொருள்கள் ஒதுக்கப்படுவது வரை அது ஒரு குறிப்பிட்ட தேற்றக்கூற்றை வெளிப்படுத்தாது. *அந்தப் பூனை பாயில் உடகார்ந்திருக்கின்றது* போன்ற வாக்கியத்தை எல்லையற்ற எண்ணிக்கையுள்ள தேற்றக்கூற்றுகளை (அதாவது வேறுபட்ட பூனைகளையும் வேறுபட்ட பாய்களையும் குறிப்பிட்டு) வெளிப்படுத்தப் பயன்படுத்தலாம்.

2.4.2.2. அறிவாராதக் கடப்பாடு

ஒரு தேற்றக்கூற்றை அதன் உண்மையோ பொய்யோ குறித்த எந்த தீர்மானமும் இல்லாமல் எடுத்துக்கொள்ளலாம். எடுத்துக்காட்டாக தேற்றக்கூற்றுகள் எடுத்துக் கொள்ளப்படுகின்ற ஒரு தர்க்க வகுப்பில் அவற்றிற்கு இடையே உள்ள உறவுகள் ஆயப்படுகின்றது.

எ.கா.

எல்லா பறவைகளும் முட்டையிடும்.

புறா ஒரு பறவை.

எனவே புறா முட்டையிடும்.

எனினும் தேற்றக்கூற்று அதாகவே எதையும் கருத்துப்பரிமாற்றம் செய்வதில்லை. அது அறிவின் ஒரு சாதனம் அல்ல. கருத்துப்பரிமாற்றம் செய்ய அதற்குச் செயற்கூற்று உந்தலால் சக்தி தரப்படவேண்டும். எடுத்துக்காட்டாக *பூமி பல பக்க வடிவமுள்ளது* என்ற வாக்கியத்தால் வெளிப்படுத்தப்படும் தேற்றக்கூற்றுக்கு ஒருவர் அது உண்மை அல்லது அது பொய் என்று ஏற்றுக்கொள்வது வரை எந்தவித கவர்ச்சியும் இல்லை: உண்மையான அல்லது பொய்யான தேற்றக்கூற்று அறிவின் சாதனம். அம்மாதிரியான நேர்வில் செயற்கூற்று உந்தல் உறுதிப்படுத்துகையாகும். எனவே ஒரு (குறைந்த) மொழிபு அறிவாதாரக் கடப்பாட்டுடன் (epistemic commitment) கூறப்படுகின்ற தேற்றக்கூற்றாகும்.

2.4.2.3. முழுமைபெறாத தேற்றக்கூற்று

பின்வரும் பாமாற்றத்தை எடுத்துக்கொள்வோம்:

அ: நேரம் என்ன?
ஆ: நாலரை.

ஆ எதாவது கூறுகின்றாரா? நிச்சயமாக. அப்படியென்றால எந்தத் தேற்றக்கூற்றை அவர் வெளிப்படுத்தினார். விடை *நேரம் நாலரை மணி* என்பது வெளிப்டை. ஆனால இது அவர் உண்மையாகவே கூறியதல்ல. இம்மாதிரியான இடங்களில் சூழ்நிலை தரும் தடையங்கள் தேற்றக்கூற்றின் முழுவடிவையும் மீட்டுருவாக்குவது கேட்பவரைப் பொறுத்து இருக்கின்றது; ஆனால் இதுதான் பேசுபவர் சொல்ல விரும்புகிற தேற்றக்கூற்றின் முழுவடிவம் என்பதில் ஐயம் இல்லை; இது மொழிபுப் பொருண்மையின் பாகமாக அமையும்.

இப்போது நம்மால் மொழிபுப் பொருள் என்ன என்பதைக் கூற இயலும். முதலாவதாக மொழிபுப்பொருள் அந்த மொழியை உருவாக்கப் பயன்படும் வாக்கியத்திற்குரிய வாக்கியப்பொருளின் எல்லா நோக்குகளையும் உள்ளடக்கும். இரண்டாவதாக மொழிபுப்பொருள் ஒரு குறிப்பிட்ட தேற்றக்கூற்றையோ தேற்றக்கூற்றுகளையோ உள்ளடக்கும். இதை அடையாளம் கண்டுகொள்ள (அ) குறிப்பிடுபொருள்களுக்கு வாக்கியத்தில் உள்ள ஏதாவது அறுதியான குறிப்பிடும் வெளிப்படுத்தங்களை ஒதுக்கவேண்டும்; (ஆ) முற்றுப்பெறாத தேற்றக்கூற்றுகள்

முழுமைப் படுத்தப்படவேண்டும். தேற்றக்கூற்றுகள் பொருத்தமான அறிவாதாரக் கடப்பாட்டுடன் வெளிப்படுத்தப்படவேண்டும் என்று கருதப்படுகின்றது.

2.4.3. கூற்றுப்பொருண்மை

முழுமையான விளக்கமான மொழிபுகூட பேசுபவர் விரும்புகிற எல்லா கருத்தையும் சரியாக ஒரு வாக்கியத்தைக் கூறி உருப்படுத்தம் செய்ய இயலாது. எடுத்துக்காட்டாக, பின்வரும் சூழலை எடுத்துக்கொள்வோம்:

அ: நீங்கள் மேஜையைத் துடைத்துப் பாத்திரங்களையும் கழுவி விட்டீர்களா?
ஆ: மேஜையைத் துடைத்து விட்டேன்.

சாதாரண சூழலில் அவனோ அவளோ பாத்திரங்களைக் கழுவவில்லை என்று ஆ மனதில் கருதிய செய்தியின் பாகம் என்பது தெளிவாகும். இருப்பினும் இதை வெளிப்படுத்தப்பட்ட தேற்றக்கூற்றை விரித்தோ பூர்த்திசெய்தோ பெற இயலாது. பின்வரும் நேர்வில் பேசுகின்றவரின் விருப்பம் அ சாப்பாட்டிற்கு காலம் தாழ்த்தி வந்திருக்கின்றார் என்ற தேற்றக்கூற்றைச் சொல்வதுதான் என்பது தெளிவாகத் தெரிகின்றது.

அ: சாப்பாட்டு நேரத்திற்கு வந்துவிட்டேனா?
ஆ: மேஜையைத் துடைத்துச் சுத்தம் செய்துவிட்டேன்.

இந்தக் கூடுதலான (அல்லது உட்படையான) தேற்றக்கூற்றுகள் சூழ்நிலை தரும் செய்தியின் அடிப்படையில் கேட்பவரால் அனுமானிக்கப்படும்; ஆனால் இவை எது உண்மையாகக் கூறப்பட்டதோ அதில் தவறவிட்ட துண்டுகளை நிரப்பி அறிவதிலிருந்து எல்லை கடந்து செல்வதாகும். ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் ஒரு கூற்றைச் செய்து பேசுபவர் சொல்ல விரும்புகின்றவற்றின் மொத்தத்தையும் நாம் கூற்றுப்பொருண்மை எனலாம்.

எடுத்துக்காட்டாக *இன்று உனக்கு எப்படிப்பட்ட நாள்?* என்றால் "நான் சுதந்திரமாக இருக்கின்றேன். நாம் சினிமா பார்க்கப் போகலாம்" என்றும் பொருள்கொள்ளும்படி இரண்டுபேர் தங்களுக்குள் உடன்பாடு வைத்திருந்தார்கள் என்று வைத்துக்கொள்வோம்.

இம்மாதிரியான பொருளை நாம் கூற்றுப்பொருளிலிருந்து விலக்கி வைக்கவேண்டும். இம்மாதிரியான பயன்பாடு பேசுபவரின் மற்றும் கேட்பவரின் பங்காக தனிப்பட்ட ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக அமைந்த நிபந்தனையை வேண்டும் என்பது முக்கியக் கருத்தாகும்; தடையங்களிலிருந்து கேட்பவரின் தெரிந்துகொள்கை வடிவுகளைப் பயன்படுத்துவதைக் கட்டுப்படுத்தும் விதிகள் மற்றும் மரபுகளின் பொது அறிவிலிருந்து மட்டும் கிடைக்கவில்லை.

கூற்றுப் பொருண்மை மொழிப்புப் பொருண்மையை உள்ளடக்குகின்றது; ஆனால் கூற்றுப் பொருண்மையைப் பெறுவதற்காக மொழிப்புப் பொருண்மை கடந்து செல்லப்படவேண்டும்; அதாவது அது ஆக்கத்தில் ஒரு தேவையான முன்னேற்ற அடியாகும்: கூற்றுப் பொருண்மை அதன் பொருத்தமான பாகமாக மொழிப்புப் பொருண்மையை உள்ளடக்கத் தேவையில்லை (இருப்பினும் அது அவ்வாறு செய்யலாம்).

2.4.4. அறிவிப்பு அல்லாதவைகள்

இதுவரை அறிவிப்பு வாக்கியங்களைப் பற்றித்தான் பார்த்தோம். இருப்பினும் மேலே விவரித்த கருத்துச்சாயல்கள் அறிவுப்பு அல்லாத வாக்கியங்களுக்கும் பொருந்தும். வாக்கியப் பொருண்மையின் பொதுக் கருத்துச்சாயல் இங்கு சிக்கலானதல்ல. மொழிப்புப்பொருளுக்குச் சமமானது கேள்விப்பொருள். ஒரு மொழிபின் தேற்றக்கூற்றுப் பொருளடக்கம் தரப்பட்டுள்ள சூழலில் அது உண்மையா பொய்யா என்பதைத் தீர்மானிக்கின்றது என்பதை நினைவுகூரவும். இப்போது கேள்விகளுக்கு உண்மை மதிப்பு இல்லை; ஆனால் அவைகளுக்குத் தேற்றக்கூற்று பொருளடக்கம் இருக்கின்றது. கேள்விகளுக்கு உண்மை மதிப்பு இல்லை என்றாலும் தரப்பட்ட கேள்வி-மொழிபு இணைக்கு விடை மதிப்பு இருக்கின்றது; அதாவது மொழிபு கேள்விக்கு விடையாகவோ விடையல்லாமலோ இருக்கும்; அப்படியானால் அது உண்மையாகவோ பொய்யாகவோ இருக்கும். இந்த விடை மதிப்பு கேள்வியின் மற்றும் மொழிபின் தேற்றக்கூற்று பொருளடக்கத்தால் சமமாகத் தீர்மானிக்ப்படும்.

அ: இன்று என்ன கிழமை (செவ்வாய் அன்று கூறப்பட்டது)

ஆ: இன்று திங்கட்கிழமை (பொய்யான விடை)

அ: இன்று என்ன கிழமை (திங்கள் அன்று கூறப்பட்டது)

ஆ: இன்று திங்கட்கிழமை (உண்மையான விடை)

அ: நீ யாரைக் கூடுதலாக விரும்புகிறாய்?

ஆ: இன்று திங்கட்கிழமை (விடை அல்ல)

அறிவிப்பு வாக்கியத்திற்கு உண்மைக் கட்டுப்பாடு இருப்பதுபோல், வாக்கியங்களாகக் கருதப்படுகின்ற கேள்வி-பதில் இணைக்கும் விடைக்கட்டுப்பாடு இருக்கின்றது. அதாவது கேள்விக்கு உண்மையான விடையை உருவாக்க மொழிபுக்குக் கட்டுப்பாடுகள் இருக்கும்.

இதே நுட்பத்தைக் கட்டளைக்கும் பயன்படுத்தலாம். இதில் ஆட்சேபம் என்னவென்றால் கட்டளை பெற விரும்புவது எப்பொழுதும் அல்லது பொதுவாக மொழிப் பதில் அல்ல. பொதுவாகத் தேவைப்படுவது ஒரு செயல் (எ.கா. *நகராதே!*). முழுக் கட்டளைப் பொருண்மை செயல்படுகின்ற முழுவதும் சூழ்நிலைக்குட்படுத்தப்பட்ட கட்டளையில், தரப்பட்ட செயல் பணிதலாகக் கணக்கில் எடுக்கும் அல்லது எடுக்காது; அதாவது ஒரு மொழியின் உண்மை மதிப்புக்குச் சமமாக அதற்குப் பணிதல் மதிப்பு (compliance value) இருக்கும். அதன் பணிதல் மதிப்பு என்ன என்பது கட்டளையின் தேற்றக்கூற்று பொருளடக்கத்தால் தீர்மானிக்கப்படும். ஒரு கட்டளை வாக்கியத்திற்கு ஒரு குழுமப் பணிதல் கட்டுபாடுகள் இருக்கும்; ஆனால் பணிதல் மதிப்பு இருக்காது. எடுத்துக்காட்டாக *அதை அங்கே வை* என்ற கட்டயை அது என்ன? அது எங்கே இருக்கின்றது என்று தெரியாமல் நிறைவேற்ற இயலாது.

இப்போது மேற்சொன்னதைச் சுருக்கிப் பொதுமைப் படுத்துவோம்: அறிவிப்பு வாக்கியங்கள் பொதுவாக அவைகளாகவே மொழிபுகளைச் செய்யாது; கேள்வி வாக்கியங்கள் கேள்வி கேட்காது; கட்டளை வாக்கியங்கள் கட்டளை தராது; வாக்கியங்கள் எல்லாம் முழுவதும் சூழ்நிலையாக்கம் செய்யப்படும் போதுதான் இவை விளையும். இருப்பினும் இவை ஒவ்வொன்றும் சூழ்நிலையாக்கம் செய்யப்படும்போது அவை எந்தச் செயற்கூற்றைச் செயலாற்றப் பயன்படுத்தலாம் என்பதைக் கட்டுப்படுத்தும் தேற்றக்கூற்றுப் பொருளடக்கத்தைக் கொண்டிருக்கும்; அதாவது எந்த மொழிபுகள் செய்யலாம், எந்தக் கேள்விகள் கேட்கலாம், எந்தக் கட்டளைகள் தரலாம் என்பன.

2.5. வாக்கியங்களின் தர்க்கப் பண்புகள்

2.5.1. வாக்கியங்களின் தர்க்கப்பண்புகள்

பொருண்மையியல் ஆய்வுரைகளில் குறிப்பாகச் சொற்பொருண்மையியலில் வாக்கியங்களுக்கு இடையிலான தர்க்க உறவுகளில் பல வெளிப்படும். அவைகள் தர்க்கவியலார்

தேற்றக்கூற்றுகளுக்கிடையே அடையாளம் காணும் உறவுகளுடன் தொடர்புடையவை; ஆனால் அவைகளுக்குச் சமமானவையல்ல. குழப்பத்தைத் தவிர்க்க வேண்டுமென்றால் அவற்றின் தர்க்க அடிப்படையை மனதில் கொள்ள வேண்டியது அவசியமாகும். ஐந்து உறவுகள் இங்கு அடையாளம் காணப்படும். அவையாவன:

1. உட்கீடை (implication)/உட்படுத்தல் நிலை (entailment)
2. நிகர்நிலை (equivalence)
3. முரண் நிலை (contrariety))
4. ஒவ்வா நிலை (contradiction)
5. சுதந்திரநிலை (independence)

2.5.1.1. உட்படுத்தல் நிலை

சரியாகச் சொன்னால் இதுவும் இதைத் தொடரும் உறவுகளும் தேற்றக்கூற்றுகளுக்கு இடையே உள்ள உறவுகளாகும். அவற்றின் வாக்கியத்துடனான தொடர்பு பின்னால் விவரிக்கப்படும். பின்வரும் எடுத்துக்காட்டுகளில் அ-வுக்கும் அதற்கு இணையான ஆ-வுக்கும் இடையே உள்ள உறவு உட்படுத்தல் ஆகும்.

அ	ஆ
அது நாய்.	அது விலங்கு.
ராஜா பாம்பைக் கொன்றான்.	பாம்பு இறந்துவிட்டது.
எல்லா நாய்களும் கறுப்பு.	என்னுடைய நாய் கறுப்பு.

நாம் இந்த வாக்கியங்கள் தேற்றக்கூற்றுகளை வெளிப்படுத்துவதாக அனுமானிக்கின்றோம்; அதாவது இவ்வாக்கியங்கள் ஒரு குறிப்பிட்ட சூழலில் தனிப்பட்ட குறிப்புடன் பயன்படுத்தப்படுவதாக அனுமானிக்கின்றோம். நாம் மேலும் முதல் இணையில் *அது* என்பது ஒரே இருப்புப்பொருளைக் குறிப்பிடுவதாகவும் இரண்டாவது இணையில் ஒரே பாம்பும் ஒரே நிகழ்ச்சியும் குறிப்பிடப்படுவதாக அனுமானிக்கிறோம். அ என்பது ஆ என்ற தேற்றக்கூற்றை உள்ளடக்குகின்றது என்று கூறுவது ஆ-வின் உண்மை தர்க்க அடிப்படையிலும் தவறாமலும் அ-விடமிருந்துதான் கிடைக்கின்றது என்று பொருள்படும்; மேலும் அ-வின் பொய்மை ஆ-வின்

பொய்மையிலிருந்து வருகின்றது. எனவே, முதல் வாக்கிய இணையில், ஏதோ ஒரு இருப்புப்பொருள் நாய் என்பது உண்மையானால், எந்த ஐயமில்லாமல் அது ஒரு விலங்கு என்பது தெளிவு; அது விலங்கு இல்லையென்றால் அது நாயாக இருக்கச் சாத்தியமல்லை. இதேபோல் ராஜா பாம்பைக் கொன்றால் பாம்பு இறந்துவிட்டது எனற முடிவை விட்டுவிட இயலாது; பாம்பு இறக்கவில்லை என்றால் ராஜா அதைக் கொன்றான் என்ற சாத்தியம் இல்லை.

மொழியியல் பொருண்மையியலார் பயன்படுத்துகின்ற உட்படுத்தும்நிலை தர்க்கவியலார் கூறுகின்ற உள்ளிருப்பு உட்கீடையிலிருந்து (material implication) வேறுபடுத்தப்படவேண்டும். அ என்ற தேற்றக்கூற்று உண்மையாகவும் ஆ என்ற தேற்றக்கூற்று பொய்யாகவும் எப்போதும் இல்லாதிருந்தால் அ என்பது ஆ-வை உள்ளிருப்பு உட்கீடை செய்கின்றது எனலாம். இது முதல் பார்வையில் உட்படுத்துநிலை போல இருந்தாலும் ஒரு முக்கியமான வேறுபாடு இருக்கின்றது: உள்ளிருப்பு உட்கீடையின் விவரணை தேற்றக்கூற்றுகளின் பொருண்மைகளைக் குறிப்பிடுவதில்லை; மாறாக உட்படுத்தும்நிலை (கண்டிப்பான உட்கீடை என்று சில வேளைகளில் அழைக்கப்படுவது) பொருண்மைகளுக்கு இடையே உள்ள உறவாகும். எடுத்துக்காட்டாக அது ஒரு நாய், எல்லா பிரம்மச்சாரிகளும் மணமாகாதவர்கள் என்ற தேற்றக்கூற்றுகளை எடுத்துக்கொள்வோம் முதலாவது தேற்றக்கூற்று உண்மையானது, இரண்டாவது பொய்யானது என்ற நிலை எப்போதும் கூடாது. இங்கே உள்ளிருப்பு உட்கீடை இருக்கின்றது. ஆனால் இது உட்படுத்து உறவல்ல; ஏனென்றால் இது அந்த இரு தேற்றக்கூற்றுகளின் பொருண்மைகளின் காரணமாக விளைந்ததல்ல; இரண்டாவது தேற்றக்கூற்று எந்தச் சூழலிலும் பொய்யாகாது என்ற உண்மையில் விளைந்தது. மாறாக *அது ஒரு நாய் என்பது உள்ளிருப்பு* அடிப்படையில் *அது ஒரு விலங்கு* என்பதை உட்கீடை செய்யும் என்பது உண்மையானாலும், இரண்டாவது பொய்யாகும் போது முதலாவது உண்மை ஆவதில்லை; மட்டுமன்றி முதலாவது இரண்டாவதை உள்ளடக்கும்; ஏனென்றால் *நாய்*-க்கும் *விலங்கு*-க்கும் இடையே உள்ள பொருண்மையின் அடிப்படையில் உண்மை மதிப்பு உறவு இருக்கின்றது. உள்ளிருப்பு உட்கீடை மொழிப் பொருண்மையியலுக்கு எந்தவித ஆர்வம் இல்லை; இருப்பினும் *எல்லாப் பிரம்மச்சாரிகளும் மணமாகாதவர்கள்* என்பது எப்போதும் உண்மை என்ற காரணத்தால் ஆர்வம் உண்டு.

உண்மையைக் கூறினால் உட்படுத்தும்நிலை வாக்கியங்களுக்கு இடையே வருவதில்லை; ஏனென்றால் வாக்கியங்களுக்கிடையே உண்மை மதிப்புகள் இல்லை; இருப்பினும் ஒரு வாக்கியம்

ஏதோ ஒரு வாக்கியத்தை உள்படுத்துவதாக நாம் பொருண்மையியல் புத்தகங்களில் கூறப்படுவதைக் காண்கின்றோம். இதைக் கூடுதல் கலவைநிலையிலான (சிக்கலான) ஒன்றுக்கான சுருக்கமான தீர்வு என்று எடுத்துக்கொள்ளலாம். வா-1 என்ற வாக்கியம் வா-2 என்ற வாக்கியத்தை உட்படுத்துகின்றது என்று கூறுவது இந்த இரு வாக்கியங்களில் உள்ள அறுதியான குறிப்பீட்டு வெளிப்பாடுகள் ஒன்றையொன்று குறிப்பிடுவதாக இருந்தால் எந்தச் சூழலிலும் வா1 ஒரு உண்மையான தேற்றக்கூற்றை வெளிப்படுத்தினால் வா2-உம் ஒரு உண்மையான தேற்றக்கூற்றறை வெளிப்படுத்தும் என்பதாகும். வெளிப்படையாக *அது ஒரு நாய்*, *அது ஒரு விலங்கு* என்பவைகளுக்குள் தர்க்க உறவுகள் நிலைநிறுத்தப்பட *அது* என்பதன் இருமுறை வருகை ஒரே இருப்புப்பொருளைக் குறிப்பிடவேண்டும். *ராஜா பாம்மைக் கொன்றான்*, *பாம்பு இறந்துவிட்டது* என்பனவற்றில், நாம் ஒரே பாம்பைப் பற்றித்தான் பேசுவோம்; மேலும் நேரக்குறிப்புகள் ஒன்றாக இருக்கவேண்டும்.

உட்படுத்துநிலையில் வேறு இரு பண்புகள் இங்கு அழுத்தமாய் கூறப்படவேண்டும். முதலாவது இந்த உறவு சூழலால் நிர்ணயிக்கப்படுவதில்லை. இது சூழல் சுதந்திரமானது; ஏனென்றால் இது முழுவதுமாக வாக்கியங்களின் உறுப்புகளின் பொருண்மைகளைச் சார்ந்திருக்கின்றது. பின்வரும் சூழலை எடுத்துக்கொள்வோம்: ராஜா முன் ஒரு பெட்டியில் வண்ணத் தட்டுகள் இருக்கின்றன; அதில் எல்லாச் சிவப்புத் தட்டுகளும் வட்டமானவை; எல்லாப் பச்சைத் தட்டுகளும் செவ்வகவடிவிலானவை. இந்தச் சூழலில் *ராஜா பெட்டியிலருந்து ஒரு செவ்வகத் தட்டை எடுத்தான்* என்ற உண்மை *ராஜா ஒரு பச்சைத் தட்டை எடுத்தான்* என்ற உண்மையிலிருந்து வரும். ஆனால் தெளிவாக இந்த உண்மை மதிப்புகளின் உறவுகள் பச்சைக்கும் செவ்வகத்திற்கும் உள்ள உறவுகளால் கிடைக்வில்லை; சூழலால் கிடைக்கின்றது. கொள்கையளவில் எல்லாச் சிவப்புத் தட்டுகளும் செவ்வகமாக இருப்பது எளிது. மாறாக *அது ஒரு நாய்*, *அது ஒரு விலங்கு* என்பதற்கு இடையே உள்ள உறவுகள் எந்த ஒரு குறிப்பிட்ட சூழலிருந்தும் சுதந்திரமானது.

இரண்டாவது உட்படுத்தப்பட்ட வாக்கியத்தின் பொருண்மை உட்படுத்துகின்ற வாக்கியத்தின் உண்மையிலிருந்து வரவேண்டும். அது பொதுவாக உண்மையாகவோ பெரும்பாலும் எப்போதும் உண்மையாகவோ இருந்தால் போதுமானதல்ல. அது பொய்யாக இருக்கவேண்டும் என்று எண்ணப்படவே கூடாது. எடுதுக்காட்டாக, 1) அது ஒரு நாய், 2) அது ஒரு செல்லப்பிராணி, 3) அது குரைக்கும் என்பவைகளுக்கு இடையே உள்ள உறவுகளை

எடுத்துக்கொள்வோம். பலர் நேரிடுகின்ற பல நாய்கள் செல்லப்பிராணிகள் இருப்பினும் வேட்டைநாய்களும் இருக்கின்றன எனவே இந்த உறவு எதிர்பார்ப்பின் கண்தான் தரப்படும். இது உட்படுத்துநிலை அல்ல. இது போல் 2-ஐ எடுத்துக்கொண்டால் பெரும்பான்மையான நாய்கள் குரைக்கும்; ஆனால் குறையுள்ள தொண்டையுள்ள நாய் குரைக்காது; அதன் காரணமாய் அது நாய் இல்லை என் கூற இயலாது; எனவே இந்த உறவு தர்க்க அடிப்படையில் தேவையல்ல. தர்க்க அடிப்படையில் தேவையான சூழல் சுதந்திரமான உறவுகள்தான் உட்படுத்தலாகக் கருதப்படும்.

2.5.1.2. நிகர்நிலை

இரு வாக்கியங்களுக்கு இடையே உள்ள தேற்றக்கூற்று நிகர்நிலையை ஒன்றையொன்று உட்படுத்தல் என்று நேரடியாகக்க கூறலாம். இது இவ்வாக்கியங்கள் எப்போதும் ஒரே தேற்றக்கூற்றை வெளியிடும் என்று கூறுவதற்குச் சமமாகும். பின்வருவன நிகர்நிலைகளின் எடுத்துக்காட்டுகளாகும்.

ராஜா பாம்மைக் கொன்றான்.	பாம்பு ராஜாவால் கொல்லப்பட்டது.
பாம்பு இறந்துவிட்டது.	பாம்பு உயிரோடு இல்லை.
அந்த நிகழ்ச்சி 10 மணிக்குத் தொடங்கியது.	அந்த நிகழ்ச்சி 10 மணிக்கு ஆரம்பித்தது

ராஜா பாம்பைக் கொன்றது உண்மையானால் பாம்பு ராஜாவால் கொல்லப்பட்டது உண்மை; அதுபோல் பாம்பு ரஜாவால் கொல்லப்பட்டது உண்மையானால் ராஜா பாம்பைக் கொன்றது உண்மை; ஒரு இணையான இருவழி உட்படுத்தல் பிற இரண்டு இணைகளின் அங்கத்தினர்களுக்கு இடையே இருக்கும்.

2.5.1.3. ஒவ்வாநிலை

ஒவ்வாத் தேற்றக்கூற்றுகள் (contrary postpositions) ஒரே நேரத்தில் பொய்யாக இருந்தாலும் ஒரே நேரத்தில் உண்மையாக இருப்பதில்லை. பின்வருவன எடுத்துக்காட்டுகளாகும்:

ராஜா பாம்மைக் கொன்றான்.	பாம்பு உயிரோடு இருக்கின்றது.
ராஜா பாம்பைக் கொன்றான்.	ராணி பாம்பைக் கொன்றாள்.
இந்த வர்ணம் சிவப்பு.	இந்த வர்ணம் பச்சை.

ராஜா பாம்பைக் கொன்றான் என்பதும் பாம்பு உயிரோடு இருக்கின்றது என்பதும் ஒரே நேரத்தில் மெய்யாக இருக்காது; மாறாக பாம்பு உண்மையிலேயே இறந்திருந்தால் ஆனால் அதை ராமு கொன்றிருந்தால் ராஜா பாம்பைக் கொன்றான் என்பதும் பாம்பு உயிரோடு இருக்கின்றது என்பதும் பொய். இந்த உறவை உட்டுத்துதல் அடிப்படையில் விளக்கலாம்: வா1 வா2-இல்லை என்பதை உட்படுத்தினால், ஆனால் வா2-இல்லை வா1-ஐ உட்படுத்தவில்லை என்றால் (மற்றும் மறுதலையாக வந்தால்) வா1-உம் வா2-உம் ஒவ்வாதன எனலாம்.

2.5.1.4. முரண்நிலை

முரண்நிலை தேற்றக்கூற்றுகளுக்கு எல்லாச் சூழலிலும் எதிரிடையான மதிப்பு இருக்கவேண்டும். அவைகள் இரண்டும் உண்மையாகவோ இரண்டும் பொய்யாகவோ இருக்கலாகாது. ஒரு குறிப்பிட்ட சூழலில் முரண்நிலை இணைகளின் ஒரு அங்கத்தினர் உண்மையாக இருக்கவேண்டும் மற்றது பொய்யாக இருக்கவேண்டும். பின்வரும் வாக்கியங்கள் முரண்நிலை இணைகளை எடுத்துக்காட்டும்:

பாம்பு இறந்தது.	பாம்பு உயிரோடு இருக்கிறது.
ராஜா இன்னும் பாடிக்கொண்டிருக்கிறான்.	ராஜா இப்போது பாடவில்லை.
எந்த நாயும் கறுப்பல்ல.	குறைந்தது சில நாய்கள் கறுப்பு.

ராஜா இன்னும் பாடிக்கொண்டிருக்கின்றான் என்றால் அவன் இப்போது பாடவில்லை என்பது பொய். இந்த அளவில் இது ஒவ்வாமை போல் இருக்கின்றது. இருப்பினும் ஒரு முக்கிய வேறுபாடு இருக்கின்றது: ராஜா இன்னும் பாடிக்கொண்டிருக்கிறான் என்பது பொய்யானால் அவன் இப்போது பாடவில்லை என்று அர்த்தம்; ராஜா இப்போது பாடவில்லை என்பது பொய்யானால் அவன் இன்னும் பாடிக்கொண்டிருக்கிறான் என்று அர்தம். நாம் முரண்நிலையை உட்படுத்தல் அடிப்படையில் விளக்கலாம்: வா1 வா2-இல்லை-ஐ உட்படுத்தினால் மற்றும் வா2-

இல்லை வா1-ஐ உட்படுத்தினால் (மற்றும் மறுதலையாகவும் வந்தால்) வா1-உம் வா-2-உம் முரண்களாகும்.

2.5.1.5. சுதந்திரநிலை

சில தேற்றக்கூற்றுகளின் இணைகளுக்கு உண்மை மதிப்பு ஒன்றுக்கொன்று சுதந்திரமாக மாறும். அவைகள் இரண்டும் உண்மையாக இருக்கலாம்; இரண்டும் பொய்யாக இருக்கலாம்; அல்லது ஒன்று உண்மையாகவும் மற்றது பொய்யாகவும் இருக்கலாம்.

ராஜா ஓய்வுபெற்றுவிட்டான்.	ராணி திருமணம் செய்தாள்.
இன்று திங்கட்கிழமை.	தீபாவளி சனிக்கிழமை வருகின்றது.

இப்பகுதியில் விளக்கப்பட்ட உறவுகளுக்குச் சொற்களுக்கு இடையே உள்ள உறவுகளின் பொருண்மையின் ஆய்வில் முக்கியமான பங்கு இருக்கின்றது.

2.5.2. பகுநிலை, முரண், கூட்டிணைப்பு வாக்கியங்கள்

2.5.2.1. பகுநிலை **வாக்கியம்**

பகுநிலை வாக்கியங்கள் அவற்றில் வரும் சொற்களின் பொருண்மை மற்றும் அவற்றின் வரிசைமுறை இவற்றின் காரணமாக எந்தச் சூழலிலும் உண்மையான தேற்றக்கூற்றுகளைத் தானாக வெளியிடும். பின்வரும் வாக்கியங்கள் பகுநிலை வாக்கியங்கள் ஆகும்:

பிரம்மச்சாரிகள் மணமாகாதவர்கள்.
ராஜாவின் மானார் ஒரு மனிதர்.

இந்தத் தேற்றக்கூற்று உண்மையாகவோ பொய்யாகவோ இருக்கலாம்.

2.5.2.2. முரண் வாக்கியம்

முரண் வாக்கியங்கள் தாமாகவே பொய்யான தேற்றக்கூற்றுகளை வெளியிடும்:

பிரம்மச்சாரிகள் மணமானவர்கள்.
ராஜாவின் தங்கை ஒரு ஆண்.
இந்தச் சிவப்பு வர்ணம் பச்சை ஆகும்.

2.5.2.3.கூட்டிணைப்பு வாக்கியம்

சில சூழல்களில் உண்மையான தேற்றக்கூற்றுகளையும் சில சூழல்களில் பொய்யான தேற்றக்கூற்றுகளையும் வெளியிடும் வாக்கியங்கள் கூட்டிணைப்பு வாக்கியங்கள் எனப்படும்.

ராஜாவின் சகோதரி திருமணமாகாதவள்.
இந்த வர்ணம் சிவப்பு.
எல்லா நாய்களும் கறுப்பு.

(கடைசி வாக்கியம் உண்மையிலேயே பொய், இருப்பினும் அது தர்க்க அடிப்படையில் பொய் அல்ல; அது உண்மையாக இருக்கும் சூழல்களை நாம் கற்பனை செய்ய இயலும்.)

2.6. தர்க்க வகுப்புகள்

2.6.1. வகுப்பு உறவுகள்

2.6.1.1. ஒத்தல்

வகுப்பு வ1-க்கு உரிய எல்லா அங்கத்தினர்களும் வகுப்பு வ2-க்கு உரிய அங்கத்தினர்களாக இருந்தால் வ1-உம் வ2-உம் ஒத்திருக்கின்றன எனலாம். எடுத்துக்காட்டாக ஒரு வகுப்பு அப்பாக்களும் ஒரு வகுப்பு ஆண் பெற்றோர்களும் ஒத்திருக்கின்றன. ஒரு வகுப்பு நூல்களும் ஒரு வகுப்பு புத்தங்களும் ஒத்திருக்கின்றன.

2.6.1.2.உள்ளடங்கல்

வகுப்பு வ2-இன் எல்லா அங்கத்தினர்களும் வகுப்பு வ1-இன் அங்கத்தினர்களாக இருந்து மறுதலையாக வராமலிருந்தால் வகுப்பு வ1 வகுப்பு வ2-ஐ அடக்கும் எனலாம். எடுத்துக்காட்டாக விலங்குகளின் வகுப்பு நாய்களின் வகுப்பை, பசுக்களின் வகுப்பை, ஆடுகளின் வகுப்பை உள்ளடக்கும். நாய்களின் குழுமம் விலங்குகளின் குழுமத்தின் துணைவகுப்பு என்றும் விலங்குகளின் குழுமம் நாய்களின் குழுமத்தின் உயர்வகுப்பு என்றும் விளக்கலாம். (ஒத்தலை விலக்கிவைக்கும்படி உள்ளடங்கல் விளக்கப்பட்டுள்ளது. ஒத்தலை உள்ளடக்கும்படியும் உள்ளடக்கலை விளக்கலாம்.)

2.6.1.3.வேறுபடல்

வகுப்பு வ1-இன் எந்த அங்கத்தினரும் வகுப்பு வ2-இன் அங்கத்தினராக வராவிடில் வ1-உம் வ2-உம் வேறுபடுகின்றன எனலாம். ஒரு வகுப்பு பூனைகளும் ஒரு வகுப்பு நாய்களும் வேறுபடுகின்றன எனலாம். அது போல் ஒரு வகுப்பு சிவப்புப் பொருள்களும் ஒரு வகுப்பு பச்சைப் பொருட்களும் வேறுபடுகின்றன.

2.6.1.4. மேலுறல்

வ1 மற்றும் வ2 என்ற வகுப்புகளில் சில அங்கத்தினர்கள் பொதுவாகவும் ஒவ்வொன்றிலும் மற்றொன்றில் இல்லாத அங்கத்தினர்கள் இருந்தால் அவை மேலுறுகின்றன என்று கூறலாம் (அதாவது இங்கு முழுவதுமான மேலுறலோ ஒத்தலோ விலக்கப்பட்டுள்ளன). சிவப்புப் பொருட்களின் வகுப்பும் வட்டமான பொருட்களின் வகுப்பும் இம்மாதிரி மேலுறுகின்றன. அது போல் கட்டிடக்கலைஞரின் வகுப்பும் அமெச்சூர் இசைக்கலைஞர்களின் வகுப்பும் மேலுறுகின்றன. இரண்டோ அதற்கு மேலோ மேலுறல் வகுப்புகளின் பொதுவான அங்கத்தினர்களின் குழுமம் இரண்டோ அதற்கு மேலோ வகுப்புகளின் மேலுறல் என்று குறிப்பிடப்படுகின்றது.

2.6.1.5. இணைதல்

இரண்டு (அல்லது அதற்கு மேற்பட்ட) வகுப்புகளின் அங்கத்தினர்கள் (மேலுறல் வகுப்புகளாக இருந்தாலும் சரி) இணைக்கப்பட்ட குழுமம் இரண்டு (அல்லது அதற்கு மேற்பட்ட)

வகுப்புகளின் இணைப்பு என்று கூறப்படுகின்றது. நாய்களின் வகுப்பும் பூனைகளின் வகுப்பும் இணைந்து எல்லா நாய்களும் பூனைகளும் உள்ள குழுமம் கிடைக்கும்.

2.6.2. வகுப்பு உறவுகளும் தேற்றக்கூற்று உறவுகளும்

மேற்கண்ட வகுப்பு உறவுகளுக்கும் முன்னால் விளக்கிய தேற்றக்கூற்று உறவுகளுக்கும் வெளிப்படையான தொடர்பு இருக்கின்றது. எடுத்துக்காட்டாக *அது ஒரு நாய்* என்பது *அது ஒரு விலங்கு* என்பதை உள்ளடக்குகின்றது என்பது நாய்களின் வகுப்பு விலங்குகளின் வகுப்பின் துணை வகுப்பு என்ற உண்மையுடன் தொடர்பின்றி இருக்கவில்லை. சில உறவுகள் ஒரு அணுகுமுறையைவிட மற்றொரு அணுகுமுறையில் இயற்கையாகவே வெளிப்படுகின்றது. எடுத்துக்காட்டாக மேலுறல் என்ற வகுப்பிற்கு தேற்றக்கூற்று இணை தர இயலாது. இதை நாம் தேற்றக்கூற்று சுதந்திரம் என்று கூறலாம்; ஏனென்றால் இம்மாதிரியான இணைகளிலுள்ள எந்த தேற்றக்கூற்றும் மற்றதன் உண்மை மதிப்புக்கு எந்தக் கட்டுப்பாடும் திணிக்கவில்லை.

எ.கா.

ராஜா ஒரு கட்டிடக்கலைஞன்.

ராஜா ஒரு ஆமெச்சூர் இசைக்கலைஞன்.

மாறாக முரண் உறவுகள் தேற்றக்கூற்று அணுகுமுறைக்குள் கூடுதல் இயற்கையாகவே வெளிப்படுகின்றது. வகுப்பு அணுகுமுறைக்குள் *இறந்தவை* என்பதற்கும் *உயிருள்ளவை* என்பதற்கும் இடையே உள்ள உறவின் நிகரான ஒன்றைக் காண நாம் இறந்த பொருள்களின் வகுப்பும் உயிருள்ள பொருள்களின் வகுப்பும் வேறுபட்டவை மற்றும் விலங்கினப் பொருள்களின் உயர்வகுப்பின் முழுமை என்று கூறவேண்டும்.

2.6.3. பொருத்தம்

ஒரு வகுப்பின் அங்கத்தினர்கள் ஒரு இணையான வகுப்பின் ஒன்றோ அதற்கு மேற்பட்ட அங்கத்தினர்களுடன் ஒரு வகையான தொடர்பின் உறவு கொண்டிருக்கும். இந்த வகையான தொடர்பின் வகை பொருத்தம் (mapping) என்று அறியப்படும். ஒரு எடுத்துக்காட்டு இதைத் தெளிவாக்கும். ஒரு நபரின் விரல் அடையாளங்கள் குறிப்பிடும்படியாக வேறுபட்டிருக்கும் என்பது

தெரிந்த உண்மை. நபர்களின் வகுப்பையும் விரல் அடையாளங்களின் வகுப்பையும் எடுத்துக்கொண்டால் இரு வகுப்புகளுக்கிடையே நேரடியான பொருத்த உறவு இருக்கும்: ஒரு வகுப்பின் ஒவ்வொரு அங்கத்தினரும் மற்ற குழுமத்தின் குறிப்பிட்ட அங்கத்தினருடன் தொடர்புகொள்ளும். இது ஒன்றுக்கொன்று பொருத்தம் எனப்படும். இதை தந்தைகள் வகுப்பு மற்றும் குழந்தைகள் வகுப்பு என்ற இரு வகுப்புகளுடன் ஒப்பிடவும். தந்தைகள் வகுப்பின் ஒவ்வொரு அங்கத்தினரும் குழந்தைகள் வகுப்பின் ஒன்றோ அதற்கு மேற்பட்ட அங்கத்தினர்களுடன் தொடர்புறும்.

இயல் 3

லீச்சின் கோட்பாட்டு அடிப்படையில் தமிழ் வாக்கியங்களின் பொருண்மையியல் அமைப்பு

3.1. முன்னுரை

இவ்வியலில் லீச்சின் பொருண்மைக் கோட்பாடு அடிப்படையில் (Leech, 1981) தமிழ் வாக்கியங்களின் பொருண்மையியல் அமைப்பு ஆயப்படும். லீச் ஆங்கில வாக்கியங்களை ஆய்வதற்கு வேண்டித் தமது கோட்பாட்டை விளக்குகிறார். ஏந்த அளவுக்கு அவரது கோட்பாட்டு வழியில் தமிழ் வாக்கியங்களை ஆயவியலும் என்பது இங்கு விளக்கப்படும். அவர் பொருண்மையை ஏழாகப் பகுக்கின்றார்:

(1) கருத்துருப் பொருண்மை (conceptual meaning): தர்க்க, புலனறிவு அல்லது குறிபொருள் பொருளடக்கம்.

(2) உணர்ச்சிப் பொருண்மை (connotative meaning): மொழி எதைக் குறிப்பிடுகின்றது என்பதைப் பொறுத்துக் கருத்துப்பரிமாற்றப்படுவது.

(3) சமுதாயப் பொருண்மை (social meaning): மொழிப் பயன்பாட்டின் சமுதாயச் சூழல்களில் கருத்துபரிமாற்றப்படுவது.

(4) உணர்பொருள் (affective meaning): பேசுபரின்/எழுதுபவரின் உணாச்சிகள் மற்றும் உளப்பாங்குகள் இவற்றிலிருந்து கருத்துப்பரிமாற்றம் செய்யப்படுவது.

(5) பிரதிபலிப்புப்பு (reflected meaing): ஒரே வெளிப்பாட்டின் மற்றொரு அர்த்தத்தின் தெடர்பு வழிக் கருத்துபரிமாற்றம் செய்யப்படுவது.

(6) சேர்ந்துவருகைப் பொருண்மை (collocative meaing): மற்றொரு சொல்லின் சூழலில் வரும் சொற்களுடன் தொடர்புடையதன் வழி கருத்துப்பரிமாற்றப்படுவது.

(7) மையப் பொருண்மை (thematic meaning): வரிசை மற்றும் முக்கியத்துவம் இவற்றின் அடிப்படையில் செய்தி ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளதன் படி கருத்துப்பரிமாற்றம் செய்யப்படுவது.

லீச் கருத்துருப் பொருண்மையை மட்டும் எடுத்துக்கொண்டு வாக்கியங்களின் பொருண்மையியல் அமைப்பை விளக்குகிறார். தமிழ் வாக்கியங்களின் பொருண்மையியல் அமைப்பை விளக்கவும் லீச்சின் இத்தகைய அணுகுமுறைதான் இங்குப் பின்பற்றப்படுகின்றது.

3.2. பொருண்மையின் கூறுகளும் முரண்பாடுகளும்

இங்குச் சொற் பொருண்மைகளின் முறையான விளக்கத்தைத் தருவதற்கு முக்கியத்துவம் தரப்படும். அடுத்தப் பகுதியில் சொற்களின் பொருண்மைகள் எல்லாம் எவ்வாறு இணைந்து வாக்கியப் பொருண்மையைத் தருகின்றது என்பது விளக்கப்படும்.

3.2.1. பொருண்மைகளின் கூறுகள்

சோற்களின் பொருண்மைகளை ஆய்வது பெரும்பாலும் ஒரு சொல்லின் அர்த்தத்தைக் குறைந்த பொருண்மைக் கூறுகளாக ஆவ்வதாகத்தான் பார்க்கப்படுகின்றது. *மனிதன், மனுஷி, சிறுவன், சிறுமி* போன்ற தொடர்புள்ள சொற்கள் எளிய எடுத்துக்காட்டைத் தருகின்றன. இச்சொற்கள் 'மனித இனம்' என்ற பொருண்மைக் களத்தைச் சாரும். இவற்றிற்கு இடையிலான உறவு பின்வருது போன்ற இருபரிமாணக் களப்படத்தால் சரியாக உருப்படுத்தம் செய்யப்படும்.

	'ஆண்'	'பெண்'
'முதுமை'	'மனிதன்'	'மனுஷி
'இளமை'	'சிறுவன்'	'சிறுமி'

மேற்கண்ட அட்டவணை 'பால்' மற்றும் 'வயதுக்குவந்தமை' என்ற பொருண்மையின் இரு பரிமாணங்களைக் காட்டும். முன்றாவது பரிமாணம் இக்களத்தை முழுவதுமாகத் தனிநிலைப்படுத்துவதால் முற்கோள் செய்யப்படும்; அதாவது 'மனிதவினம்' மற்றும் 'மனிதனல்லா இனம்' என்பனவற்றிற்கு இடையே செய்யப்படும்.

பலவகைகளில் மிகவும் திருப்தியான மற்றொரு வழி பொருண்மையின் பரிமாணங்கள் 'மனிதவினம்' மற்றும் 'வயதுக்குவந்தமை' என்ற குறியீடுகளால் வெளிப்படுத்தம் செய்யும்படிக்கு இந்த அர்த்தங்களை வாய்ப்பாடாக எழுதுவதாகும்.

{ + மனிதவினம் 'மனிதவினம்' { +முதுமை 'வயதுக்குவந்தமை' +ஆண் { 'ஆண்
{ மனிதவினம் 'விலங்கு' { -முதுமை 'இளமை' -ஆண் { 'பெண்'

தனிச் சொற்களின் பொருள்களை இந்தப் பண்புக்கூறுகளின் இணைப்பால் வெளிப்படுத்தலாம்.

மனிதன்: +மனிதவினம் +முதமை +ஆண்
மனுஷி: +மனிதவினம் +முதுமை -ஆண்
சிறுவன்: +மனிதவினம் -முதுமை +ஆண்
சிறுமி: +மனிதவினம் -முதுமை -ஆண்

இந்த வாய்பாடுகள் சொற்களின் பொருண்மைக் கூறுசார் வரையறை விளக்கங்கள் எனப்படும். இவற்றை முறைப்படுத்தப்பட்ட அகராதி வரையறை விளக்கங்கள் என்று கருதவியலும். பொருளின் பரிமாணங்கள் பொருண்மை எதிர்நிலைகள் என்று கூறப்படும்.

எதிர்நிலையின் பண்புக்கூறுகள் ஒன்றுக்கொன்று வரையறை செய்வன. '+' என்பதால் புலக்குறிப்பு செய்யப்பட்டுள்ள நேர்மறைக்கு அடையாளப்படுத்தப்பட்டனவாகவும் '-' என்பதால் அடையாளப்படுத்தப்பட்டுள்வை எதிர்மறையாகவோ அடையாள்படுத்தப்படுவனவாகவோ எடுத்துக்கொள்ளப்படும். தர்க்கக் கூற்றில், 'ஆண்' என்பதற்கு –பெண் என்றும் 'பெண்' என்பதற்கு +பெண் என்றும் அல்லது மரபுக் குறியீடுகளான ' ' அல்லது ' ' என்பதைப் பயன்படுத்தவியலும்.

இம்மாதிரியான வாய்பாட்டைப் பயன்படுத்தி ஒரே பொருண்மைக்கூறு வரையறைவிளக்கங்களைத் தந்து இரு சொற்களின் ஒருபொருள் பன்மொழியத்தைக் (synonymy)

காட்டவியலும். எடுத்துக்காட்டாக *வயதுக்குவந்தவர்*, *வளர்ந்தவர்* என்பனவற்றிற்கு, அவை நடையியல் அடிப்படையில் வேறுபட்டாலும், +மனிதவினம் +முதுமை என்ற ஒரே வரையறை விளக்கத்தைத் தரவியலும். ஒருபொருள்பன்மொழியத்திற்கு எதிரிடையானது பல்பொருண்மையாகும் (polysemy). இதன்படி ஒரு சொல்லுக்கு ஒன்றிற்கு மேற்பட்ட வரையறை விளக்கங்கள் இருக்கும். எடுத்துக்காட்டாக மனிதன் என்பது +மனிதவினம் + முதுமை + ஆண் என்ற விளக்கத்துடன் +மனிதவினம் என்ற பரந்த வரையறை விளக்கத்தையும் கொண்டிருக்கும். மற்றொரு எடுத்துக்காட்டு *குழந்தை* என்பது +மனிதவினம் -வயதுக்குவந்தமை என்பதுடன் 'பெற்றோர்' என்பதற்கு எதிரிடையான வரையறை விளக்கத்தையும் கொண்டிருக்கும்.

'வயதுக்குவந்தவர்', 'குழந்தை' மற்றும் 'மனிதன்' என்பனவற்றிற்கான வரையறை விளக்கங்கள் ஒரு பொருண்மைக் களத்திற்கு எல்லா பொருண்மை எதிர்நிலைகளும் பயன்படுத்தத் தேவையில்லை. எடுத்துக்காட்டாக குழந்தை, வயதுக்குவந்தவர் என்பன 'பால்' என்பதற்கு வேண்டி சிறப்பீடு செய்யப்படவில்லை. மனிதன் (மனிதவினம்) என்பது 'பால்' என்பதற்கும் 'வயதுக்குவந்தமை' என்பதற்கும் சிறப்பீடு செய்யப்படவில்லை. நாம் விரும்பினால் இந்த எதிர்நிலைகளின் எதிர்நீக்கத்தை (neutralization) '0' என்ற குறியீட்டால் உருப்படுத்தம் செய்யலாம்.

மனிதன்: +மனிதவினம் (0ஆண்) (0முதுமை)
வயதுக்குவந்தவர்: +மனிதவினம் +வயதுக்குவந்த(0ஆண்)
குழந்தை: +மனிதவினம் -வயதுக்குவந்த (0ஆண்)

பொதுவாக 'எதிர்நீக்கம்' என்ற பரிமாணத்தை விட்டுவிடலாம். சாத்தியமான பொருண்மை எதிர்நிலைகள் மிகக் கூடுதலானவை என்பதால் அவற்றைப் பயன்படுத்துவது தவறுக்கு வழிவகுக்கும். மேலும் அவற்றைப் பட்டியலிடும் எந்த முயற்சியும் முழுமையுறாது போகும்.

பொருண்கைக் கூறு ஆய்வு இங்கு பயன்படுத்தப்படும் ஆய்வுமுறையைக் குறிப்பிடப் பயன்படுத்தப்படுகின்றது. இது ஒரு சொல்லின் பொருளை அதன் முரண்படும் தனிமங்களாகப் பகுப்பாய்வு செய்வதாகும். வேறுபடுத்தும் நுட்பமாக பொருண்மைக்கூறாய்வு உறவுமுறைச் சொற்களை ஆய்வதற்காக முதலில் மானிடவியல்சார் மொழியியலில் (anthropological linguistics) பயன்படுத்தபட்டது. இது ஒரு எண்ணைக் காரணிகளாகப் பகுக்கும் கணிதச் செயல்பாட்டுடன்

சிறிது ஒப்புமை உடையது. கணித விகிதங்களின் ஒப்புமையின் அடிப்படையில் பொருளின் பொருண்மைக்கூறுகளைப் பெறும் முறைசாராத வழிமுறை அமைந்துள்ளது. கீழ்வரும் அட்டவணை ஒரு குழும எண்களிலிருந்து ஒரு பொழவான காரணி தேர்ந்தெடுக்கப்படுவதைக் காட்டுகின்றது.

2x		4x
4	என்பது	40
6	ஏன்பது	15
8	என்பது	20

இதுபோன்று நாம் 'பால்' மற்றும் 'வயதுக்குவந்தமை' என்பனவற்றின் பண்புக்கூறுகளைப் பிரித்தெடுக்கலாம்.

3.2.2. பொருண்மை உறவுகள்

நமது மொழியில் பொருண்மை தொடர்பிற்காகப் பொதுவாகப் பயன்படுத்தப்படும் சொற்கள் ஒருபொருள் பன்மொழியமும் (ஒரே பொருள்கொண்ட சொற்கள்) எதிர்மொழியமும் (எதிர்மறைப் பொருள்கொண்ட சொற்கள்) ஆகும். எளிய எடுத்துக்காட்டுகள் கூட இந்தக் கலைச்சொற்களுக்கு இடையே உள்ள பொருள்களின் முரணை வெளிப்படுத்துவதற்குப் போதுமானதல்ல. *மங்கை* என்பதன் எதிர்மொழியம் என்ன?' என்ற கேள்விக்கு ஒரு விடை இல்லை: *சிறுமி, மனிதன்* என்பனவும் பொருத்தமான எதிர்மொழிகள் தாம். 'எதிர்மொழியம்' என்ற சொல் சொற்கள் ஒரு பரிமாணத்தில் தான் முரண்படுகின்றன என எண்ணத் தூண்டுகின்றது. உண்மையில் அவை ஒரே நேரத்தில் பல பரிமாணங்களில் முரண்படும். எனவே எதிர்மொழியம் என்பதைவிட 'பொருண்மை முரண்படுதன்மை' (semantic contrastiveness) என்பதன் கூடுதல் பொதுமைவாய்ந்த கருத்துச்சாயல் இணக்கமின்மை (incompatibility) ஆகும். இரண்டு பொருண்மைக்கூறு வாய்பாடுகள் அல்லது அவை வெளிப்படுத்தும் பொருள்களில் ஒன்று மற்றதன் பொருண்மைக்கூறுகளில் ஒன்றுடன் முரண்படும் ஒரு பொருண்மைக்கூறைக் கொண்டிருந்தால் அவை இணக்கமின்மையானவையாகும் என்று கூறலாம். இவ்வாறு *மங்கை* என்பதன் பொருள் *குழந்தை* என்பதன் பொருளுடன்

இணக்கமின்மை உடையது. ஏனென்றால் +வயதுக்குவந்த என்பது –வயதுக்குவந்த என்பதுடன் முரண்படும்.



'மங்கை' என்பதுடன் இணக்கமின்றி இருக்கும் பிற பொருள்கள் 'மனிதன்', 'சிறுவன்', 'சிறுமி', 'பசு' என்பனவும் தொலைவாக முரண்படும் 'மரம்' 'திருகுபுளி' என்பனவும் ஆகும்.

பொருளின் மற்றொரு உறவு 'பொருண்மை உள்ளடங்கல்' அல்லது 'உள்ளடங்குமொழியம்' ஆகும். ஒரு பொருளின் பொருண்மைக்கூறுசார் வாய்ப்பாடு மற்றொரு பொருளின் எல்லாப் பண்புக்கூறுகளையும் உள்டக்கியிருந்தால் அப்பொருள்களுக்கிடையில் உள்ளடக்குமொழிய உறவு இருக்கிறது எனக்கூறலாம். இதன்படி 'மங்கை' என்பது 'வயதுக்குவந்தவர்' என்பதுடன் உள்ளடங்கு உறவு கொண்டுள்ளது. ஏனென்றால் 'வயதுக்கு வந்தோர்' என்பதன் வரையறை விளக்கத்தை செய்யும் இரு பண்புக்கூறுகள் (+மனிதவினம் +வயதுக்குவந்த) 'மங்கை' என்பதன் வரையறை விளக்த்திலும் இருக்கிறது: +மனிதவினம் + வயதுக்குவந்தவர் -ஆண். 'மங்கை' என்பது 'பெண்' என்பதுடனும் 'மனிதவினம்' என்பதுடனும் உள்ளடங்குமொழிய உறவுகொண்டுள்ளது. பின்வரும் எடுத்துக்காட்டுகள் இதைத் வெளிப்படுத்தும்.



பொருண்மையின் ஒற்றுமை உள்ளடங்கு மொழியத்தின் சிறப்பு நேர்வாகக் கையாளப்படுகின்றது. எனவே 'மங்கை' என்பது பிற எந்த கூறுசார் பொருண்மையைப் போல் அதனுடன்தானே உள்ளடங்குமொழிய உறவுகொண்டுள்து.



உள்ளடங்குமொழியத்தை வருணனை விளக்கம் செய்யும் ஒரு வழி 'பொதுவினம்' ('genus) மற்றும் 'வேறுபடுவினம்' (differentia) என்பதால் விளக்குவதாகும். கூடுதல் சிறப்பான சொல் உள்ளடங்குமொழி என்றும் கூடுதல் பொதுவான சொல் உள்ளடக்கு மொழி (superordinate term) என்றும் கூறப்படும்.

பொருள்களைத் தொடர்புபடுத்த 'உள்ளங்குதல்' (inclusion) என்பதைப் பயன்படுத்துவது குழப்பம் விளைவிப்பதாகும். ஏனென்றால் ஒரு வழியில் 'மங்கை' என்பது 'வயதுக்குவந்தவர்' என்பதை உள்ளடக்கும். மற்றொரு வழியில் எதிரிடையானதாகும்: பொதுவான சொல் கூடுதல் சிறப்பான சொல்லை உள்ளடக்கும் என்ற அர்த்தத்தில் 'வயதுக்குவந்தவர்' என்பது 'மங்கை' என்பதை உள்ளடக்கும்.



'உள்ளடங்குதல்' என்பதன் பிந்தைய அர்த்தத்தில் நாம் குறிப்புரை செய்யும் சொல்லைக் குறிப்பிடுகின்றோம்; பொருளை அல்ல. ஏனென்றால் 'பொருள் உள்ளடங்குதல்' என்பதற்கும் 'குறிப்புரைசார் உள்ளடங்குதல்' என்பதற்கும் மறுதலை இருக்கின்றது. இதைத் தவிர்க்க ஜான்லையான்சைப் பின்பற்றி உள்ளடங்குமொழியம் என்ற சொல் பயன்படுத்துபடுகின்றது.

பின்வரும் பொருண்மைக்கூறு உறவுகள் கருத்தில் கொள்ளப்படவேண்டும்:

1. ஒருபொருன்பன்மொழியமும் பல்பொருண்மையும் வடிவத்திற்கும் பொருண்மைக்கும் இடையிலுள்ள உறவாகும்.

(அ) ஒருபொருள்பன்மொழியம்: ஒன்றிற்கும் மேற்பட்ட வடிவங்கள் ஒரே பொருளைக் கொண்டிருப்பது.

(ஆ) பல்பொருண்மை: ஒரே வடிவம் ஒன்றிற்கும் மேற்பட்ட பொருளைக் கொண்டிருப்பது.

2. உள்ளடங்கு மொழியமும் இணக்கமின்மையும் இரு பொருள்களுக்கு இடையிலுள்ள உறவாகும்:

(அ) உள்ளடங்கு மொழியம் என்பது ஒரு பொருள் மற்றொருள் பொருளில் உள்ளடங்குவது.

(ஆ) இணக்கமின்மை ஒரு பொருளை மற்றொருபொருளிலிருந்து விலக்கிவைப்பது.

இங்கு வடிவத்திற்கும் பொருளுக்கும் இடையிலுள்ள குழப்பத்தைத் தவிர்க்க வேண்டி பல்பொருண்மையையும் ஒருபொருள்பன்மொழித்தையும் பற்றி விளக்கும் போது சொற்கள் சாய்வு எழுத்துக்களாலும் உள்ளடங்குமொழியத்தையும் இணக்கமின்மையையும் பற்றி விளக்கும் போது மேற்கோள் குறிகளும் பயன்படுத்தப்பட்டன. இது சாய்வு எழுத்துக்கள் வடிவங்களை உருப்படுத்தம் செய்யும் மற்றும் மேற்கோள் குறிகளால் உள்ளடக்கப்பட்டவை இவ்வடிவளுடன் பொருந்தும் பொருள்களை உருப்படுத்தம் செய்யும் என்ற மரபின் அடிப்படையிலாகும். எடுத்துக்காட்டாகக் *குழந்தை* என்ற சொல் *குழந்தை* எனச் சாய்வு எழுத்துக்களாலும் *குழந்தை* என்பதன் பொருள் 'குழந்தை' என ஒற்றை மேற்கோள் குறியீட்டிற்குள்ளும் தரப்படும்.

3.2.3. பொருண்மைக் கருத்துச் சாயல் 'குறியன்' (signese)

லீச் முறையான மொழியைப் பொருள்மயக்கத்தை வெளிப்படுத்தும் இயற்கை மொழியிலிருந்து வேறுபடுத்த குறியன் (signese) என்ற சொல்லைப் பயன்படுத்தி விளக்குகின்றார். குறியன் என்பது கணித மற்றும் தர்க்க மொழிகளைப் போன்று முறையான மொழியாகும் (formal language). இதற்கு இரண்டு முக்கியச் சிறப்புப்பண்புகள் உள்ளன. முதலாவதாக குறியனிலுள்ள எந்த ஒரு வெளிப்பாடும் பொருள் மயக்கமற்றதாகும். இரண்டாவது குறியன் என்பதை மற்றொரு எழுதுக் குறியீட்டால் பொருள்மயக்கத்திற்கு உள்ளாக்காமல் இடம்பெயர்க்கவிலும் என்ற அர்த்தத்தில் இது எழுத்துரு அடிப்படையில் இடுகுறியாகும் (arbitrary).

பொருண்மைகளை உருப்படுத்தம் செய்ய ஒரு முறையான மொழியின் முக்கியத்துவம் பின்வரும் படத்தில் காட்டப்பட்டுள்ளது.



இயற்கை மொழி பல்மட்ட குறிய அமைப்பொழுங்காகும் (multi-level coding system). இது ஒரு எழுத்துச் செய்தியைக் குறியத்திறவு செய்யும் ஒவ்வொரு மட்டத்திலும் (பொருண்மை) மயக்கத்தை அனுமதிக்கின்றது. இவ்வாறு ஒரே எழுத்து மெய்ப்படுத்தம் வேறுபட்ட பல பொருள்களை உருப்படுத்தம் செய்யும். ஆனால் முறையான மொழி ஒரு எழுத்து வாய்பாட்டிற்கு ஒரு பொருளைத் தான் அனுமதிக்கின்றது. இது A என்ற அம்புக்குறியால் காட்டப்பட்டுள்ளது. தமிழ் பொருள்களை உருப்படுத்தம் செய்வதற்கு வேண்டி திட்டவரைவு செய்யப்பட்ட குறியன் போன்ற முறையான மொழி தமிழின் அதே பொருண்மைச் சிறப்பியல்புகளைக் கொண்டிருக்க விரும்பப்படுகின்றது. இது B என்ற அம்புக்குறியால் காட்டப்பட்டுள்ளது. எனவே இந்த ஒற்றுமை பெறப்பட்டால் குறியன் தமிழில் ஒரு மயக்கமற்ற பொருண்மை உருப்படுத்தத்தைத் (semantic representaion) தரும். இது C என்ற அம்புக்குறியால் காட்டப்பட்டுள்ளது. முறையான மொழியில்லாமல் பொருள்களைப் பற்றி மயக்கமில்லாமல் நாம் எழுதவியலாது என்பதோடு பொருள்பற்றி தெளிவான வருணனைக் கோட்பாட்டை உருவாக்கவியலாது. முறையான மொழிகள் பொருண்மை விளக்கங்களைத் தெளிவாகவும் வெளிப்படையாகவும் செய்வதற்கு முக்கியமான பங்களிப்பு செய்கின்றது. லீச் (Leech, 1981: 96-97) குறியனுக்குப் பின்வரும் மரபுகளை சிறப்பீடு செய்கின்றார்.

(அ) பொருண்மைக்கூறுகள் வைக்கப்படுகின்ற வரிசை முறை பொருள்களை வேறுபடுத்தச் சிறப்பானது அல்ல. எனவே + மனிதவினம் +வயதுக்குவந்த +ஆண் என்பதும் +ஆண் +மனிதவினம் +வயதுக்குவந்த என்பதும் குறிமான வேறுபாடுகள் ஆகும்.

(ஆ) ஒரு வாய்பாட்டில் ஒரே பண்புக்கூறின் இரு நேர்வுகள் இருந்தால் நேர்வுகளின் ஒன்று மிகைமையாகும். எனவே +மனிதவினம் +வயதுக்குவந்த +ஆண் +வயதுக்குவந்த என்பது +மனிதவினம் +முதுமை +ஆண் என்பதன் குறிமான வேறுபாடாகும்.

(இ) ஒரே வாய்பாட்டில் முரண்படும் பண்புக்கூறுகள் நேர்வது (எ.கா. + ஆண் மற்றும் -ஆண்) குறிமான அமைப்பொழுங்கின் வரம்புமீறலாகும்.

3.2.4. பொருண்மைக்கூறாய்வை நியாயப்படுத்துதல்

பொருண்மைக் கூறாய்வை நியாயப்படுத்துதல் என்பது பொருள்களின் முரண்பாடுகளும் இணைப்புகளும் தரமான தரவை விளக்குவதற்குத் தேவையானவைகளாகும் மற்றும் போதுமானவைகளாகும் என்று காட்டுவதாகும். இங்கு கருத்திற்கொள்ளப்படுகின்ற பொருண்மையியல் ஆய்வின் தரவுகள் உட்படுத்தல் (entailment) போன்ற ஒரு குழும அடிப்படைக் கூற்றுகளாகும். பின்வரும் எடுத்துக்காட்டு உள்ளடக்கு மொழியத்திற்கும் உட்படுத்தலுக்கும் இடையிலுள்ள உறவை வெளிப்படுத்தும்.

எ.கா.

'செயலாளர் ஒரு மங்கையாவார்' என்பது 'செயலாளர் ஒரு வயதுக்குவந்தவர்' என்பதை உட்படுத்தும்.

'நான் இரு சிறுவர்களைச் சந்தித்தேன்' என்பது நான் இரு குழந்தைகளைச் சந்தித்தேன்' என்பதை உட்படுத்தும்.

பொருண்மைக் கூறாய்வுக்கும் அடிப்படைக் கூற்றுகளுக்கும் உள்ள தொடர்பு உள்ளடக்குமொழியம், இணக்கமின்மை என்ற பொருண்மை உறவுகளால் நிறுவப்படும். இவைகள் பொருண்மைக் கூறுகளால் வரையறை விளக்கம் செய்யப்படுவதுபோல், உட்படுத்தல், ஒருமைப்பாடின்மை (inconisitency) என்ற அடிப்படைத் தர்க்க உறவுகளை உட்படுத்துமொழியம், இணக்கமின்மை என்ற பொருண்மை உறவுகளால் வரையறை விளக்கம்

செய்லாம். பின்வரும் எடுத்துக்காட்டுகள் இணக்கமின்மைக்கும் ஒருமைப்பாடின்மைக்கும் இடையிலுள்ளள உறவை வெளிப்படுத்தும்.

எ.கா.

'செயலாளர் ஒரு மங்கையாவார்' என்பது 'செயலாளர் ஒரு ஆடவாராவார்' என்பதுடன் ஒருமைப்பாடின்மை உறவுகொண்டிருக்கும்.

சிலவகைக் கூறியது கூறலையும் (tautology) முரணையும் (contrdiction) உள்ளடக்குமொழியம், இணக்கமின்மை என்பனவற்றால் வரையறை விளக்கம் செய்லாம்.

எ.கா.

'அந்த மனிதர் வயதுக்குவந்தவர்' என்பது கூறியது கூறலாகும்.

'அச்சிறுவன் ஒரு மங்கையாவான்' என்பது முரணாகும்.

3.2.5. வகைபாட்டியல்சார் எதிர்நிலைகள் (taxonomic opposition)

முன்னர் கூறிய பொருண்மை எதிர்நிலைகளின் மூன்று எடுத்துக்காட்டுகளும் ஒரு வகையைச் சாரும்: எதிர்நிலைக்கு இரு சொற்கள் இருக்கின்றன; அவைகளுக்கிடையே உள்ள முரண்பாடு நாடுகளுக்கிடையேஉள்ள எல்லையைப்போல் முழுமையானதாகும். இவ்வகையிலான எதிர்நிலை ஈரிணை வகைப்பாட்டியல் (binary taxonomy) எனப்படும். பின்வரும் எடுத்துக்காட்டு இதை விளக்கும்.



எல்லா எதிர்நிலைகளும் இவ்வகையிலான ஈரிணை முரண்பாடுகளல்ல. பல எதிர்நிலைகள் இரண்டிற்கும் மேற்பட்ட சொற்களை உள்ளடக்கிய முரண்பாடுகளாகும். இவை

பல்வகைப்பாட்டியல்கள் (multiple taxonomies) எனப்படும். பின்வரும் எடுத்துக்காட்டு இதை விளக்கும்.

'தங்கம் (*உலோகம்)
'செம்பு' (†உலோகம்)
'இரும்பு' (§உலோகம்)
'பாதரசம்' (ʘ உலோகம்)
போன்றன

3.2.6. துருவ எதிர்நிலைகள் (Polar oppostions)

பொருண்மை எதிர்நிலைகள் ஈரிணையாக இல்லாவிடில் அவை வகைபாட்டியலாக இருக்காது. ஏதிர்மொழிய இணைகளால் வெளிப்படுத்தப்படும் ஈரிணை முரண்பாடுகளை (எ.கா. *ஏழ்மை/வளமை, முதுமை/இளமை, பொரிய/சிறிய*) இரு துருவங்களுக்கிடையே அல்லது இரு முனைகளுக்கிடையே மாறி வரும் அளவையாகக் (scale) கருதலாம். இவ்வளவையை ஏறுமுகமாகவோ இறங்குமுகமாகவோ வேறுபடும் முரண்பாடுகளாகக் காணலாம் (எ.கா. 'பெரிய', 'மிகப் பெரிய', 'மிகமிகப் பெரிய' ...)



3.2.7. ஒத்தறி எதிர்நிலைகள்

ஈரிணை எதிர்நிலையின் முக்கியமான வகை திசையின் முரணை உள்ளடக்கியதாகும்.

எ.கா.

'மேலே' /' கீழே', 'முன்னே' /' பின்னே', 'முன்னர்' /' பின்னர்', 'இடது' /' வலது', 'மேற்கு' /' கிழக்கு', 'பெற்றோர்' /' குழந்தை', 'ஆசிரியர்' /' மாணவன்'.

ஒத்தறி உறவுகளை அவை உறவுபடுத்தும் இரு இருப்பான்கள் (entities) இல்லாமல் கருதவியலாது. அவற்றை நாம் பங்கெடுப்பாளர்கள் (arguments) என்கின்றோம். பங்கெடுப்பாளர்கள் வேறுபட்ட தொடரியல் நிரல்களில் வந்து முரண்படும்.

எ.கா.

அ	→பெற்றோர்	ஆ

ஆ	→பெற்றோர்	ஆ

இராஜாவும் இராணியும் இராதையின் பெற்றோர் ஆவர்.
இராதை இராணிக்கும் இராஜாவுக்கும் குழந்தை ஆவாள்.



பெற்றோர், குழந்தை என்பன மறுதலைகள் (converses) ஆகும். இது பின்வருமாறு ஒருபொருள்பன்மொழிகளைத் தரும்.

'இராஜா இராதையின் பெற்றோர் ஆவார்' என்பது 'இராதை இராஜாவின் குழந்தை ஆவாள்' என்பதுடன் ஒருபொருள்பன்மொழிய உறவுகொண்டுள்ளது.

அ	→பெற்றோர்	ஆ

ஆ	←பெற்றோர்	அ

'இராதை இராஜாவின் குழந்தை ஆவாள்' என்பது 'இராஜா இராணியின் பெற்றோர் ஆவார்' என்பதுடன் ஒருபொருள்பன்மொழிய உறவுகொண்டுள்ளது.

ஆ	→பெற்றோர்	அ

அ	←பெற்றோர்	ஆ

இவ்விணை வாக்கியங்களின் வெளிப்படும் ஒருபொருள்பன்மொழியத்தை பின்வரும் இணைகளிலும் காணலாம்.

'என் அண்ணா ஒரு வீட்டுக்குச் சொந்தக்காரர்' என்பது

'ஒரு வீடு என் அண்ணாவுக்குச் சொந்தமாகும்' என்பதுடன் ஒருபொருள்பன்மொழிய உறவு கொண்டுள்ளது.

'பச்சைப் பேருந்து சிவப்பு பேருந்துவுக்கு முன்னால் நிற்கின்றது' என்பது

'சிவப்பு பேருந்து பச்சைப் பேருந்துவுக்குப் பின்னால் நிற்கின்றது' என்பதுடன் ஒருபொருள்பன்மொழிய உறவு கொண்டுள்ளது.

'இராஜா பாம்பைக் கொன்றான' என்பது

'பாம்பு இராஜாவல் கொல்லப்பட்டது' என்பதுடன் ஒருபொருன்பன்மொழிய உறவு கொண்டுள்ளது.

துருவங்கள் போன்ற உறவுகள் அவற்றின் தர்க்கச் சிறப்புப் பண்புக்கூறகளில் வேறுபடும். பல திசை முரண்பாடுகள் 'பெற்றோர்' உறவு போல ஒன்றையொன்று விலக்குகிறனவாகும். →R/←Rஎன்ற குறியீட்டைப் பயன்படுத்தி எந்த ஒத்தறி எதிர்நிலைகளையும் வாய்ப்பாடாக வெளிப்படுத்தலாம்.

ஆ	→ R	அ

ஏன்பது

அ	←R	ஆ

என்பதுடன் ஒருமைப்பாடில்லாததாகும். இவ்வுறவு தர்க்க அடிப்படையில் சமன்பாடில்லாதாகும். சில எதிர்நிலைகள் சமன்பாட்டு உறவைக் காட்டுகின்றன.

அ	→R	ஆ

ஏன்பது

அ	←R	ஆ

என்பதை உட்படுத்தும். எடுத்துக்காட்டாக, 'இராஜா இரணியைத் திருமணம் செய்தான்' என்பது 'இராணி இராஜாவைத் திருமணம் செய்தாள்' என்பதை உட்படுத்தும். சில உறவுகள் உட்படுத்தலைக் காட்டாதோ ஒருமைப்பாடில்லாதோ வரும். எடுத்துக்காட்டாக, இராஜா இராணியைக் காதலிக்கிறான்' என்பது 'இராணி இராஜாவைக் காதலிக்கிறாள்' என்பதை உட்படுத்தாதோ என்பதுடன் ஒருமைப்பாடில்லாதோ வரும்.

பிற தர்க்க உறவுகள் கடவு (transititiy) மற்றும் தற்சுட்டு (reflexivity) என்ற உறவுகளாகும். ஆவற்றின் நேரிடையான எதிர்நிலைகள் கடவின்மை (intransitivity) மற்றும்

தற்சுட்டின்மை (irreflexivity) என்பனவாகும். கடவு என்பதைத் தர்க்க அடிப்படையில் பின்வரும் விதியால் வரையறை விளக்கம் செய்யலாம்.

அ	→R	ஆ	மற்றும்	ஆ	→R	இ

என்பது

அ	→R	இ

என்பதை உட்படுத்தும். எடுத்துக்காட்டாக 'நாய் ஒரு பாலூட்டி' மற்றும் 'பாலூட்டி ஒரு விலங்கு' என்பன 'நாய் ஒரு விலங்கு' என்பதை உட்படுத்தும். 'இராஜா தஞ்சாவூரில் இருக்கிறான்' மற்றும் 'தஞ்சாவூர் தமிழ்நாட்டில் இருக்கிறது' என்பன 'இராஜா தமிழ்நாட்டில் இருக்கிறான்' என்பதை உட்படுத்தும். –இல் என்பதால் வெளிப்படுத்தப்படும் உறவு கடவு உறவாகும். ஏனென்றால் பெரும்பாலான இட உறவுகள் கடவு உறவை வெளிப்படுத்துவனவாகும். மாறாக, கடவின்மை பின்வரும் விதியால் வரையறை விளக்கம் செய்யப்படும்.

அ	→R	ஆ	மற்றும்	ஆ	→R	இ

என்பது

அ	→Rஇ

என்பதுடன் ஒருமைப்பாடின்றி வரும். எடுத்துக்காட்டாக 'இராஜா கண்ணனின் பெற்றோர்' 'கண்ணன் குமாரின் பெற்றோர்' என்பன 'இராஜா குமாரின் பெற்றோர்' என்பதுடன் ஒருமைப்பாடின்றி வரும். பல உறவுகள் இந்த இரு உறவுகளையும் சாராது வரும். எடுத்துக்காட்டாக 'காதலி' என்பது கடவையோ கடவின்மையோ காட்டாது வரும்.

ஒரு பங்கெடுப்பாளர் தன்னையே தொடர்புபடுத்தவியலும் உறவுகள் தற்சுட்டு எனப்படும். அதாவது எல்லாத் தற்சுட்டு உறவுகளையும் கூறியதுகூறல் எனக் குறிப்பிடலாம்.

அ	→R	அ

எடுத்துக்காட்டாக 'கண்ணன் தன்னைப்போல வயதானவன்' என்பது கூறியது கூறலாகும். எதிரிடையானது என்றால், அதாவது

அ	→R	அ

என்பது முரண்பாடு (contradiction) என்றால் அந்த உறவு தற்சுட்டாமை (irreflexivity) ஆகும். எடுத்துக்காட்டாக 'கண்ணன் தனக்கு முன்னால் நிற்கிறான்' என்பது முரண்பாடாகும்.

சமன்பாடின்மை, கடவு, தற்சுட்டாமை என்பதன் குறிப்பிட்ட ஒன்றுசேர்க்கை இயற்கை மொழியில் பல எண்ணிக்கையிலான உறவுகளுக்குப் பொதுவானதாகும் (எ.கா. 'மேலே' /' கீழே', 'முன்னர்' /' பின்னர்', 'முன்னோர்' /'வழிவந்தோர்'). எனவே அவற்றிற்கு ஒரு சிறப்பான பெயர் இருப்பது நல்லது. பொருள் பரிமாணத்தைப் பொறுத்தவரையில் அவை பங்கெடுப்பாளர்களைத் திருப்ப இயலாத நிரலில் வைப்பதால் இந்த எதிர்நிலைகளை நிரல் உறவுகள் (ordring relations) எனக்கூறலாம். மற்றொரு முக்கியமான வகுப்பு சமன்பாடு, தற்சுட்டாமை ('எதிரில்', 'அண்மையில்', 'திருமணமாகு', 'ஒன்றுமையாக இரு') என்பனவற்றின் சிறப்பியல்புகளைக் கொண்ட உறவுகளால் ஆனதாகும். திசை முரண்பாடு பரிமாற்றத்தில் (reciprocal) (மற்றும் பிற சமன்பாட்டில்) எதிர்நீக்கம் செய்யப்படுவதால் அவற்றை இருதலை அம்புக்குறியால் குறிப்பீடுசெய்வது பயனுள்ளதாகும்.

எ.கா.

↔திருமணம்செய், ↔அண்மை

பிற உறவுகளை ஒருதலை அம்புக்குறியால் குறிப்பீடுசெய்யலாம்.

எ.கா.

→பெற்றோர், ←பெற்றோர்

பொருளின் ஒத்தறி பண்புக்கூறுகள் பெரும்பான்மையும் வினைகளாலோ முன்னுருபுகளாலோ (‘மேலே’ /’ அடியில்’) அல்லது இணைப்பான்களாலோ (‘முன்னர்’ /’ பின்னர்’ , ‘பொழுது’ , ‘ஆகையால்’ , ‘அப்படியென்றால்’). ஆனால் ஒப்பீட்டுக் கட்டுமானங்களில் பெயரடையும், வினையடையும் ஒத்தறிப்பொருள் கொண்டிருக்கும். சமனற்ற ஒப்பீடுகள் (‘கூடதலான’ , ‘குறைவான’) நிரலான உறவுகளின் இயல்பைக் கொண்டிருக்கும்.

எ.கா.

‘கண்ணன் குமாரைவிட கூடுதல் உயரமானவன்’ என்பது ‘குமார் கண்ணனைவிட கூடுதல் உயரமானவன்’ என்பதுடன் ஒருமைப்பாடின்றி இருக்கும்.

‘கண்ணன் குமாரைவிட கூடுதல் உயரமானவன்’ மற்றும் ‘குமார் சிவனைவிட கூடுதல் உயரமானவன்’ என்பன ‘கண்ணன் சிவனைவிட கூடுதல் உயரமானவன்’ என்பதை உட்படுத்தும்.

‘கண்ணன் தன்மைவிட கூடுதல் உயரமானவன்’ என்பது முரணாகும்.

மேலும் எதிர்மறையான பெயரடைகள், வினையடைகள் இவற்றின் ஒப்பீட்டு வடிவங்கள் மறுதலையாகும்.

எ.கா.

‘கண்ணன் குமாரைவிட உயரமானவன்’ என்பது ‘கண்ணன் குமாரைவிட குள்ளமானவன்’ என்பதன் ஒருபொருள்பன்மொழியமாகும்.

3.2.8. பிற வகையிலான எதிர்நிலைகள்

பிற குறைந்த பொதுவான பொருண்மை எதிர்நிலை வகைகள் படிநிலை எதிர்நிலைகளை (hierarchical opposition) உட்படுத்தும். எ.கா. (உயரம்1, உயரம் 2, உயரம் 3, ...); இவை நிரல் தனிமத்தைக் கொண்டிருக்காது என்பது தவிர பல் வகைப்பாட்டியல் போன்றவையாகும். அளவை அலகுகள் (‘மில்லிமீட்டர், சென்டிமீட்டர், ...), ஆண்டின் மாதங்கள் (சனவரி,

பெப்ரவரி, மார்ச்சு,...), வாரத்தின் நாட்கள் (ஞாயிறு, திங்கள், ...) போன்ற நாள்காட்டி அலகுகள் மற்றும் எண்கள் (ஒன்று, இரண்டு, மூன்று...) போன்றன படிநிலைகள் எதிர்நிலைகளின் எடுத்துக்காட்டுகளாகும்.

3.3. வாக்கியங்களின் பொருண்மை அமைப்பு

சொற்பொருள்களை ஆய்வதற்கு ஒரு நுட்பமான சொற்கூராய்வு முந்தைய பகுதியில் விளக்கப்பட்டது. இப்பொழுது இந்தப் பகுதியில் முழு வாக்கியங்களின் பொருள்களையும் எவ்வாறு விளக்குவது என்ற கேள்விக்கான விடை விளக்கப்படும். எளிதான மற்றும் இயல்பான கருதுகோள் என்னவென்றால் ஒரு வாக்கியத்தின் பொருள் அது கொண்டிருக்கும் சொற்கள் மற்றும் பிற உறுப்புகளின் பொருள்களின் கூட்டுத்தொகையால் கிடைப்பதாகும். ஆனால் இது தவறாகும். முதலவதாகப் பின்வரும் வாக்கியங்களுக்கிடையே உள்ள பொருள் வேறுபாட்டைக் கூறவியலாது. (அவற்றின் சொற்கள் ஒன்றாக இருந்தபோதிலும் அவை பொருண்மையில் வேறுபடுகின்றன.)

என்னுடைய புதிய உதவியாளர் வேலைக்காரி வைத்திருக்கிறாள்.
என்னுடைய புதிய வேலைக்காரி உதவியாளர் வைத்திருக்கிறாள்.

இரண்டாவதாக, பொருண்மைக் கூறாய்வைச் சொற்களுக்கு மட்டுமல்லாமல் முழு வாக்கியத்திற்கும் பயன்படுத்துவதானால், *அந்த வயதானவர் நாய்க்குட்டியை விரும்புகிறார்* என்பது பொருளில்லாது போகும். *வயதானவர்* என்பதில் உள்ள *+வயதான* மற்றும் *நாய்குட்டி* என்பதிலுள்ள *-வயதான* என்பன ஒன்றையொன்று முரண்படுத்தும். சில மொழியிலாளர்கள் இதுபோன்ற ஆனால் கூடுதல் நுட்பபமான தீர்வுக்குச் செயல்பட்டனர். அதாவது முழு வாக்கியத்தின் பொருளை உருவாக்க வேண்டி ஒரு குறிப்பிட்ட வழியில் வாக்கிய உறுப்புக்களின் பொருள்களை ஒன்றிணைக்கும் ஒரு குழும சிறப்பான விதிகளை ((‘ஒருங்கிணைப்பு விதிகள்’ (‘combinatorial rules’) அல்லது வருவரைவு விதிகள் (‘projection ruels’)) நிறுவ முயன்றனர்.

பொருண்மையியலைச் சொற்களாலும் வாக்கியங்களாலும் விளக்கும் இந்த அணுகுமுறை தவறுக்கு வழி செய்யும். எனவே நாம் பொருண்மையியல் ஆய்வை பெயர்கள், வினைகள் என்ற அலகுகளின் அச்சில் பெருத்த முயலாமல் பொருண்மையியல் மட்டத்தில இயங்கும் அலகுகளையும் அமைப்புகளையும் பார்க்க வேண்டும். இது பொருண்மையியல் வகைப்பாடுகளுக்கும் தொடரியல் வகைப்பாடுகளுக்கும் தொடர்பு படுத்த முடியும் என்பதை மறுக்காது.

பொருண்மைக் கூறாய்வைத் தொடக்கப் புள்ளியாக எடுத்துக் கொள்வோம். பொருண்மைக் கூறாய்வு முரண்படும் பண்புக் கூறுகளின் ஒருங்கிணைப்பின் அடிப்படையிலான வருணனை விளக்கமாகும். இதைச் சொற்பொருள்களுக்குப் பயன்படுத்தலாம்; ஆனால் முழு வாக்கியத்திற்கும் பயன்படுத்த இயலாது. பின்வரும் எடுத்துக்காட்டுகளைக் கருத்தில் கொள்ளவும்.

சிறுமி +மனித இனம் -வயதுவந்த
சிறுவன் +மனித இனம் -வயதுவந்த
பூனைக்குட்டி –மனித இனம் -வயதுவந்த
நாய்குட்டி -மனித இனம் -வயதுவந்த
குதிரைக்குட்டி -மனித இனம் -வயதுவந்த

ஆங்கிலத்தில் பூனைக்குட்டி என்பதை kitten என்றும் நாய்க் குட்டி என்பதை *puppy* என்றும் குதிரைக் குட்டி என்பதை *fole* என்றும் அழைப்பர். இதனால் *குரங்குக் குட்டி* என்பதை வெளிப்படுத்தும் வழி இல்லை என்பதும் தவறாகும். *குரங்குக்குட்டி* என்பது ஆங்கிலத்தில் young monkey என்ற தொடரால் வெளிப்படுத்தப்படும். #இனம் -வயதுக்குவந்த என்ற பண்புக்கூறுகளின் ஒன்றிணைப்பு ஆங்கிலத்தில் ஒரு சொல்லுக்குப் பதிலாக ஒரு தொடரால் வெளிப்படுத்தப்படுகின்றது. முந்தைய கருத்துருக்களில் இது தனித்தனிச் சொற்களால் வெளிப்படுத்தப்படுகிறது. இது போல ஆங்கிலத்தில் *lionness* என்பது தமிழில் *பெண் சிங்கம்* என்று வெளிப்படுத்தப்படுகிறது. ஆங்கிலத்தில் *old man* என்பது லத்தீன் மொழியில் *senex* என்ற சொல்லால் வெளிப்படுத்தப்படுகிறது. இதிலிருந்து கிடைக்கப்பெறும் முடிவு என்னவென்றால் பொருண்மைக் கூறாய்வு பயன்படுத்தும் பொருண்மை அலகு ஒரு வாக்கியத்தைவிட சிறியது என்பதோடு ஒரு சொல்லை விட பெரியது என்பதாகும்.

3.3.1. வினைப்பாடுகள், பங்கெடுப்பாளர்கள் மற்றும் பயனிலைகள்

வாக்கியங்களின் பொருளைச் சொற்களாக விளக்குவதற்கு அலகுகளின் ஒரு படிநிலை தேவையாகும். முக்கியமான அலகு வினைப்பாடு (predication) ஆகும். இது தேற்றக் கூற்றுக்குச் சமமானதல்ல; ஆனால் தேற்றக்கூற்றுகள், கேள்விகள் மற்றும் கட்டளைகள் என்பவைகளால் பங்கிடப்படும் பொதுவான வகைப்பாடாகும். பின்வரும் வாக்கியங்களைக் கருத்தில் கொள்ளவும்.

அ. குழந்தைகள் மதிய உணவு உண்டனர்.
ஆ.குழந்தைகள் மதிய உணவு உண்டனரா?
இ. குழந்தைகளே மதிய உணவு உண்ணுங்கள்

இவ்வாக்கியங்களுக்கு இடையே உள்ள காலம் மற்றும் மாற்றுப் பெயர்கள் சார்ந்த பொருண்மையை விட்டுவிட்டுப் பார்த்தால் இவைகள் 'குழந்தைகள் மதிய உணவு உண்' என்ற ஒரு பொதுவான உள்ளடக்கத்தை கொண்டிருப்பது தெரியவரும். வினைப்பாடுகளுக்கும் தேற்றக் கூற்றுகளுக்கும் உள்ள வேறுபாடு பின்னர் விளக்கப்படும். பின்வரும் தேற்றக் கூற்றை பார்க்கவும்.

[என் மாமா] [வைத்திருக்கிறார்] [இந்தக் காரை]
'என் மாமா இந்தக் காரை வைத்திருக்கிறார்'

இந்தத் தேற்றக்கூற்றை 'என் மாமா', 'இந்தக் கார்' என்ற இரண்டு பங்கெடுப்பாளர்களாகவும் (அல்லது தர்க்க அடிப்படையிலான பங்கெடுப்பாளர்களாகவும்) இவற்றைத் தொடர்படுத்தும் 'வைத்திரு' என்ற தனிமத்தைக் கொண்டிருப்பதாகவும் பிரித்து ஆய இயலும். இந்தத் தொடர்படுத்தும் தனிமம் 'பயனிலை' என்ற இலக்கணக் கலைச்சொல் அல்லாத தர்க்கக் கலைச்சொல் ஆகும். எழுவாய், செயப்படுபொருள், வினை, வினையடை போன்ற வாக்கியங்களின் உறுப்புகள் போன்று பயனிலையும் பங்கெடுப்பாளர்களும் வாக்கியத்தால் வெளிப்படுத்தப்படும் வினைப்பாட்டின் உறுப்புகளாகும். பங்கெடுப்பாளர்கள் சில நேரங்களில் தொடரியல் தனிமங்களான எழுவாய், வினை, பயனிலை, செயப்படுபொருள் ஆகியவற்றுடன் பொருந்தும்; சில நேரங்களில் பொருந்தாது. நாம் மரபிலக்கணம் 'பயனிலை' என்று கூறும்

அர்த்தத்தில் 'பயனிலை' என்பதைத் தொடர்புபடுத்த கூடாது. இந்தத் தர்க்க பொருண்மையியல் அலகுகள் தொடரியல் அலகுகளுடன் பொருந்துவதை நாம் எதிர்பார்க்க கூடாது. கீழ்வரும் எடுத்துக்காட்டில் 'முன்னால் நில்' என்ற பயனிலை தொடரியல் அர்த்தத்தில் ஒரு தனிநிலை அலகு அல்ல.

[ஒரு உயரமான பெண்] [முன்னால் நிற்கிறாள்] [பேருந்துக்கு]

'ஒரு உயரமான பெண் பேருந்துக்கு முன்னால் நிற்கிறாள்.

எல்லா வினைப்பாடுகளையும் பங்கெடுப்பாளர்களாகவும் பயனிலைகளாகவும் பிரிக்க இயலும் என்று வைத்துக் கொண்டால் எவ்வாறு இந்த அலகுகளின் பொருளடக்கத்தை ஆயவியலும் என்பது கேள்வியாகும். நாம் பார்த்த எடுத்துக்காட்டு இந்த அலகுகளைப் பொருண்மைக் கூறுகளாக ஆய இயலும் என்பதைக் கூறுகின்றது. எடுத்துக்காட்டில் பங்கெடுப்பாளர்களில் ஒருவராக வரும் 'ஒரு உயரமான பெண்' என்பதைப் பின்வரும் குழுப்பண்பு கூறுகளாக ஆயலாம்.

ஒரு உயரமான பெண்: ↑உயரமான +மனிதவினம் +வயதுக்குவந்த −ஆண் +ஒருமை

பேருந்து என்பது 'தானியக்கம்' மற்றும் 'ஊர்தி' என்ற பண்புக்கூறகளைக் கொண்டிருப்பதாக ஆயலாம். இங்கு வெளிப்படையற்றது என்னவென்றால் பயனிலைகளையும் பண்புகூறுகளாகப் பிரித்து உள்ளடங்கு மற்றும் இணக்கமின்மை உறவுகளாகக் குறிப்பிடலாம் என்பதாகும். '*ராஜா ஒரு முட்டையை அவித்தான்*' என்ற வாக்கியத்தின் பயனிலையை மூன்று பொருண்மைக் கூறுகளாக பகுக்கலாம்: 'வேகவை', 'தண்ணீரில்' மற்றும் 'இறந்தகாலம்'. இந்தப் பொருண்மைக் கூறுகளில் இரண்டாவது *வேகவை* என்பதைப் *பொரி* என்பதிலிருந்து வேறுபடுத்தும் மற்றும் இது முதல் கூறை சார்ந்து வரும். மூன்றாவது பண்புக்கூறின் இயல்பு கலவைத் தன்மையானது என்றாலும் இது இறந்தகால அர்த்தமான *அவித்தான்* என்பதை *அவிக்கிறான்* என்ற நிகழ்கால அர்த்தத்திலிருந்து வேறுபடுத்தத் தேவையாகும். *அவி* என்பதைக் கூறுகளாகப் பிரிப்பது பின்வரும் உட்படுத்து உறவை (entailment relation) விளக்கத் தேவை.

ராஜா முட்டையை அவித்தான்

என்பது *ராஜா முட்டையை வேகவைத்தான்* என்பதை உட்படுத்தும். இந்தத் தகவலைக் மேலும் எடுத்துக்காட்டப் பயனிலைகளின் பொருண்மைக் கூறாய்வின் சிறிது சிக்கல் வாய்ந்த எடுத்துக்காட்டை எடுத்துக் கொள்வோம். இங்கு இட உறவு எடுத்துக்காட்டாக எடுக்கப்பட்டுள்ளது. முன்பு கூறிய 'முன்னால் நில்' என்பதை எடுத்துக் கொள்வோம். ஈதைப் பொருண்மைக் கூறாய்வின் அடிப்படையில் உருப்படுத்தம் செய்யும் எளிதான வழி அது 'பின்னால்' என்ற ஒத்தறி பண்புக்கூடன் திசை அடிப்படையில் முரண்படுவதாகக் குறிப்பீடு செய்வதாகும்.

[அ[→ முன்னிலிரு] ஆ]	[அ [←முன்னிலிரு] ஆ]
'அ என்பது ஆ என்பதற்குப்	'அ என்பது ஆ என்பதற்குப்
முன்னாலிருக்கிறது'	பின்னாலிருக்கிறது'

இது போதுமானதல்ல. இந்த 'முன்னால்' என்பதன் கூறாய்வு 'மேலே', 'கீழே', 'அருகே', 'இடது பக்கம்', 'வலது பக்கம்' போன்ற இட அர்த்தங்களின் உறவுகளைக் காட்டத் தவறிவிட்டது. இதற்கு வேண்டி மூன்று பொருண்மை முரண்கள் (எதிர்மறைகள்) தேவை.

{ →திசை ('முன்னால்' மற்றும் 'பின்னால்' என்பதற்கும்
{ ←திசை 'மேலே' மற்றும் 'கீழே' என்பதற்கும் இடையே உள்ள திசை சார்ந்த முரண்பாடு)

{ + கிடக்கையான +பக்கவாடு 'பக்கத்திலிருந்து பக்கம்'
{ - செங்குத்தான -பக்கவாடு 'பின்னிலிருந்து பின்னால்'

நாம் இந்த எல்லா அர்த்தங்களூம் இட உறவு என்ற அடிப்படையைக் கொண்டிருக்கிறது என்பதைக் காட்டும் இந்தப் பரிமாற்ற உறவுடன் பின்வரும் பண்புக்கூறை சேர்க்க வேண்டும்.

↔இடம் 'அ என்பது ஆ-உடன் இட உறவு கொண்டுள்ளது'

நாம் பின்வரும் மிகை விதிகளையும் சேர்க்க வேண்டும்.

+கிடைநிலை என்பது [↔இட] என்பதை வேண்டும்.

+பக்கவாடு என்பது [+கிடைநிலை] என்பதை வேண்டும்.

முன்னால், பின்னால் போன்ற பின்னுருபுகள் இப்பொழுது பின்வருமாறு விளக்கப்படலாம் (Leech, 1981:126).

(அ) மேலே	(ஆ) அடியில்	(இ) முன்னால்	(ஈ) பின்னால்
[↔இடம்]	[↔இடம்]	[↔இடம்]	[↔இடம்]
→திசை	←திசை	→திசை	←திசை
-கிடைநிலை	-கிடைநிலை	[-கிடைநிலை]	[+கிடைநிலை]
		-பக்கவாடு	-பக்கவாடு
(உ) இடதுபக்கம்	(ஊ) வலதுபக்கம்	(எ) அடுத்து, பக்கம்	
[↔இடம்]	[↔இடம்]	[↔இடம்]	
→திசை	←திசை	+அண்மை	
[+கிடைநிலை]	[+கிடைநிலை]	[+கிடைநிலை]	
+பக்கவாடு	+பக்கவாடு	+பக்கவாடு	

அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ள பண்புக்கூறுகள் மிகைவிதிகளால் முற்கோள் செய்யப்படும். எனவே வரையறை விளக்கத்தின் பகுதியாகச் சிறப்பிக்கப்படாமல் சேர்க்கப்படலாம். இவ்வாறு ஒவ்வொரு பின்னொட்டும் இரண்டு பண்புக்கூறுகளால் வரையறை விளக்கம் செய்யப்பட்டுள்ன. (அ) முதல் (ஊ) வரை உள்ள வாய்ப்பாட்டின் இணக்கமின்மை காரணமாக இந்த ஆய்வு பின்வரும் எல்லாத் தேற்றக் கூற்றுகளிலும் ஒன்றுக்கொன்றான ஒருமைப்பாட்டின்மையைக் காட்டும்.

அ ஆ–இன் முன்னால் இருக்கின்றது
அ ஆ–இன் பின்னால் இருக்கின்றது
அ ஆ–இன் மேல் இருக்கின்றது
அ ஆ–இன் கீழ் இருக்கின்றது
அ ஆ–இன் இடப்பக்கம் இருக்கின்றது
அ ஆ–இன் வலப்பக்கம் இருக்கின்றது

இது சிக்கலாக்கப்பட வேண்டுமா? எடுத்துக்காட்டாக, நாம் மூன்று அச்சுகளை (செங்குத்து, முன்னிலிருந்துபின் பக்கத்திலிருந்து பக்கம்) சிக்கனமாக மூன்று சொல் எதிர்மறைகளால் வேறுபடுத்த வேண்டுமா அல்லது ஈரிணை எதிர்மறைகளால் வேறுபடுத்த வேண்டுமா என்ற கேள்வி எழும். முதலாவதாக நாம் செங்குத்து மற்றும் கிடைநிலை என்ற சொற்களின் பொருண்மையை சரியாக விளக்க செங்குத்து நிலைக்கும் கிடைநிலைக்கும் இடையில் வேறுபாடு செய்ய வேண்டும். இரண்டாவதாக செங்குத்துக்கும் கிடைநிலைக்கும் இடையில் உள்ள வேறுபாடு அண்மை என்ற இடப் பொருண்மையால் விளக்க வேண்டி வரும். அண்மை என்பதற்குப் பொதுமையின் அளவீட்டில் மூன்று இட பொருண்மைகள் இருக்கும்: இந்தப் பொருண்மைகளில் ஒன்று (மையத்தில் இருக்கிற ஒன்று) கிடைநிலை என்ற பொருண்மையின் அருவமாக்கத்தால் விளக்கப்படும். இந்த மூன்று அர்த்தங்கள் கீழே எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

1. ஆகாயவிமானத்தின் இறக்கைக்கு அண்மையில் குண்டு வெடித்தது.
2. ஒரு நாணயத்தை மற்றொன்றின் அண்மையில் வை.
3. சிவப்பு ஊர்திக்கு அண்மையில் பச்சை ஊர்தி நிறுத்தப்பட்டுள்ளது.

முதல் வாக்கியத்தில் *அண்மை* இட அடிப்படையிலான நெருக்கத்தைக் குறிப்பிடும். இங்கு *அண்மை* என்பது *மேலே* அல்லது *கீழே* என்பதை உள்ளடக்கும். இரண்டாவது வாக்கியத்தில் கூடுதல் சாத்தியமான அர்த்தம் இடைமட்டத்திற்கு அருகே என்பதாகும். இது *மேலே* மற்றும் *கீழே* என்பதைத் தவிர்க்கும். மூன்றாவதில் அர்த்தம் கூடுதல் சிறப்பானதாகும். இது *முன்னால்* அல்லது *பின்னால்* என்பதுடன் முரண்பட்டு வரும் *பக்கத்தில்* என்பதாகும். ஒன்றாவது வாக்கியத்தில் *அண்மை* என்பது (தூரத்தில் என்பதுடன் முரண்படும்) +அருகாமை என்பதாக விளக்கப்பட்டால், இரண்டாவது வரையறை விளக்கத்திற்கு நாம் +கிடைநிலை என்பதையும் மூன்றாவது வரையறை விளக்கத்திற்கு +பக்கவாடு என்பதையும் சேர்க்க வேண்டி வரும் (Leech, 1981:127).

அண்மை (1)	அண்மை (2)	அண்மை (3)
↔ இடம்	(↔ இடம்)	[↔ இடம்]
+அருகாமை	+அருகாமை	+அருகாமை
	+கிடைநிலை	[+கிடைநிலை]
		+பக்கவாடு

மீண்டும் மிகைப்பண்பு கூறகளைத் தள்ளுபடி செய்கையில் ஒவ்வொரு வரையறை விளக்கமும் இரண்டு பண்புக்கூறுகளை மட்டும் கொண்டிருக்கும். எனவே நாம் கவனத்தில் கொண்ட எல்லா பின்னுருபுகளும் அவற்றின் அர்த்தங்கள் கலவைத் தன்மையான வழிகளில் ஒன்றுக்கொன்று தொடர்பு கொண்டிருந்தாலும் அவை ஒரே அளவு முரண்பட்ட தகவலை வெளிப்படுத்துகின்றன என்ற ஆர்வம் உள்ள முடிவுக்கு வரலாம்.

அண்மை என்பதன் மூன்று பொருண்மைகளும் உள்ளடங்கு உறவில் இருக்கின்றன. இவை முன்னால் வாதிடப்பட்ட அடையாளப்படுத்தப்படாத சொற்களின் பொருண்மயக்க வகையை எடுத்துக்காட்டும். இருப்பினும் இந்த ஆய்வுக்குச் சாதகமாக இருக்கும் கூடுதல் செய்தி இதை *மேல், கீழ் (அடி) முன், பின், பக்கம்* என்ற பெயர்களுடன் பொதுமைப்படுத்த இயலும். இந்தக் கலைச்சொற்களுக்கும் நாம் கருத்தில் கொண்டிருக்கின்ற முன்னுருபுகளுக்கும் இடையில் தெளிவான இணைநிலை இருக்கிறது: 'மேல்' என்பது 'உயரத்தில்' என்பதுடனும் 'அடி' என்பது 'கீழே' என்பதுடனும் தொடர்புள்ளது. இதே எதிர்நிலைகளான ±கிடைமட்டம் மற்றும் ±பக்கவாடு என்பனவற்றை இரு சொற்களின் குழுமங்களுக்கும் பயன்படுத்தலாம். இருப்பினும் +கிடைமட்டம் என்ற பண்புக்கூறை வேறுபடுத்துவதன் தேவை *பக்கம்* என்பதன் மூன்று மடங்கு பொருள் மயக்கத்தால் நிருபிக்கலாம்.

பந்தின் பக்கம் (வெளிப்புறம் என்ற பொதுவான அர்த்தத்தில்)
செங்கல்லின் பக்கம் (மேல் அல்லது கீழ் என்பதற்கு முரணாக)
ஊர்தியின் பக்கம் (முன் அல்லது பின் என்பதற்கு முரணாக)

இந்த எடுத்துக்காட்டுகள் பொருண்மைக் கூறாய்வின் எளிய கொள்கையை எடுத்துக்காட்டும். அடிப்படைக் கூற்றுகளை வெளிப்படுத்த பண்புக்கூறுகள் மற்றும் முரண்பாடுகளின் எண்ணிக்கையை எந்த அளவுக்கு குறைக்க இயலுமோ அந்த அளவுக்குக் குறைத்துச் சிக்கனம் செய்கிறோம். ஆனால் இந்த நேர்வில் பின்னொட்டுகளுக்களுக்குச் சிறிது கூடுதல் கலவைத் தன்மையான ஆய்வு கூடுதல் சிக்கனத்தன்மை உடையதாக நிருபிக்கப்பட்டுள்ளது. இதனால் ஒரே எதிர்நிலைகளைப் பிற அர்த்தங்களுக்கும் பிற சொற்றொகைக்கும் பிற சொற்களுக்கும் பயன்படுத்த இயலுகிறது. ஒரு ஆய்வைப் பொதுப்படுத்திக் கூறுவதனால் இது நீண்ட காலகாட்டத்தில் முழு பொருண்மை விளக்கத்தை எளிதாக்க உதவும்.

இட உறவுகளின் இந்த வாதம் பயனிலைகளைப் பங்கெடுப்பாளர்களைப் போன்று பொருண்மைக்கூறுகளாக ஆய இயலும் என்று வலியுறுத்துகின்றது. எனவே பங்கெடுப்பாளர்களும் பயனிலைகளும் ஒப்பிடத்தக்க அலகுகளாகும்: மாறாக அவைகள் வினைப்பாடுகளில் தனிமங்களாகும் மற்றும் மாறாக அவைகள் பண்புக்கூறுகளைக் கொண்டிருக்கும். இதன் அடிப்படையில் வாக்கிய ஆய்வுக்கு பின்வரும் மூன்று மட்ட அமைப்பு முன் வைக்கப்படுகிறது (Leech, 1981:128).

பயனிலைகள்	கொண்டிருக்கிற	பங்கெடுப்பாளர்கள், பயனிலைகள்	கொண்டிருக்கிற	பண்புக் கூறுகள்

இந்நிலையில் பயனிலைகள் என்பதற்கு (மிகைபண்புக் கூறுகள் தவிர்த்து) பின்வரும் முழு பகுப்பாய்வைத் தரலாம்.



இந்த வினைப்பாடு *ஒரு ஆடவன் ஒரு மங்கை முன்னால் இருக்கிறான்/இருந்தான்* என்ற வாக்கியத்தின் பொருளடக்கத்தை வெளிப்படுத்தும். இதில் உள்ள முரண்படும் பண்புக்கூறுகள் யாவும் இந்த வாக்கியத்தின் பொருண்மையை வெளிப்படுத்த பங்களிப்பு செய்கின்றது என்பதை உறுதிசெய்ய, எந்தப் பொருண்மை மாற்றங்கள் விளையும் என்பதைத்தைக் கருத்தில் கொண்டு

இந்தப் பண்புக் கூறுகளை ஒவ்வொன்றாக மாற்றும் பயிற்சியைச் செய்வது பயனுள்ளது. எடுத்துக்காட்டாக, ←திசை என்பதை →திசை என்பதற்காக, இடம் பெயர்ப்பது 'ஒரு ஆடவன் ஒரு மங்கையின் பின்னால் இருக்கிறான்/இருந்தான்' என பொருண்மை மாற்றத்தை ஏற்படுத்தும்.

பயனிலையும் பங்கெடுப்பாளர்களும் அவற்றின் பொருண்மைக் கூறுகளின் அமைப்பின் அடிப்படையில் ஒரே வகையான அலகாக இருந்தாலும், முழு வினைப்பாட்டில் வேறுபட்ட பங்களிப்புகள் செய்கின்றன. பயனிலை முக்கியமான தனிமம் ஆகும். இது இதனுடன் சார்புறவு வைத்துள்ள பங்கெடுப்பாளர்களை ஆளமை செய்கின்றது. இதனால்தான் மேலேயுள்ள படத்திற்குப் பயனிலையிலிருந்து பங்கெடுப்பாளர்கள் கிளையிட்டுள்ளதாகச் சார்புப் படத்தின் வடிவு உள்ளது. பயனிலைதான் பங்கெடுப்பாளர்களின் எண்ணிக்கையையும் இயல்பையும் நிருணயிக்கிறது என்ற அளவில் அது முக்கியத்துவம் வாய்ந்ததாகும். மேற்கண்ட நேர்வில் 'முன்னால்' என்பதன் ஒத்தறிவுப் பொருண்மை இட உறவில் வைக்க இயலும் இரண்டு பங்கெடுப்பாளர்களின் இருப்பை வேண்டும்; இது இல்லாமல் 'முன்னால்' என்பது எந்த அர்த்தத்தையும் தராது.

நாம் இரண்டு பங்கெடுப்பாளர்களை ஆளும் ஈரிடப்பயனிலைகளுக்கும் (two-place paredicate) ஒரு பங்கெடுப்பாளர்களை ஆளும் ஓரிடப்பயனிலையும் (one-place predicte) இடையில் வேறுபாட்டைக் காணலாம். இதுவரை நாம் எடுத்துக்கொண்ட வினைப்பாடுகள் யாவும் ஈரிடப் பயனிலைகள் ஆகும். எனவே அவைகளை ஈரிட வினைப்பாடுகள் என்று அழைக்கலாம். இவற்றைப் பின்வருமாறு அருவமாக வரைபடப் படுத்தலாம் (Leech, 1981:129):



படம்: ஈரிட வினைப்பாடுகளை உருப்படுத்தம் செய்யும் வேறுபட்ட வழிகள்

எல்லா ஈரிட வினைப்பாடுகளும் →திசை என்ற ஒத்தறிப் பண்புக்கூறைக் கொண்டிருப்பதால், இது முழு பயனிலையின் திசைத் தன்மையையும் வினைப்பாட்டையும் தீர்மானிக்கும். இதன் காரணத்தால் P என்பது (a)-க்கும் (b)-க்கும் மேல் ஒரு அம்புக்குறியால்

(→) முன்னொட்டப்பட்டுள்ளது. கண்ணாடி பிரதிபலிப்பு மரபு காரணமாக (a)-யும் (b)-யும் ஒரே வினைப்பாட்டை உருப்படுத்தம் செய்கிறது. எடுத்துக்காட்டாக அவை முறையே 'ஒரு ஆடவர் ஒரு மங்கை முன்னால் நிற்கிறான்' என்பதற்காகவும் 'ஒரு மங்கை ஒரு ஆடவன் பின்னால் நிற்கிறாள்' என்பதற்காகவும் வரலாம். அம்புக்குறி இல்லாத (c)-இல் திசையின் காரணி சிறப்பீடு செய்யாமல் விடப்பட்டுள்ளது. (a)-யிலும் (b)-யிலும் a தொடக்கப் பங்கெடுப்பாளர் ஆகும், b இறுதிப் பங்கெடுப்பாளர் ஆகும். அதாவது தொடக்க மற்றும் இறுதி என்பன இடதிலிருந்து வலம் என்ற நிரலில் அல்லாமல் b-க்கு முன்னர் வரும் அம்புக்குறியின் திசையை குறிப்புரை செய்து பயன்படுத்தப்படுகிறது.

ஓரிடப் பயனிலைகள் ஒரே ஒரு பங்கெடுப்பாளரை மட்டும் ஆளுமை செய்யும். பின்வருவது எடுத்துக்காட்டாகும் (Leech, 1981:130):

(9) வினைப்பாடு



(10) வினைப்பாடு



ஓரிட பயனிலைகள் இந்நேர்வுகளில் உள்ளது போல் ஒரு பெயர் அல்லது பெயரடை நிரப்பியால் மாதிரியாக உட்படுத்தம் செய்யப்படுகிறது. *டோபர்மேன் பெரியவைகள், பூனைகள் சிறிய விலங்குகள்*. ஆனால் இந்த வகையிலான பயனிலை செயப்படுபொருள் குன்றிய வினைகளாலும்

வெளிப்படுத்தப்படும்: *விளக்கு பிரகாசிக்கிறது. காலை வந்தது. அந்தப் பெட்டி கீழே விழப்போகிறது* (Leech, 1981:130).

(11)



(a) (b) (c)

மேற்கண்ட மூன்று படங்களுக்கிடையில் வேறுபாடு இல்லை. அதையெல்லாம் ஒரு பங்கெடுப்பாளர் ஒரு பயனிலையை சார்ந்திருப்பதைக் காட்டுகிறது. இது ஒரு பொருண்மைக்கூறு ஆய்வு என்பதைத் தவிர இடமிருந்து வல நிரல் இங்கு முக்கியத்துவம் வாய்ந்தது அல்ல. ஓரிடப் பயனிலைகள் →திசை போன்ற உறவுப் பண்புக் கூறுகளை கொண்டிருக்கவில்லை. ஒரு உறவு இரு பங்கெடுப்பாளர்களை உறவுப்படுத்தப்பட வேண்டும் என்பதை வெளிப்படுத்துகிறது.

3.3.2. வினைப்பாடு ஆய்வு

நாம் பொருண்மை ஆய்வில் இரண்டாவது நிலையை அடைந்துவிட்டோம். இது பொருண்மை உள்ளார்ந்த தொடர்புடையதாகவோ நிரப்பியத் தன்மை உடையதாகவோ இருக்கிறது. இந்த ஆய்வு பயனிலைகளை அவற்றின் உறுப்புகளாகப் பிரிப்பதை உள்ளடக்கியது. எனவே இதைப் வினைப்பாடு ஆய்வு என்பர். பொருண்மைக் கூறாய்வும் வினைப்பாடு ஆய்வும் இணைந்து நம்மை வாக்கியங்களின் பொருண்மையின் பெரும் பாகத்தை உருப்படுத்தம் செய்ய இயலவைக்கின்றது. இருப்பினும் இந்த ஒருங்கிணைந்த ஆய்வு எதிர்மறை (negation), சமநிலை இணைப்பு (coordination), காலம் (tense), அல்லது கட்டுப்பாடு (conditon) என்ற வாக்கியப் பொருளின் தர்க்கத் தனிமங்களைக் கணக்கில் எடுக்கவில்லை. இந்த அளவில் வினைப்பாடு ஆய்வு முழுமையற்றதாகும்: நாம் உலகைப்பற்றி உண்மை-உரிமைகள் (truth claims) செய்யாத 'உள்ளடக்கப்படாத', மெய்ப்படுத்தப்படாத தேற்றக்கூற்றுகளை கருத்தில்கொண்டிருக்கின்றோம்.

இருப்பினும் பயனிலைகளை வினைப்பாடுகளின் முக்கிய அல்லது ஆளுமைசெய்யும் தனிமங்களாக கருதுவதில் தர்க்க அடிப்படையிலான காரணம் இருக்கின்றது: வினைப்பாட்டைச் சார்ந்த தர்க்கத் தனிமங்கள் முழுமையும் காணப்படும் இடம் பயனிலையாகும். எடுத்துக்காட்டாக காலம், வினைநோக்கு, மற்றும் வினையடைப் பொருள்கள் யாவும் பயனிலையில் காணப்படும். பயனிலையை விட்டுவிட இயலாது என்ற அர்த்தத்திலும் இது வினைப்பாட்டின் முக்கியத் தனிமமாகும். பங்பெடுப்பாளர்களை விட்டுவிட இயலும்; மற்றும் அவை எண்ணிக்கையில் வேறுபடுபன. நாம் விப்பாடு இரு பங்கெடுப்பாளர்களையோ ஒரு பங்கெடுப்பாளரையோ கொண்டிருக்கலாம் எனவும் சில நேர்வுகளில் வினைப்பாடு பங்கெடுப்பாளர் இன்றியும் வரும் எனப் பார்த்தோம். *நாளைக் குளிராக இருக்கும்* போன்ற வானிலைக் கூற்றுக்களில் பங்கெடுப்பாளர் இல்லை.

மேற்சொன்னதன் அடிப்படையில் மூன்று பொதுவகையானப் பயனிலைகளை வேறுபடுத்தவேண்டும்: ஈரிடப் பயனிலை, ஓரிடப் பயனிலை இடமில்லாப் பயனிலை; இப்பயனிலைகளை p^1, p^2 மற்றும; p0 எனக் குறியீடு செய்வோம். (இந்த வகைப்பாடு வினைகளை செயப்படுபொருள் குன்றா வினைகள், செயப்படுபொருள் குன்றிய வினைகள் என வகைப்படுத்துவரை ஒக்கும். இருப்பினும் ஒருபக்கம் பங்கெடுப்பாளர்களுக்கும் பயனிலைகளுக்கும் மறுபக்கம் எழுவாய், செயப்படுபொருள், வினை என்பவைகளுக்கும் இடையில் மிக நெருக்கமான பொருத்தம் பார்பது தவறுக்கு வழிவகுக்கும்.) இந்த மூன்று வினைப்பாட்டைத் தவிர கூடுத் வினைப்பாடு வகை இருக்கின்றதா என்பது ஐயத்திற்குரியதாகும். மூவிட மற்றும் நாவிடப் வினைப்பாடுகள் யாவும் ஈரிட மற்றும் ஓரிடப் பயனிலைகளின் ஒருங்கிணைப்புகளாகும். இதன்படி 'கண்ணன் அந்த நாய்கு ஒரு எலும்புத்துண்டு கொடுத்தான்' என்பதைப் பின்வருமாறு ஆயலாம்:

(12)

கண்ணன் X ஐ செய்வித்தான்.

'X' = அந்த நாய் ஒரு எலுத்துண்டைப் பெற்றது.

சுருக்கமாக, நாம் மூன்று வகையான பயனிலைகளை வேறுபடுத்தலாம். வினைப்பாட்டின் மூன்று பொருத்தமான வகைகள் பின்வருவனவாகும் (Leech, 1981:130).

(13)

ஈரிடப் பயனிலை ஓரிடப்பயனிலை இடமிலாப் பயனிலை



po

குழந்தைகள்+விரும்புகின்றன+இனிப்புகளை 'கண்ணன்+இருக்கிறான்+உடல்நலமின்றி' '0+இருக்கிறது+குளிராக இருக்கிறது

3.3.3. வினைப்பாட்டு ஆய்வின் குறிமானங்கள்

முறையான மொழியான குறிமொழி பொருள்களை உருப்படுத்தம் செய்யும். முன்னர் குறிமொழி பண்புக் கூறுகளின் குழுமங்களை உருப்படுத்தம் செய்யும் பொருண்மைக்கூறு வாய்ப்பாட்டு அளவில் எல்லைப்படுத்தப்பட்டது. இப்போது வினைப்பாடுகளை உருப்படுத்தம் செய்ய வேண்டி விரிவுப்படுத்தப்பட வேண்டும். முன்னால் உள்ள சார்புப் படங்களான (9)-ஐயும் (11)-ஐ கிடைநிலை வாய்ப்படாக மாற்றி இதைச் செய்யலாம்.

(14)

ஈரிடப் பயனிலையாக்கங்கள் (a→p.b) அல்லது (b←p.a) அல்லது (a.p.b)

ஓரிடப் பயனிலையாக்கங்கள் (a:p) அல்லது (p:a)

முழு வினைப்பாட்டை எல்லைப்படுத்த அடைப்புக்குறிகள் பயன்படுத்தப்படுகிறது: ஒரு தனிப்புள்ளி (.) ஈரிட வினைபாட்டில் பங்கெடுப்பாளர்களைப் பயனிலையிலிருந்து வேறுபடுத்தும்; (:) அரைப்புள்ளி ஓரிட வினைப்பாட்டில் பங்கெடுப்பாளரை பயனிலையிலிருந்து பிரிக்கும். மீண்டும் கண்ணாடிப் பிரதிபலிப்பு மரபு பழக்கத்தில் வரும். இடதிலிருந்து வலம் மற்றும் வலமிருந்து இடம் என்ற நிரல்களுக்கு இடையே உள்ள முரண்பாடு முக்கியத்துவம் வாய்ந்ததல்ல. (இருப்பினும் இந்த வாய்ப்பாட்டை கூடுதல் புரிந்து கொள்ள அவை தொடரியலில் உருப்படுத்தம் செய்யப்படும் நிரலில் உருப்படுத்தம் செய்யப்படும். மேல்வரும் எழுத்துக்களான 1 மற்றும் 2 என்பனவற்றைப் பயன்படுத்துவது தேவையில்லாதது; ஏனென்றால் பயனிலை வகையை வினைப்பாட்டு வகையிலிருந்து எளிதில் முற்கோள் செய்யவியலும்.

(14)-இல் இந்த வாய்ப்பாட்டிலும் பின்னரும் கூடுதல் கலவைத் தன்மையான வாய்ப்பாடு பயன்படுத்தப்படுகிறது. a, b, c போன்றவை பங்கெடுப்பாளர்களின் மாறிகளாகவும் P, Q, R போன்றவை பயனிலைகளின் மாறிகளாகவும் பயன்படுத்தப்படுகிறது. அல்ஜிபிராவில் இந்தக்

குறியீடுகளால் குறிப்பிடப்படும் சரியான அளவு அறியப்படாததால் x, y என்ற மாறிகள் பயன்படுத்தப்படுகிறன. இதே வழியில் a, b, c, P, Q, R போன்றவை இந்தப் பயனிலைகளை உருவாக்கும் உண்மையான பொருண்மைக்கூறுகள் அறியப்படாததால் அல்லது சிறப்பிக்கப்படாததால் பயன்படுத்தப்படுகிறன.

இருப்பினும் நாம் வினைப்பாட்டை அவற்றின் பொருண்மைக்கூறுகளின் உள்ளடக்கத்துடன் (componential content) குறியாக்கம் செய்ய விரும்புகிறோம். இவ்வாறு முழு பொருண்மைக்கும் உருப்படுத்தம் தரப்படும். எனவே குறிமொழி இது போன்ற 'வினைப்பாட்டுப் பொருண்கைக்கூறுகளின்' (predication-componential)- வாய்ப்பாடுகளை அனுமதிக்கிறது.

(7a) (a →P b)

மனிதவினம்	திசை	மனிதவினம்
வயதுவந்த	பக்கவாடு	வயதுவந்த
ஆண்		-ஆண்
ஒருமை		ஒருமை

'ஒரு ஆடவன் ஒரு மங்கையின் முன்னால் இருக்கிறான்'

(9a) (a : p)

*சாதி	பெரிய
-ஒருமை	

'டோபர்மேன் நாய்கள் மிகப்பெரியவை'

இப்போதிலிருந்து அடையாளப்படுத்தப்படாத அல்லது ஆளுமை செய்கின்ற சொற்களுக்கு +, ↑, → என்ற குறியீடுகளை விட்டுவிடும் மரபான சிக்கனம் கடைபிடிக்கப்படுகின்றது. இருப்பினும் மேலும் எளிமையைக் கடைபிடிக்கலாம்: அதாவது மாறிகளை விட்டுவிட்டு பொருண்மைக் கூறுகளை எளிய கிடைநிலை வரிசையில் வைப்பது:

(7b) (மனிதவினம் வயதுக்குவந்த ஆண் ஒருமை.திசை -பக்கவாடு.மனிதவினம் வயதுக்கு வந்த -ஆண் ஒருமை) 'ஒரு ஆடவன் ஒரு மங்கைக்கு முன்னால் நிற்கிறான்'

(9b) (சாதி –ஒருமை: பெரிய 'டோபர்மேன் நாய்கள் மிகப்பெரியவை' .

இவை 'கிடைநிலை வினைப்பாட்டுப் பொருண்மைப் பண்புக்கூறு வாய்ப்பாடுகள்' (linear preidcation-componential formulae) ஆகும்; இவை கிடைநிலை வடிவில் முழுப் பொருளையும் தரும். இம்மாதிரியான வேறுபட்ட குறிமான மாறுபாடுகள் தேவையில்லை என்றாலும், அவற்றைக் வைத்திருப்பது வசதியானதாகும். இதனால் இக்கருத்துச்சாயலை ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காகத் தேவையான அளவு விளக்க இயலும் அல்லது தேவையற்ற இடத்தையோ முயற்சியையோ குறைக்க இயலும். குறிமொழியை பொருள்களை உருப்படுத்தம் செய்வதற்காக வேண்டி ஒரு நெகிழ்வான தன்மையுள்ள மொழியாக ஆக்குவதில் நன்மை இருக்கிறது. இதனால் இது பொருள் மயக்கத்தை தராதவரை நாம் விரும்புகிற அளவுக்கு பல குறிமான வேறுபாடுகளை (notational variation) உள்ளடக்க அனுமதிக்க இயலும்.

மற்றொரு வசதி குறிமொழியின் 'கலவை' மாதிரியைக் கொண்டிருப்பதாகும். இதில் a, b, P என்ற மாறிகள் பண்புக்கூறு குறியீடுகளுடன் சேர்க்கப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, நாம் 'அந்தச் சிவப்பு ஊர்தி சுவரில் மோதியது' என்ற பொருண்மையை உருப்படுத்தம் செய்ய விரும்பி, அதே நேரம் வினைப்பாட்டின் முழு பொருளடக்கத்தையும் உருப்படுத்தம் செய்ய விரும்பாவிட்டால், நாம் பொருண்மையைப் பின்வருமாறு உருப்படுத்தம் செய்யலாம்:

(15)

(ஊர்தி ஒருமை a, p, பருமை ஒருமை b)

இது ஒரு ஊர்தி ஒரு பொருளுடன் (object) ஏதோ ஒரு உறவுடன் இருக்கிறது என்று சிறப்பீடு செய்கிறது. இருப்பினும் a, P, b என்ற மாறிக் குறியீடுகள் (variable symbols) வழி பங்கெடுப்பாளர்களிலும் சிறப்பீடு செய்யப்படாத பயனிலையிலும் கூடுதலான ஏதோ பொருளடக்கம் இருக்கின்றது என்றும் காட்டுகிறது. a, b, c, P, Q, R போன்ற குறியீடுகள் மிச்ச மாறிகள் (residual variables) என்று அழைக்கப்படும்; ஏனென்றால் அவை பங்கெடுப்பாளர் அல்லது பயனிலையின் முழு பொருளடக்கத்தையும் உருப்படுத்தம் செய்யத் தேவையில்லை. அவை வரும் வாய்ப்பாட்டில் அவ்விடத்தில் சிறப்பீடு செய்யப்படாததாக ஒன்றோ அதற்கு மேலோ பண்புக்கூறுகள் எடுக்கப்படலாம் என்ற உண்மையை குறியீடு செய்கின்றன.

இறுதியாகப் பொருண்மையின் முறையற்ற மற்றும் பகுதி முறையற்ற உருப்படுத்தத்தைப் பற்றி குறிப்பிட வேண்டும். பொருண்மையை முறையற்று உருப்படுத்தம் செய்வதன் வழக்கமான மரபு இருக்கிறது. இதன்படி தமிழ் வெளிப்பாடுகளை ஒற்றை மேற்கோள் குறியீட்டில் தரலாம்;

எ.கா. 'அந்தச் சிவப்பு ஊர்தி சுவரில் மோதியது'. இந்த மரபு வெளிப்பாட்டிற்குப் பயனுள்ளதாக இருந்தாலும் நுண்மையற்றதாகும். கீழே பகுதி முறையற்ற ஒரு வகை உருப்படுத்தம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இது ஏற்கெனவே பயன்படுத்தப்பட்ட குறிமான வழக்கத்தைப் பின்பற்றுவதால் இது புரிந்து கொள்வதற்கு எளிமையானதாகும். பின்வருவன எடுத்துக்காட்டுகளாகும்:

(ஒரு ஆடவன்.**முன்னால்**.ஒரு மங்கை) (டோபர்மேன்: **பெரியது ஆன**)
(சிவப்பு ஊர்தி.**மோது**.சுவர்) (தொடர்வண்டி: **புறப்பட்டது**)

இங்கு வினைப்பாட்டு ஆய்விற்குக் குறியீடுகள் பயன்படுத்தப்படுகின்றன; அழுத்தமான எழுத்துக்கள் பயனிலைகளை குறிக்கவும் (எ.கா. **முன்னால், மோது)** அழுத்தமில்லா எழுத்துக்கள் பங்கெடுப்பாளர்களை குறிக்கவும் பயன்படுத்தப்படுகின்றன. பங்கெடுப்பாளர்கள் மற்றும் பயனிலையின் பொருளடக்க முறை குறைவாக ஆங்கில சொற்களால் உருப்படுத்தம் செய்யப்பட்டுள்ளன.

3.3.4. உட்படுத்தமும் இசைவின்மையும்

நாம் உள்ளடங்கு மொழியம் (hyponymy) மற்றும் உட்படுத்தம் (entailment) என்பவைகளுக்கு இடையே உள்ள நெருங்கிய தொடர்பையும் இணக்கமின்மை (incompatibility) மற்றும் இசைவின்மை (inconsistency) என்பவைகளுக்கு இடையே உள்ள நெருங்கிய தொடர்பையும் முன்னர் பார்த்தோம். இப்பொழுது இந்தத் தொடர்புகளைக் கூடுதலாகப் பார்ப்போம். வினைப்பாட்டு ஆய்வில் உள்ளடங்கு மொழியமும் இணக்கமின்மையும் சொல் பொருண்மைகளுக்கு இடையே உள்ள உறவுகளாகக் கருதப்படாமல் பங்கெடுப்பாளர்களுக்கும் பயனிலைகளுக்கும் உள்ள உறவாக எடுத்துக் கொள்ளப்படுகிறது.

ஒன்றின் பங்கெடுப்பாளர் மற்றொன்றின் பங்கெடுப்பாளருக்கு உள்ளடக்க மொழியாக இருக்கும்படி வேறுபட்டால் இந்த இரு தேற்றக் கூற்றுகளுக்கும் இடையில் உட்படுத்த உறவு இருக்கிறது எனலாம். பின்வரும் எடுத்துக்காட்டில் b என்பது a என்பதன் உள்ளடங்கு மொழியாகும்.

a ஒரு நாயைப்

b ஒரு விலங்கைப்

(16) 'நான் பார்த்தேன்' என்பது நான் பார்த்தேன் என்பதை உட்படுத்தும்.

உள்ளடங்கு மொழியம் இரண்டும் பயனிலைகளுக்குள்ளும் இருக்கலாம்.

(17) 'ராஜா ஒரு குதிரையை P விற்றான்' என்பது 'ராஜா ஒரு குதிரையைக் Q கொடுத்தான்' என்பதை உட்படுத்தும்.

(ஏனென்றால் 'விற்றல்' என்பது ஒரு வகை 'கொடுத்தல்' ஆகும்). உட்படுத்தல் என்பது ஒரு வினைப்பாடு மற்றொரு வினைப்பாட்டின் பொருண்மை உள்ளடக்கத்தால் இருப்பதாகும். எடுத்துக்காட்டாக 'ராஜா ஒரு குதிரையை விற்றான்' என்பது 'ராஜா ஒரு குதிரையைக் கொடுத்தான்' என்பதில் உள்ள எல்லா பண்புக்கூறுகளையும் உள்ளடக்கும். கருத்தில் கொள்ளப்பட்ட பங்கெடுப்பாளர் ஒரு சிறப்பான அல்லது பொதுவான பொருள்கோளை கொண்டிருக்கிறதா என்பதன் அடிப்படையில் உட்படுத்தலின் உறவு இரு வேறுபட்ட திசைகளில் செயல்படும். மேற்சொன்ன இரண்டில் காணப்படும் சிறப்பான பொருள்கோள் பின்வருவனவற்றிலும் காணப்படுகிறது.

(18) (குழந்தைகள்.ஆப்பிள்.**சாப்பிடுகின்றன**) என்பது (குழந்தைகள்.பழங்கள்.**சாப்பிடுகின்றன**) என்பதை உட்படுத்தும்.

இருப்பினும் பின்வரும் பொது தேற்றக்கூற்றிற்கு உட்படுத்தம் மாறுபட்டு வரும்.

(19) (குழந்தைகள்:**தொந்தரவானவர்கள்**) என்பது (சிறுவர்கள்:**தொந்தரவானவர்கள்**)

இரண்டாவது வரும் பங்கெடுப்பாளர்களின் உள்ளடங்கு மொழியத்தில் செயல்படும்.

இணக்கத்துக்கும் இசைவின்மைக்கும் இடையில் தொடர்பு இருக்கிறது. இதனைப் பயனிலைகளின் இணக்கமின்மைக்கு மட்டும் பிரயோகிக்கவியலும் என்பதால் இது கூடுதல் கட்டுப்பாடு உள்ளது.

(20) (மேரி.வேலையை.வெறுக்கிறாள்) என்பது (மேரி.வேலையை.விரும்பவில்லை) என்பதுடன் இணக்கமின்றி இருக்கும்.

(21) (பீட்டர்.தன் தந்தையின்.இடது பக்கம் இருக்கிறான்) என்பது (பீட்டர்.தன் தந்தையின்.இடது பக்கம் இருக்கிறான்) என்பதுடன் இசைவின்றி இருக்கும்.

இணக்கமின்மைக்கும் பின்வரும் பொதுமை விதிகளை இப்போது கூறவியலும்:

பின்வருவனவற்றைத் தவிர X-உம் Y-உம் ஒன்றுபட்டிருந்தால் X என்பது Y-ஐ உட்படுத்தும்:

1. X என்பது a என்ற பங்கெடுப்பாளரைக் கொண்டிருக்கும் மற்றும், Y என்பது b என்ற பங்கெடுப்பாளரைக் கொண்டிருக்கும், மற்றும்
2. a என்பது b-யின் உள்ளடங்கு மொழியமாகும் (a, b என்பன சிறப்பாகப் பொருள்கோள் செய்யப்படும்)

அல்லது

1. X என்பது a என்ற பங்கெடுப்பாளரைக் கொண்டிருக்கும் மற்றும், Y என்பது b என்ற பங்கெடுப்பாளரைக் கொண்டிருக்கும், மற்றும்
1. b என்பது a-யின் உள்ளடங்கு மொழியமாகும் (a, b என்பன பொதுவாகப் பொருள்கோள் செய்யப்படும்)

அல்லது

1. X என்பது P என்ற பயனிலையையும் Y என்பது Q என்ற பயனிலையையும் கொண்டிருக்கும், மற்றும்
2. P என்பது Q-வின் உள்ளடங்கு மொழியமாகும்.

பின்வருவனவற்றைத் தவிர X-உம் Y-உம் ஒன்றுபட்டிருந்தால் X என்பது Y-உடன் இசைவின்றி இருக்கும்:

1. X என்பது P என்ற பயனிலையையும் Y என்பது Q என்ற பயனிலையையும் கொண்டிருக்கும்
2. P என்பது Q-உடன் இணக்கமின்றி இருக்கும்.

இவை முரணான மற்றும் தயார்நிலையிலுள்ள விதிகள் ஆகும்; ஏனென்றால் தேற்றக் கூற்றுகளின் வினைப்பாடுகளுக்கும் உண்மை கட்டுப்பாடுகளுக்கும் இடையில் உள்ள உறவைப் பற்றி விவாதிக்கும் நிலையை நாம் இது வரை எய்தவில்லை. கண்டிப்பாகப் பொருண்மை உட்படுத்துகைக்கும் (semantic inclusion) பொருண்மை விலக்குகைக்கும் (semantic exclusion) இடையில் உள்ள வினைப்பாடுகளின் உறவுகளை இவ்விதிகள் வரையறை விளக்கம் செய்யும் எனவும் சில கட்டுப்பாடுகள் பின்பற்றப்பட்டால் இந்த உறவுகள் வினைப்பாடுகளுக்கு இடையில் உள்ள உட்படுத்தல் மற்றும் இணக்கமின்மை உறவுகளுடன் பொருந்தும் எனவும் கூற வேண்டும். ஆனால் நாம் பொண்மை உருப்படுத்தங்களிலிருந்து அடிப்படை கூற்றுகளை ஊகம் செய்யும் வழியை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கிறோம்.

உட்படுத்தல் மற்றும் இசைவின்மை என்பனவற்றின் விதிகள் அவற்றின் பயன்படுத்தலில் எல்லைப்படுத்தப்பட்டவைகளாக தோன்றுகிறது; ஆனால் அவை கூடுதல் வலிமை வாய்ந்தவையாகும். இதைக் காட்ட பின்வரும் நான்கு தனித்தனியான தகவல்களைக் கூறலாம்:

1. இவ்விதிகள் ஈரிடப் வினைப்பாடுகளுக்கு மட்டுமின்றி வினைப்பாடுகளின் எல்லா வகைகளுக்கும் பயன்படுத்தப்படும். பின்வருவன ஓரிட வினைப்பாடுகளுக்கு அவற்றின் பயன்பாட்டின் எடுத்துக்காட்டுகளாகும்:

(22) (இந்த மை : **ஊதா ஆகும்**) என்பது (இந்த மை : **நீலம் ஆகும்**) என்பதை உட்படுத்தும் (`ஊதா' என்பது `நீலம்' என்பதன் உள்ளடங்கு மொழியாகும்)
(23) (இந்த மை : **ஊதா ஆகும்**) என்பது (இந்த மை : **சிவப்பு ஆகும்**) என்பதுடன் இசைவின்றி இருக்கும் (`ஊதா' என்பது `சிவப்பு' என்பதுடன் இணக்கம் இல்லாதது)

2. இந்தக் கண்ணாடிப் பிரதிபலிப்பு மரபு காரணமாக தனிமங்கள் எந்த வரிசையில் வந்தாலும் இவ்விதிகள் பயன்படுத்தப்படும். எனவே `இந்தக் குப்பியில் ஒயின் இருக்கிறது' என்பதற்கும் `இந்த குப்பியில் மதுபானம்' இருக்கிறது என்பதற்கும் இடையில் உள்ள உறவு உட்படுத்து உறவாகும் என்பது `ஒயின்' என்பது `மதுபானம்' என்பதன் உள்ளடங்கு மொழியாகும் என்ற உண்மையிலிருந்து வருவதாகும்.
3. நாம் பார்த்தப்படி உள்ளடங்கு மொழியம், இணக்கமின்மை என்ற உறவுகள் சொற்களுக்கு இடையில் மட்டும் எல்லைப்படுத்தப்படுவதில்லை: அவைகள் சொல்லுக்கும் தொடருக்கும்

இடையிலோ தொடருக்கும் தொடருக்கும் இடையிலோ வரலாம். எனவே உட்படுத்து விதி பின்வரும் நேர்வுகளையும் அடக்கும்:

(அ) இரண்டு தேற்றக்கூற்றுகளுக்கு இடையில் உள்ள வேறுபாடு ஒன்றோ அதற்கு மேற்பட்ட சொற்களின் சேர்க்கையில் அடங்குவது.
(ஆ) அல்லது சொல்லுக்குப் பதில் ஒரு தொடரை இடம்பெயர்ப்பது.

(24) அவள் . ஒரு உயரமான அழகான வடநாட்டவனை . மணம்புரிந்தாள்) என்பது (அவள்.ஒரு வடநாட்டவனை. மணம்புரிந்தாள்) என்பதை உட்படுத்தும்.
(25) (ராஜா : ஒரு படைத்தலைவன்) என்பது (ராஜா : ஒரு இராணுவ அதிகாரி) என்பதை உட்படுத்தும்.
(26) (அவன் . என்னால். மிகவும் பாதிக்கப்பட்டான்) என்பது (அவன் . என்னால். பாதிக்கப்பட்டான்) என்பதை உட்படுத்தும்.

4. உட்படுத்தல், இசைவின்மை என்பனவற்றின் விதிகள் மொத்தமாக பின்வரும் வழியில் பயன்படுத்தப்படும்:
(அ) X என்பது Y-ஐ உட்படுத்தினால் மற்றும் Y என்பது Z-ஐ உட்படுத்தினால், X என்பது Z-ஐ உட்படுத்தும் (அதாவது உட்படுத்தல் ஒரு கடத்தல் உறவாகும்.)
(ஆ) X என்பது Y-ஐ உட்படுத்தினால் மற்றும் Y என்பது Z-உடன் இசைவின்றி இருந்தால் X என்பது Z-உடன் இசைவின்றி வரும்.

இந்த இரு துணைநிலை விதிகள் ஒலண கருத்தில் கொண்டு பின்வருமாறு எடுத்துக்காட்டலாம்.

(அ) X: 'சிறுவர்கள் மரத்திலிருந்து கீழே இறங்கினர்' .
Y: 'சிறுவர்கள் மரத்திலிருந்து கீழே வந்தனர்' .
Z: 'குழந்தைகள் மரத்திலிருந்து கீழே இறங்கினர்'

(ஆ) X: 'ராஜா உரக்கப் பாடினான்'
Y: 'ராஜா பாடினான்'

Z: 'ராஜா அமைதியாக இருந்தான்'

இவ்வாறு நாம் பயனிலையாக்க ஆய்வைப் பயன்படுத்தி உட்படுத்தலைப் பற்றியும் இணக்கமின்மை பற்றியும் அடிப்படைக் கூற்றுகளை ஆக்க விதி பயன்பாட்டிற்கு விதிகளை உருவாக்க இயலும்.

3.3.5. பூஜியப் பங்கெடுப்பாளர்கள்

இத்திசையில் அடுத்த முன்னேற்ற நிலை பூஜியப் பங்கெடுப்பாளர்கள் அல்லது பண்புக்கூறுகளைக் கொண்டிராத பங்கெடுப்பாளர்களை அறிமுகப்படுத்துவதாகும். ஒரு பூஜியப் பங்கெடுப்பாளர் அதற்குக் குறிப்பின் கூடுதல் பொருண்மையைக் கொண்டிருக்கும் என்ற அர்த்தத்தில் பொருளடக்கம் இல்லாததாகும். அதற்கு தொடரியல் உறவு இல்லை: ஆனால் அது எதிர்மறையாகக் கண்டுபிடிக்கப்படும். எடுத்துக்காட்டாக, ஒரு வினைக்கு அது நியம அடிப்படையில் தேவைப்படும் செயப்படுபொருள் இல்லாமை: ராஜா சாப்பிடுகிறான் (அதாவது ராஜா ஏதோ சாப்பிடுகிறான்) இதேப்போல் ராஜா படிக்கிறான்/எழுதுகிறான்/விளையாடுகிறான் போன்றவை வரும். பூஜியப் பங்கெடுப்பாளர்களைக் குறியீடு செய்யும் பிற தொடரியல் இடைவெளிகள் செயப்பாட்டு வினை வாக்கியத்தில் செயலித் தொடர் இல்லாமை மற்றும் ஒரு அருவப் பெயருக்குப் பங்கெடுப்பாளர்-சிறப்பீடு அடைகள் இல்லாமை ஆகும்:

(27) உணவு சமைக்கப்பட்டது (அதாவது யாராலோ உணவு சமைக்கப்பட்டது)
(28) எதிரிகள் அடக்கப்படுதல் (அதாவது எதிரிகள் யாராலோ அடக்கப்படுதல்)
(29) அடக்கப்படுதல் (யாரோ யாராலோ அடக்கப்படுதல்)

இம்மாதிரியான நேர்வுகளில் ஒரு ஈரிடப் பயனிலையின் ஒன்றோ அல்லது இரண்டோ பங்கெடுப்பாளர்கள் மெயப்படுத்தப்படுவதில்லை. பூஜியப் பங்கெடுப்பாளரை ϕ என்ற பூஜியக் குயீட்டால் குறிப்பிடலாம். (27) என்பதை பொருண்மையியல் அடிப்படையில் பின்வருமாறு உருப்படுத்தம் செய்யலாம்: (உணவு.←சமை.ϕ); அல்லது பொதுவான சொற்களால் பின்வருமாறு உருப்படுத்தம் செய்யலாம்: (a.P.ϕ). பூஜியப் பங்கெடுப்பாளர்கள் பண்புக்கூறுகளைக் கொண்டிராததால் அவை வரையறை விளக்க அடிப்படையில் எல்லாப்

பங்கெடுப்பாளர்களுக்கும் உள்ளடக்கியாக வரும். இதனால் பின்வருமாறு உட்படுத்தல் உறவால் விளக்க இயலும்.

(30) ராஜா ஓயின் குடிக்கிறான் என்பது,
ராஜா குடிக்கிறான் என்பதை உட்படுத்தும்.
(31) ராஜா மாங்காய் சாப்பிடுகிறான் என்பது,
ராஜா சாப்பிடுகிறான் என்பதை உட்படுத்தும்.

இது ஒரு பொது விதியாகும். (a.P.b) என்பது (a.p.ϕ) என்பதை உட்படுத்தும் மற்றும் (a:P) என்பது (ϕ:P) என்பதை உட்படுத்தும். *ராஜா சாப்பிடுகிறான்* என்றவாக்கியத்திற்கும் *ராஜா உறங்குகிறான்* என்ற வாக்கியத்திற்கும் இடையில் முக்கிய வேறுபாடு இருக்கிறது. பிந்தையது ஒரு செயப்படுபொருள் குன்றிய வினையைக் கொண்டிருக்கின்றது. முந்தையது இதற்கு மாறாக ஒரு ஈரிடப் பயனிலையைக் கொண்டிருக்கின்றது; இதில் பங்கெடுப்பாளர்களில் ஒன்று பூஜியமாகும்.

3.3.6. தேர்வுக் கட்டுப்பாடுகள்

நாம் பூஜியப் பங்கெடுப்பாளர்களைப் பற்றிக் கூறியவை பல நேர்வுகளில் வெளிப்படுத்தப்படாத பங்கெடுப்பாளர்கள் ஏதாவது பொருளடக்கத்தைக் கொண்டிருக்கும் என்ற உற்று நோக்கிற்கு எதிராக இருப்பதாகத் தெரிகிறது. எடுத்துக்காட்டாக, *மதிய உணவு சமைக்கப்பட்டது* என்பதில் செயலியானது குறிப்பிடப்படாவிட்டாலும் குறைந்தது நாம் 'சமைப்பவர்' என்ற குறிப்பிடப்படாத பங்கெடுப்பாளரை ஒரு மனித இனமாகக் கணிக்கிறோம். சமைப்பவர் ஒரு மனித இனச் செயலி என்ற புரிந்து கொள்ளுதலின் அடிப்படையில் பின்வரும் வாக்கியங்கள் ஏற்றுக்கொள்ள இயலாதவை என்று உற்று நோக்கி அறிகிறோம்:

நீர் உணவைச் சமைத்தது.
உணவு பாத்திரத்தால் சமைக்கப்பட்டது.

இந்த நேர்வுகளில் இருந்து நாம் பொருண்மையானது வாக்கியத்தின் ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்கு ஒரு பக்கமாக நகர்வதாக உற்று நோக்குகிறோம். மேலும் பொருண்மை சூழலிலிருந்து சில பொருண்மைப் பண்புக்கூறுகளைக் கணிக்க இயலும் என்றும் இப்பண்புக்

கூறுகளின் முரண்பாடு ஏற்றுக் கொள்ள இயலாத மொழிபுகளை விளைவிக்கும் என்றும் உற்றுநோக்கி அறிகிறோம்.

இந்த நடத்தைகள் தேர்வுக்கட்டுப்பாடுகள் (selection restriction) என்ற தலைப்பில் விவாதிக்கப்படுகிறது. பின்வரும் எடுத்துக்காட்டுகள் இந்தக் கட்டுப்பாடுகளின் மீறலின் விளைவாக வரும் ஏற்றுக் கொள்ள இயலாத மொழிபுகளாகும்:

தண்ணீர் என்னுடைய நண்பனைக் காதலிக்கிறது. (தண்ணீர் என்பது உயிரில்லா இனமாகும்)
அந்தப் பெண் அங்கு கூடினாள் (பெண் என்பது ஒருமை ஆகும் பன்மை அல்ல)
மகிழ்ச்சி பச்சையானதாகும் (மகிழ்ச்சி அருவப் பொருளாகும் பருமைப் பொருள் அல்ல)
அந்தச் சிறுவன் வடை குடித்தான் (வடை திடப் பொருள், திரவப் பொருள் அல்ல)
அந்தப் புழு விவாகரத்து செய்யப்பட்டது (புழு மனித இனம் அல்ல பூச்சி இனம்)

தொடக்க காலத்தில் தேர்வுக்கட்டுப்பாடுகள் தொடரியல் உடன் வருகையாக (syntactic co-occurrence) எடுத்துக் கொள்ளப்பட்டது (சாம்ஸ்கி 1965) அல்லது குறைந்தது உடன்வருகை கட்டுப்பாடுகள் co-occurrence conditions) பெயர்கள் மற்றும் வினைகள் போன்ற தொடரியல் அலகுகளின் அடிப்படையில் வரையறை செய்யப்பட்டன (Katz and Fodor, 1963 Weinreisch, 1966). இருப்பினும் தேர்வுக்கட்டுப்பாடுகளைத் தொடரியல் அடிப்படையில் வரையறை விளக்கம் செய்யாமல் பொருண்மையியல் அடிப்படையில் அதன் அலகுகளான பங்கெடுப்பாளர்கள் மற்றும் பயனிலைகள் மூலம் வரையறை விளக்கம் செய்ய வேண்டும் என்பதற்கு இரு நல்ல காரணங்கள் இருக்கின்றன.

1. இரு சொற்கள் ஒருபொருள் பன்மொழிகள் என்றால் அவற்றின் தேர்வுக்கட்டுப்பாடுகள் ஒன்றாக இருக்க வேண்டும். எடுத்துக்காட்டாகப் *பயமுறுத்து, அச்சுறுத்து* என்பனவற்றிற்கு ஒரே அர்த்தம் இருப்பாதாக எடுத்துக்கொண்டால், ஒரே கட்டுப்பாடு ஏன் *அந்தக் கருத்து சிறுமியை பயமுறுத்தியது* மற்றும் *அந்தக் கருத்து சிறுமியை அச்சுறுத்தியது* என்பன ஏற்றுக்கொள்த்தக்கன, ஆனால் **சிறுமி கருத்தைப் பயமுறுத்தினாள், *சிறுமி கருத்தை அச்சுறுத்தினாள்* என்பன ஏற்றுக்கொள்ள இயலாதன என்று விளக்குகின்றது.

2. இரு மொழிபுகள் மறுதலையாக இருந்தால் அவைகளுக்கு ஒரே கட்டுப்பாடுகள் தலைகீழ் வரிசையில் பயன்படுத்தலாம்.

இவ்விரு நேர்வுகளிலும் தொடரியல் நிலையில் இரு தனியான மொழிபுகள் தேவைப்படும் கட்டுப்பாடுகளைப் பொருண்மையியல் நிலையில் சேர்த்து மொழிய இயலும். எனவே எளிய கூடுதல் விளக்கமான கணிப்பு தேர்வுக் கட்டுப்பாடுகளைப் பொருண்மையியல் அடிப்படையில் விளக்குவதாகும்.

தேர்வுக்கட்டுப்பாடுகளின் தொடக்கால விளக்கங்களின் தவறு அவற்றை உடன்பாட்டின் இலக்கணவிதிகளாக கையாளுவதாகும். உடன்பாட்டு விதிகள் ஒரு உறுப்பை மற்றொரு உறுப்புடன் உடன்படச் செய்யுபடி ஒரு பண்புக்கூறால் கட்டாயமாக அடையாளப்படுத்துவது போலத் தேர்வுக்கட்டுப்பாடுகளைப் பின்வருமாறு கட்டாயமாக வடிவமைக்கலாம் 'x என்ற பண்புக்கூறு A என்ற அலகில் இருந்தால், Y என்ற பண்புக்கூறு B என்ற அலகில் இருக்கவேண்டும். இம்மாதிரியான விதி, எடுத்துக்காட்டாக *பிளிறு* என்ற வினை யானை என்ற பெயரை அதன் எழுவாயாக இருக்கும் *கனை* என்ற வினை குதிரை என்ற பெயரை அதன் எழுவாயாக இருக்கும் என வேண்டும். இது பின்வரும் நேர்வுகளை வேறுபடுத்த உதவும்:

(32) குதிரை கனைத்தது (33) *குதிரை பிளிறியது.

இருப்பினும் இது பின்வரும் இரண்டின் ஏற்பை விளக்காது:

(34) விலங்கு கனைத்தது (35) விலங்கு பிளிறியது.

விலங்கு பொருண்மை அடிப்படையில் ஒரு குதிரையோ யானையோ அல்ல. இவ்வகையிலான கட்டாய சேர்ந்துவருகைக் கட்டுப்பாடு (33)-ஐயும் (34)-ஐயும் ஊகம்செய்யும். தேர்வுக்கட்டுப்பாடு நுட்பமாக 'விலங்கு' முறையே (34)-இல் குதிரையையும் (35)-இல் யானையையும் விளக்கவேண்டும்.

இம்மாதிரி வகை விளைவைப் பெற வென்ரெ (Weinreich, 1966) 'பண்புக்கூறுகளின் மாற்றம்' என்ற இயக்கநுட்பத்தை முன்மொழிந்தார். இதன்படி பண்புக்கூறுகள் வினையின் சிறப்பீட்டிலிருந்து பெயருக்கு மாற்றப்படும் மற்றும் மற்றத்தின் விளைவு பண்புக்கூறுகளின் சேர்க்கையின் காரணமாக முரணாக இருந்தால் தடைசெய்யப்படும். எடுத்துக்காட்டு (33)-இல் *பிளிறு* என்பதிலிருந்து 'குதிரை' என்ற பண்புக்கூறை மற்றுவது எழுவாயில் 'குதிரை' மற்றும்

'யானை' என்ற எதிரிடையான பண்புக்கூறுகளின் மோதலை விளைவிக்கும்; ஆனால் (35)-இல் 'யானை' என்பதன் மாற்றம் வினையிலிருந்து பெயருக்கு பொருளின் ததும்பிவழிதலை சரியாக உருப்படுத்தம் செய்யும்.

எனவே வென்ரேயின் பண்புக்கூறுகளின் மாற்றம் ஒரு தொடரியல் உறுப்பிலிருந்து மற்றொன்றிற்கு பண்புக்கூறுகளை இடமாற்றும் நுட்பத்தின் அடிப்படையில் வடிவமைக்கப்பட்டாலும் சரியான விளைவுகளைத் தந்தது. அம்மாதிரியான கட்டுப்பாடுகளை வினைப்பாடுகளின் மீது இயங்கும் மற்றும் ஒரு பண்புக்கூறை ஆளமை செய்யும் பயனிலையிலுள்ள மற்றொரு தரப்பட்ட பண்புக்கூறு இருந்தால் ஒரு பங்கெடுப்பாளரில் தரப்பட்ட பண்புக்கூறின் இருப்பை வேண்டும் சூழல் மிகைமை விதிகளாக வடிவமைப்பதால் (contextual redudancy rules) சமமான விளைவுகளைக் கூடுதல் திருப்தியாகப் பெற இயலும். எடுத்துக்காட்டாக,

(36) உலோகம் என்பது [-விலங்கினம்] என்பதை அவசியப்படும்

என்ற விதி உலோகம் என்பதன் எதிர்நிலையின் ஒரு உறுப்பினர் ஒரு குழுமப் பண்புக்கூறகளில் வந்தால், அந்தக் குழுமத்தில் -விலங்கினம் என்பதும் வரும் என்று கூறும். தேர்வுக்கட்டுப்பாடுகளை கணிக்க, பயனிலைகளுக்குக் கட்டுப்பாட்டுப் பண்புக்கூறுகளையும் பங்கெடுப்பாளர்களுக்கு மிகை பண்புக்கூறுகளையும் கொண்ட நேர்வுகளில் மிகை விதிகளை நீட்சி செய்வது தேவையாகும்.

(37) வைத்திரு என்ற பயனிலை அப்பயனிலையால் ஆளப்பட்ட தொடக்கப் பங்கெடுப்பாளரில் [+நபர்] என்பதை அவசியப்படும்.

இவ்விதியைப் பின்வருமாறு வாய்பாட்டு வழியில் மிகைப் பண்புக்கூறை செவ்வக அடைப்புக்குறிகள் அமைத்துப் பின்வருமாறு தரலாம்:

[+நபர்] .→வைத்திரு

நாம் பொருண்மை அடிப்படையில் ஒழுங்கற்ற பின்வரும் பயனிலையாக்கத்தை எடுத்துக்கொள்வோம் (இம்மாதிரியான மொழிபுகள் உருவக அடிப்படையில் பயன்படுத்தப்படலாம். எடுத்துக்காட்டாக, ஒரு கஞ்சனைக் குறிப்பிடலாம்.):

*தங்கம் அந்த மனிதனை வைத்திருக்கின்றது

பொருண்மையியல் உருப்படுத்தத்திலிருந்து இந்த ஒழுங்கின்மையை உருவாக்கும் வழியைப் பின்வருமாறு சார்புப்படத்தில் (dependency diagram) காட்டலாம்.



a என்ற தொடக்கப் பங்கெடுப்பாளரில் உள்ள [விலங்கினம்] மற்றும் [-விலங்கினம்] என்ற முரண்படும் பண்புக்கூறுகள் வரம்புமீறலைக் காட்டுகிறது. இவ்விரு பண்புக்கூறுகளும் மீக்கூறு விதிகளால் சேர்க்கப்படுகிறது (எனவே செவ்வக அடைப்புக்குறியில் காட்டப்படுகிறது). – **விலங்கினம்** என்ற பண்புக்கூறு மேலே சொன்ன (36)-ஆவது விதியால் சேர்க்கப்படுகிறது மற்றும் **விலங்கினம்** என்ற பண்புக்கூறு 'நபர் என்பது விலங்கினம் என்பதை வேண்டும்' என்ற விதியால் சேர்க்கப்படுகின்றது. [நபர்] என்ற பண்புக்கூறு (37)-ஆவது விதியிலிருந்து வருகின்றது. இம்மூன்று மிகைவிதிகளின் மொத்த விளைவு ஒரு பங்கெடுப்பாளரை தன்மை-முரண்பாடாக அடையாளப்படுத்துகிறது. இவ்வழியில் தேர்வுக்கட்டுப்பாடுகளை மீறல், தவறான உருவாக்கத்தை விளக்கும் பொருண்மைக்கூறுசார் மீறலின் ஒரு சிறப்பான நேர்வாகும். எடுத்துக்காட்டு 'ஆண் மங்கை', 'ஆண் வீடு'.

இம்முறையில் தேர்வுக்கட்டுப்பாடுகளை கையாள்வது பின்வரும் வாக்கியங்களில் பொருண்மை தழும்பலை மதிப்பீடு செய்கின்றது.

விலங்கு கனைக்கிறது.
மதிய உணவு சமைக்கப்பட்டது.

முதல் நேர்வில் □**இனம்** (‘குதிரை’) என்ற பண்புக்கூறு ‘விலங்கு’ என்ற பங்கெடுப்பாளருடன் சேர்க்கப்படுகின்றது; பின்னர் வருவதில் **மனிதவினம்** என்ற பண்புக்கூறு ‘சமைப்பவர்’ என்பதை உருப்படுத்தம் செய்யும் பூஜியப் பங்கெடுப்பாளர்களுடன் சேர்க்கப்படுகின்றது.

இவ்வழியில் பிற காரணங்களுக்குத் தேவைப்படும் விதி வகைகளின் குறைந்த நீட்சியை அறிமுகப்படுத்தும் மற்றும் மாதிரியின் பிற நோக்கங்களுடன் நெருக்கமாகப் பொருந்தும் ஒரு முறையாலும் தேர்வுக்கட்டுப்பாடு பொருண்மையியல் விளக்கத்தில் உட்படுத்தப்படுகிறது. எடுத்துக்காட்டாக சூழ்நிலை மிகைமை விதிகள் பயனிலைகளுக்கும் அவற்றின் பங்கெடுப்பாளருக்கும் இடையில் உள்ள சொல்லியையு உறவுகளுக்கு கூடுதல் முக்கியத்துவம் தருகிறது: பயனிலைகள் பங்கெடுப்பாளர்களின் எண்ணிக்கையை நிர்ணயிப்பதுடன் ஓரளவுக்கு அவற்றின் கலவையையும் நிர்ணயிக்கிறது. மேலும் பொருண்மைசார் ஒழுங்கின்மையாகத் தேர்வுக்கட்டுப்பாடுகளின் மீறலைக் கொண்ட தேற்றக் கூற்றுகளைப் பொருண்மை அடிப்படையில் வகைப்படுத்துவதால் நாம் அடிப்படை கூற்றுகளின் விளக்கத்தில் அறிமுகம் செய்த பொருண்மைசார் ஒழுங்கின்மையையின் வகைக்கு அவற்றின் இணக்கத்தை காட்டினோம். அடிப்படை பொருண்மை முரண்பாடுகளையும் விளக்க இயலும். எடுத்துக்காட்டாக,

* அந்த அனாதையின் தந்தை நிறைய குடிக்கிறார் என்ற வாக்கியம் *அந்த அனாதைக்கு தந்தை இருக்கிறார் என்ற முரண்பாட்டை முற்கோள் செய்யும்.
* தங்கம் அந்த மனிதனை வைத்திருக்கின்றது என்பது ‘தங்கம் ஒரு நபர்’ என்ற முரண்பாட்டை முற்கோள் செய்யும்.

முதலில் வருதில் மிகைமை விதி வழி முரண்பாடு மறைமுகமாக வருகின்றது என்பது இங்குள்ள ஒரே வேறுபாடாகும். இவ்வாறு தேர்வுக்கட்டுப்பாடுகள் அடிப்படை கூற்றுகளைக் கணிக்க விளக்கச் செயல்பாட்டைக் கொண்டிருப்பது தெரியவருகிறது.

மொழியின் பல உருவக பயன்பாடுகள் தேர்வுக்கட்டுப்பாடுகளின் வரம்பு மீறலை உள்ளடக்கும். இங்கும் சூழல் மிகைமை விதிகள் இதை விளக்க உதவும்.

3.3.7. துணைநிலை வினைப்பாடுகள்

இதுவரை நாம் பயனிலையாக்கங்களுக்கு மிக எளிய அமைப்பை மட்டும் உருவாக்கிப் பார்த்தோம். ஓரிட மற்றும் ஈரிட வினைப்பாடுகளின் சார்புக் கிளைப்படங்கள், ஒரு எளிய வாக்கியத்தின் உறுப்பு அமைப்பை உருப்படுத்தம் செய்யத் தேவைப்படும் கிளைப்படங்களுடன் ஒப்பிடுகையில் மிக எளிதானதாகும். ஒரு தனி ஓட்டு மொத்தமான வினைப்பாட்டில் ஒரே சிறு தொகு அமைப்புகள் மீள் நிகழ்வதன் வழி பொருண்மையியலில் கலவைத் தன்மை வருகின்றது. இந்த மறுநிகழ்வுக் கொள்கை (recursive principle) அடிப்படையில் உருவாக்க நாம் ஒரு பயனிலையானது பங்கெடுப்பாளர்களை மட்டுமின்றி பிற பயனிலைகளையும் ஆளுமை செய்யும் சாத்தியத்தை அனுமதிக்கிறோம். இதன் பொருள் என்னவென்றால் தொடரியலில் ஒரு துணைநிலைப் பெருந்தொடர் (suordinate clause) முதன்மைப் பெருந்தொடரின் (main clause) ஒரு பகுதியாக வருவது போல் துணைநிலை வினைப்பாடு முதன்மை வினைப்பாட்டின் பகுதியாக அமையும். இந்த நிபந்தனையுடன் வினைப்பாட்டு ஆய்வு பின்வருவன போன்ற கலவைத் தன்மையான அமைப்புகளை உள்ளடக்கும்:

(39)

குறிப்பு: P,Q,R என்பன பயனிலைகள். a, b என்பன பங்கெடுப்பாளர்கள்.



அதாவது, 'ராஜா ராணியைக் கோபம் அடையச் செய்தான' .
அல்லது 'ராஜா ராணியைக் கோபப்படுத்தினான்' .



அதாவது, 'அரசர் வருவதற்கு முன் கைதிகள் தூக்கிலிடப்படுவார்கள் என்பது சாத்தியம்' அல்லது 'கைதிகளைத் தூக்கிலிடப்படுவது அரசர் வருவதற்குமுன் நடைபெறும்' , போன்றன.

துணைநிலை வினைப்பாடுகளையும் முதன்மை வினைப்பாடுகளையும் அடைப்புக்குறிகளுக்குள் தந்து (39), (40) என்பனவற்றை பின்வருமாறு வரிசை குறிமானத்தில் உருப்படுத்தம் செய்வது சாத்தியமாகும்:

(39a) (a.p.(Q:(R:b))
(40a) (P:((a.R.b). Q.(c.S)))

அல்லது பகுதி ஒழுங்கற்ற முறையைப் பயன்படுத்திய நாம் பின்வருமாறு உருப்படுத்தம் செய்யலாம்.

(39b) (இராஜா.செய்.(அடை:(கோபம்:ராணி)

(40b) (சாத்தியம்:(தூக்கிலிடு.கைதிகள்).முன்னால்.(அரசர்:வா)

எவ்வாறு மிகு கலவைத் தன்மையான வாக்கியங்களை இந்தத் துணைநிலையாக்கத்தின் வழி சிறிய மற்றும் எளிய அலகுகளாக ஆய இயலும் என்பதைக் கற்பனைசெயவது கடினமல்ல. ஆனால் (39), (40) என்பதிலிருந்து துணைநிலை வினைப்பாடுகளுக்கு வேறுபட்ட தொடரியல் மெய்மையாக்கங்கள் இருக்கும் என்றும் அவற்றைத் துணைநிலை எச்சத்தொடர் வகுப்புகளால் வெளிப்படுத்தப்பட தேவையில்லை என்று அறிந்து கொள்கிறோம்.

தாழ்த்தப்பட்ட அல்லது பண்புக்கூறாக்கப்பட்ட வினைப்பாடுகள்

ஒரு பயனிலையாக்கத்தை மற்றொரு பயனிலையாக்கத்தில் அடக்க இரண்டாவது வழி ஒன்று இருக்கிறது. அதாவது பொருண்மை படிநிலையில் அதன் நிலையை மேலும் கூடுதலாக குறைப்பதாகும். அதாவது பண்புக் கூறுகளைப் பயன்படுத்துவதாகும். இவ்வழியில் தாழ்நிலைப்படுத்தப்பட்ட பயனிலையாக்கங்கள் தாழ்த்தப்பட்ட பயனிலையாக்கங்கள் (DOWN GRADED PREDICATIONS) என்று அழைக்கப்படும். ஏன் இவை தேவை என்பதை அறியப் பின்வரும் வாக்கியங்களுக்கு இடையே உள்ள ஒரு வழி உட்படுத்தலை எடுத்துக் கொள்வோம்.

(41) 'தலைப்பாகை அணிந்த ஒரு மனிதன் அறைக்குள் நுழைந்தான்.'

(42) 'ஒரு மனிதன் அறைக்குள் நுழைந்தான்.'

உட்படுத்து விதி (rule of entailment) செயல்பட வேண்டுமென்றால் 'தலைப்பாகை அணிந்த மனிதன்' என்பது 'ஒரு மனிதன்' என்பதன் உள்ளடக்கு மொழியாக இருக்க வேண்டும். பொருண்மைக் கூறுகளின் அடிப்படையில் 'தலைப்பாகை அணிந்த' என்பது 'உயர்ந்த மனிதனை' என்பதில் உள்ள 'உயர்ந்த' என்பது போன்று கூடுதல் பண்புக்கூறுகளால் உருப்படுத்தம் செய்யப்பட வேண்டும். ஆனால் அதன் அக கட்டுமானத்தில் 'தலைப்பாகை அணிந்த' என்பதே ஒரு வினைப்பாடாகும். (முறை குறைவாக (மனிதன். அணி. தலைப்பாகை) '**அணி**' என்பது அதன் தேர்வுக்கட்டுப்பாடுகளைக் கொண்ட ஒரு ஈரிடப் பயனிலையாகும் (எடுத்துக்காட்டாக, *'ஒரு காரணத்தை அணிந்த' என்பது இக்கட்டுப்பாடுகளின் மீறலாகும்).

இதன் பொருள் என்னவென்றால் செயல்பாட்டில் ஒரு பண்புக்கூறுக்கு இணையான ஒரு தனிமம் இருக்கின்றது, ஆனால் அதற்கு வினைப்பாட்டின் உள் அமைப்பு இருக்கிறது என்பதாகும்.

தாழ்த்தப்பட்ட வினைப்பாட்டை வெளிப்படுத்தும் மிக வெளிப்படையான வழி பெயரெச்சத் தொடரை கையாள்வதாகும்; இருப்பினும் பெரும்பாலும் வெளிப்பாட்டின் நீளம் குறைந்த தொடரியல்சார் அமைப்புகளும் இருக்கின்றன:

எ.கா.

தலைப்பாகை அணிந்த மனிதன் - தலைப்பாகையுடைய மனிதன்

தலைப்பாகை மனிதன்

வெளிப்பாட்டின் மிகக் குறுகிய வடிவம் ஒரு தனிச்சொல்லின் வரையறை விளக்கத்திற்குள் தாழ்த்தப்பட்ட பயனிலையாக்கத்தை அடக்குவதாகும். பல பெயர்கள் அவற்றின் வரையறை விளக்கத்தில் அம்மாதிரியான தனிமத்தைக் கொண்டிருக்கும்:

எ.கா.

சமையல்காரன் - 'சமையல் வேலை செய்பவன்', 'சமையல் செய்யும் ஆண் நபர்'

வேலைக்காரி - 'வேலை செய்பவள்', 'வேலை செய்யும் பெண் நபர்'

ஊமை - 'பேச இயலாத நபர்'

ஓட்டுநர் - 'ஊர்தி ஓட்டும் நபர்'

இருக்கை - 'இருப்பதற்கு உரிய இடம்'

அழகி - 'அழகாக இருக்கும் பெண்'

பெயரடைகளும் தாழ்த்தப்பட்ட வினைப்பாடுகளால் வரையறை விளக்கம் செய்யப்படும்:

எ.கா.

ஏழ்மையான – பணம் இல்லாத

பணக்கார - சொத்து, பணம் இவை உள்ள

கரும் - கறுமை நிறம் உள்ள

குளிரான - வெப்பம் குறைந்த

தாழ்த்தப்பட்ட வினைப்பாடுகள் மேலும் கூடுதல் வினைப்பாடுகளைக் கொண்டிருக்கலாம் (துணைநிலை வினைபாடு அல்லது தாழ்த்தப்பட்ட வினைப்பாடு): எடுத்துக்காட்டாக, 'கடவுள் இல்லை' என்பது *நாத்திகன்* (கடவுள் இல்லை என்று நம்புகிற நபர்) என்பதன் வரையறை விளக்கத்தில் உட்படுத்தப்பட்டிருக்கும்.

முறையான மொழியின் பொருண்மையியல் குறிமானத்தில், தாழ்த்தப்பட்ட வினைபாட்டை நாம் கோண அடைப்புக்குறிக்குள் < > அடக்கிக் காட்டலாம்:

(43)

மனிதவினம்
வயதுக்குவந்த
ஆண்
ஒருமை
<யார் . எழுது . புதினம்>
<யார் . வெறு . பெண்கள்>

(43)-இல் உள்ள தாழ்த்தப்பட்ட பயனிலையாக்கங்கள் பொருண்மை பண்புக் கூறுகளின் அடிப்படையில் விரிவாக்கலாம்.

(44)

<a . P . b>

யார்	→உணர்ச்சி ↓நட்பு	மனிதவினம் வயதுக்குவந்த -ஆண் -ஒருமை
'யார்'	'வெறு'	'பெண்கள்'

தாழ்த்தப்பட்ட வினைப்பாட்டின் கருத்துச்சாயலை பயனிலைகளின் பண்புக்கூறுகளாக இருக்கிற வினைப்பாட்டிற்கும் நீட்சிசெய்யலாம். எனவே நாம் இருவகையான தாழ்த்தப்பட்ட வினைப்பாடுகளை வேறுபடுத்தலாம்:

1. ஒரு அடைசெய்யும் வினைப்பாடு (A QUALIFYING PREDICATION) ஒரு பங்கெடுப்பாளருக்குள் வரும் மற்றும் தொடரியலின் பல பெயரடைச் செயல்பாடுகளை உள்ளடக்கும்: பெயரடைகள், எச்சத்தொடர்கள், அடை செய்யும் பின்னுருபுத் தொடர் போன்றவை. எ.கா. 'பணக்கார பிரம்மச்சாரிகள்', 'இலண்டனில் உள்ள பிரமச்சாரிகள்',

'விரைவான கார்கள் வைத்திருக்கிற பிரம்மச்சாரிகள்'. இதுவரை நாம் எடுத்துக்கொண்ட எல்லா எடுத்துக்காட்டுகளும் அடை செய்யும் வினைப்பாடுகளாகும்.

2. **ஒரு அடைசெய்யும் வினைப்பாடு** (A MODIFYING PREDICATION) ஒரு பயனிலைக்குள் வரும் மற்றும் தொடரியலின் பல்வேறு பெயரடைச் செயல்பாடுகளை உள்ளடக்கும்: வினையடைகள், வினையடைசார் பின்னுருபுத் தொடர்கள், வினையடை எச்சத்தொடர்கள் (adverbal clauses).

எ.கா.

அவன் கோவிலில் திருமணம் புரிந்தான்

அவன் விரைவில் மணம் புரிந்தான்

அவன் தன்னுடைய குடும்பத்தை திருப்திப்படுத்த திருமணம் புரிந்தான்.

வருணனை செய்யும் வினைப்பாடுகளைப் போல மாற்றம் செய்யும் வினைப்பாடுகளையும் ஒரு சொல்லில் வரையறை விளக்கத்தில் உட்படுத்த இயலும். எடுத்துக்காட்டாக *ஊர்தல்* என்பது 'மெதுவாக நகர்தல்' என்று பொருள் தரும். *திரும்பு* என்பது 'மீளப் போ' என்று பொருள் தரும். மாற்றியமைக்கும் வினைப்பாட்டின் எடுத்துக்காட்டு கீழே தரப்பட்டுள்ளது:

(a : p)

-வயதுக்குவந்த -ஆண் ஒருமை		+தூங்கு <அது.நீண்டது.மூன்று மணி நேரம்>

அதாவது, அந்த சிறுமி மூன்று மணி நேரம் தூங்கினாள்.

அந்த சிறுமி தூங்கினாள், அது மூன்று மணி நேரம் நீண்டது.

இந்த வினையடைப் பொருளின் இந்த கணிப்பு விளக்கம், ஒரு வினையடைக் கட்டுமானத்தின் இருப்பு அல்லது இல்லாமையால் வேறுபடும் இரண்டு வாக்கியங்களின் பொருள்களுக்கு இடையே உள்ள உட்படுத்து உறவை ஊகம் செய்யும்:

(47) 'நாங்கள் மூன்று மணி நேரம் தூங்கினோம்' என்பது 'நாங்கள் தூங்கினோம்' என்பதை உட்படுத்தும்.

(48) 'ராஜா கழுதையைப் போல் பாடினான்' என்பது 'ராஜா பாடினான்' என்பதை உட்படுத்தும்.

இந்தப் பங்கெடுப்பாளர் 'தூங்கு' என்பதை குறிப்பிடும். 'அந்த சிறுமி மூன்று மணி நேரம் தூங்கினாள்' என்பதால் வருணனை செய்ப்பட்ட சூழ்நிலை தொடர்பாக 'எது மூன்று மணி நேரம் நீண்டது?' என்ற கேள்வியை எழுப்பி 'அந்த சிறுமியின் தூக்கம்' என்ற விடையைப் பெறுவோம். இது (46)-க்கு நெருக்கமான மற்றொரு ஆய்வைத் தரும்.

(49)



'அந்தச் சிறுமி மூன்று மணி நேரம் தூங்கினாள்'

வினைகள் பயனிலை வெளிப்படுத்தும் தனிமங்களாக இருப்பதால் வினையடைத் தனிமங்களின் பயனிலைப் பொருளானது 'அந்த சிறுமியின் தூக்கம் மூன்று மணி நீண்டது', 'அந்த சிறுமி மூன்று மணி நேரமாகத் தூங்கினாள்' என்ற பெயர்புரைகளால் தீர்மானிக்கப்படுகின்றது. முதலில் உள்ள வாக்கியத்தில் காலநீட்சியானது *நீள்* என்ற வினையாலும் இரண்டாவது வாக்கியத்தில் காலநீட்சி –ஆக என்தால் அறிமுகப்படுத்தப்படும் வினையடையாலும் குறிப்பிடப்படுகிறது. பின்வரும் எடுத்துக்காட்டுகள் வினை, வினையடை பெயர்புரைக்கு சான்றாக அமையும்.

(50) அவன் கத்தியால் கேக்கை துண்டித்தான்

அவன் கத்தியைப் பயன்படுத்தி கேக்கை துண்டுகளாக வெட்டினான்

51) { விருந்தினர் வருவதற்கு முன் நகை திருடப்பட்டது.
{ நகை திருட்டு விருந்தினர் வருவதற்கு முன் நிகழ்ந்தது.

தாழ்த்துகை (downgrading) என்பது இருக்கிற பொருண்மை பண்புக் கூறுகளிலிருந்து புதிய பண்புக் கூறுகளை உருவாக்குவதாகும். ஒரு தாழ்த்தப்பட்ட பயனிலை ஒரு தனிநிலைப் பண்புக்கூறாக செயல்படுகிறது; ஆனால் அதன் உள் அமைப்பு நாம் விரும்புகிற படி கலவைத் தன்மையானதாக இருக்கலாம். கூறுகள் (பொருண்மை கூறாய்வின் அடிப்படை முரண்படும் அணுக்கள்) மற்றும் பொருண்மைப் பண்புக்கூறுகள் (semantic features) (பங்கெடுப்பாளர்களையும் பயனிலைகளையும் உருவாக வேண்டி இணையும் தனிமங்கள்) என்பனவற்றுக்கிடையே கலைச்சொல் சார்ந்த வேறுபாட்டைச் செய்வது பயனுள்ளதாக அமையும். எல்லாப் பொருண்மைக்கூறுகளும் (components) பண்புக்கூறுகள் (features) ஆகும்; ஆனால் எல்லாப் பண்புக்கூறுகளும் பொருண்மைக்கூறுகள் அல்ல. இவ்வாறு தாழ்த்தப்பட்ட வினைப்பாடுகள் யாவும் பண்புக்கூறுகளாகும். ஆனால் அவை அணுக்கூறுகள் (atomic components) அல்ல. அவை பொருண்மை முதன்மைகளாகும் (semantic primes). இந்த வேறுபாட்டை உள்ளடக்கிய பொருண்மை மாதிரி சொல் பொருண்மைகளை அவற்றின் இறுதி அணுப் பகுதிகளாகப் பிரிக்கும் முறையான பொருண்மை கூறாய்வின் கண்டிப்பான கொள்கை நோக்கைக் கொண்டிருக்கவில்லை. சொற்பொருண்மையின் திறந்த இறுதித் தன்மையைப் பிற வழிகளில் கணிக்க இயலும்: துணைநிலை ஆக்கம் மற்றும் தாழ்மைப்படுத்தம் வழி சொல் பொருண்மை பெறும் எல்லையற்ற கலவைத் தன்மையின் அடிப்படையில். மொழியின் முழு சொற்றொகுதிக்கும் பொருண்மைக் கூறாய்வை விரிவு செய்வது பொருண்மைக் கூறுகளின் எல்லையற்ற எண்ணிக்கையை வேண்டும் என்ற வாதத்திற்கு அடிப்படையில்லை. உண்மையில் ஒரு மொழி இயங்கும் பொருண்மைக் கூறுகளின் எண்ணிக்கை ஒத்தறி அடிப்படையில் குறைவாக இருக்க கூடாது என்பதற்கும் காரணம் இல்லை.

3.3.8. பொருண்மை விலகல்

இந்த இயலை முழுமைச் செய்ய துணைநிலையாக்கம் மற்றும் தாழ்மையாக்கம் என்ற கருத்துருக்களினால் உருவாக்கப்பட்ட வினைப்பாட்டு ஆய்வை எவ்வாறு கூறியதுகூறல்

(toutology), முரண்பாடு (contradiction) போன்ற பொருண்மையியல் விலகலை (semantic deviation) விளக்கப் பயன்படுத்தலாம் என்று காட்டப்படும்.

மேலோட்டமாக கூறினால் ஒரு வினைப்பாட்டின் பங்கெடுப்பாளரில் உள்ளடங்கப்பட்டுள்ள தகவல் அந்த வினைப்பாட்டின் பிற மீதி இருக்கிற பகுதியில் உள்ளடங்கி இருக்கும் தகவலை உட்படுத்தினால் கூறியது கூறல் வரும். ஒரு ஓரிட வினைப்பாட்டில் பங்கெடுப்பாளர் பயனிலைக்கு உள்ளடங்கும் மொழியாகும் என்று இது பொருள்படும்.

(a : P)

மனிதவினம் வயதுக்குவந்த -ஆண் யார்←காதலி.நீ)	-ஆண்

'நீ காதலிக்கும் மங்கை ஒரு பெண்'

இரு ஈரிட வினைப்பாட்டில் சிறப்புசெய்யும் ஒரு வினைப்பாடு அதன் பங்களிப்பாளர்களுள் ஒன்றில் பொருண்மை அடிப்படையில் மீதமுள்ள முக்கிய வினைப்பாட்டை உட்படுத்தும் போது கூறியது கூறல் வரும்.

(a.வில்.உணவு)

மனிதவினம் ஆண் (யார்.வில்.இறைச்சி)

'கசாப்புக் கடைக்காரன் உணவு விற்கிறான்'.

இந்த விதிகளைக் கிடைவரிசைக் குறிமானத்தில் கூடுதல் துல்லியமாகக் கூறவியலும்.

கூறியது கூறலின் விதிகள்:

(அ) 'a' என்பது 'P' என்பதன் உள்ளடங்கு மொழியமாக இருந்தால் (a:P) ஒரு கூறியது கூறலாகும்.

(ஆ) (a.P.b) என்பது பொருண்மை அடிப்படையில் (a.Q.c) என்பதை உட்படுத்தினால், (a<a.P.b>.Q.c) ஒரு கூறியது கூறலாகும்.

முரண்பாட்டின் விதிகள் இவற்றிற்கு எதிரிடைகளாகும்; ஒரு ஓரிட வினைப்பாடுகளுக்குப் பங்கெடுப்பாளர் பயனிலையுடன் இணக்கமின்றி இருக்கும் என்பது விதியாகும் (‘நீ காதலிக்கிற மங்கை ஒரு பெண்’) மற்றும் ஈரிட வினைப்பாடுகளுக்குச் சிறப்பு செய்யும் வினைப்பாடு முக்கிய வெளிப்பாட்டின் மீதத்தை பொருண்மை அடிப்படையில் விலக்கும் என்பது விதியாகும் (‘கிரிக்கெட் விரும்பிகள் கிரிக்கெட்டை வெறுக்கின்றனர்’).

விலகலின் மூன்றாவது வகை பொருண்மை ஒழுங்கின்மையாகும் (semantic anamoly): பங்கெடுப்பாளர்களில் ஒன்று அல்லது முக்கிய வினைப்பாட்டின் பயனிலை தன்முரண்பாடாக இருந்தால் இது வரும்: அதாவது ‘+ மனித இனம்’ மற்றும் ‘- மனித இனம்’ என்ற இரு முரண்படும் பண்புக்கூறுகளைக் கொண்டிருந்தாலோ ஒன்றையொன்று பொருண்மை அடிப்படையில் விலக்கி வைக்கும் இரு தாழ்த்தப்பட்ட வினைப்பாடுகளைக் கொண்டிருந்தாலோ இது நிகழும். எடுத்துக்காட்டாக,

(1) மனிதக் குதிரைகள் ஓட்சை உணவாக கொள்கிறன.
(2) இந்த நிகழ்ச்சி இசையை வெறுக்கும் இசை விரும்பிகளுக்கு வேண்டி நடத்தப்படும்.

நாம் மேற்சொன்னவற்றில் இணக்கமற்ற மற்றும் முரண்பட்ட இரு தேற்றக்கூற்றுகளுக்கு இடையேயுள்ள தேவையான தொடர்பைக் கண்டுகொள்கின்றோம்:

‘a ஒரு குதிரை’ என்பது ‘a ஒரு மனிதன்’ என்பதுடன் இணக்கமின்றி வருகிறது.

‘a இசையை விரும்புகிறான்’ என்பது ‘a இசையை வெறுக்கிறான்’ என்பதுடன் இணக்கமின்றி வருகின்றது.

(a) என்ற பங்கெடுப்பாளருக்கு உண்மையுடன் கருத்தக்க குறிப்பு இல்லை: ‘ஒரு மனிதக் குதிரை’ என்ற பொருளோ ‘இசையை வெறுக்கிற ஒரு இசைவிரும்பி’ என்ற பொருளோ இல்லை. எனவே இம்மாதிரியான பங்கெடுப்பாளர்கள் உண்மையா, பொய்யா என்ற கேள்விகளைத் தள்ளி வைக்கும் என்று பெரும்பாலும் கூறப்படுகிறது. இந்த பார்வையின் படி

'மனிதக் குதிரைகள் ஓட்சை உண்ணும்' என்பது உண்மையான அல்லது பொய்யான தேற்றக்கூற்றா என்று வினவுவதை அர்த்தமற்றதாக்கும்.

3.3.9. சுருக்கவுரை

இந்த இயலின் முக்கிய நோக்கம் வினைப்பாட்டு ஆய்வு பொருண்மைக் கூறாய்வுக்குத் தேவையான சேர்க்கையாகும் என்று காட்டுவதாகும். முழு வாக்கியத்தின் பொருண்மையை விளக்க இயலும் என்று பார்த்தோம். வினைப்பாட்டு ஆய்வானது உள்ளடங்கு மொழியம், இணக்கமின்மை மற்றும் உட்படுத்தலின் அடிப்படைக் கூற்றுகள், கூறியது கூறல், முரண் போன்ற பொருண்மை உறவுகளுக்கு இடையில் உள்ள தொடர்பைத் தருகின்றது எனப் பார்த்தோம். அதே நேரத்தில் வாக்கிய பொருண்மையின் மாதிரிக்கு வினைப்பாட்டு ஆய்வு உண்மை உலகத்தைப் பற்றிய தகவலுடன் வினைப்பாடுகளைத் தொடர்புப்படுத்தும் தர்க்கத் தனிமம் என்ற முக்கியமான தனிமத்தைக் கொண்டிராத குறைப்பாட்டைக் கொண்டுள்ளது. நாம் கருத்தில் கொண்டிருக்கிற வினைப்பாடுகள் உண்மை மற்றும் பொய் என்பதன் சிறப்புப்பண்புகளைக் கொண்டிருக்கவில்லை. இருப்பினும் தேற்றக்கூற்று இவற்றைக் கொண்டிருக்கும். அடுத்தப் பகுதியில் இக்குறை நிவர்த்தி செய்யப்படும்.

3.4. மொழியில் தர்க்கம்

பகுத்தறிவு சிந்தனைகளின் ஒழுங்கமைப்பு பற்றிய ஆய்வான தர்க்கவியல் எப்பொழுதும் தத்துவ இயலாரின் உரிமையாக கருதப்படுகிறது. இன்றைய நூற்றாண்டில் இந்தப் பழமையான ஆய்வு குறியீட்டு தர்க்கவியலின் (symbolic logic) முன்னேற்றம் வழி கணிதத்துடன் தொடர்பு கொள்ள உயர்ந்த ஆய்வாக வளர்ந்துள்ளது. இப்பொழுது மொழியியலார் இதனை மொழியியலாய்வில் உட்படுத்த முயற்சிக்கின்றனர். ஒரு வாக்கியத்தின் பொருண்மை உருப்படுத்தம் ஒரு தர்க்க உருப்படுத்தம் ஆகும். எனவே பொருண்மை அமைப்பில் தர்க்கம் முக்கியத்துவம் பெறுகிறது.

3.4.1. தர்க்கவியல் ஒழுங்குமுறைகளும் இயல்பு மொழியும்

தர்க்கவியலாரும் மொழியியலாரும் தமது நோக்கத்தில் வேறுபடுகின்றனர். தர்க்கவியலாரின் ஒழுங்குமுறை ஒரு விதிமுறை ஒழுங்குமுறையாகும்; வருணனை ஒழுங்குமுறையல்ல. தர்க்கவியலார் நாம் எவ்வாறு மொழியில் சிந்தனைகளை ஒழுங்குபடுத்துகிறோம் என்பதில் ஆர்வம் காட்டவில்லை. அதாவது பொருள் மயக்கம், முரண்பாடு, அமைப்பு சார் குழப்பம் போன்றவற்றை விளக்குவதற்கு நாம் என்ன செய்ய வேண்டும் என்பது குறித்து கவலைப்படவில்லை. வரலாற்று அடிப்படையில், மொழியின் தொடர் அமைப்புகள் பொருண்மையின் அக அமைப்பை மறைமுகமாகத்தான் பிரதிபலிக்கிறது என்பதைத் தத்துவவியலார் கண்டு கொண்டதன் காரணமாகக் குறியீட்டுத் தர்க்கவியல் (symbolic logic) தோன்றியது. தர்க்கவியலார்கள் சாதாரண இயற்கை மொழியை விட்டுவிட்டு செயற்கை முறையான மொழிகள் அல்லது கணக்கியல்களை (calculi) ஏற்றுக் கொள்வதன் அனுகூலத்தை அறிந்து கொண்டார்கள். செயற்கை வடிவ மொழிகள் எனணனைப் பற்றி சாதாரண ஆங்கிலக் கூற்றுகள் கொண்டிருக்கும். எண்கணிதம் (arithmatics) மற்றும் குறிக்கணக்கியல் (algebra) என்பதன் மொழிகளாக சாதாரணப் பேச்சிலும் எண்ணத்திலும் மக்கள் பயன்படுத்தும் இயற்கைத் தர்க்கவியலுடன் (natural logic) அதே வகை உறவைக் கொண்டிருக்கிறது. இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுவிட்டால் நேர்த்தியான மற்றும் அருவத் தன்மையான வாய்பாட்டு கூற்றுகள் சாத்தியமாகும்.

(1) உன்னிடம் 10 பசுக்கள் இருந்தது அதில் 6 எடுக்கப்பட்டுவிட்டால் உன்னிடம் எஞ்சியிருப்பது 4 ஆகும்.

(2) '10-6=4'

சாதாரண மொழியியலிருந்து விடுதலைப் பெற்று இம்மாதிரியான கணக்கீடுகள் அதற்குரிய போக்கில் உருவாகிறது. தேவைக்கு மேல் கூடுதல் முதன்மைக் கூற்றுகள் (Primitives) அல்லது ஊடுகோள்கள் (axioms) இல்லாது ஒரு கண்டிப்பான விதிதரு ஒழுங்கு முறையை உருவாக்குவது இதன் நோக்கமாகும். இவ்வாறு வளர்ச்சி அடைந்து அவை சாதாரண மொழிகளில் இருந்து பிரிந்து எண்ணத்தின் திறமையான ஒழுங்கு முறையாக மாறியுள்ளது.

எவ்வாறு இயற்கை மொழிகளும் தர்க்க மொழிகளும் வேறுபட்டுள்ளன என்பதற்கு எடுத்துக்காட்டாக தேற்றக்கூற்று கணக்கியல் (propositional calculus) என்று அறியப்படுகிற தர்க்க ஒழுங்குமுறை அமைகிறது. இதிலிருந்து முறையான தாக்கவியல் (natural logic)

தொடங்குகிறது. இங்கு தர்க்கவியலார்கள் பல தர்க்கத் தொடர்புச் சொற்களையோ (logical-link-words) ('இல்லை', 'மற்றும்', 'அல்லது', 'என்றால்') இயக்கிகளையோ (operators) ஒரு தனியான முதன்மை தர்க்க இயக்கியாகக் குறைப்பதில் வெற்றி பெற்றுள்ளனர். இந்த குறைப்பின் நடவடிக்கைகளில் ஒன்று 'X-இல்லை' (X என்பது ஏதாவது ஒரு தேற்றக் கூற்று) என்ற விளக்கம்; இது X–உம் இல்லை Y-உம் இல்லை என்பதன் சுருக்கமாகும். இந்த ஒழுங்கு முறையில் (அ) 'ராஜா ஒரு மனிதன் இல்லை' என்பது (ஆ) 'ராஜா ஒரு மனிதனும் இல்லை, அவன் ஒரு மனிதன் என்பதும் இல்லை' என்பதன் சுருக்கமாகும். இது இப்பொழுது தர்க்கவியலாருக்கு மிகவும் திருப்பதிகரமானதாகும்; ஏனென்றால் இரண்டு தேற்றக் கூற்றுகளிலும் ஒரே உண்மை மதிப்பு இருக்கிறது. ஆனால் இது மொழியியலாருக்கு உதவுவதில்லை. ஏனென்றால் (ஆ) என்பது நல் வடிவமாக்கப்படவில்லை. சாதாரண கருத்தாடலில் எந்த சூழலிலும் ஒரு தேற்றக்கூற்று அதனுடனேயே இணைக்கப்படுவதில்லை.

இதே சமயத்தில் தர்க்கவியல் மற்றும் பொருண்மையியல் என்பனவற்றின் கருதல்கள் ஒன்றுசேரும் இடங்களும் உள்ளன. அறுபதுகளில் மொழியியலார்கள் மொழி வெளிப்பாடுகளின் (ஒலியனியல் மற்றும் தொடரியல்) புற அமைப்புகளில் தங்கள் கவனத்தை செலுத்தினர். இவற்றை உள்ளுறை செய்யும் பொருண்மை அமைப்புகளில் தங்கள் கவனத்தை செலுத்தவில்லை. அப்போதிலிருந்து தர்க்க உறவுகளில் வழிகாட்டியாகக் கருதப்பட்ட தொடரியல் அமைப்பில் தத்துவயியலார்களை அதிருப்தியுறச் செய்த அதே வகையான கருதல்கள் மொழியியலாரை ஒரு வாக்கியத்தின் பொருண்மைகளையும் வடிவத்துடன் அவற்றுக்குள்ள உறவையும் விளக்க வேண்டி ஒரு அகநிலை உருப்படுத்தத்தை அதாவது ஒரு பொருண்மையியல் அல்லது தர்க்கவியல் உருப்படுத்தத்தை தேடத்தூண்டின. எடுத்துக்காட்டாக, *யாரோ ஒருவர், ஒவ்வொருவர்* மற்றும் இதுபோன்ற அளவீட்டு வெளிப்பாடுகள் பெயராக அவற்றிற்கு அதே இலக்கணச் செயல்பாடு கொண்டிருந்தாலும் அவை எழுவாயாகவும் செயப்படுபொருளாகவும் செயல்பட இயலும் என்றாலும் *ராஜா, ராணி* போன்ற சொற்களைப் போன்று நடத்தைக்காட்டவில்லை.

(3) அ. ராணி அழகானவள்

ஆ. நீ ராணியை மணம் புரிவாய்

இ. எனவே நீ யாரோ அழகானவளை மணம் புரிவாய்

(4)அ. யாரோ அழகானவள்

ஆ. நீ யாரையோ மணம் புரிவாய்

இ. எனவே நீ யாரோ அழகானவளை மணம் புரிவாய்.

ஏன் இவற்றில் முதல் முக்கூற்று முடிவு சரியாக இருக்கிறது? இரண்டாவது முடிவு சரியாக இல்லை? இம்மாதிரியான தர்க்கச் சிக்கல்கள் தான் தத்துவயியலாரை சேர்க்கை முறையான மொழிகளை உருவாக்க தூண்டியது. பயனிலை கணக்கியலில் ((predicate calclus) 'எல்லா' 'சில' என்ற அளவடைகளைக் கையாளும் ஒழுங்கமைப்பு)) (4)அ-வை (3)அ-விலிருந்து வேறுபட வெளிப்படுத்துவதால் சிக்கல் தீர்க்கப்படுகின்றது. (4)அ போன்ற எல்லாத் தேற்றக் கூற்றுகளும் அளவடைகளை உட்படுத்தி இருக்கும். அவை X மற்றும் Y என்ற மாறிகளின் பயன்பாட்டை உட்படுத்தி இருக்கும். (3)அ என்பது 'Ba' என வெளிப்படுத்தப்படலாம். இதில் B என்பது 'அழகானவள்' என்ற பயனிலை a என்பது 'ராணி' என்ற பங்கெடுப்பாளர் (4)அ பின்வருமாறு விரிவாகக் குறியீடு செய்யப்படும்.

(∃x) (Px&Bx)

(அதாவது ஒரு x இருக்கிறது, எப்படி என்றால் x ஒரு நபர் மற்றும் x அழகானது'). ∃ (என்ற குறியீடு இருப்புசார் அளவடையை (existential quantifier) உருப்படுத்தம் செய்யும். தமிழ் ஆங்கில மொழியில் இது 'சில' என்பதால் வெளிப்படுத்தப்படும்).

தர்க்கவியலார் தனித் தன்மையான குறிமானங்களைக் கொண்டு விடைகண்ட சிக்கல்கள் பொருண்மையியல் சார்பான மொழியியலாருக்குச் சவாலாகும். அவர்கள் தர்க்கக் கணிதவியல் முறையில் பிரதிபலித்த வேறுபாட்டை போன்று வேறுபாட்டை பிரதிபலிக்கும் பொருண்மையியல் உருப்படுத்தத்தின் ஒழுங்கு முறையை அமைக்க வேண்டும். ஆனால் மொழியியலார் தர்க்கவியலாரிலிருந்து வேறுபட்ட கட்டுப்பாடுகளில் செயல்படுகின்றனர். அவர் மொழியியலார் வாக்கியங்களின் தர்க்க பொருண்மையியல் உருப்படுத்தத்தை சிறப்புசெய்ய எளிய விதிகளை கண்டுபிடிப்பதோடு பின்வருவனவற்றையும் கையாள வேண்டும்.

(அ) மொழிப் பயன்பாட்டின் நடப்புநிலை உண்மைகள் (the actual facts of language usage): ஒரு மொழியைப் பேசுபவர்கள் எந்தத் தேற்றக்கூற்றுகளை அர்த்தமுள்ளதாகவும் அர்த்தம் இல்லாததாகவும் முரணாகவும் ஒருபொருள் பன்மொழியாகவும் காண்கிறார்களோ அவை மொழியியலார் விளக்கக்கூடிய தரவின் பகுதியாக அமைகின்றது. அவர் தர்க்கத்தின் இலட்சியத்

தன்மையான அல்லது செயற்கையாக இயல்பாக்கம் செய்யப்பட்ட ஒழுங்கு முறைகளில் ஈடுபடக்கூடாது.

(ஆ) மொழியின் ஒட்டுமொத்தமான கணிப்பில் தர்க்கப் பொருண்மையியலின் இடம் (the place of logical semantics in the overall account of langague): இதன் அர்த்தம் ஒரு பக்கம் பொருண்மையியலுக்கும் தொடரியலுக்கும் உள்ள உறவைக் காட்டும் விதிகளையோ அல்லது பிற விதிமுறை வடிவவாதங்களையோ தரவேண்டும்; மறுபக்கம் பொருண்மையிலையும் பயன்வழியியலையும் தரவேண்டும். தர்க்கவியலாருக்குத் தானிக்க ஒழுங்குமுறையாக இருக்கும் தர்க்கம், மொழியியலாருக்குத் தானியக்கமானது அல்ல.

(இ) பொருண்மையியல் விளக்கங்களுக்கு உளவியல் சாத்தியங்கள் (the psychological plausibility of semantic descriptions): மொழியியலாருக்கு 'இயற்கைத் தர்க்கவியல்' என்பது மக்கள் எண்ணமிடவும் அவர்களுடைய எண்ணங்களை விவேகமுடன் வெளிப்படுத்தவும் பயன்படுகின்ற உளம்சார் கருவி என்று பொருள்படும். தர்க்கவியல்சார் கணக்கீடுகளின் (logical calculi) சில நடைமுறை மரபுகள் (எடுத்துக்காட்டாக இடமிருந்து வலமாக எழுதுதல்) உளவியல் அடிப்படையில் குறிப்பாக சாத்தியமானதல்ல. மனித மனம் தர்க்க உறவுகளை ஒரு வரிசை முறையில் புரிந்து கொள்கிறது என்று கருதுவதற்குக் காரணமில்லை. மீண்டும் தர்க்கவியலாருக்கு நன்மையானது மொழியியல் பொருண்மையியலுக்கு நன்மையாக இருக்கத் தேவையில்லை.

இந்தக் காரணங்களுக்காக நாம் மொழியியலில் விளக்க முற்படுகின்ற 'இயற்கைத் தர்க்கவியல்' தத்துவவியலில் உருவாக்கப்பட்ட முறையான தர்க்கங்களைப் போன்று இருக்க தேவையில்லை. உண்மையில், மொழியியலாரும் தர்க்கவியலாரும் தர்க்கவியலின் மற்றும் இயற்கை மொழிப் பொருண்மையியலின் இலக்குகளில் அவர்கள் ஒரு பொருத்தத்தைக் காண்கின்ற அளவில் வேறுபடுவர். முன்னர் கூறப்பட்ட நிலைபேறுபெற்ற தேற்றக்கூற்றுசார் கணக்கியல் மற்றும் பயனிலைக் கணக்கியல் என்பதுடன் மொழிப் பொருண்மையியலின் வேறுபட்ட பரப்புகளை ஒழுங்குபடுத்தும் வேறுபட்ட கணக்கியல்களைத் தருகின்றது: ('சாத்தியம்' மற்றும் 'தேவை' என்ற கருத்துருக்களைக் கையாளும்) வினைநோக்குத் தர்க்கவியல் (modal logic), (தேற்றக்கூற்றுகளுக்கும் காலக் குறிப்புக்கும் உள்ள உறவைக் கையாளும்) காலத் தர்க்கவியல் மற்றும் பிற.

3.4.2.உண்மையாக்கம் (Actualization)

இயற்கைத் தர்க்கவியலை விளக்குவது என்பது தேற்றக்கூற்றின் மெய்மை, பொய்மை, பொருளின்மை போன்றவற்றைப் பற்றிய பொருள்கோளை அல்லது முடிவுகளை அடைய வேண்டி அவற்றிற்கிடையே அல்லது அவற்றிற்கு அவற்றின் பகுதிகளுக்கும் இடையே எந்த உறவுகள் இருக்கின்றன என்பதைக் காட்ட தமிழ் போன்ற மொழிகளின் தேற்றக்கூற்றுகளைப் பண்பாக்கம் செய்வதாகும். இது இங்கு தரப்பட்டுள்ள அடிப்படை கூற்றுகளை விளக்கும் செயலுக்குச் சமமானது மற்றும் வாக்கியங்களுக்கு பொருண்மை உருப்படுத்தங்களைத் தருவது அவற்றிற்குத் தர்க்க வடிவம் தருவதற்குச் சமமானது.

பின்வரும் எடுத்துக்காட்டுகள் 'ஒரு பையன் குதிரையை ஓட்டுகிறான்' என்ற பயனிலையாக்கத்தை எடுத்துக்காட்டுகிறது.

(5)

அ. அந்தப் பையன் ஒரு குதிரையை ஓட்டினான்.

ஆ. அந்தப் பையன் ஒரு குதிரையை ஓட்டவில்லை.

இ. அந்தப் பையன் ஒரு குதிரையை ஓட்டினானா?

ஈ. அந்தப் பையனின் ஒரு குதிரையை ஓட்டுதல்

உ. அந்தப் பையன் ஒரு குதிரையை ஓட்டுவதற்கு

அ, ஆ என்பன மட்டும் தான் தேற்றக்கூற்றுகள்; அவற்றை உண்மை அல்லது பொய் என்று விளக்கலாம். அவை 'உண்மை நடப்பில் நங்கூரம்' இடப்பட்டுள்ளது அல்லது உண்மையாக்கம் செய்யப்பட்டுள்ளது. இதன்படி இ, ஈ என்பன இவ்வாறில்லை. ஒரு தொடரியல் வேறுபாடு என்னவென்றால் அ, ஆ என்பன, நிகழ்வு ஒரு குறிப்பிட்ட காலத்தில் (நிகழ் காலத்தில்லாது இறந்த காலத்தில்) ஏதோ ஒன்று நடந்ததாய் விளக்க அடையாளப்படுத்தப்பட்ட காலவடிவத்தைக் கொண்ட ஒரு வினைமுற்று அடங்கிய எச்சத்தொடரால் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. மற்றொரு தொடரியல் வேறுபாடு இந்த எச்சத்தொடர் கூற்று வினை நோக்கில் இருக்கிறது. அதாவது இது ஏதோ ஒன்றை நிறுவுவதற்கு இருக்கிறதே தவிர கேள்வி கேட்க அல்ல.

ஆனால் இந்த வெளிப்படையான அடைமொழிகள் ஒரு வினைப்பாட்டிடை ஒரு முழு சிறப்பீடு செய்யப்பட்ட தேற்றக்கூற்றாக மாற்றப் போதுமானதல்ல. அ-வையும் ஆ-வையும் வேறுபடுத்தும் மற்றொரு காரணி நேர்மறைக்கும் எதிர்மறைக்கும் உள்ள முரண்பாடு ஆகும்: அ-வில் வினைப்பாட்டில் விளக்கப்பட்டுள்ள சூழல் ஒரு நடைமுறை உண்மையுடன் பொருந்துகிறது. ஆனால் ஆ-வில் அவ்வாறு இல்லை. மேலும் அ-வில் 'அந்தப் பையன்', 'ஒரு குதிரை' என்பன, இருக்கும் ஒன்றை குறிப்புரை செய்யும். இருப்பின் இந்த நிபந்தனை இல்லாமல், அ என்பதை ஏதோ ஒன்றின் உண்மைக் கோரலாக எடுத்துக்கொள்ள இயலாது. இதன் தொடர்பாக, *அந்தப் பையன்* என்ற குறிப்புடை வெளிப்பாட்டிற்கும் *ஒரு குதிரை* என்ற குறிப்பிலா வெளிப்பாட்டிற்கும் இடையில் உள்ள வேறுபாட்டைக் கருத்தில் கொள்ளவும்: *அந்த* என்ற குறிப்புடை சுட்டு அ என்பதில் மட்டுமற்றி ஆ-உ என்பனவற்றிலும் ஒரு குறிப்பிட்ட பையனின் இருப்பைக் குறிப்பிடும். 'ஒரு' என்ற குறிப்பிலா சுட்டு அ என்பதில் மட்டும் ஒரு குதிரையின் இருப்பைக் குறிப்பிடும்.

உண்மை நடப்பின் வினைப்பாட்டைக் கூறினால் தேற்றக்கூற்றின் உண்மையாக்கம் மேற்கண்ட காரணிகளின் ஒருங்கிணைப்பாகும். உண்மையாக்கத்தில் கட்டுப்பாடுகள் நிறைவேற்றப்பட்டால்தான் எந்தச் சூழல்களில் ஒன்று உண்மையா பொய்யா என்று நாம் தீர்மானிக்க இயலும். இது அடிப்படைக் கூற்றுகளின் மதிப்பிற்கு முக்கியமான ஆதரவைக் கொண்டிருக்கிறது. எடுத்துக்காட்டாக பின்வரும் உட்படுத்தல் கூற்றுகளைக் கருத்தில் கொள்ளவும்:

(6) அந்தப் பையன் ஒரு ஆண் குதிரையை ஓட்டுகிறான் என்பது
(7) அந்தப் பையன் ஒரு குதிரையை ஓட்டுகிறான்

என்பதை உட்படுத்தும். முன்னர் கூறிய விதிப்படி இது உட்படுத்தலின் நேரடியான நேர்வாகத் தெரிகிறது. இருப்பினும் மேற்கூறிய இரண்டு கூற்றிற்கும் இடையே உட்படுதல் உறவு இல்லாத நேரலையும் எண்ணிப் பார்க்க இயலும். ஏனென்றால் மேற்கூறிய இரண்டு கூற்றும் இரண்டு நேர்வுகளை குறிப்பிட இயலும். பையன் இராமனாகவோ கண்ணணாகவோ இருக்க இயலும். நிகழ்வுகளின் காலங்கள் வேறுபட இயலும். மேற்கூறிய கூற்றில் இரண்டு கூற்றுகளில் பையனும் காலமும் இயல்பாக வந்ததால் தான் உட்படுதல் உறவை நிறுவ இயலும். அதாவது பொதுவாக இயற்கைத் தர்க்கத்துடன் தொடர்பு கொண்ட உண்மை-மதிப்பீட்டின் உறவுகள்

உடனிலைக்குறிப்பின் (coreference) ஊகத்தைச் சார்ந்து அமையும். அடிப்படை கூற்றுகள் இவற்றைக் கணக்கில் எடுத்துக் கொள்ள ஒரு வழி உடனிலைக்குறிப்புசார் சொல்லடைவுகளாகச் (referential indices) செயல்படுகின்ற X மற்றும் Y என்ற தேற்றக்கூற்று மாறிகளின் பொருண்மை உருப்படுத்தத்தை உள்ளடக்குவதாகும். பையன் என்பதற்கு X என்ற ஒரே மாறியையும் ஓட்டு என்பதற்கு t என்ற மாறியையும் இணைத்து 6, 7 என்பனவற்றில் பையன் என்பதும் காலம் என்பதும் ஒன்று எனக்க காட்ட இயலும்.

(6அ) 'பையன்$_{x}$.ஓட்டு$_{காலம்\ t\text{-}இல்}$.ஆண் குதிரை)' என்பது

(7அ) 'பையன்$_{x}$. ஓட்டு$_{காலம்\ t\text{-}இல்}$.குதிரை)' உட்படுத்தும்; ஆனால்

(7ஆ) 'பையன்$_{x}$.ஓட்டு$_{காலம்\ t\text{-}இல்}$.குதிரை)' என்பதை உட்படுத்தாது.

3.4.3. குறிப்புடைமை (Definiteness)

குறிப்புடைமைக்கும் குறிப்புடைமை இல்லாமைக்கும் இடையில் உள்ள முரண்பாடு ஒரு மிகப் பொதுமையான பொருண்மையியல் நடத்தையாகும். ஆங்கிலத்தில் 'the' என்பது குறிப்புடை சுட்டாகவும் a, an என்பன குறிப்பிலாச் சுட்டாகவும் பயன்படுத்தப்படுகிறது. இந்த இரு சொற்களுக்கு இடையே உள்ள வேறுபாடு, பொருண்மைக்கூறாய்வால் கையாளளப்படும் பொருண்மை எதிர்மறைமைகளிலிருந்தும் வேறுபட்டதாகும். தமிழில் *அந்த, இந்த* என்பன குறிப்புடை சுட்டாகவும் *ஒரு* என்பது குறிப்பிலா சுட்டாகவும் பயன்படுத்தப்படுகின்றன. எடுத்துக்காட்டாக,

'அந்த நிர்வாகி கண்ணன் ஆவார்.'

'கண்ணன் ஒரு நிர்வாகி ஆவார்.'

என்பன ஒன்றுக்கொன்று இணக்கமற்றன என்று கூற இயலாது; மாறாக முதலாவது இரண்டாவதை உட்படுத்தும் என்று கூறலாம். இந்த வகையில் குறிப்புடைச் சுட்டு ஒரு பொருண்மை சிறப்பீட்டைச் சேர்க்கிறது. அது குறிப்பிலாச் சுட்டில் இல்லை. மாறாக 'கண்ணன் மாளிகைக்குள் நுழைந்தார்' என்பது 'கண்ணன் ஒரு கட்டிடத்திற்குள் நுழைந்தார்' என்பதை உட்படுத்தும். ஆனால் 'கண்ணன் அந்தக் கட்டிடத்திற்குள் நுழைந்தார்' என்று

கூறுவது தவறாகும்: ஏனென்றால் 'அந்த மாளிகை' என்பதும் 'அந்தக் கட்டிடம்' என்பதும் ஒன்றையொன்று குறிப்புரை செய்யும் என்று கூற இயலாது. 'கண்ணன் அந்த மாளிகைக்குள் நுழைந்தார்' என்பதும் 'கண்ணன் அந்த மாளிகைக்குள் நுழைந்தார்' என்பதும் ஒரு பொருள் பன்மொழிகள் என்று கூற இயலாது. ஏனென்றால் ஒன்றையொன்று குறிப்புரை செய்யும் குறியீடு இல்லாமல் முதலில் கூறப்பட்ட மாளிகையும், இரண்டாவதில் கூறப்பட்ட மாளிகையும் ஒன்று என்று கூற இயலாது. இவ்வாறு குறிப்புடைச் சுட்டு உள்ளடங்கல், ஒத்தல் மற்றும் அடிப்படைக் கூற்றுக்கள் இவற்றிற்கிடையில் ஊகிக்கப்பட்ட உறவுகளுக்கு மறுப்புரைகளை உருவாக்கும்.

குறிப்புடை சுட்டின் பயன்பாடு தூய்மையான பொருண்மையியல் கலைச் சொற்களால் அன்றி பயன்வழியியலால் விளக்கப்படுகிறது. அதாவது 'அந்த' என்பதைப் பொருள்கோள் செய்ய நாம் அதை ஒரு குறிப்பிட்ட பேச்சுச் சூழல் மற்றும் பேசுபவர் மற்றும் கேட்பவர் ஊகங்களுடனும் தொடர்புபடுத்தவேண்டும். 'அந்த X' என்ற தொடர் பேசுபவரால் ஒரு முற்கோளை வெளிப்படுத்துகின்றது. அதாவது பேசுபவருக்குத் தெரிந்த X என்ற இருப்புப் பொருள் கேட்பவருக்கும் தெரியும் என்பது 'அந்த' என்பதால் முற்கோள் செய்யப்படும். 'ஒரு' என்பது இத்தகைய முற்கோளைச் செய்யாது. பேசுபவர் 'நான் அந்தப் புத்தகத்தைப் படித்துவிட்டேன்' என்று கூறுகையில் பேசுபவரால் குறிப்பிடப்பட்ட புத்தகத்தைப் பற்றி கேட்பவரும் அறிவார் என்பது முற்கோள் செய்யப்படுகின்றது. ஆனால் பேசுபவர் 'நான் ஒரு புத்தகம் படித்தேன்' என்று கூறுகையில் பேசுபவர் குறிப்பிடும் புத்தகம் பற்றி கேட்பவருக்குத் தெரியாது என்பது முற்கோள் செய்யப்படும்.

3.4.4. **உடனிலைக் குறிப்பு (Co-reference)**

பின்வரும் வாக்கியங்களில் முதல் வாக்கியத்தில் வரும் 'ஒரு புத்தகம்' என்பது தொடர்ந்து வரும் வாக்கியத்தில் வரும் 'அந்த புத்தகம்' என்பதை உடனிலைக் குறிப்பு செய்யும்.

நான் காலையிலிருந்து ஒரு புத்தகம் வாங்கினேன்.
அந்த புத்தகத்தை படித்து முடித்து விட்டேன்.

நாம் பெருக்கு பதிலாக வரும் மாற்றுப்பெயர்களை முன்றாகப் பிரிக்கலாம்.

மூவிட மாற்றுப் பெயர்	தன்மை இடம்	நான், நாம், நாங்கள்
	முன்னிலை இடம்	நீ, நீர், நீங்கள்
	படர்க்கை இடம்	அவன், அவள், அவர், அது,
தற்சுட்டுப்பெயர்		தான், தாம்
சுட்டுப்பெயர்		அந்த/இந்த, இங்கே/அங்கே, இப்பொழுது/அப்பொழுது

குறிப்புடைமையின் பண்புக்கூறு இச்சொற்களின் பொருண்மையைச் சாரும். குறிப்புடைமை அ/இ எனக் குறியீடு செய்ப்பட்டுள்ளது. இருப்பினும் குறிப்புடைச் சொல் பிற பண்புக்கூறுகளையும் உள்ளடக்கும். எடுத்துக்காட்டாக,

அவள் என்பது 'அ/இ நபர் ஒருமை – ஆண்' எனப் பொருள்படும்

இது 'அ/இ –நபர்' எனப்பொருள்படும்

அவை என்பது அ/இ –நபர் ஒருமை எனப் பொருள்படும்.

சுட்டுச் சொற்கள் *இந்த* (அ/இ அண்மை) மற்றும் *அந்த* (அ/இ –அண்மை) 'அண்மை' என்ற எதிர்நிலையால் வேறுபடும்; மேலும் *இங்கே/அங்கே, இப்பொழுது/அப்பொழுது* என்ற வினையடைகளும் எதிர்நிலையால் முரண்படும். எடுத்துக்காட்டாக *இப்பொழுது* என்பது 'இந்த சமயத்தில்' என்றும் *அப்பொழுது* என்பது 'அந்த சமயத்தில்' எனவும் பொருள்படும். ± அண்மை என்ற எதிர்நிலையின் துல்லியமான பொருள்கோள் ஒரு ஆர்வமுள்ள பயன்வழியியல் கேள்வியாகும்; இருப்பினும் இந்த எதிர்நிலை வேறுபட்ட பல சொல் முரண்பாடுகளில் பிரதிபலிக்கின்றது என்பது கருத்தில் கொள்ளப்படவேண்டும்.

ஏல்லா சொல்வகைகளும் நாம் குறிப்புடைமையுடன் தொடர்புபடுத்தும் தனித்தன்மையான, சூழல் அடிப்படையில் நிர்ணயம் செய்யப்படுகின்ற தனிமத்தைக் கொண்டிருக்கும்; அவற்றின் பொருள்கள் குறிப்புடைப் பண்புக்கூறைக் கொண்டிருக்கின்றது என உருப்படுத்தம் செய்வதன் நியாயம் இதுதான். இருப்பினும் அவை உடனிலைக்குறிப்புடன் தொடர்புகொண்டிருக்கும் பரப்பில் அவை வேறுபடும். படர்க்கை மாற்றுப்பெயர்களான *அவள்,*

அவர் போன்றவை பெரும்பான்மையும் உடனிலைக்குறிப்பகளாகத்தான் பயன்படுத்தப்படுகின்றன; இலக்கைச் சுட்டும் சொற்கள் (deictics) பெரும்பான்மையும் உரைக்கு வெளியே உள்ள சூழல் குறிப்புக்குத்தான் பயன்படுத்தப்படுகின்றன. தற்சுட்டுகள் பொதுவாக முற்சுட்டுக்களாகத்தான் பயன்படுத்தப்படுகின்றன மற்றும் அவற்றின் முதன்மைச் செயல்பாடு ஒரே வாக்கியத்தில் வரும் ஏதாவது ஒரு தனிமத்துடன் (வழக்கமாக எழுவாயுடன்) உடனிலைக்குறிப்பு உறவை நிறுவுவதாகும். பின்வருவது தற்சுட்டு மாற்றுப்பெயரின் வழக்கமான பயன்பாடாகும்:

(9) 'ராணி தன்னைத்தானே மெச்சிக்கொண்டாள்' (ராணி.அ/இ' -ஆண்.மெச்சு)

பிற சொற்களும் சொல்வடிவங்களும் குறைந்த அளவில் குறிப்புடைமையை வெளிப்படுத்துகின்றன: குறிப்பாக இயற்பெயர்கள் மற்றும் சார்பு மாற்றுப்பெயர்கள். இயற்பெயர்கள் தனித்தன்மையைத் தெளிவாக உட்படுத்துகின்றன; அவற்றிற்குக் குறிப்பின் சூழல் வேறுபாடு உள்ளது; இதை நாம் குறிப்புடைமையுடன் தொடர்புபடுத்துகின்றோம். எனவே நாம் பின்வரும் உட்படுத்தல் கூற்றுகளிலிருந்து கூடதலாகக் கருதுவதில்லை: 'அந்தச் சிறுமி ஒரு கார் ஓட்டுகிறாள்' என்பது 'அந்தச் சிறுமி ஒரு ஊர்தி ஓட்டுகிறாள்' என்பதை உட்படுத்தும். பின்வரும் உட்படுத்தல் உள்ளது:

(10) 'ராணி ஒரு கார் ஓட்டுகிறாள்' என்பது 'ராணி ஒரு ஊர்தி ஓட்டுகிறாள்' என்பதை உட்படுத்தும்.

இரண்டு பெயர்களும் உடனிலைக்குறிபு கொண்டிருந்தால்தான் உட்படுத்தலுக்கு உத்திரவாதம் தரவியலும்; அதாவது இந்தத் தேற்றக்கூற்றுகள் ஒரே நபரைப்பற்றி இருந்தால் மட்டுமே இது சாத்தியம்:

(10அ) 'ராணி' ஒரு கார் ஓட்டுகிறாள்' என்பது 'ராணி' ஒரு ஊர்தி ஓட்டுகிறாள்' என்பதை உட்படுத்தும்.

ராணி என்பது இந்தக் குணங்களைக் குறிப்புடை பெயர்த்தொடர்களின் மற்றும் மாற்றுப்பெயர்களுடன் பங்கிட்டுக்கொள்வதால், *ராணி* என்பது 'ராணி என்று பெயரிடப்பட்ட ஒருவர்' என்று பொருண்மையியல் அடிப்படையில் எளிதாக வரையறைவிளக்கம்

செய்யப்படுகின்றது. இம்மாதிரியான வரையறை விளக்கம் இயற்பெயர்கள் முரண்பாட்டுப் பொருளைக் கொண்டிருக்கவில்லை என்ற பொதுவான உற்றுநோக்கலை வெளிப்படுத்துகின்றது. (அதாவது அவை பொருண்மைக்கூறு வரையறை விளக்கத்தைக் கொண்டிருக்கவில்லை.) மாறாக பொதுப்பெயர்களான *சிறுமி, புத்தகம்* என்பன பொருண்மைக்கூறு வரையறை விளக்கத்தைக் கொண்டிருக்கும். எனவே ராணி என்ற பெயரை +நபர் +ஆண் என்று அடையாளப்படுத்தவேண்டுமா என்ற ஐயம் எழுகின்றது. ஏனென்றால் ராணி என்ற பெயர் ஒரு பையனுக்கோ ஒரு காருக்கோ ஒரு மலைக்கோ வரலாம்.

அடைசெய்யும் (‘வினையடை’) வினைப்பாடுகளுக்கும் உடனிலைக்குறிப்புக் கொள்கை பொருந்தும்:

(17) ‘(ராஜா.சந்தி <அ/இ’.இடம்.பஸ் நிறுத்துமிடம்>.ராணி)’
ராஜா சந்தித்தான் <பஸ் நிறுத்துமிடத்தில்> ராணியை, அதாவது
‘ராஜா ராணியைப் பஸ் நிறுத்துமிடத்தில் சந்தித்தான்.

இந்நேர்வில் உடநிலைக்குறிப்புத் தொடர்பு தாழ்த்தப்பட்ட வினைப்பாட்டின் குறிப்புடைச் சொல்லுக்கும் முழு முதன்மை வினைப்பாட்டிற்கும் ஆகும். இதைப் பின்வருமாறு வெளிப்படுத்தலாம்:

‘ராஜா ராணியைச் சந்தித்தான். அது பஸ் நிறுத்துமிடத்தில் நிகழ்ந்தது’.

உடனிலைக்குறிப்பு குறிப்புடைப் பண்புக்கூறுக்கும் பங்கெடுப்பாளருக்கும் மட்டுமல்லாமல் குறிப்புடைப் பண்புக்கூறுக்கும் வினைப்பாட்டிற்கும் இடையலும் வரும்.

3.4.5. பூஜிய வெளிப்பாடு

இறுதியாக குறிப்புடை பண்புக்கூறு மொழி வடிவில் மெய்ப்படுத்தம் பெறும் மற்றொரு வழி உள்ளது: இது பூஜிய வெளிப்பாடு ஆகும். நாம் குறிப்புடைமை இல்லாத பொருண்மையின் கூடுதல் சிறப்பின்மையை உருப்படுத்தம் செய்யும் ஒரு பூஜிய பங்கெடுப்பாளர் தொடரியல் வெளிப்பாட்டின் இல்லாமையால் மெய்படுத்தம் பெறுகின்றது என்று பார்த்தோம். இப்போது நாம் குறிப்புடைப் பொருளின் மிகக்கூடதலான சிறப்பின்மையை உருப்படுத்தம் செய்யும் அ/இ என்ற

பண்புக்கூறைக் கொண்ட பங்கெடுப்பாளர் அதேவழியில் மெய்படுத்தம் பெறவியலும் எனப் பார்ப்போம். நாம் 'நான் சேரலாமா?' மற்றும் 'அவன் ஜெயித்தான்' என்ற வாக்கியங்களின் பொருளைக் கருத்தில் கொள்வோம்; சூழலால் உறுதிசெய்ப்படும் தனிமத்தை யாராவது புரிந்துகொள்ளும் செயப்படுபொருளின் இல்லாமை வெளிபடையாகும்; ஒரு குறிப்பிட்ட சூழலில் இந்த வாக்கியங்களைப் பின்வருமாறு பெயர்ப்புரை செய்யலாம்: *நான் கல்லூரியில் சேரலாமா?. அவன் போட்டியில் ஜெயித்தான்.*

3.4.6. **உடனிலைக்குறிப்பும் பொருண்மையும்**

முந்தைய பகுதியில் குறிப்புடைமைப் பற்றிய வாதம் பொருண்மையியலை வேறுபடுத்துவதைப் பற்றிய கேள்வியை எழுப்பியது. குறிப்புடைமையின் பொருள்கோள் சூழல் பற்றிய அறிவையும் குறிப்புபற்றிய அறிவையும் உள்ளடக்கும் எனப் பார்த்தோம். கருத்துரு பொருண்மையியல் எதை மொழியியல் வெளிப்பாடு குறிப்பிடுகின்றது அல்லது எவ்வாறு சூழல் அடிப்படையில் அவை பொருள்கோள் செய்யப்படுகின்றன என்பதை உட்படுத்த இயலாது எனப் பார்த்தோனம். எனவே குறிப்புடைமையை நாம் பொருண்மையியலிலிருந்து வெளிப்படுத்த வேண்டுமா என்பது கேள்வியாகும்.

இதன் விடை நாம் குறிப்புடைமை பற்றிய சிலவற்றை விளக்கவேண்டும் என்பதாகும். நாம் உட்படுத்தலின் அடிப்படைக் கூற்றைக் குறிப்புடைமை எவ்வாறு பாதிக்கிறது என்பதன் வழியை விளக்க வேண்டி 'அந்தச் சிறுமி' என்பதற்கும் 'ஒரு சிறுமி' என்பதற்கும் இடையிலுள்ள முரண்பாட்டை கணிக்கவேண்டும். நாம் உடனிலைக்குறிப்பின் விளக்கத்தைப் பொருண்மையியல் மாதிரியில் உட்படுத்தவேண்டும். இல்லாவிடில் குறிப்புடை வெளிப்பாடுகளைக் கொண்ட தேற்றக்கூற்றுகளுக்கு இடையில் உட்படுத்தல்கள் போன்றவை எந்த கட்டுப்பாடுகளில் வருகிறது என்பதைக் நம்மால் கூறவியலாது போகும். தாழ்மைப்படுத்தல் ஆய்வுக்கும் ஒருபொருள்பன்மொழியம் அல்லாதவற்றின் விளக்கத்திற்கும் உடனிலைக்குறிப்பு தேவை. எடுத்துக்காட்டாக, *ராணி தன்னைத்தானே மெச்சிக்கொண்டாள்* என்பதும் *ராணி அவளை மெச்சினாள்* என்பதும் முந்தையதில் மாற்றுப்பெயருக்கும் எழுவாய்க்கும் உடனிலைக் குறிப்பு இருக்கிறது என்ற அளவில் பொருண்மையியல் அடிப்படையில் வேறுபடும். நாம் குறிப்பின் நிகரனை மட்டும்தான் அடையாளம் காணவேண்டும்; ஒரு வெளிப்பாட்டின் சாத்தியமான நிகரன்களிள் பண்பாக்கத்திற்குக் கொண்டுசெல்லும் களஞ்சிய அறிவுடன் பொருண்மையியல்

மாதிரி தலையிடத் தேவையில்லை. உடனிலக்குறிப்பு பொருண்மையின் பகுதியாகும், ஆனால் குறிப்பு அப்படியல்ல.

எனவே குறிமொழியில் இந்தப் பொருண்மை நோக்கிற்கு முன்னால் அறிமுகம் செய்யப்பட்ட குறிமானம்சார் சேர்கைகள் தேவை: பொருண்மை முதன்மையான அ/இ, உடனிலைக் குறிப்பை அடையாளப்படுத்த ஒரு திறந்த-இறுதிக் குழும முதன்மை அடையாளங்கள்: ', ". "' போன்றவை. பொருண்மையியல் குறிமானம் அ/இ என்ற உடனிலைக்குறிப்பு பல வேறுபட்ட பொருள்கோள்களை வேறுபடுத்துகின்ற நேர்வுகளில் மயக்கமாக உருப்படுத்தம் பெறும்:

(18அ) ராணி' தன் தங்கையிடம் அவள்' புத்தகத்தை எடுத்துவரச் சொன்னாள்.
(18ஆ) ராணி *தன் தங்கையிடம்*" அவள்" புத்தகத்தை எடுத்துவரச் சொன்னாள்.
(18இ) ராணி தன் தங்கையிடம் அவள் புத்தகத்தை எடுத்துவரச் சொன்னாள்.

மேற்கண்ட வாக்கியங்களில் மூன்று மடங்கு உடனிலைக்குறிப்பு மயக்கம் உள்ளது: (18அ)-இல் 'அவள்' என்பது 'ராணி' என்பதுடன் உடனிலைக்குறிப்பு உள்ளது; (18ஆ)-இல் 'அவள்' என்பதுடன் உடனிலைக்குறிப்பு உள்ளது; (18இ)-இல் 'அவள்' என்பதற்கு உடனிலைக்குறிப்பு இல்லை, ஆனால் மொழிக்கு வெளியே ஏதோ மூன்றாம் நபரைக் குறிப்பிடுகின்றது.

உடனிலைக்குறிப்பு பொருண்மையியல் வருணனையின் பாகமாகும் என்பதை வாதிட நல்ல காணம் இருக்கின்றது. பின்வரும் வாக்கியத்தில் (18ஆ)-இல் கண்ட பொருள்கோள்களில் ஒன்று இல்லாமல் போகும்.

(19) ராணி தன் அண்ணனிடம் அவள் புத்தகத்தை எடுத்து வரச் சொன்னாள்

ராணி என்பது *தன்*, *அவள்* என்பனவற்றுடன் உடனிலைக்குறிப்பு உறவு கொண்டுள்ளது. 'அவள்' என்பது 'அண்ணன்' என்பதுடன் உடனிலைக்குறிப்பு உறவு கொள்ளாது; ஏனென்றால் 'அண்ணன்' என்பது +ஆண் என்ற பண்புக்கூறைக் கொண்டிருக்கின்றது. இவ்வாறு உள்ளடங்மொழியம் மற்றும் இணக்கமின்மை என்ற பொருண்மை உறவுகள் பங்கெடுப்பாளர்களுக் இடையே உள்ள உடனிலைக் குறிப்பின் சாத்தியத்தை நேரடியாகக் கட்டுப்படுத்துகின்றன.

அவன் தன்னைத்தானே புகழ்ந்து கொண்டான்

என்பதில் *தன்னைத்தானே* என்பது அவனைக் குறிப்பிடும். பின்வருவது பிழையான வாக்கியமாகும்.

அவள் தன்னைத் தானே புகழ்ந்து கொண்டான்

என்பது தவறாகும்.

3.4.7. காலமும் நேரமும் (Tense and Time)

காலம் வினைப்பாடுகளின் உண்மையாக்கத்தில் பங்களிக்கின்றது: இப்பொழுது என்பதை 'இந்த நேரம்' என்று ஆயும் போது நிகழ்காலம் (இந்த நேரத்தில்) என்பதை <அ/இ.காலம்.அ/இ.அண்மை> என ஆயலாம். இறந்த காலம் நிகழ்வை ஒரு பிந்தைய காலத்தில் நிலைநிறுத்தும். இதைப் பின்வருமாறு உருப்படுத்தம் செய்யலாம்:

<அ/இ' .காலம்.அ/இ"<அ/இ.முன்னர்.அ/இ.அண்மை>>

அதாவது 'இப்பொழுதுக்கும் முந்திய காலத்தில் நிகழ்ந்த' . 'ராஜா ஒரு குதிரையை ஓட்டினான்' என்பது முற்று வினையாற்று வகையைக் கொண்ட 'ராஜா ஒரு குதிரை ஓட்டியிருக்கிறான்' என்பதிலிருந்து வேறுபடும். இதைப் பின்வருமாறு உருப்படுத்தம் செய்யலாம்:

<அ/இ.காலம்<அ/இ.முன்னர்.அ/இ.அண்மை> - அதாவது 'இப்போதிலிருந்து முந்திய காலத்தில் நிகழும்' .

'ராஜா குதிரையை ஓட்டுவார்' என்பதன் எதிர்காலப் பொருள் 'முன்னர்' என்பதன் மறுதலையால் இடம்பெயர்த்து பின்வருமாறு உருப்படுத்தம் செய்யப்படும்:

<அ/இ.காலம் <அ/இ←முன்னர் அ/இ அண்மை>> - அதாவது 'இப்போதிலிருந்து பிந்திய காலத்தில் நிகழும்' .

உடனிலைக்குறிப்பு காலத்தின் பொருள்கோளிலும் வருகின்றது; 'காலங்களின் வரிசை' என்ற மொழியியல் நடத்தை இந்த உண்மையைச் சார்ந்து இருக்கிறது. உட்படுத்தல் உறவுகளை முழுவதுமாகச் சிறப்புரை செய்ய இயலுமாறு வினைப்பாடுகளின் உண்மையாக்கத்தின் தொடக்கநிலைச் சிக்கலை இதன் அடிப்படையில் நேரிடலாம். (6அ)-(7அ) என்பதன் தற்காலிக வாய்ப்பாடுகளை தற்போது பின்வருமாறு குறியீடுசெய்யலாம்:

(6ஆ) (அ/இ' சிறுமி.ஓட்டு<அ/இ".காலம்.அ/இ"' <அ/இ"'.முன்னர்.அ/இ அண்மை>.ஒரு கார்)" 'அந்தச் சிறுமி ஒரு கார் ஓட்டினாள்' என்பது
(7ஆ) (அ/இ' சிறுமி.ஓட்டு<அ/இ".காலம்.அ/இ"' <அ/இ"'.முன்னர்.அ/இ அண்மை>.ஒரு ஊர்தி)" 'அந்த சிறுமி ஒரு ஊர்தி ஓட்டினாள்'

இவற்றில் சொல்லடைவுகள் பொருந்துகின்றன. எனவே இரு தேற்றக்கூற்றுகளும் ஒரே நிகழ்வைக் குறிப்பிடுகின்றன என்று நிச்சயம் செய்யலாம்.

3.4.8. தர்க்க இயக்கிகள் (Logic Operator)

தர்க்க இயக்கிகள் தர்க்கச் சொல்லுக்கும் பொருளடக்கச் சொல்லுக்கும் உள்ள மரபு வேறுபாட்டை வெளிப்படுத்தும் 'இல்லை','அல்லது', 'உண்மை', 'பொய்' என்பன தர்க்க சொற்களாகும். 'மாடு', 'வேலை', 'உயரம்' என்பன பொருளடக்கச் சொற்களாகும். பொருளடக்கச் சொற்களுடன் ஒப்பிடும் போது தர்க்கச் சொற்கள் வரையறை விளக்கம் செய்வதற்கு கடினமானவை ஆகும். நாம் சொற்களை தர்க்க தன்மையானவை பொருடக்க தன்மையானவை என்று பிரிக்கையில் தர்க்கமும் பொருளடக்கமும் கலந்த சொற்களை நேரிடுவோம். அவை பகுதி தர்க்க தன்மையுடையனதாகவும் பகுதி பொருளடக்க தன்மையுடையதாகவும் இருக்கும்.

	தர்க்கத் தனிமம்	பொருளடக்கத் தனிமம்
ஒருபோதும்	எதிர்மறை	+காலம்

எங்காவது	அளவு	+இடம்
யார்	கேள்வி	+நபர்
வா	'இ' தன்மை (குறிப்புடை பொருள்)	+இயக்கம்

'எதிர்மறை' (negation) மற்றும் 'அளவீடு' (qunatification) என்ற கருத்துருக்கள் குறிப்புடைமையைப் போல் வேறுபட்ட தொடர்ச்சியான சொற்களால் பங்கிடப்பட்டுள்ளன. இந்தத் தர்க்க தனிமங்கள் பொருளடக்கத் தனிமங்களைப் போல், அம்மாதிரியான சொற்களின் வரையறைவிளக்கத்தின் ஒரு பகுதியாக இருப்பதால், அவற்றைப் பொருளக்கத் தனிமங்களைப்போல் பொருண்மைக் கூறுகளாகக் கையாளுவது நியாயமானதாகும். இதற்கு ஆதரவாக தர்க்கத் தனிமங்கங்கள் பொருண்மைக்கூறாய்வுடன் ஒப்பிடத்தக்க ஈரிணை எதிர்நிலைகளில் வருவதைக் கூறலாம். எடுத்துக்காட்டாக, 'உண்மை', 'பொய்' என்பவைகளுக்கு இடையே உள்ள உறவு மனிதவினம், -மனிதவினம் என்பனவைகளுக்கு இணையான ஈரிணை வகைப்பாட்டியலாகும். இதுபோன்று 'எல்லா', 'சில' என்ற அளவை அடைகள், 'சாத்தியம்', 'அவசியம்' என்ற வினைநோக்கு இயக்கிகள் அல்லது 'நிலைமாறு' என்பதை 'நிலைத்திரு' என்பதிலிருந்து வேறுபடுத்தும் பண்புக்கூறுகள் என்பன போன்று மறுதலை எதிர்நிலைச் சொற்களாக முரண்படுகின்றன. இந்தத் தர்க்க இயக்கிகளின் முரண்பாடு இணைகளின் வெளிப்படையான விதிவிலக்கு 'அ/இ', 'இல்லை' என்பனவாகும்; இங்கும் 'நேர்மறை' /' எதிர்மறை', 'குறிப்புடைமை' /' குறிப்பில்லாமை' என்ற பொருண்மை முரண்கள் இருக்கின்றன என வாதிடலாம்; இவற்றில் அடையாளப்படுத்தப்பட்ட சொற்கள் தாம் சொல் அடிப்படையில் மெய்படுத்தம் பெற்றுள்ளன. இந்த முரண்படுதன்மை 'பொருளடக்க' பண்புக்கூறுகளுக்கும் 'தர்க்க' பண்புக்கூறுகளுக்கும் இடையில் தொடர்ச்சியைக் காட்டுகின்றன; உண்மையில் இந்த வேறுபாடு தெளிவானதல்ல; ஏனென்றால் சில எதிர்நிலைகள், எடுத்துக்காட்டாக பல வினையடை வகைப்பாடுகளில் உள்ளுறையும் 'காரணம்', 'காலம்', 'இடம்', 'முறை' போன்ற உறவுகள், எதாவது வழியில் 'தர்க்க' மற்றும் 'பொருடக்க' பண்புக்கூறுகளுக்கு இடையில் ஒரு இடைப்பட்ட நிலையைக் கொண்டிருப்பதாகத் தோன்றுகின்றது.

இருப்பினும் இங்கு தர்க்க இயக்கிகள் இயல்பான பொருண்மைக்கூறுகள்சார் வழியில் உருப்படுத்தம் செய்யப்படவில்லை; மாறாக குறிமொழியின் புரிதலைப் பாதுகாக்க அதனுடன் தர்க்க இயக்கிகளை உருப்படுத்தம் செய்யும் பின்வரும் தான்விளக்க குறியீடுகள் சோக்கப்படும்: **இல்லை, மற்றும், அல்லது, எல்லா, என்றால், உண்மை, பொய்** போன்றன.

'தர்க்க இயக்கி' என்ற கலைச்சொல், இந்தப் பொருள் தனிமங்கள் பெரும்பாலும் செயல்படும் இயக்கங்களாகக் (performing operations) கருதப்படுகின்றது என்ற உண்மையைப் பிரதிபலிக்கின்றது. இவை தாம் இயங்குவது எண்களுடன் அல்ல என்பது தவிர எண்கணிதத்தில் கூட்டல், கழித்தல் போன்றவை. ஏதிர்மறை, அளவையாக்கம், வினாவாக்கம் போன்றவை இந்த கருத்தைத் வலியுறுத்துகின்றது மற்றும் மனித மொழியில் இந்த இயக்கிகளின் செயல்பாடு என்ன என்று வினவும்போது முக்கியமான உளவைத் தருகின்றது. இந்த வினாவுக்கான விடை இந்த தனிமங்கள் மனித எண்ணத்தின் சக்தியை மிகப்பெரிய அளவில் அதிகரிக்கின்றது என்று தோன்றுகின்றது. ஏனென்றால் அவை பொருண்மை உள்ளடக்கத்தின் வகைப்பாடுகளையும் உறவுகளையும் வெளிப்படையாக நாம் கையாள உதவும் கருவிகள் ஆகும்; அவை உண்மையின் ஒழுங்குபடுத்தும் கருத்துருவைப் பயன்படுத்தி அனுபவத்தை விளக்க மட்டுமல்லாமல் அனுபவத்தின் சாட்சியிலிருந்து அதை மதிப்படவும் அதைப் பற்றி வாதிடவும் அதிலிருந்து முடிவைப் பெறவும் நம்மை இயலவைக்கின்றது.

எனவே தர்க்க இயக்கிகளுக்கும் பொருண்மைக்கூறு-வினைப்பாடு ஆய்வின் வகைப்பாடுகளுக்கும் இடையில் குறிப்பிடத்தகுந்த பொருத்தங்கள் இருக்கின்றன என்பது ஆச்சரியப்படத்தக்கதல்ல. எடுத்துக்காட்டாக, *என்றால்* என்பது உட்படுத்தல் கருத்துச்சாயலுடன் பொருந்தும்: X என்ற ஒரு தேற்றக்கூற்று Y என்ற மற்றொரு தேற்றக்கூற்றை உட்படுத்தினால், கூட்டுத் தேற்றக்கூற்று X→என்றால் Y என்பது வரையறை விளக்கத்தால் உண்மையாகும்:

(22) 'ராஜா' புத்தகங்கள் எழுதுகிறான்' என்பது 'அவன்' புத்தகங்கள் எழுதுகிறான் என்பதை உட்படுத்தும். எனவே 'ராஜா' புத்தகங்கள் எழுதுகிறான்' என்றால் 'அவன்' எழுதுகிறான் என்பது கூறியது கூறல்.

இதுபோல் **இல்லை** இயைபின்மையுடன் பொருந்தும்; **மற்றும், அல்லது** என்பன முறையே பொருண்மைக்கூறாய்வின் இணைப்பு மற்றும் முரண் அச்சுக்களுடன் பொருந்தும்; **உண்மை** கூறியதுகூறலுடன் பொருந்தும்; **பொய்** முரண் என்பதுடன் பொருந்தும்.

3.4.8.1 எதிர்மறை இயக்கி **இல்லை**

ஏந்த X என்ற நேர்மறைத் தேற்றக்கூற்றிற்கும் எதிர்மறைத் தேற்றக்கூற்று (இல்லை:(X) என்பதை ஆக்கவியலும். எதிர்மறை தேற்றக் கூற்றில் **இல்லை** (X)–ஐ ஆளுமை செய்யும் ஓரிடப் பயனிலையை உருவாக்கும். **இல்லை** என்பதன் தர்க்க விதிகள் பின்வருவனவாகும்:

(அ) (X) என்பது (இல்லை:(X) என்பதுடன் இசைவற்ற நிலையில் இருக்கிறது:

எ.கா.

'இந்தக் கத்திகள் யாவும் கூர்மையானது' என்பது 'இந்தச் கத்திகள் யாவும் கூர்மையற்றது' என்பதுடன் இசைவற்ற நிலையில் இருக்கிறது.

(ஆ) (X) ஒரு கூறியது கூறல் என்றால், (இல்லை:(X)) என்பது முரண் ஆகும்.

எ.கா.

ஆப்பிள்கள் எல்லாம் பழங்கள் ஆகும் என்பது கூறியது கூறல். எனவே 'ஆம்பிள்கள் எல்லாம் பழங்கள் ஆகும்' என்பது முரணாகும்.

(இ) மறுதலையாக, (X) ஒரு முரண் என்றால், **இல்லை** (X)) என்பது கூறியது கூறல் ஆகும்.

எ.கா.

'ஆப்பிள்கள் யாவும் விலங்குகள்' என்பது முரண் ஆகும், எனவே 'ஆப்பிள்கள் யாவும் விலங்குகள் அல்ல' என்பது கூறியது கூறலாகும்.

(ஈ) (இல்லை:(இல்லை:(X) என்பது (X) உடன் ஒரு பொருள்பன்மொழியில் உறவுள்ளது.

தீர்மானமாகக் கூறினால் **இல்லை** என்பது ஒரு பயனிலை அல்ல; பயனிலையின் பண்புக்கூறாகும். இதைக் காட்ட நாம் மேலும் ஒரு பொருண்மை எதிர்நிலையைக் குறிப்பிட வேண்டியுள்ளது: 'அடி', 'பேசு', 'வழி', 'மாறு', 'விளைவி' என்ற நிகழ்வுகளுக்கு இடையே உள்ளவை மற்றும் 'செழிப்பாயிரு', 'வயோதிகமாயிரு', 'உறங்கு', 'கொண்டிரு' என்ற நிலைமைகளுக்கு இடையே உள்ளவை. இந்த வேறுபாடு வினை மற்றும் பெயரடை பொருள்கள் வழிச் செல்லும்; இது பெயர்களை 'எண்ணவியலுபவை', 'எண்ணவியலாதவை' என்று வேறுபடுத்துவது போன்றது. *மேசை, சிறுமி, வீடு* போன்ற எண்ணவியலும் பெயர்கள் இட எல்லைகளைக் கொண்ட இருப்புப்பொருள்களைக் குறிப்பிடுவது போல், நிகழ்வு வினைகளும் கால எல்லைகளைக் கொண்ட நிகழ்வுகளைக் குறிப்பிடுகின்றன. எனவே பன்மைக் கருத்துரு இரண்டிலும் பயன்படுத்தப்படுகின்றது: எண்ணவியலும் இருப்புப்பொருள்கள் ஒரு குபவை உருவாக்கும்; நிகழ்வுகள் தொடர்வரிசையை உருவாக்கும். நிலை/நிகழ்வு முரணை

எண்ணவியலுவது அல்லது **-எண்ணவியலாதது** என்ற பண்புக்கூறைப் பயனிலைகளுடன் சேர்த்து உருப்படுத்தம் செய்யலாம்.

ஒரு நேர்மறை நிகழ்வை எதிர்மறைபடுத்தினால், அது ஒரு நிலையாக மாறும்: எடுத்துக்காட்டாக, 'ராஜா வேலைசெய்யத் தொடய்கினான்' என்பதை எதிர்மறைப்படுத்தினால் அது 'ராஜா வேலைசெய்யத் தொடங்கவில்லை' என்று மாறும். அதாவது 'ராஜா வேலைசெய்யாத நிலையில் இருந்தான்' என்று பொருள்படும். எனவே இல்லை என்பது – எண்ணவியலாதது என்ற பண்புக்கூறுடன் சேர்க்கப்படுகின்றது.

(25)



{ 'ராஜா வேலைசெய்யத் தொடங்கினான்' .
'ராஜா வேலையைத் தொடங்கினான்' .

(26)





{'ராஜா வேலைசெய்யத் தொடங்கவில்லை' .
'ராஜா வேலையைத் தொடங்கவில்லை' .

ஆனால் 'ஒன்பது மணிவரை' என்ற வினைப்பாடு (25)-இலும் (26-இலும் சேர்க்கப்பட்டால், ஒன்று ஏற்றுக்கொள்ள இயலாதாகும்.

(25அ) *' ராஜா ஒன்பது மணிவரை வேலையைத் தொடங்கினான்' .

(26அ) 'ராஜா ஒன்பதுமணிவரை வேலையைத் தொடங்கவில்லை' .

நேர்மறை, எதிர்மறை கட்டுமானங்களுக்கிடையே உள்ள சமமின்மை என்ன என்பது கேள்வியாகும். 'வரை' என்பது கால அளவின் பின்னுரபாகும்; இது 'ஒரு கால அளவு நீடித்து x என்ற நேரத்தில் இறுதியுறும்' எனப் பொருள் தரும். கால அளவு என்பது நிலைகளின் பண்பு; நிகழ்வுகளின் பண்பல்ல. அதாவது **நீடி** என்ற பயனிலை அதன் தொடக்கச் சொல்லாக [-எண்ணவியலுவது] என்ற பண்புக்கூறைக் கொண்ட ஒரு பயனிலையை வேண்டும். கீழே வரும் படம் காட்டுவதுபோல் இந்தக் கட்டுப்பாடு (26)-இல் உள்ள எதிர்மறை பயனிலையால் நேர்செய்யப்படுகின்றது; (25)-இல் உள்ள நேர்மறை பயனிலையால் நேர்செய்யப்படவில்லை.



3.4.8.2. மற்றும், அல்லது இயக்கிகள்



இரண்டு சமநிலைக்கட்டு இயக்கிகளுக்கு இடையில் ஒரு வகையான எதிர்நிலை இருக்கிறது. அவை *மற்றும்*, *அல்லது* என்பனவாகும். அவைகள் 'சாத்தியம்/அவசியம்' என்ற மறுதலை எதிர்நிலைகளின் உறுப்பினர்களை ஒக்கும். மறுதலை எதிர்நிலையின் வேறுபடுத்தும் பண்பு என்னவென்றால் அவை ஒரு சிறப்பான நிகர் உறவில் வருகின்றன என்பதாகும். இதனால் ஒரு பண்புக்கூறை மற்றொன்றால் இடம் பெயர்ப்பது ஒருபொருள் பன்மொழியத்தைத் தக்க வைக்கும். இந்த நிகர் உறவை (≡ என்ற குறியீட்டை ஒருபொருள் பன்மொழியத்திற்கும் பயன்படுத்தி) முறையாகக் கூறவியலும்.

(27) (இல்லை:(▲சாத்தியம் (X) ≡ (▼சாத்தியம்: (இல்லை):X))

(இல்லை:(▼சாத்தியம் (X) ≡ (▲சாத்தியம்: (இல்லை:X))

எ.கா.

'ராணி தூங்குகிறாள் என்பது சாத்தியமில்லை' ≡ 'இராணி விழித்திருக்கிறாள் என்பது அவசியம்'

அல்லது எளிமையாக வெளிப்படுத்தினால்:

'ராணியால் தூங்க இயலவில்லை' ≡ 'ராணி விழித்திருந்திருக்கவேண்டும்'

'மற்றும்', 'அல்லது' என்பனவற்றிற்கு இதே மாதிரியான விதி செயல்படும். ஆனால் இம்முறை 'எதிர்மறை' இரண்டு துணைநிலை வினைப்பாடுகளிலும் மாற்றப்படுகின்றது:

(28) (இல்லை:(X).அல்லது.(Y))) ≡ இல்லை (X))).மற்றும்.(இல்லை:(Y)))

(இல்லை:(X)மற்றும்.(Y))) ≡ (இல்லை:(X)).அல்லது.(இல்லை:(Y)))

இந்த துணைநிலைவருகைமுறை செய்யும் விதிகளில் முதலாவதை எடுத்துக்காட்ட, சந்தேகிக்கப்படுபவர் இரு குற்றச்சாட்டுகளையும் மறுக்கும் திடமான சூழலை எண்ணவியலும்:

(31) 'நான் ஜன்னலை உடைக்கவில்லை, மற்றும் நான் பணத்தைக் திருடவில்லை.
சந்தேகிக்கப்படுபவர் 'அல்லது' என்பதைப் பயன்படுத்தி இரு குற்றச்சாட்டுகளையும் மறுக்கவியலும்:

(31) 'நாம் ஜன்னலை உடைக்கவோ அல்லது பணத்தைத் திருடவோ இல்லை.

இச்சூழலில் போலிஸ் ஒரு நபர் இரு குற்றங்களையும் செய்யவில்லை என்று கண்டுபிடித்தருந்தால், அவர் பின்வரும் கூற்றறைச் செய்வர்:
(31) அவன் ஜன்னலை உடைப்பதையும் மற்றும் பணம் திருடுவதையும் செய்வில்லை.

மற்றும் அல்லது என்பன பரஸ்பர பயனிலைகளாகும். இவை பின்வரும் விதிகளைப் பெறும்.

(33) ((X).மற்றும் (Y))≡ ((Y).மற்றும்.(X))
(34) (X) அல்லது (Y)) ≡ ((Y).அல்லது.(X))

மற்றும், அல்லது என்பன பொருண்மையியல் அடிப்படையில் கலவைத் தன்மையான பயனிலைகள் ஆகும்: அவைகள் இணைப்புக்கிளவி என்ற பரஸ்பர உறவைப் பங்கிட்டுக் கொள்ளும். அவை மறுதலை விகிதத்தைப் போன்று எதிர்நிலை அடிப்படையில் முரண்படும்.

சமநிலை இணைப்புடன் தொடர்புடைய கூடுதலான விதிகள் பின்வருவனவாகும்:

(அ) ((X). மற்றும்.(Y)) (X)-ஐ உட்படுத்தும்.
எ.கா.
'ராஜா கால்பந்து போட்டிக்குச் சென்றான் மற்றும் ராணி கால்பந்து போட்டிக்கு சென்றாள்' என்பன 'ராஜா கால்பந்து போட்டிக்குச் சென்றான்' என்பதை உட்படுத்தும்.
(ஆ) ((X) என்பது ((X).அல்லது.(Y))-ஐ உட்படுத்தும்.
எ.கா.

'ராஜா கால்பந்து போட்டிக்குச் சென்றான்' என்பது 'ராஜா கால்பந்து போட்டிக்குச் சென்றான் அல்லது 'ராணி கால்பந்து போட்டிக்குச் சென்றாள்' என்பதை உட்படுத்தும்.

(இ) ((X) மற்றும்.(இல்லை:(X)) என்பது முரண்.

எ.கா.

'ராஜா திருமணம் ஆனவன் மற்றும் ராஜா திருமணம் ஆனவன் இல்லை' என்பது முரண்.

(ஈ) ((X).அல்லது.(இல்லை:(X)) என்பது கூறியது கூறல்.

எ.கா.

'ராஜா திருமணம் ஆனவன் அல்லது ராஜா திருமணம் ஆகாதவன்' என்பது கூறியதுகூறல்.

சமநிலை இணைப்புடன் தொடர்புடைய பல சிக்கல்கள் உள்ளன. குறிப்பாக சமநிலை இணைப்பு தேற்றக் கூற்றுகள் இரண்டுக்கு மேற்பட்ட கூற்றுகளைக் கொண்டிருக்கும்.

3.4.8.3. *எல்லா* மற்றும் *சில* என்ற அளவடைகள்

இருப்பு அளவடையான **சில** என்பதும் உலகளாவிய அளவடை **எல்லா** என்பதும் மறுதலை எதிர்நிலை என்ற முரண்பாடு வகையில் வரும். இது பின்வரும் நிகர்களிலிருந்து வெளிப்படும். இது 'சாத்தியம்' மற்றும் 'தேவை' என்பவைகளுக்கு இணையானவை.

(35) எல்லா நோயாளிகளையும் குணப்படுத்த இயலாது ≡ சில நோயாளிகளைக் குணப்படுத்த இயலும்.

(36) யாரும் உண்மையானவர் இல்லை ≡ எல்லோரும் உண்மையானவர் இல்லை.

(35)-இல் எடுத்துக்காட்டப்பட்டுள்ள பொது விதியைப் பின்வருமாறு உருப்படுத்தம் செய்யலாம்:

(35அ) (இல்லை: (a.எல்லா (a:P))) ≡ (a.சில.(இல்லை: (a:P)))

(36) பின்வரும் பொது வடிவின் மறுதலை நிகரை எடுத்துக்காட்டும்:

(36அ) (இல்லை:(a.சில.(a:p))) ≡ (a.எல்லா.(இல்லை:a:P)))

அளவடைகளைப்பற்றிய ஒன்றோ இரண்டோ உண்மைகளைக் குறித்து விளக்கம் தரவேண்டியுள்ளது. முதலாவதாக, மற்றும், அல்லது என்ற அளவடைகள் பொருண்மையியல் அடிப்படையில் கலவைத்தன்மையானவை; அவை தொடர்புள்ள பண்புக்கூறைத்தான் மறுதலை எதிர்நிலையின் ஒரு பண்புக்கூறுடன் சேர்க்கின்றது. அவற்றை குறியீடு செய்யும் முழு வழி பின்வருவதாகும்:

(41) சில

→அளவையாக்கு
▲சில

எல்லா

→அளவையாக்கு
▼சில

உள்ளடக்குச் சொற்களை வரையறை விளக்கம் செய்ய 'சில' என்பதுடன் கூடுதல் பண்புக்கூறகளைச் சேர்க்கவேண்டும்: பல, கொஞ்சம், நிறைய, மற்றும் எண்கள், இரண்டு, மூன்று போன்றவை.

(42)

பல

→அளவையாக்கு
▲சில
-ஒருமை
↑தொகை

கொஞ்சம்

→அளவையாக்கு
▲சில
-ஒருமை
↓தொகை

நிறைய

→அளவையாக்கு
▲சில
-எண்ணவியலுவது
↑தொகை

மூன்று

→அளவையாக்கு
▲சில
-ஒருமை
3 எண்ணிக்கை

a என்ற குறியீடு இரண்டு பங்கெடுப்பாளர்களில் வத்தால், இதே பண்புக்கூறுகளின் குழுமம் இரு இடங்களிலும் வரும். இம்மாதிரியான பொருண்மை நிகரன்கள் அளவையடைகளுடக் சேர்ந்துவரும்:

(43) (a.சில.(a.P.b) 'சில சிறுமிகள் ஆசிரியர்களை விரும்புகிறார்கள்.

(a.எல்லா.(a.P.b) 'எல்லாச் சிறுமிகளும் ஆசிரியர்களை விரும்புகிறார்கள்.

இரு பங்கெடுப்பாளர்களுக்கு இடையே உள்ள உறவு உடனிலைக்குறிபாக இருக்கத் தேவையில்லை: (43)-ஐ (a'.சில.(அ/இ' .P.b) என்று ஆய்வது தவறு. பின்வருமாறு உருப்படுத்தம் வரும்:

(45) (a' .சில.(அ/இ' .விரும்பு.அ/இ')) 'சில சிறுமிகள் தங்களைத் தாமே விரும்புகின்றனர்

(43) மற்றும் (44)-இல் இரு a ஆகக் குறியீடு செய்யப்பட்டுள்ள இரு பங்கெடுப்பாளர்களுக்கிடையில் வேற்றுமை இருக்கின்றது. இந்த அளவில் வாய்ப்பாடு முபமையற்றது. பங்கெடுப்பாளர்களில் ஒன்று சிறுமிகளைத் தொகுதியாக குறிப்பிடுகின்ளது மற்றும் வேறொன்று சிறுமிகளை தனித்தனியாகக் குறிப்பிடுகின்றது.

(43அ) (a. சில.(a. P.b)

[குழுமம்] [-குழுமம்]

3.4.9. அளவை அடைகள், அடிப்படை கூற்றுகள், மெய்மையாக்கம்

உட்படுத்தத்தின் திசை ஒரு பங்கெடுப்பாளர் சிறப்புப் பொருளைத் தருகின்றதா பொதுப் பொருளைத் தருகின்றதா என்பதைப் பொறுத்து அமையும். எடுத்துக்காட்டாக,
(48) காவலர் துப்பாக்கிகளை ஏந்தியுள்ளார் என்பது காவலர் ஆயுதங்களை ஏந்தியுள்ளார் என்பதை உட்படுத்தும்.
(49) ஆயுதங்கள் அனுமதிக்கப்படுவதில்லை என்பது துப்பாக்கி அனுமதிக்கப்படுவதில்லை என்பதை உட்படுத்தும்.

அளவையடைகளான **சில** மற்றும் **எல்லா** என்பன பங்கெடுப்பாளர்களின் சிறப்பு மற்றும் பொது அர்தங்களுடன் பொருந்தும். ஆனால் அவை இப்பொருண்மைகளை வெளிபடையாகவும் உறுவதியாகவும் செய்கின்றன. எனவே உட்படுத்தல் விதியை அளவையடைகளுக்குக் கூடுதல் துல்லியாமாகக் கூறவியலும்:

(50) 'எல்லா ஆயுதங்களும் தடைசெய்யப்பட்டுள்ளன' என்பது 'எல்லா துப்பாக்கிளும் தடைசெய்யப்பட்டுள்ளன' என்பதை உள்ளடக்கும்.

(51) 'காவலாளிகள் சில துப்பாக்கிகளை வைத்திருக்கின்றனர்' என்பது 'காவலாளிகள் ஆயுதங்களை வைத்திருக்கின்றனர்' என்பதை உள்ளடக்கும்.

மேலும் அரிஸ்டாட்டில் தர்க்கத்தின் மரபு முக்கூற்றுமுடிவை (syllogisms) அளவையடைகள், இணைப்புகள் மற்றும் குறிப்புடை இயக்கி அ/இ என்பனவற்றை உள்ளடக்கிய உட்படுத்தல் எனக்கருதவியலும்.

{ (அ) 'எல்லா இளம்பருவத்தினரும் நடிகர்களை விரும்புகிறார்கள்' மற்றும்
'அடுத்த வீட்டுப் பெண் ஒரு இளம்பருவத்தினள்'
(ஆ) 'அடுத்த வீட்டுப் பெண் நடிகர்களை விரும்புகிறாள்'

இருப்பினும் இந்த விதிகள் உருவாக்கத்தில் மேலும் செல்வது காலவிரயமாகும்.

3.4.10. சுருக்க உரை

மனித எண்ணமும் மனித கருத்துப் பரிமாற்றமும் பொருள்களைப் பற்றியும் வடிவங்களைப் பற்றியும் தெளிவுற்று மற்றும் தெளிவாகப் பேசுபவர்களைக் கொண்டுள்ளன. இந்த இயலில் தமிழ்வழி, இயற்கை தர்க்கத்தின் பண்புநலன்களை வெளிப்படுத்தும் முறை ஆயப்பட்டுள்ளது. எவ்வாறு கருத்துருப் பொருண்மையியல் அடிப்படைக் கூற்றுக்களை ஆயப் பயன்படுகின்றது என விளக்கப்பட்டுள்ளது. மேலும் உட்படுதல், கூறியது கூறல், முரண் என்பதன் மாதிரி விதிகள் தரப்பட்டுள்ளன.

3.5. பொருண்மையியலும் தொடரியலும்

மொழியை (Wallace Chafe தமது Maning and the Structure of Language என்ற நூலில் விளக்கியது போல்) "பொருண்மை உலகத்தையும் ஒலி உலகத்தையும் மிக கலவைத்தன்மையான முறையில் இணைக்கும் ஒரு அமைப்பொழுங்கு' என விளக்கலம். முன்னர் கூறப்பட்ட பகுதிகளில் மொழியின் பொருண்மை, குறிப்பாக வாக்கியங்களின் கருத்துரு உருப்படுத்தம் விளக்கப்பட்டது. ஒரு பொருண்மையியல் கோட்பாடு உண்மையில் முழுமையான

மொழியியல் கோட்பாட்டின் துணைக் கோட்பாடாகும். பொருண்மையியல் ஆய்வு, ஒரு கூற்றின் பொருண்மை உருப்படுத்தத்தின் உறவை பிற மட்டங்களில், குறிப்பாக தொடரியல் மட்டத்தில் அதன் உருப்படுத்தத்துடன் இணைத்து விளக்கவேண்டும். இதன்படி எந்தப் பொருண்மையியல் உருப்படுத்தங்கள் எந்த வாக்கியங்களைச் சார்ந்தவை என்பதைக் காட்டவியலும். இதனால் இறுதியாக மொழி எவ்வாறு ஒரு கருத்துருசார் கருத்துப்பரிமாற்ற ஒழுங்குமறையாக (Conceptual communication system) வேலைசெய்கின்றது – அதாவது கருத்துக்களின் அமைப்பை ஒலிகளாலோ காகிதத்தின் மீது குறிகளாகலோ பரப்புவதற்கு – என்பதைக் காட்டவியலும்.

3.5.1 மொழியியல் மட்டங்கள்

மொழியியல் மொழியாய்விற்கு ஒன்றிற்கும் மேற்பட்ட மட்டங்களை வேண்டுகின்றது. இருப்பினும் எந்த மட்டங்களைக் கருத்தில் கொள்வேண்டும் அவை எவ்வாறு புரிந்துகொள்ளப்படவேண்டும் என்பன விவாதத்திற்குரியன. மரபாக மொழி மூன்று முக்கியமான மட்டங்களில் ஆயப்படவேண்டும் என்று கருதப்படுகின்றது: பொருண்மையியல், தொடரியல், ஒலியனியல். இருப்பினும் இந்த மூவகைப் பிரிவினை கூடு பல வழிகளில் ஒரு எளிமையாக்கமாகும். மரபாக மற்றொரு பிரிவினை முன்னர் செய்யப்பட்ட பிரிவினையின் குறுக்காகச் செய்யப்பட்டுள்ளது: இலக்கணம் மற்றும் அகராதி (சொற்களஞ்சியம்). ஒரு மொழியின் அகராதி மொழியின் ஒரு குறிப்பிட் எல்லா உண்மைகளின் பட்டியலாகப் பண்பாக்கம் செய்யப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக ஆடவர் என்ற குறிப்பிட்ட ஒலிகளின் வரிசை +மனிதவினம் + வயதுக்குவந்த + ஆண் என்ற பொருளை வெளிப்படுத்துகின்றது.

மொழி மட்டங்களின் நிலைகள் பற்றி முந்தைய படத்தைப் பின்வருமாறு சிறிது எளிய முறையில் பின்வருமாறு தரலாம்:



புலனறிவுசார் உள்ளீடு/வெளியீடு

3.5.2 பொருண்மையியல் மற்றும் தொடரியல் நல்வடிவமாக்கம்

பொருண்மையியலுக்கும் தொடரியலுக்கும் அவைகளுக்கான நல்வடிவமாக்கக் கட்டுப்பாடுகள் உள்ளன. கருத்தில் கொள்ளப்படவேண்டிய எளிய தமிழ் வாக்கியங்களின் முக்கிய உறுப்புகள் பின்வருவனவாகும்:

பெயர்த்தொடர் (பெபொ): எ.கா. எனது நல்ல நண்பன், அங்கு நிற்கிற அழகான பெண், அவன், அவர், ராஜா, ராஜாவின் தந்தை.
வினைத்தொடர் (விதொ): எ.கா. மாணவன், மாணவன் ஆவான், வரவில்லை, வந்துகொண்டிருக்கிறான்.
பெயரடை அல்லது பெயரடைத்தொடர்: எ.கா. நல்ல, மிக நல்ல
வினையடை அல்லது விடையடைத்தொடர்: எ.கா. விரைவாக, மிக விரைவாக

பெயர்த்ததொடர் எழுவாயாகவோ செயப்படுபொருளாகவோ பயனிலையாகவோ வரலாம்,

ராஜாவின் தந்தை அங்கு நிற்கிற அழகாப் பெண்ணைப் பார்த்தார்

எழுவாய் விதொ செயப்படுபொருள்

தொடரியல் உறுப்புகளுக்கும் பங்கெடுப்பாளர் மற்றும் பயனிலைகள் என்ற பொருண்மையியல் தனிமங்களுக்கும் நேரடியான பொருத்தம் இருகின்றது. அவற்றில் முக்கியமான தொடர்புகள் பின்வருவனவாகும்:

தொடரியல்		**பொருண்மையியல்**
பெயர்த்தொடர்	↔	பங்கெடுப்பாளர்
வினைத்தொடர்	↔	முயனிலை

பெயரடை (தொடர்)	↔	ஓரிடப் பயனிலை
முன்னுரபுத் தொடர்	↔	தாழ்த்தப்பட்ட வினைப்பாடு
பெயரெச்சத் தொடர்	↔	தாழ்தப்பட்ட சிறப்புசெய்யும் வினைப்பாடு
வினையடை, வினையடைத் தொடர் அல்லது எச்சத்தொடர்	↔	தாழ்த்தப்பட்ட அடைசெய்யும் வினைப்பாடு அல்லது பயனிலை + பங்பெடுப்பாளர் (துணைநிலை வினைப்பாட்டுடன் தொடர்புபடுத்தப்பட்ட)
பின்னுருபு	↔	பயனிலை
இணைப்பான்	↔	பயனிலை (பயனிலைகளான இரு சொற்களும்)
பெயர்ப் பெருந்தொடர் (அதாவது பெயர்த்தொடராகச் செயல்படும் பெருந்தொடர்)	↔	துணைநிலை வினைப்பாடு
பெயராக்கம் (அதாவது வினையிலிருந்தோ பெயரடையிலிருந்தோ ஆக்கப்பட்ட அருவப் பெயரைத் தலையாகக் கொண்ட பெயர்த்தொடர்)	↔	துணைநிலை வினைப்பாடு

3.5.3 வெளிப்பாடு விதிகளில் உள்ள செயல்பாடுகள்

தொடரியலும் பொருண்மையியலும் இரண்டு சுதந்திரமான அமைப்புகளும் முரண்பாடுகளும் கொண்ட மட்டங்கள் என்பது எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. ஒரு மொழியியல் கோட்பாடு ஒவ்வொரு மொழிக்கும் பின்வருனவற்றைக் கூறவேண்டும்:

(அ) ஒரு குழும நல்வடிவாக்க பொருண்மை உருப்படுத்தங்கள்
(ஆ) ஒரு குழும நல்வடிவாக்க தொடரியல் உருப்படுத்தங்கள்
(இ) பொருண்மையியல் உருப்படுத்தத்தைத் தொடரியல் உருப்படுத்தத்துடன் பொருத்தும் விதிகள் (வெளிப்படுத்த விதிகள்)

இந்த திட்டத்தில் நாம் மூன்றுவிதமான சீரின்மைகளைக் கணிக்கின்றோம்:

(1) பொருண்மையியல் அடிப்படையில் சீரற்றவடிவமாக்கப்பட்ட ஆனால் தொடரியல் அடிப்படையில் நல்வடிவமாக்கப்பட்ட கூற்றுகள்:

எ.கா. *ராஜா தன்னைவிடப் படித்தவன்.

(2) தொடரியல் அடிப்படையில் சீரற்ற வடிவமாக்கப்பட்ட ஆனால் பொருண்மை அடிப்படையில் நல்வடிவமாக்கப்பட்ட கூற்றுகள்:

எ.கா. *ராஜா தன் சகோதரனைவிட படித்தவர்கள்.

(3) பொருண்மையியல் மற்றும் தொடரியல் அடிப்படையில் சீரற்றவடிவமாக்கப்பட்டவை:

எ.கா. *ராஜா தன்னைவிட படித்தவர்கள்.

ஒரு சொல்லின் அர்த்தம் (அதாவது அதன் அகராதி வரையறை விளக்கம்) பொதுவாகத் தாழ்த்தப்பட்ட வினைப்பாடுகளை உள்ளடக்கும் பொருண்மைப் பண்புக்கூறுகளின் ஒரு தனி குழுமமாக உருப்படுத்தம் செய்யப்படலாம். எடுத்துக்காட்டாக *கொல்* என்ற வினையை 'செய்...மாறு...இற' என்ற மூன்று பயனிலைகளால் விளக்கலாம். 'ராணி ஒரு வண்ணத்துப்பூச்சியைக் கொன்றாள்' என்ற வாக்கியத்தைப் பின்வரும் தோராயமான பொருண்மையியல் உருப்படுத்தால் விளக்கலாம்:



(எழுவாய்) (செயப்படுபொருள்) (வினைத் தொடர்)

பெரும்பான்மையான சொற்களை ஒரு தனிப் பண்புக்கூறுக்கோ ஒரு குழுமப் பண்புக்கூறுகளுக்கோ கட்டுப்படுத்துவது கருதத்தக்க அளவு அமைப்புக் கலவைத்தன்மையிலிருந்து தடை செய்வதில்லை. ஏனென்றால் தாழ்த்தப்பட்ட வினைப்பாடுகளான

பண்புக்கூறுகள் அவைகளாகவே துணைநிலை மற்றும் தாழ்த்தப்பட்ட வினைப்பாடுகளை கொண்டிருக்கின்றன.

தொடரியல் கலவைத்தன்மையின் குறைப்பு பூஜிய வெளிப்படுத்தம் (நீக்குதல், விட்டுவிடுதல்) முலமோ மாற்றுப்பெயர்கள் போன்ற பதிலீடு வடிவுகளைப் பயன்படுத்துவதாலோ நிறைவேற்றப்படுகின்றது. பூஜிய வெளிப்பாட்டைப் பெறும் முன்றுவகையான பொருண்மைத் தனிமங்கள் பின்வருவன ஆகும்: பூஜிய பங்கெடுப்பாளர், குறிப்புடை இயக்கி, மற்றும் பிற தனிமங்களின் பொருளடக்கத்தை மீண்டும் கூறும் தனிமங்கள். இந்த இறுதி நடத்தை இணைப்பொருண்மை (cosemy) எனப்படும்.

சமநிலை இணைப்புக் கட்டுமானங்களை கருத்தில் கொள்ளவும். பொருண்மையியல் அடிப்படையில் அம்மாதிரியான கட்டுமானங்கள் இரு வினைப்பாடுகளை இணைப்பதாகப் புரிந்துகொள்ளப்பட்டாலும் தொடரியல் அடிப்படையில் விட்டுவிடல் (ellipsis) தொடர் போன்ற சிறிய உறுப்புகளின் சமநிலை இணைப்புகளாக குறைக்கின்றது:

அறையில் ஒரு மேஜையும் நாற்காலியும் இருக்கிறன்றது.

இது பின்வரும் உள்ளுறையும் பொருண்மை அமைப்பைக்கொண்டிருக்கும்:

((அ/இ அறை′ .←இல்.மேஜை).மற்றும்.(அ/இ′ .இல்.நாற்காலி)

'அறையில் ஒரு மேஜை இருக்கின்றது மற்றும் அறையில் ஒரு நாற்காலி இருக்கின்றது′ .

இருப்பினும் இரண்டாவது வினைப்பாட்டின் பங்கெடுப்பாளரும் முறையே பயனிலையும் குறிப்புடைமையாகவும் இணைப்பொருண்மையாகவும் இருந்தாலும் அவைகளுக்குப் பூஜிய பெளிப்பாடு தரப்பட்டுள்ளது.

வெளிப்பாட்டு விதியால் செயல்படுத்தப்படும் முன்றாவது செயன்மை (வாலஸ் சேப்பின் கலைச்சொல்லைப் பயன்படுத்தினால்) வரிசைப்படுத்தம் (linearization) ஆகும். இது பொருண்மையியல் உருப்படுத்தங்களைத் (இது வலதிலிருந்து இடது அல்லது முதலிருந்து அடுத்தது என்ற வரிசை ஒழுங்குமறையைப் பொறுத்த அளவில் தீர்மானிக்கப்படாததாகக்

கருதப்படுகின்றது) தவிர்க்கவியலாத காலக்கட்டுண்ட (time bound) செய்தியின் ஒலியியல் கடத்தலுக்குப் பொருத்தமான முழுமையான வரிசை வடிவில் மாற்றியமைப்பதாகும். சே.ஃப்ால் பயன்படுத்தப்பட்ட பொருண்மை அமைப்பின் உருவம் தொடரியல் அமைப்பிற்குப் பொருத்தமான இருபரிமாண அமைப்பிலிருந்து வேறுபட்ட சுதந்திரமாகச் சுழலக்கூடிய கிளைகளின் ஒரு 'நகர்வு (mobile) அமைப்பாகும்' . பொருண்மை அமைப்பில் ஒழுங்குமறையின் ஒரே சுட்டிக்காட்டி ஒத்தறி பயனிலைகளைச் சார்ந்த திசை அம்புக்குறியாகும்; இதனால் 'அ என்பது ஆ-விற்கு மேலானது' மற்றும் 'அ என்பது ஆ-விற்குக் கீழானது' என்பனவற்றின் பொருண்மைகள் வேறுபடுத்தப்படுகின்றன. இதன் விளைவாக ஒவ்வொரு பயனிலையும் அதன் சொற்களைச் சுழலச்செய்யும் ஒரு சுழலச்சாகக் கையாளப்படுவதால் வேறுபட்ட இருபரிமாணப் படங்கள் கிடைக்கும்.

(6)



(7)



(8)



(9)



மேலே காட்டப்பட்டுள்ள நான்கு படங்களும் ஒரே பொருண்மை உருப்படுத்தத்தின் கட்புல மாறுபாடுகளாகும். வரிசைப்படுத்தலின் போது வினைகள் மற்றும் பிற பயனிலையை வெளிப்படுத்தும் சொற்கள் (எழுவாய், செயப்படுபொருள் போன்ற) எந்தத் தொடரியல் தனிமங்களுடன் இந்த உருவமைப்புகள் (configurations) பொருத்தப்படவேண்டும் என்று

குறிப்பிடும். நினைவுபடுத்து (நினைவுகூறச் செய்) என்ற வினையின் வரையறை விளக்கத்தைத் தோராயமாகப் பின்வருமாறு குறிப்பிடலாம்:



எழுவாய் வினைத்தொடர் செயப்படுபொருள்

ராஜா என் சத்தியத்தை நினைவுபடுத்தினான்

ராஜா அவனுக்கு நான் பணம் தரவேண்டும் என்பதை நினைவுபடுத்தினான்

3.5.4 வடிவவை பொருண்மையோடு பொருத்துதல்

நாம் தொடரியலுக்கும் பொருண்மையியலுக்கும் உள்ள உறவின் பொதுவான பண்பைப் பற்றி சிந்தித்தோம்; ஆனால் இந்த உறவை வடிவமாக்க (formalize) ஒரு குறிப்பிட்ட வாக்கியத்தை ஒரு குறிப்பிட்ட பொருண்மையியல் உருப்படுத்தத்துடன் பொருத்தவேண்டும் முழுவதும் வெளிப்படையான செயல்முறைத் தரப்படவேண்டும். ஏடுத்துக்காட்டாக (23) என்பதை (24) என்ற பொருண்மையின் சரியயான வெளிப்படுத்தம் எனக்கொள்ளலாம்.

(23) ((அ/இ மனிதவினம் -வயதுவந்த ஒருமை: -உறங்கு):மாறு<கா>)

(24) குழந்தை விழித்துவிட்து.

ஒரு வினையின் இணைதிறன் (valency) என்பது வினையின் பொருண்மையை முழுமை செய்ய நிரப்பப்படவேண்டிய தொடரியல் இடங்கள் (syntactic slot) இல்லது பங்களிப்புகளின் எண்ணிக்கையும் வகையும் ஆகும். தொடரியல் திறன் 'பொருண்மையியல் திறன்' என்பதிலிருந்து சுதந்திரமானதாகும்: இது பயனிலைகளுக்கும் அதன் பங்கெடுப்பாளர்களுக்கும் இடையிலுள்ள சேர்க்கை சாத்தியமாகும். *சொல்* மற்றும் *பேசு* என்பன ஒரே ஈரிட பயனிலையை வெளிப்படுத்தினாலும், அவற்றின் தொடரியல் திறன்கள் வேறுபட்டவைகளாகும்.

1 இணைதிறன்	2 இணைதிறன்	இணதைிறன் 3
அ பேசு ஆ	அ சொல் ஆ	அ நினைவுபடுத்து ஆ

இணைதிறன் ஒரு எண்ணல் பொருள் அல்ல. பொருண்மை ஒருங்கிணைப்புகள் தொடரியல் ஒருங்கிணைப்புகளுடன் பொருத்துவது பல சாத்தியங்களை அனுமதிக்கின்றது. வினைகள் பிற வகைச் சொற்களைப் போல் பொருள்மயக்கம் உள்ளவை. இதன் அர்த்தம் ஒரே வினை வேறுபட்ட இணைதிறன்களைக் கொள்ளவியலும். எடுத்துக்காட்டாக, ஒரு அர்த்தத்தில் *பேசு, சொல்* என்பன ஒருபொருள் பன்மொழிகளாகும்: *அந்த நடிகர் வசனத்தைப் பேசினார், அந்த நடிகர் வசனத்தைச் சொன்னார்* என்பன ஒரு அர்த்தத்தைத் தருவனவாகும். மேலும் விருப்பாக உருப்படுத்தம் செய்யப்படும் தனிமங்களைக் கொண்ட இணைதிறன் சாத்தியத்தையும் உட்படுத்த வேண்டும். எடுத்துக்காட்டாக *எழுது* என்பது விருப்பாக ஏற்கும் நேரடிச் செயப்படுபொருள்: *ராஜா எழுதிக்கொண்டிருந்தான், ராஜா கடிதம் எழுதிக்கொண்டிருந்தான்*. இறுதியாக நாம் வினைகள் மட்டுமல்லாமல் பிற சொல்வகுப்பைச் சார்ந்த சொற்களும் இணைதிறனைக் கொண்டிருக்கும் என உணரவேண்டும். எடுத்துக்காட்டாக *மகிழ்ச்சியான* என்ற பெயரடை ஒரு இணைதிறன்கொண்டது (மகிழ்சியான செய்தி); இடையில் என்ற பின்னுருபு இரு இணைதிறன் கொண்டது (ராஜாவுக்கும் ராணிக்கும் இடையில்). பெயர்கள் இணைதிறனைப் பொறுத்தவரையில் ஒரு கலவை வகைப்பாடாகும். எடுத்துக்காட்டாக இயற்கை வகைகளை அல்லது உருவாக்கப்பட்ட பொருள்களைக் குறிப்பிடும் பெயர்கள் ஓரிஇணைதிறன் கொண்டனவைகளாகும்; ஒத்தறிப்பெயர்களைக் குறிப்பிடும் தந்தை, இறுதி, பணியாளர் போன்றன ஈரியைதிறன் கொண்டனவாகும்.

ஆகராதிப் பதிவுகள் இணைதிறன் பற்றி தகவல் தரும் என ஒப்புக்கொள்ப்பட்டால், அர்த்தத்தை தொடரியலாகக் குறியாக்கம் செய்யும் செய்முறை அல்லது தொடரியலைக் குறியத்திறவு செய்யும் செய்முறை எளிதான திரட்டு அல்லது குறைப்பு ஆகும். 'குழந்தை விழித்துவிட்டது' என்பதன் பொருண்மை உருப்படுத்தமுன் தொடரியல் பொருத்தமும் கீழே தரப்பட்டுள்ளன:

(23) ((அ/இ மனிதவினம் -வயதுக்குவந்த ஒருமை: -தூங்கு):மாறு<கா>)

(24)



3.5.5 சுருக்கவுரை

நாம் பொருண்மையியலை முழு மொழிக் கோட்பாட்டின் பகுதியாகப் பார்க்கவேண்டும். எனவே பொருண்மையியல் மாதிரியை மதிப்பீடு செய்வது 'எவ்வாறு இந்த மாதிரி தொடரியலுடன் ஒன்றிணைகின்றது?' என்ற கேள்வியைக் கேட்பதாகும். நாம் தொடரியலையும் பொருண்மையியலையும் பொருத்தும் விதிகளை உருவாக்க முயலவேண்டும்.

பொருண்மையியலையும் தொடரியலையும் உருப்படுத்தங்களின் வேறுபட்ட மட்டங்களாக, நல்வடிவாக்கத்தின் வேறுபட்ட 'கட்டுப்பாடுகளுடன்' அல்லது 'இலக்கணத்தன்மையுடன்' கையாளுவதற்கான வாதங்களைப் பார்த்தோம். பொருண்மையியல்-தொடரியல் பொருத்தத்தில் பங்கெடுக்கும் பல ஒன்றுக்கொன்று தொடர்பான செயன்மைகள் உள்ளன. இவற்றை இரு காரணிகளாகச் சுருக்கவியலும்: செய்தியை வரிசைப்படுத்துதல்,

வெளிப்பாட்டின் சிக்கனத்தைப் பெறுதல். குறியனாக்க மற்றும் குறியத்திறவுச் செயன்மைகள் நமது மன அகராதி அல்லது சொற்களஞ்சியத்தால் நடத்தப்பெறும்.

3.7 பொருண்மையியலும் அகராதியும்

தமிழ் போன்ற மொழிகள் மிகப் பெரிய எண்ணிக்கையிலான சொல் அலகுகளைக் (அதாவது சொற்கள், மரபுச்சொற்கள்) கொண்டுள்ளன. அகராதியின் செயல்பாடு இந்த சொற்களைப் பட்டியலிடு அவைகளுக்குத் தேவையான (ஒலியனியல், தொடரியல், பொருண்மையியல், நடையியல் போன்ற) தகவல்களைத் தருவதாகும். ஒரு சொல்லைப்பற்றித் தரபப்படும் தகவல் 'சொல் பதிவு' எனப்படும். தினமும் பயன்படுத்துகின்ற அகராதி பயன்பாட்டாளர்களைப் பொறுத்தவரையில் முக்கியமான பாகம் அதன் பொருண்மையியல் பகுதியாகும் என்பது உண்மையாக இருக்கலாகும்.

3.7.1 நடைமுறைசார் மற்றும் கோட்பாடுசார் அகராதிகள்

இங்கு ஒரு மொழியைப் பேசுபவர் அம்மொழியின் சொற்களைப் பற்றி அறிந்துள்ளதை உருப்படுத்தம் செய்யும் மாதிரி அல்லது கோட்பாடுசார் ஒழுங்குமறையை தருவதுதான் நோக்கமாகும். முதலில் கோட்பாடுசார் அகராதிக்கும் நடைமுறை அகராதிக்கும் வேறுபாடு பாராட்டவேண்டும்.

3.7.2 சொற்களஞ்சியம் (அல்லது கோட்பாடுசார் அகராதி)

ஒரு சொல்பதிவு பின்வரும் மூன்று குறிப்பீடுகளின் ஒன்றுசேர்ப்பைக் கொண்டதாகக் கருதப்படுகின்றது: உருபனியல் குறிப்பீடு (சொல்லின் வடிவை பகுதி மற்றும் ஒட்டுக்களின் அடிப்படையில் தருவது), தொடரியல் குறிப்பீடு (வாக்கியங்களுக்குள் ஒரு சொல்லின் வருகைமுறையின் அடிப்படையில் அதை பாகுபாடு செய்தல்), பொருண்மையியல் குறிப்பீடு (அல்லது வரையறை விளக்கம்).

உச்சரிப்பு மற்றும் எழுத்துக்கூட்டல் உருபனியல் குறிப்பீடு அடிப்படையில் மறைமுகமாகச் மிகச் சிக்கனமாக காட்டவியலும்; உருபனியல் குறிப்பீடு சொல்லை

உருபன்களின் (பகுதிகளின் மற்றும் ஒட்டுகளின்) அமைப்பாக பிரிக்கும். அம்மாதிரியான உருபன்கள் பல சொற்களில் வரும் (எடுத்துக்காட்டாக புத்தகம் என்ற உருபன் புத்தகங்கள், புத்தகங்களை, பாடப்புத்தகம் என்ற சொற்களில் வரும்). இதன் பொருள் சொல் பதிவுகளின் ஒரு குழுமாக பார்க்கப்படும் சொற்களஞ்சியம் தவிர உருபன்களை அவற்றின் உச்சரிப்பு மற்றும் எழுத்துக்கூட்டலுடன் தரும் உருபன் சொல்லடைவுகளும் இருக்கவேண்டும்.

புத்தகம் பகுதி$_{புத்தகம்}$

புத்தகங்கள் பகுதி$_{புத்தகம்}$ +ஒட்டு$_{கள்}$

புத்தகங்களை பகுதி$_{புத்தகம்}$ +ஒட்டு$_{ஐ}$

பாடபுத்தகம் பகுதி$_{புத்தகம்}$ +(பகுதி$_{பாடம்}$ +பகுதி$_{புத்தகம்}$)

ஒரு சொல்லின் தொடரியல் குறிப்பீடு பெயர், வினை, பெயரடை என்பனவற்றை முதனிலை வகைப்பாடுகளாகவும் 'எண்ணவியலும் (பெயர்)', 'பயனிலை' (பெயரடை), மற்றும் பிறவற்றைத் துணைநிலை வகைபாடுகளாகவும் பாகுபாடுசெய்யும் ஒரு குழும பண்புக்கூறகளையும் கொண்டிருக்கின்றது. பொருண்மையியல் பண்புக்கூறுகளைப் போன்று இந்த பண்புக்கூறுகளும் முரண்பாடு உள்ளவை (எ.கா. 'எண்ணவியலுபவை' என்பது 'திரள்' என்பதுடன் முரண்படும்); ஆனால் ஈரிணையான எதிர்நிலையால் என்பது தேவையில்லை. பல துணைநிலை வடைப்பாடுகள் தொடரியல் இணைதிறன் அடிப்படையிலானது, எ.கா. செயப்படுபொருள் குன்றா வினைகள் மற்றும் செயப்படுபொருள் குன்றிய வினைகள்.

ஒரு சொல்லின் பொருண்மையியல் குறப்பீடு (அல்லது வரையறை விளக்கம்) பொருண்மைக்கூறாய்வு அல்லது வினைப்பாடு ஆய்வு அடிப்படையில் அதன் பொருளை உருப்படுத்தம் செய்வது ஆகும். ஒரு குழும முரண் பண்புக்கூறுகளைக் (எ.கா. மனிதவினம் வயதுக்குவந்த –ஆண்) கொண்ட வரையறை விளக்கங்கள் முன்னரே தேவையான அளவு எடுத்துக்காட்டப்பட்டுள்ளன; இருப்பினும் துணைநிலை மற்றும் தாழ்த்தப்பட்ட வினைப்பாடுகளை உள்ளடக்கிய வரையறை விளக்கங்களின் வகை எடுத்துக்காட்டுவது பொருத்தமானதாகும். இதற்கு வேண்டி பொருண்மைகளை உருப்படுத்தம் செய்யும் வரிசை முறை (linear mehtod) பயன்படுத்தப்பட்டுள்ளது. சொற்களஞ்சியத்தல் மிகப் பெரிய வகுப்புகள் பெயர்கள், பெயரடைகள், வினைகள் என்பனவாகும். பின்வரும் வாய்பாட்டில் அ, ஆ, ப, ப1 போன்றவை சிறப்பிக்கப்படாத பண்புக்கூறுகளாகும்.

பெயர்கள்

வகை அ: நபர் அ′ <அ/இ′ .→ப.ஆ>

அதாவது 'ஏதாவது நபருடனோ பொருளுடனோ (ஆ) குறிப்பிட்ட இயக்க உறவு கொண்டிருக்கும் ஒரு நபர்'

எ.கா. புத்தகவியாபாரி, அரசன், ஆசிரியர், நடிகர், பயிற்சியாளர் போன்றவை

வகை ஆ: நபர் அ′ <அ/இ.ப.(x)>

எ.கா. மாணவர், மக்கள், பணியாளர் போன்றவை

வகை இ: விலங்கினம் அ′ .ப.(x)>

கத்தி, இருக்கை, கரும்பலகை, பாதை, ஊர்தி, ஆடை போன்றவை

பெயர்கள் வகை ஈ: அ′ <அ/இ.→பாகம்.ஆ>

தலை, உடல், கை, விரல், இறக்கை, கூரை, ஜன்னல் போன்றவை

பெயர்கள் வகை: அ′ .→பகுதி.ஆ>

வகை அ பரந்த அர்த்தத்தில் 'செயலி' ஆகும்: அதாவது ஒரு உறவில் செயலாற்றும் திறனுள்ள பங்களிப்பு கொண்ட நபரைக் குறிப்பிடும் பெயர்கள் ஆகும். இந்த வகையிலும் பிற வகையிலும், ஈரிட பயனிலையின் இரண்டாவது கலைச்சொல் பூஜியமாகும்: <அ/இ. →ப.ϕ>; எடுத்துக்காட்டாக ஒரு ஆசரியர் என்பவர் 'யாரவது ஒருவரை கற்பிக்கும் ஒரு நபர்' ஆவார்.

வகை ஆ என்பது வகை அ பெயர்களின் மறுதலையான செயலுக்கு உள்ளாக்கப்படும் பெயர்களின் வரையறை விளக்கத்தை உருப்படுத்தம் செய்யும் (எ.கா. மாணவன் என்பது ஆசிரியர் என்பதன் மறுதலையாகும்), மக்கள் என்பது அரசரின் மறுதலையகும்.

வகை இ என்பது 'செயற்பாடு பெயர்களின்' வரையறை விளக்கத்தை உருப்படுத்தம் செய்யும்; அதாவது செயற்பாடுகளால் அடையாளம் காணப்படும் பொருட்களைக் குறிப்பிடும் பெயர்கள்: எடுத்துக்காட்டாக இருக்கை என்பது 'உட்காரப் பயன்படும் பொருள்' என வரையறை விளக்கம் செய்யப்படும்; கத்தி என்பது 'வெட்ட உதவும் கருவி' என வரையறை விளக்கம் செய்யப்படும்.

வகை ஈ 'சினைப் பெயர்கள்' என்ற பெரிய வகைப்பாட்டின் கண்படும்; அவை மனிதப் பாகங்களையோ உயிருள்ளவைகளின் பாகங்களையோ (மரங்களின் கிளை, தண்டு, இலை),

செயப்பட்ட பொருள்களின் பாகங்களையோ (கூரை, கைப்பிடி போன்றன) குறிப்பிடலாம். `0பகுதி' ஒரு கடவு உறவாகையால், அம்மாதிரியான சொற்கள் வடித்தின் படிநிலை அமைப்பை உருவாக்கும்: எ.கா. கை →விரல்→மூட்டு.

பெயரடைகள் பின்பருமாறு வகைப்படுத்தப்பட்டு வரையறை விளக்கம் பெறும்.

பெயரடை
வகை அ: <அ/இ' .ப.அ>
பணக்கார, படித்த போன்றன
வகை ஆ: <இல்லை:(அ/இ.ப.அ)>
எளிய, படிக்காத போன்றன

வினைகள் பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டு வரையறை விளக்கம் பெறும்.

வினைகள்
வகை அ: (அ' .செய்.(அ/இ:நிகழ்வு))
எ.கா. ராஜா நகர்ந்தான்/குதித்தான்/நடந்தான்
வகை ஆ: (அ' செய்.(அ/இ.நிகழ்வு.ஆ))
ராஜா கடிகாரத்தைப் பார்த்தான்.
வகை இ: (அ' .மாறு.(அ/இ' .நிலை))
எ.கா. கதவு மூடியது/திறந்தது; பஸ் நின்றது; அவள் எழுந்தாள்.
வகை ஈ: (அ/இ' .மாறு.(அ/இ' .நிலை.ஆ))
எ.கா. ராஜா என் பெயரை படித்தான்/கண்டுபிடித்தான்/மறந்தான்
வகை உ: (அ.செய்.(ஆ' .மாறு.(அஇ' :நிலை))
எ.கா. அவள் பஸ்சை நிறுத்தினாள்; அவள் குழந்தைகளை எழுப்பினாள்.
வகை ஊ: (அ.செய்.(ஆ' .மாறு.(அஇ' .நிலை.இ)
எ.கா. அவன் எனக்கு ஒரு புத்தகம் தந்தான்/விற்றான்.

இவ்வகையிலான வினையின் வரையறை விளக்கம் ஒன்றிற்கும் மேற்பட்ட பயனிலைகளைக் கொண்டுள்ளது. அவை மூன்று முக்கிய காரணிகளால் முரண்படும்: (அ) நிலைத்தன்மை, (ஆ) தொடக்கத்தன்மை, (இ) செயல்.

வினைகளின் ஆறு வகை வரையறை விளக்கங்களை பின்வருமாறு வகைப்பாடு செய்யலாம்:

வகை அ: செயப்படுபொருள் குன்றிய செயல் வினை (இணைதிறன்: 1)
வகை ஆ: செயப்படுபொருள் குன்றா செயல் வினை (இணைதிறன்: 2)
வகை இ: செயப்படுபொருள் குன்றிய தொடங்கு வினை (இணைதிறன்: 1)
வகை ஈ: செயப்படுபொருள் குன்றா தொடங்கு வினை (இணைதிறன்: 2)
வகை அ: ஒரு செயப்படுபொருள் குன்றா செயல்-தொடங்கு வினை (இணைதிறன்: 2)
வகை அ: இரு செயப்படுபொருள் குன்றா செயல்-தொடங்கு வினை (இணைதிறன்: 3)

3.7.3 சொல் விதிகள்

பொதுவான விதி ஒரு சொல் பதிவிலிருந்து மற்றொரு பதிவை பின்வருமாறு ஆக்குதல்.



(இங்கு அ, ஆ என்பன சொல் பதிவுகள்; p என்பது உருனியல் குறிப்பீடு; q என்பது தொடரியல் குறிப்பீடு; r என்பது பொருண்மையியல் குறிப்பீடு.)

உருபனியல் ஆக்கம் உருபனியில் குறிப்பீட்டில் மாற்றத்தை ஏற்படுத்தும்; எடுத்துக்காட்டாக அடி என்று அழைக்கப்படுகின்ற முதலாவதான உருபனியல் குறிப்பீட்டுடன் ஒட்டை சேர்த்தல்:

விதியின் பொது வடிவு			எடுத்துக்காட்டு
p	⇒	p_2	அடி ⇒ அடி + ஒட்டு இல்லா
q	⇒	q_2	பெயர் ⇒ பெயரடை
r	⇒	r_2	அ ⇒<இல்லை:(அஇ.கொண்டிரு.அ)

(எ.கா. உப்பு ⇒ உப்பில்லா)

மாற்ற விதி (rule of conversion) ஒரு சொல் விதியாகும்; இது உருபனியல் குறிப்பீட்டின் மாற்றமின்றி தொடரியல் செயல்பாட்டில் மாற்றம் ஏற்படுத்தும்.

விதியின் பொது வடிவு			எடுத்துக்காட்டு
p1	⇒	p_1	அடி ⇒ அடி
q	⇒	q_2	வினை, செயப்படுபொருள் குன்றாதது⇒ பெயர், பருமை, எண்ணவியலுவது
r	⇒	r_2	→P ⇒ϕ′ <அஇ. ←P.ϕ>

எ.கா. பிடி [வினை] ⇒ பிடி [பெயர்]

பொருண்மை மாற்றில் விதி (semantic transfer rule) பொருண்மைக் குறிப்பீட்டில் மட்டுமே முக்கிய மாற்றத்தைக் கொண்டுவரும்.

விதியின் பொது வடிவு			எடுத்துக்காட்டு
p_1	⇒	p_2	அடி ⇒ அடி
q_1	⇒	q_2	பெயர் ⇒ பெயர்
r_1	⇒	r_2	அ ⇒ϕ<அஇ′ .↔ஒத்திரு.அ)

இங்கு கூறப்பட்ட விதி உருவகத்திற்கு (metaphor) ஓரளவிற்குத்தான் பொருந்தும். இது பின்வருமாறு பொருள்படும்: 'அ′ என்ற பொருண்மைக்குப் பதிலாக அதை 'அ′ என்பதுடன் ஒற்றுமையுள்ள ஏதாவது ஒன்றால் இடம் பெயர்க்கலாம்′ .

பிற பொருண்மை மாற்றல்கள் பெரும்பான்மையும் ஆகுபெயர் (metonymy) என மரபுக் கலைச் சொல்லால் குறிப்பிடப்படுகின்றது.

அண்டைவீடு அவன் திட்டத்தை எதிர்த்தது

1 (அண்டைவீடு = 'அண்டைவீட்டிலுள்ளவர்கள்'

நகரம் முழுவதும் அவர்களை வரவேற்க வந்ததது.

(நகரம் = 'நகரத்தில் வசிக்கின்ற மக்கள்')

2 நான் ஷேக்ஸ்பியரை விரும்பிப் படிக்கின்றேன்.

(ஷேக்ஸ்பியர் = 'ஷேக்ஸ்பியர் எழுதிய நூல்கள்'

3 நெப்போலியனுக்குப் பிறகு இவ்வாறு நடக்கவில்லை.

(நெப்போலியன் = 'நெப்போலியன் வாழ்ந்த காலம்)

ஒவ்வொரு எடுத்துக்காட்டும் வேறுபட்ட விதிகளை வெளிப்படுத்தும்; இதைப் கிட்டத்தட்ட பின்வருமாறு கூறலாம்.

1. அ ⇒ மனிதவினம்' <அஇ' .இரு இல்/மேல்.அ>

   (அ என்பது 'இடம்' என்ற பண்புக்கூறைக் கொண்டிருக்கும்)

2. அ ⇒ ϕ' <அஇ' .←எழுது.அ>

   (அ என்பது 'மனிதவினம்' என்ற பண்புக்கூறைக் கொண்டிருக்கும்)

3. அ ⇒ காலம்' <அஇ' .←இல்.(x)

   (x என்ற உட்படுத்தப்பட்ட வினைப்பாடு அ-வைக் கொண்டிருக்கும்)

மூன்றாவது விதி பின்வருமாறு பொருள்கொள்ளப்படவேண்டும்: 'அ என்பதுடன் தொடர்புடைய ஏதோ ஒன்று நிகழ்ந்த காலம்' ; இது இது மாறி தகவலை அறிமுகம் செய்யும் உருவக விதியைப் போன்று இருக்கிற ஒரு வகை ஆகுபெயர் விதியை எடுத்துக்காட்டும்.

3.7.4 சொல் விதிகளைப் பற்றிய கூடுதல் உற்றுநோக்கல்

சொல் விதிகளைப் பற்றிய கூடுதல் செய்திகள் இருக்கின்றன: (அ) இந்த விதிகள் புதிய சொற்களை உருவாக்கும் திறனில் சக்தி வாய்ந்தவை; (ஆ) உருபன் ஆக்கம், மாற்றம்,

பொருண்மையியல் மாற்றல் என்பனவற்றை ஒரே நடத்தையின் நேர்வுகளாகக் கருதி ஒன்றிணைப்பது அவற்றின் நடைமுறை விளைவாக்கத்தன்மை மட்டுமன்றி பிற சிறப்பியல்புகளாலும் உந்தப்பட்டதாகும். சொல் விதிகளின் ஐந்து தன்மைகள் பின்வருவனவாகும்: (1) அவற்றின் வேறுபட்டதன்மை (diversity), (2) அவற்றின் பொருண்மையியல் திறந்த-இறுதித்தன்மை (open-endedness), (3) அவற்றின் மறுநிகழ்வுத்தன்மை (recursiveness), (4) அவற்றின் இருதிசைத்தன்மை (bidirectionality) மற்றும் (5) சொல்லின் 'உறைதலால்' (petrification) வேறுபடும் அவற்றின் இயல்பு. இக்கலைச்சொற்களின் பொருள் பின்வரும் விளக்கம் மூலம் தெளிவுறும்.

1. வேறுபட்ட தன்மை

சொல் விதிகளின் வேறுபட்ட தன்மை ஒரே சொற்பதிவுக்கு பல எண்ணிக்கையிலான வேறுபட்ட விதிகளை பயன்படுத்தும் சாத்தியத்தை அனுமதிக்கின்றது. இது உருபனியல் ஒட்டாக்கத்தால் கிடைக்கப்பெறும் கலவைத்தன்மையான சொற்களின் ஆக்கத்தை நியாயப்படுத்தும். ஆனால் பொருண்மையியல் மாற்றல் விதிகள் இம்மாதிரியான வேறுபட்டதன்மை கொண்டிருக்கும்; அதேசமயம் அது ஒரு சொல்லின் பொருளில் பல செயல்திறமுள்ள மயக்கங்களுக்கு வழிவகுக்கும்.

எ.கா.

1.மனிதக் குழந்தை : 'மனிதவினம்'
2. மனித இனம் : மனிதரைக் கொண்ட இனம்
3. மனித யானை : மனிதனைப் போன்ற யானை
4. மனித நுகர்வு : மனிதனால் செய்யப்படும் நுகர்வு
5. மனிதப் பரிசோதனை : மனிதனின் மேல் செய்யப்படும் பரிசோதனை

2. திறந்த-இறுதித்தன்மை

பொருண்மையைப் பரவவ்செய்யும் சொல் விதிகளின் அவற்றின் பல்வேறுபட்டதன்மையில் மட்டுமன்றி அவற்றின் பொருண்மைசார் திறந்த-இறுதித்தன்மையிலும், அதாவது புதிய சொற்பதிவுகளிலிருந்து அதைப் புரிந்துகொள்ளத் தேவையான தகவல்களைப் பெறும்

மொழிபயன்படுத்துபவர் சுதந்திரத்தை அனுமதிப்பதிலும் உள்ளது. 'உட்புரிதல்' (reading-in) என்ற கற்பனைத் தன்மை உருவகத்தில் உள்ள குறிப்பீடு செய்யப்படாத ஒப்பீட்டில் பார்த்தோம். இது ஆகுபெயர் மாற்றல்களிலும் குறிப்பாக கற்பனை எழுத்துப் படைப்புகளில் உள்ளது.

பொருண்மையில் பாலம் தெளிவற்றதும், குறிப்பாக இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பெயர்களின் சேர்க்கையால் உருவாக்கப்படும் கூட்டுச்சொற்களில் (compounds) அளவுக்குமீறி மறைமுகமானதுமாக உள்ளது. தனியான சொல் விதிகள் என்று வடிவமைப்பதற்கு வேண்டிய அளவு தொடர்பின் மிகப்பழக்கமான வழிகள் தெளிவாக இருந்தாலும் பல x-y கூட்டுச்சொற்களுக்கு மிகப்பொதுவான விதியான 'x என்பது y-உடன் ஏதோ விதத்தில் தொடர்புள்ளது' என்ற விரிவான ஒன்றுதான் சாத்தியமான தனிப்போக்கான பொருண்மைகளை உள்ளடக்குவதற்குத் தகுந்ததாகும்.

X - Y

உண்ணாவிரதப் போராட்டம் : 'போராட்டத்தில் உண்ணாவிரதத்தை கருவியாகப் பயன்படுத்தல்'

மனித குண்டு : 'மனிதன் குண்டுடன் தாமே வெடிப்பது'

காற்றாலை : காற்றின் சக்தியால் இயந்திரத்தை இயக்கிப் பயன்படுத்தும் ஆலை'

பொருண்மையியல் தொடர்புகள் யாவும் தனிப்போக்கானவை; அவற்றைக் கணிப்பதற்காக ஒருவர் மூன்று சிறப்பு மாற்றல் விதிகளை உருவாக்கினால் ஒவ்வொன்றும் ஒரு எடுத்துக்காட்டை மட்டும்தான் கணிக்கும்.

3. மறுநிகழ்வுதன்மை

சொல் விதிகளின் திறனுக்குப் பங்களிப்பு செய்யும் மூன்றாவது தன்மை மறுநிகழ்வாகும்; அதாவது ஒரு சொல் விதியின் வெளியீடாக வரும் ஒரு சொற்பதிவு மற்றொரு சொல் விதியின் உள்ளீடாக வரும். ஒரு சொற்பதிவு மூன்று குறிப்பீட்டைக் கொண்டிருந்தால், மறுநிகழ்வு கொள்கையைப் பின்வருமாறு வரிசையாக உருப்படுத்தம் செய்யலாம்:

$\{p\}$ $\{p'\}$ $\{p''\}$ $\{p'''\}$

$$\begin{array}{ccccccc} q & \Rightarrow & q' & \Rightarrow & q'' & \Rightarrow & q''' \quad \Rightarrow \ldots \\ r & & r' & & r'' & & r''' \end{array}$$

உருபனியல் மட்டத்தில் இந்தக் கொள்கைகளின் விளைவுகள் உற்றுநோக்குவதற்கு கடினமானவையல்ல. தனிநிலைப் பகுதிகளிலிருந்து பின்வருமாறு ஒரு கலவைத்தன்மையான சொல்லை ஒரு நிலையிலிருந்து மற்றொருநிலைக்கு உருவாக்கவியலும்.

காரம்
⇒ காரசாரம் ⇒ காரசாரமாக
சாரம்

இக்கொள்கை பெயர் + பெயர் என்ற கூட்டாகச் செயன்மையால் உருவாக்கப்பட்ட *விமான நிலைய உணவு விடுதி* போன்ற கலவைப் பெயர்-வரிசைகளால் எடுத்துக்காட்டப்படும்.

4. இருதிசைத்தன்மை

இதுவரை நாம் சொல்லாக்கத்தின் செயன்மையை ஒருதலை அம்புக்குறியீட்டால் (⇒) உருப்படுத்தம் செய்து ஒருதசை செயன்மையாக அல்லது திருப்பவியலாத செயன்மையாக உருப்படுத்தம் செய்தோம். இப்போது சொல்லாக்கம் இருதிசை செயன்மையாகக் கருதப்பட்டு இச்செயன்மை இருதலை அம்புக்குறியீட்டால் (⇔) சரியாக உருப்படுத்தம் செய்யப்படும். வரலாற்று அடிப்படையில் சொல்லாக்கங்கள் இரு திசையிலும் போகவியலும் என்ற காரணத்தால், சொல் விதிகள் இருதிசைச் செயன்மைகளாக வடிவமைக்கப்படவேண்டும்.

5. சொற்பொருண்மையின் உறைதல்

உருவகத்தாலோ ஆகுபெயராலோ செய்யப்படும் பொருண்மை மாற்றல் சொற்கள் அவற்றின் பொருண்மையயை நீட்சிசெய்யும் மற்றும் மாற்றம் செய்யும் முக்கியமான இயக்க நுட்பங்களில் ஒன்றாகும். ஒரு நிறுவப்பட்ட சொற்பொருண்மை (institutionalized lexical meaning) சொல் விதியால் குறிப்பீடு செய்யப்பட்ட 'கோட்பாட்டு' பொருண்மையிலிருந்து ('theoretical' meaing) விலகுவது 'உறைதல்' என்று கூறப்படுகின்றது.

சக்கர நாற்காலி, தள்ளு நாற்காலி என்ற கூட்டுப் பெயர்கள் சொற்பொருளின் நிறுவப்பட்ட சுருக்கத்திற்கு (instituional narrowing) எடுத்துக்காட்டாக அமையும். இந்த கூட்டுக்களை உருவாக்கிய விதிகள் பின்வரும் வரையறை விளக்கங்களைத் தரும்:

சக்கர நாற்காலி 'சக்கரங்கள் உள்ள நாற்காலி'

தள்ளு நாற்காலி 'தள்ளப்படுகிற நாற்காலி'

சக்கர நாற்காலி என்பதன் பொருள் சக்கரம் உள்ள நாற்காலி என்பதைவிட கூடுதல் பொருள் உள்ளதாகும். அதுபோல் தள்று நாற்காலி என்பதும் அதை உருவாக்கும் சொற்கள் உணர்த்துகின்ற பொருளைக் காட்டிலும் கூடுதல் பொருள் உள்ளதாகும்.

6.ஒப்புருச்சொன்மை மற்றும் பல்பொருண்மை

ஒரே வடிவமுள்ள சொற்கள் வேறுபட்ட பொருள்களைத் தருவதற்கும் ஒரே சொல் தொடர்புள்ள பல பொருள்களைத் தருவதற்கும் உள்ள எல்லைக்கோடு பொருண்மையியலில் சிக்கலான பகுதியாகும். பெரும்பான்மையும் வரலாற்று உண்மைகள் அடிப்படையில்தான் இத்தகைய தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றன.

ஒப்புருச்சொன்மை (homonymy)

எ.கா.

படி 'மாடிப்படி' போன்றவற்றில் வரும் 'படி'

படி 'ஒரு படி அரிசி' என்பதில் வரும் முகத்தல் அளவையைக் குறிக்கும் 'படி'

படி 'புத்தகம் படி' என்பதில் வரும் படித்தலாகிய செயல்

பல்பொருண்மை (polysemy)

எ.கா.

கண் 'காட்சி உறுப்பு

கண் 'தேங்காயிலுள்ள கண்போன்ற பகுதி'

இருப்பினும் மொழி பேசுபவர் பெரும்பாலும் சொற்களுக்கிடையே உள்ள உருவக நீட்சியைப் புரிந்துகொண்டு சொல் பற்றிய தமது புரிந்துகொள்ளலை மாற்றிக்கொள்கின்றனர்.

ஒப்புருசொன்மை-பல்பொருண்மைச் சிக்கல் 'உளவியல் அடிப்படையில் தொடர்புள்ளவை' என்ற பொருளைத் தெளிவாக்குகின்றது. மொழிபேசுபவர் இரு சொற்பொருண்மைகளுக்கு இடையில் உள்ள தொடர்பை சொல் விதிகளால் ஆய இயலுமானால் இவ்விரு பொருண்மையும் 'உளவியல் அடிப்படையில் தொடர்புள்ளவை' எனக் கூறவியலும். சொல் விதிகள் தாய்மொழி பேசுபவரின் மொழித் திறனின் ஒரு பகுதியாகும் என்ற அளவில் இவ்விதிகள் உளவியல் உண்மையைக் கொண்டிருக்கின்றன என்ற புரிந்துகொள்ளலிருந்து இந்த வரையறை விளக்கத்திற்கு உறுதிப்பாடு கிடைக்கின்றது.

சொற்களின் வரையறைவிளக்கம் அகராதியைப் பொறுத்தரைவையில் முக்கியமானதாகும். ஒரு சொற்பதிவை முன்னர் கூறிய மூன்று குறிப்பீடுகளால் (p q, r) விளக்காலாம்: அதாவது உருபனியல் குறிப்பீடு (p) , தொடரியல் குறிப்பபீடு (q) மற்றும் பொருண்மையியல் குறிப்பீடு (r). சொல்லை விளக்கும் இரு பயன்தரும் வழிகள்:

(1) p_1 என்ற ஒரே உருபனியல் குறிப்பீட்டடைப் பங்கிட்டுக்கொள்ளம் சொற்பதிவுகளின் ஒரு கட்டு (தொகுதி).

(2) p_1 என்ற ஒரே உருபனியல் குறிப்பீட்டடையும் q_1 என்ற தொடரியல் குறிப்பீட்டையும் பங்கிட்டுக்கொள்ளம் சொற்பதிவுகளின் ஒரு கட்டு (தொகுதி)

(1), (2) என்ற வரையறைவிளக்கங்களுக்கு இடையிலுள்ள தேர்வு கலைச்சொல்சார் வசதியாகும்; சாதாரணமாக ஒவ்வொன்றிற்கும் தனி கலைச்சொற்களைப் பயன்படுத்தலாம்: (1) என்ற வரையறை விளக்கத்திற்கு சொல் என்ற கலைச்சொல்லையும் (2) என்ற வரையறை விளக்கத்திற்கு சொல்லன் என்ற கலைச் சொல்லையும் பயன்படுத்தலாம்.

இயல் 4

கருத்துரு வரைபட அடிப்படையில் தமிழ் வாக்கியங்களின் பொருண்மையியல் ஆய்வு

4.1 முன்னுரை

முன்னர் கண்ட கோட்பாட்டிலிருந்து வேறுபட்டு செயற்கை அறிவு வெளிப்படுத்தத்திற்கு பயன்படுத்தப்படும் கருத்துரு சார்ந்த அமைப்பு அடிப்படையிலான கோட்பாடு சௌவா (Sowa, 1984) என்பவரால் விளக்கப்பட்டுள்ளது. இது மூளையிலும் இயந்திரத்திலும் (கணிப்பொறியிலும்) தகவலை ஆய்வதற்கான சாத்தியம் அடிப்படையில் அமைந்தது. இக்கோட்பாடு அடிப்படையில் ஒரு வாக்கியம் ஆறு வகையான தகவல் அடிப்படையில் ஆக்கப்படுகிறது.

1. **கருத்துரு வரைபடம் (Conceptual graph):** கருத்துரு வரைபடம் நபர்களுக்கும் (persons) பொருள்களுக்கும் (things) நிகழ்வுகளுக்கும் (events) இடையிலுள்ள உறவுகளைக் கூறும் தர்க்க வடிவங்களாகும்.

2. **காலம் மற்றும் வினை நோக்கு (Tense and modality):** காலமும் வினைநோக்கும் எவ்வாறு கருத்துரு வரைபடம் உண்மை உலகுடன் தொடர்புபடுத்தப்படுகின்றது என்று விளக்குகிறது. அவை ஒன்று நடத்திருக்கிறதா நடக்கவியலுமா நடக்குமா நடக்கவேண்டுமா என்று கூறுகின்றது.

3. **முற்கோள் (Presupposition):** முற்கோள் என்பது பேசுபவரும் கேட்பவரும் குறிப்பாகப் புரிந்துக் கொள்ளும் பின்னணித் தகவல்.

4. **குவிய மையம் (Focus) :** பேசுபவர் தரவிரும்புகிற புதிய செய்தி, குவிய மையம் ஆகும்.

5. **இணைக்குறிப்புத் தொடர்புகள் (Coreference):** இணைக்குறிப்புத் தொடர்புகள் எந்தக் கருத்துருக்கள் ஒரே இருப்பான்களைக் குறிப்பு செய்யும் என்று காட்டும். ஒரு வாக்கியத்தில் இத்தொடர்புகள் பதிலீடு பெயர்களாலும் பிற முற்சுட்டுக் குறிப்புகளாலும் வெளிப்படுத்தப்படும்.

6. **உணர்ச்சி உணர்பொருள்கள் (Emotional Connotations):** உணர்ச்சி உணர்பொருள்கள் பேசுபவர்களின் மற்றும் கேட்பவர்களின் உள்ளங்களின் (minds) தொடர்புகளால் தீர்மானிக்கப்படும்.

சொற்பொருண்மையியலும் செயற்கை அறிதிறனும் (Lexical Semantics and Artificial Intelligent)

அறிவு அடிப்படையிலான ஒழுங்குமுறைகள் (knowledge based systems) பொருண்மையை வலியுறுத்துகின்றது. அவைத் தரவைச் சிறு துணுக்குகளின் கோர்வையாக ஆயாமல் தரவின் பொருண்மையை உண்மை உலகின் அடிப்படையில் உருப்படுத்தம் செய்கின்றன; மக்களிடம்

கருத்துப்பரிமாற்றத்தைச் சாதாரண மொழியில் செய்கின்றது; கேட்பதற்கு முன்னர் தானே முக்கியமான உண்மைகளைக் கண்டுபிடிக்கின்றது; மிக அனுபவசாலியைப் போல சிக்கல்களைத் தீர்க்கின்றன. அறிவு அடிப்படையிலான அமைப்புமுறைகளுக்கு முக்கியத்துவம் தருகின்ற இரண்டு புலங்கள் புலனறிவும் (cognitive science) செயற்கை அறிவுத்திறனும் (artificial intelligent) ஆகும். புலனறிவு என்பது தத்துவம், மொழியியல், மற்றும் உளவியல் என்பதன் ஒருங்கிணைப்பாகும். செயற்கை அறிதிறன் பொறியியல் அடிப்படையானது. இது வழியமைப்புக் கருவிகளுக்கும் (programming tools) நுணுக்கங்களுக்கும் முக்கியத்துவம் தருகின்றது. செயற்கை அறிதிறன் அறிவு உருப்படுத்தங்களையும் மொழி, காரணப்படுத்தம், கற்றல், மற்றும் சிக்கலைத் தீர்த்தல் என்பனவற்றில் அவற்றின் பயன்பாட்டையும் பற்றி ஆய்வதாகும். செயற்கை அறிதிறன் வழியமைப்பு, ஒரு அறிவு அடிப்படை (knowledge base) மாற்றத்தைப் பயன்படுத்துவதால், நிரந்தர வழியமைப்பு வழிமுறைவரைவுகளைப் (programming algorithms) பயன்படுத்தும் மரபு அடிப்படையிலான ஒழுங்கு முறைகளினின்றும் கூடுதல் நெகிழ்ச்சியுள்ளதாக இருக்கின்றது. தற்போதைய துணிபு செயற்கை அறிதிறன் அணுகுமுறையையும் புலனறிவு அறிவியல் அணுகுமுறையையும் இணைக்கும் செயல்பாடாகும்.

4.2 கருத்துரு வரைபடம் (Conceptual graph)

சாம்ஸ்கி மாற்றிலக்கணம் அறிதிறனின் (competence) ஒரு அருவக் கோட்பாடு என்றும் அது செயல்திறனின் (preformance) கோட்பாடாகக் கருதப்படக்கூடாது என்பார். ஆனால் செயற்கை அறிதிறனுக்கு வழியமைப்பாளர்கள் மக்களுக்கும் கணிப்பொறிக்கும் இடையில் நடக்கும் கருத்துப்பரிமாற்றத்திற்கு உதவி புரியும் செயல்திறன் கோட்பாட்டை வேண்டுவர். செயற்கை அறிதிறனில் கருத்துரு வரைபடம் பரவலாகப் பயன்படுத்தப் படுகின்றது. பின்வரும் கருத்துரு வரைபடம் எடுத்துக்காட்டாகத் தரப்பட்டுள்ளது.



பெட்டிகள் கருத்துருக்கள் என்றும் வட்டங்கள் கருத்துரு உறவுகள் என்றும் அழைக்கப்படும். கருத்துரு எந்த ஒரு மொழியில் வரும் எந்த உள்பொருளையும் (entiy) (அதாவது செயலையோ நிலையையோ) உருப்படுத்தம் செய்யும். கருத்துரு உறவுகள் ஒவ்வொரு உள்பொருளும் பங்காற்றுகிற பாத்திரத்தைக் குறிக்கும். மேற்கண்ட எடுத்துக்காட்டில் [பையன்] என்பது [கடி] என்ற

செயலின் (செயலி)-ஆகச் செயல்படும் கருத்துருவை உருப்படுத்தம் செய்யும். [பையன்] என்ற கருத்துரு [கடி] என்பதன் (செயப்படுபொருள்)-ஆகப் பங்கெடுக்கும் உள்பொருளை உருப்படுத்தம் செய்யும்.

பொருண்மை வலைகள், கருத்துரு சார்ந்த வரைபடங்கள், பகுக்கப்பட்ட வலைகள், அமைப்பாக்கம் செய்யப்பட்ட உரிமைபெறு வலைகள் என்ற பெயர்களில் வரைபடங்கள் செயற்கை அறிதிறனில் பயன்படுத்தப்படுகின்றது. ஆனால் மொழியியலார் ஆக்கமுறை மாற்றிலக்கணத்தில் தங்கள் கவனத்தைக் கூடுதலாகச் செலவிட்டதன் காரணமாக அவர்கள் கருத்துரு வரைபடத்தை விரைவில் ஏற்றுக்கொள்ளவில்லை. பின்வரும் விஷயங்களில் கருத்துவேறுபாடு எழுந்தது.

1. வாக்கிய உருவாக்கத்தில் தொடரியல் மற்றும் பொருண்மையியலின் பங்கு.
2. உள்ளுறை அடி அமைப்பின் பண்பு.
3. தர்க்கம், அளவையடை மற்றும் மாற்றுப்பெயர்களை அவற்றின் முன்வரு கிளவியுடன் தொடர்பு படுத்தும் முறைகள்.
4. மாற்றல்களை இயற்கைமொழியில் வரும் அமைப்பொழுங்குக்குள் அடங்கும் கட்டுப்பாடுகள்

பொருள்கோள் பொருண்மையியலார் (interpretive semantist) பொருண்மையைத் தொடரியல் அடிப்படையில் அமைந்த அடிநிலைக்கூறிலிருந்து (Base component) பெற்றனர். (பில்மோர் (1968) பெயர்த்தொடர்களுக்கும் வினைகளுக்கும் இடையே உள்ள வேற்றுமை உறவுகளைச் சுட்டிக்காட்டி வேற்றுமை உறவுகளை அக அமைப்பில் காட்ட வேண்டியதன் கட்டாயத்தைச் சுட்டிக்காட்டினார். ஆக்கமுறை இலக்கணத்தார் பொருண்மை பற்றிய எல்லாச் செய்திகளையும் அக அமைப்பில் அடக்கி பொருண்மையை அக அமைப்பாகக்கொண்டு இலக்கணம் வகுத்தனர். கருத்துரு வரைபடத்தார் எல்லா பொருண்மைகுறித்த செய்திகளையும் ஒரு அடி அமைப்பில் இருப்பதாகக்கொள்ளாமல் ஆறு வேறுபட்ட வகையிலான செய்திகளிலிருந்து வாக்கியங்கள் ஆக்கப்படுவதாகக் கொள்கின்றனர் (Sowa, 1984:10).

1. கருத்துரு வரைபடங்கள் நபர்களுக்கும் பொருள்களுக்கும் அடைகளுக்கும் நிகழ்வுகளுக்கும் இடையேயுள்ள உறவுகளைத் தெளிவுபடுத்தும் தர்க்க வடிவுகள்.

2. காலம் (tense), வினைநோக்கு (modality) என்பன கருத்துருக்களை உலகத்துடன் தொடர்புபடுத்துகின்றது.
3. முற்கோள் (presupposition) என்பது பேசுபவரும் கேட்பவரும் கருதுகின்ற பின்னமையும் செய்தி.
4. கவனக்குவிப்பு (focus) என்பது பேசுபவர் கூறமுயலுகின்ற புதிய செய்தி.
5. உடனிலைக்குறிப்புத் (coreference) தொடர்புகள் எந்த கருத்துருக்கள் ஒரே உள்பொருள்களைக் (entities) காட்டுகின்றன என்பதை வெளிப்படுத்துகின்றது.
6. உணர்ச்சி அடிப்படையிலான உணர்பொருள்கள் (connotations) பேசுபவர் மற்றும் கேட்பவர் மனதில் இருக்கும் சங்கமங்களால் நிறுவப்படுகின்றன.

பின்வரும் வாக்கியத்தைப் பார்ப்போம்.

அந்தப் பையன் நாயைக் கடித்தான்.

பின்வரும் கருத்துரு வரைபடம் இந்த வாக்கியத்தின் அடிப்படைப் பொருளை உருப்படுத்தம் செய்யும்.



இறந்தகாலமும் உள்ளது கிளத்தல் வினை நோக்கும் (indicative mood) செயல் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னர் நிகழ்ந்ததைக் குறிப்பிடும். பையன் ஒரு சூழலில் ஒரு குறிப்பிட்ட நபரின் முன்வரு கிளவியாக வருகிறது என்பது முற்கோளாகும்; அவன் சிறிது முன்னர் குறிப்பிடப்பட்டிருக்கலாம் அல்லது அந்த காட்சியில் இருக்கலாம். நாய் கடிப்பதைப் பற்றிய புதிய செய்தி கவனக் குவிப்பாகும். பையன் முன்னர் கூறப்பட்ட ஒருவரைக் குறிப்பதன் காரணமாக ஒரு உடனிலைக்குறிப்பு முன்னர் வரும் பையனை பையன் என்ற கருத்துருவுடன் தொடர்பு படுத்துகின்றது. ஆறாவதான உணர்ச்சி உணர்பொருள்கள் வாக்கியத்தில் உள்ள வார்த்தைகளாலோ வரைபடத்திலுள்ள கருத்துருக்களாலோ நேரடியாக வெளிப்படுத்தப்படவில்லை. ஆனால் அது மக்களுக்குள் வேறுபடும் முந்தைய அனுபவங்களின் சேர்க்கைகளால் நிறுவப்பெறும்.

கருத்துரு வரைபடம் என்பது மொழியியல், உளவியல், தத்துவம் என்பதன் அடிப்படையில் அமைந்த அறிவு உருப்படுத்த மொழியாக வடிவாக்கம் பெறுகின்றது. கருத்துரு வரைபடத்தில், கருத்துருக் கணுக்கள் உள்பொருள், அடைகள், நிலைகள், நிகழ்வுகள் என்பனவற்றையும் உறவுக் கணுக்கள் எவ்வாறு கருத்துருக்கள் ஒன்றுக்கொன்று தொடர்புடையனவாக இருக்கின்றன என்பதையும் உருப்படுத்தம் செய்யும்.

4.2.1 புலனுணர்வுகளும் கருத்துருக்களும் (Percepts and concepts)

புலன்சார் உள்ளீட்டை உருப்படுத்தமும் பொருள்கோளும் செய்கின்ற ஒரு வேலைசெய்யும் மாதிரியை உருவாக்கும் செயல்பாடு புலனாலுணர்தலாகும். இந்த மாதிரிக்கு இரண்டு கூறுகள் உண்டு:

1. உள்ளீட்டின் சில நோக்குடன் பொருந்தும் புலனுணர்வுகளின் ஒருங்கிணைந்த அமைப்பிலிருந்து உருவான புலன்சார் பகுதி.
2. எவ்வாறு புலனுணர்வுகள் ஒன்றுசேர்ந்து ஒருங்கிணைந்த அமைப்பாக உருவாகின்றன என்று விளக்கும் அருவமாக அமைகிற பகுதியான கருத்துரு வரைபடம்.

கருத்துரு வரைபடங்கள் எல்லாம் முற்றுப்பெற்றவை, இணைக்கப்பட்டவை, ஈரிணையானவை. கருத்துரு வரைபடங்கள் கருத்துருக்கள், கருத்துரு உறவுகள் என்ற இரண்டு வேறுபட்ட கணுக்களைக் கொண்டிருப்பதால் அவை ஈரிணையானவை. ஒவ்வொரு வட்டத்துண்டும் ஒரு கணுவை மற்றொரு கணுவுடன் இணைக்கின்றது.

இரு செங்கல்களுக்கு இடையே இடைவெளி இருக்கின்றது.

4.2.2 பொருண்மை வலை

பூனை, தக்காளி போன்ற கருத்துரு வகைகள் கருத்துருக்களுடன் நேரடித் தொடர்புடையன. ஆனால் வேறுவகையில் படும் கருத்துரு வகைகளான *விலை, செயல்பாடு, நீதி* போன்றவை புலன்சார் ஒப்பீடுகள் இல்லாத காரணத்தால் அருவக் கருத்துருக்கள் புலனுணர்வுகளுடன் நேரடியான தொடர்பாலன்றி பருமைக் கருத்துருக்களுடன் இறுதியில் தொடர்வுபடுத்தும் உறவுகளின் விரிந்த வலை அமைப்பு வழியாகப் பொருண்மையைப் பெறும். கருத்துருக்கள் பிற கருத்துருக்கள், புலன்உணர்வுகள், வழிமுறைகள், இயக்க நுட்பம் இவற்றுடன் கொண்டுள்ள உறவுகளின் மொத்தத் தொகுதிதான் பொருண்மை வலை எனப்படும். பருமைக் கருத்துருக்கள் புலனுணர்வுகளுடன் உலக அனுபவத்திற்காகவும் அவற்றுடன் இயக்க நுட்பம் செயல்படவும் தொடர்புகொண்டுள்ளன. சில கருத்துருக்கள் ஒரு மொழியிலுள்ள சொற்களுடனும் இலக்கண விதிகளுடனும் தொடர்பு கொண்டுள்ளன.

ஒவ்வொரு கருத்துரு வரைபடமும் ஒரு தேற்றக்கூற்றை வலியுறுத்துகின்றன. சொல் வலை மிகப் பெரிதானது.

பையன் வாதுமைக் கொட்டை ஓட்டால் செய்த கரண்டியால் வாதுமைக் கொட்டை சாப்பிடுகிறான்.



3.2.3 தனிநபர்கள் மற்றும் பெயர்கள்

அபதுல்கலாம், ராமன் என்பன இயற்பெயர்கள்; ஆனால் கட்டிடம், வழக்கறிஞர், பூனை மற்றும் பாதசாரி என்பன பொதுப்பெயர்கள். தமிழும் பிற இயற்கை மொழிகளும் இவ்விரு வகைச் சொற்களை வேறுபடுத்துகின்றன. இயற்பெயர் என்பது ஒரு குறிப்பிட்ட நபர், இடம், பொருள், குழு இவற்றைக் குறிப்பிடும் ஒரு இடுகுறிப் புலக்குறிப்பாகும் (arbitrary label). ஒரு பொதுப்பெயர் அது குறிப்பிடும் இருப்புப்பொருளின் சில அடைமொழிகளைச் சிறப்புரை செய்யும் பொதுவினைச் சொல்லாகும்; அது அந்த அடைமொழியுள்ள எந்த இருப்புப்பொருளுக்கும்

சமமாகப் பொருந்தும். பொதுவாக பொதுப்பெயர்கள் வகைப் புலக்குறிப்புடன் பொருந்தும்; பெயர்கள் குறிப்பிட்ட தனிநபர்களைக் குறிப்பிடும். '*' பொதுவினக் கருத்துக்களைக் குறிப்பிடவும் '#' தனிநபர் கருத்துருக்களையும் குறிப்பிடவும் பயன்படுத்தப்படுகின்றது. @ என்ற குறியீடு அதைத் தொடர்ந்துவரும் கோர்வை ஒரு இருப்புப்பொருளின் அளவு என்று காட்டும்.

4.2.4 வாய்பாட்டுக் கருத்துரு வரைபடம்

ஒரு கருத்துரு வரைபடம் கருத்துரு கணுக்கள் மற்றும் உறவுக் கணுக்கள் இவற்றின் ஒருங்கிணைப்பாகும்; இதில் ஒவ்வொரு கருத்துரு உறவின் ஒவ்வொரு வில்லும் ஒரு கருத்துருவுடன் தொடப்புபடுத்தப்பட்டுள்ளது. ஆனால் எல்லா ஒருங்கிணைப்பும் அர்த்தம் தராது. சில பின்வருமாறு பொருளற்ற ஒருங்கிணைப்பைக் காட்டும்:

[தூங்கு]→(செயலி) →[கருத்து] →(நிறம்)→ [பச்சை]

வெளியுலகில் உண்மையான அல்லது சாத்தியமான சூழல்களை உருப்படுத்தம் செய்யும் பொருள்தரும் கருத்துரு வரைபடத்தை வேறுபடுத்த சில வரைபடங்கள் வாய்ப்பாட்டு வரைபடங்கள் எனக் கூறப்படுகின்றன.

[சிறுமி]←(செயலி) ←[உண்] →(முறை)→ [விரைவாக]
'சிறுமி விரைவாக உண்கிறாள்'
[நபர்:ராமன்]←(செயலி) ←[சாப்பிடு] →(செபொ)→ [கடலை]
'ராமன் கடலை சாப்பிடுகிறான்'

4.2.5 பொதுமையாக்கமும் சிறப்பாக்கமும் (generlaiztion and specializtion)

வாய்ப்பாட்டு வடிவமாக்க விதிகள் யாவும் சிறப்பாக்க விதிகளாகும்.

ஒரு பொதுவான பொதுமையாக்கமும் ஒரு பொதுவான சிறப்பாக்கமும்:

[நபர்]←(செயலி) ←[உண்]

[சிறுமி]←(செயலி) ←[உண்] →(முறை)→ [விரைவாக]

[நபர்:ராணி]←(செயலி) ←[சாப்பிடு] →(செபொ)→ [கடலை]

[சிறுமி:ராணி]←(செயலி) ←[உண்] →(முறை)→ [விரைவாக]

↓

(செபொ)→ [விரைவாக]

4.2.6 சுருக்கமும் வரையறைவிளக்கமும் (abstraction and definition)

நினை, அறி மற்றும் நம்பு என்ற வினைகள் ஒரு முழு வாக்கியத்தையும் அவற்றின் செயப்படுபொருளாக ஏற்கும். இது வரைபடங்களின் அமைப்புகள் பிற வரைபடத்தின் கணுவிற்குள் உட்படுவதற்கு ஏதுவாகும். ராஜா ராணியை விரும்புகிறான் என்பதை ஒரு எளிய வரைபடத்தில் உருப்படுத்தம் செய்யவியலும். ஆனால் ராஜா ராணியை விரும்புகிறான் என நான் எண்ணுகிறேன் என்பது பின்வரும் வரைபடத்தைக் காட்டும்:

[தேற்றக்கூற்று]: [நபர்:ராஜா]←(அனுபவிப்பவர்) ←[விரும்பு] →(செபொ)→ [நபர்:ராணி]

ஒரு வரையறை விளக்கம் ஒரு முழுமையான வரைபடைத்தை ஒரு பெயருடனோ வகைப் புலக்குறிப்புடனோ சமன்படுத்தலாம்.

வரையறை விளக்கம் ஒரு வகையை இரு வேறுபட்ட வழிகளில் சிறப்புரை செய்யலாம்: வகைக்குத் தேவையான மற்றும் போதுமான கட்டுப்பாடுகளைக் கூறி சிறப்புரை செய்யலாம் அல்லது சில எடுத்துக்காட்டுகளைக் கூறி இதுபோன்ற பொருள்கள் இந்த வகையைச் சாரும் என்று சிறப்புரை செய்யலாம். முதலாவது முறை அரிஸ்டாட்டிலின் பெதுக்கூறு (genus) மற்றும் சிறப்புக்கூறு (differentiae) என்பதால் வரையறை விளக்கம் செய்வதிலிருந்து ஆக்கப்பட்டதாகும். பொதுக்கூறு மற்றும் சிறப்புக்கூறு இவற்றால் செய்யப்படும் வரையறை விளக்கம் தர்க்க அடிப்படையில் கையாளுவதற்கு எளியதாகும். எடுத்துக்காட்டுகளாலும் மூல மாதிரிகளாலும் செய்யப்பம் வரையறை விளக்கம் இயற்கை மொழிகளையும் உண்மை உலகில் அதன் பயன்பாடுகளையும் கையாளுவதற்கு முக்கியமானதாகும்.

கருத்துரு வரைபடங்கள் பொதுக்கூறுகளாலும் சிறப்புக்கூறுகளாலும் மற்றும் திட்டவரைவுகளாலும் (schemata) மூலமுன்மாதிரிகளாலும் (prototypes) வரையறை விளக்கம்

செய்வதை ஆதரிக்கின்றது. இந்த இரு முறைகளும் வடிவ அளவீடுகளாகக் குறிப்பிடப்படும் ஒன்றோ அதற்குக் கூடுதலான கருத்துருக்கள் கொண்ட கருத்துரு வரைபடங்களான சுருக்கங்களின் அடிப்படையில் ஆகும்

முத்தமிடு என்பதன் வகை வரையறை விளக்கம் பின்வருமாறு அமையும்:



முத்தமிடு: 'ஒரு நபர் உதடுகளால் மிருதுவாகத் தொடுதல்'

வாங்கு என்பதன் வகை வரையறை விளக்கம் பின்வருமாறு அமையும்:



4.2.7 ஒன்றுதிரட்டலும் தனிநிலைப்படுத்தலும் (aggregation and individuation

ஒவ்வொரு பன்மைப் பெயரும் ஒரு குழுமத்தை உருப்படுத்தம் செய்யும். ஒரு குழுமத்தை உருப்படுத்தம் செய்ய ஒரு கருத்துரு மீசை அடைப்புக்குறிக்குள் மூடப்பட்ட ஒரு குழுமப் பெயர்களையோ தனிநிலை குறியீடுகளையோ கொண்டிருக்கும்: [நாய்:{ஜிம்மி, பப்பி, ரோசி}].

மூன்று வேறுபட்ட பயன்பாடுகளைப் பன்மை பெயர்த்தொடர்களுக்கு வேறுபடுத்தலாம்:

தொகை (collective): ஒரு குழுமத்தின் எல்லாத் தனிமங்களும் சேர்ந்து ஏதோ ஒரு உறவில் பங்களிப்பு செய்யும். எ.கா. ராஜாவும் ராணியும் அந்த வீட்டின் சொந்தக்காரர்கள்.

பகிர்வு (distributive): ஒரு குழுமத்தின் ஒவ்வொரு தனிமங்களும் ஏதோ ஒரு உறவைத் திருப்திசெய்யும், ஆனால் அதைத் தனித்தனியாகச் செய்யும். எ.கா. ராஜாவும் ராணியும் சிரிக்கிறார்கள்.

முறையே: ஒரு நிரல்படுத்தப்பட்ட வரிசைசையின் ஒவ்வொரு தனிமமும் மற்றொரு வரிசையின் பொருத்தமான தனிமத்துடன் ஒரு குறிப்பிட்ட உறவு கொண்டிருக்கும்.

கருத்துரு வரைபடத்தில் மீசை அடைப்புக்குறிகள் ஒரு தொகைப் பொருள்கோளைக் காட்டும்: {ராஜா, ராணி, கண்ணன்} (அதாவது ராஜாவும் ராணியும் கண்ணனும்). ஒரு குழுமத்தின் முன்னால் வரும் 'பகிர்' பகிர்ந்துகொள்ளப்படும் பொருள்கோளைக் காட்டும்: பகிர் {ராஜா, ராணி, கண்ணன்}. கோண அடைப்புக்குறிகளுக்குள் **(<, >)** வரும் ஒரு குழுமத்தின் முன் வரும் 'முறையே' என்ற குறிப்பு முறையே வரும் பொருள்கோளைக் காட்டும்: முறையே <ராஜா, ராணி, கண்ணன்>. பிரிநிலைக் குழுத்தில் வரும் (distibutive set) தனிமங்கள் செங்குத்துக்கோடால் பிரிக்கப்படும்: {ராஜா| ராணி| கண்ணன்} (அதாவது ராஜா அல்லது ராணி அல்லது கண்ணன்).

4.3. திட்டவரைவும் முன்மாதிரியும் (Schemata and ptototype)

மனிதமாதிரியான புரிந்துகொள்ளலை உருப்படுத்தம் செய்யும் அடிப்படை அமைப்பை திட்டவரைவு என்பர். திட்டவரைவு கருத்துரு வரைபடத்தின் மூன்றாம் நிலை கலவையாகும்.

1. இடுகுறியான கருத்துரு வரைபடங்கள் அனுமதிக்க இயலும் இணைப்புகளுக்கு எந்தக் கட்டுப்பாடையும் விதிக்காது.

2. வாய்பாட்டு கருத்துரு வரைபடங்கள் (Canonical form) தேர்வுக்கட்டுப்பாடுகளை விதிக்கும். இவை மொழியியலில் வேற்றுமைச் சட்டகத்துடனும் தத்துவத்தில் வகைப்பாட்டுக் கட்டுப்பாடுகளுடன் ஒப்புமைப்படுத்தத்தக்கது.

3. திட்டவரைவு (Schemata) உண்மை உலகிலுள்ள உள்பொருள்கள், அடைகள், நிகழ்வுகள் இவற்றின் கூட்டத்தைப் பற்றிய குறிப்பிட்ட பொருட்புல அறிவை உட்படுத்தும்.

பஸ் என்பதற்கான திட்டவரைவு கீழே தரப்பட்டுள்ளது.



முன்மாதிரி என்பது ஒரு மாதிரி நிகழ்வு. ஒரு குறிப்பிட்ட நபரை/ஒன்றை விளக்காமல் ஒரு மாதிரி சராசரி நபரை/ஒன்றை விளக்கும். எடுத்துக்காட்டாக ஒரு யானையின் திட்டவரைவு ஒரு எல்லைக்குட்பட்ட பண்புகளையோ பழக்கவழக்கங்கள் மற்றும் இருப்பிடங்களையோ குறிப்பிடும். முன்மாதிரி (prototype) அம்மாதிரியான திட்டவரைவுகளை ஒருங்கிணைத்தும் கட்டுப்படுத்தியும் ஒரு மாதிரி யானையை விளக்கும். பின்வருவது யானையின் முன்மாதிரியாகும்.

[யானை: *X] -
(பண்பு) → [உயரம்: @3.3. மீ]
(பண்பு) → [எடை: @5400 கி.கி.]
(நிறம்) → [கறுப்பு]
(பாகம்) → [முக்கு] -
(அடை)
(பிடிகை) → [துதிக்கை]
(பாகம்) → [காது: {* }]
(எண்ணிக்கை) → [எண்:2]
(அடை) → [முறம்போன்ற]

(பாகம்) ⟶ [கொம்பு: {* }] -
(எண்ணிக்கை) ⟶ [எண்:2]
(செய்பொருள்) ⟶ [தந்தம்]
(பாகம்) ⟶ [கால் {* }] -
(எண்ணிக்கை) ⟶ [எண்:4]
(நிலை) ⟶ [வாழ்] -
(வாழ்விடம்) ⟶ [கண்டம்: {ஆப்பிரிக்கா}]
(வாழ்நாள்) ⟶ [காலம்: @50 ஆண்டுகள்]

முடிவுரை

கருத்துரு வரைபடம் அடிப்படையில் தமிழ் வாக்கியங்களை ஆய்யும் இவ்வாய்வு ஒரு தொடக்க நிலையில்தான் உள்ளது. இதை விரிவடையச் செய்வதற்காத்தான் அடுத்த இயல் எழுதப்பட்டுள்ளது.

இயல் 5

வினைகளும் பங்கெடுப்பாளர் அமைப்பும்

5.1 முன்னுரை

ஒவ்வொரு பயனிலையும் அது ஏற்கும் பங்கெடுப்பாளர்களையும் ஒரு பங்கேற்பாளர் அமைப்பையும் கொண்டிருக்கும் (Grimshaw, 1990). பங்கேற்பாளர்கள் ஒரு பயனிலையால் விளக்கப்படும் செயலிலோ நிலையிலோ கட்டாயமாக உட்படுத்தப்படவேண்டிய அலகுகளை உருப்படுத்தம் செய்யும். அடைகள் (adjuncts) செயல் அல்லது நிலை விளக்கங்களில் கூறத்தக்க விதத்தில் பங்கு கொண்டாலும் பங்கேற்பாளர் விளக்க அமைப்பில் உட்படுத்தப்படுவதில்லை. வினைகளுக்கும் சில பெயர்களுக்கும் பெயரடைகளுக்கும் முன்னுருபுகளுக்கும்/ பின்னுருபுகளுக்கும் பங்கேற்பாளர் அமைப்பு உண்டு. பங்கேற்பாளர் அமைப்பு உள்வகைப்பாட்டுச் சட்டகம் மற்றும் மையப்பொருள் பாத்திரங்கள் (thematic roles) என்ற கருத்துச்சாயல்களுடன் தொடர்புபடுத்தப்படுகின்றது என்றாலும் பங்கேற்பாளர் அமைப்பு பங்கேற்பாளர்களின் தொடரியல் வகைப்பாட்டைப்பற்றி ஒன்றும் கூறுவதில்லை. ஒரு வினையின்

பங்கேற்பாளர் அமைப்பு அவ்வினைவரும் தொடரியல் கட்டுமானத்தில் எத்தனை பங்கேற்பாளர்கள் இருக்கவேண்டும் என்பதை விளக்கும்.

கொடு: 3 (அல்லது, மாறாக: கொடு: X,Y,Z)

நினை: 2

வாதிடு: 2

தூங்கு: 1

வினைகளுடன் தொடர்புடைய அடைகளான காலம், இடம் அல்லது முறைமை போன்றவை கூடுதல் செய்திகளைப் பயனிலைக்குத் தரும். ஆனால் அவைகள் பங்கேற்பாளர் அமைப்பில் வருவதில்லை. சில சமயங்களில் பங்கேற்பாளர் விடப்படலாம்.

ராமன் புத்தகம் கொடுத்தான்.

வினைகளைப் போல் பல பெயர்களுக்கும் அடைகளுக்கும், பின்னுருபுகளுக்கும் பங்கேற்பாளர் விளக்க அமைப்பு உண்டு. அவற்றின் பங்கேற்பாளர்கள் விருப்பாக வருவதோடு வாக்கியத்தில் உருப்படுத்தம் செய்யப்படாதும் வரலாம்.

எடுத்துக்காட்டு:

அழிவு: பெயர், 1 (நகரத்தின் அழிவு)

முயற்சி: பெயர், 2 (போவதற்கு X-இன் முயற்சி)

வரவு: பெயர், 1 (X-இன் வரவு)

திறமையான: பெயரடை, 1 (திறமையான X)

வெளியே: பின்னுருபு, 2 (X Y-க்கு வெளியே)

இடையில்: பின்னுருபு, 3 (X Y-க்கும் Z-க்கும் இடையில்)

மையப்பொருள் பாத்திரங்கள் (Thematic roles)

பங்கேற்பாளர்களுக்கும் பயனியலைக்கும் உள்ள உறவை மையப்பொருள் பாத்திரங்களால் உருப்படுத்தம் செய்யலாம். எடுத்துக்காட்டாக மூன்று ஏற்புகள் பெறும் *கொடு* என்பதன் முதல் பங்கேற்பாளர் செய்பவர் என்ற பாத்திரத்தையும் இரண்டாவது பங்கேற்பாளர் செயலுக்குள்ளாகுபவர் என்ற பாத்திரத்தையும் பெறும். மையப்பொருள் பாத்திரங்களின் வரையறை விளக்கம் பெரும்பாலும் முழுமையாக அமைவதில்லை. மிகமுக்கியமான மையப்பொருள் பாத்திரங்களின் வரையறை விளக்கங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

1. செய்பவர் (agent): செயலைச் செய்வதாகவோ செயல்படுத்துவதாகவோ பயனிலையால் நிர்ணயிக்கப்படுகின்ற பங்கெடுப்பாளர்.

   எ.கா : *உண், இடி, கவனி, கொடு* என்பதன் முதனிலை பங்கேற்பாளர்.

2. செயலுக்குள்ளாபவர் (patient): செயலுக்கு உள்ளாகும் அல்லது செயலால் பாதிக்கப்படும் பங்கேற்பாளர்.

எ.கா : *கொல், உண்* என்பதன் இரண்டாம்நிலைப் பங்கேற்பாளர்.

3. தீம் (theme): இடம், நிலைமை அல்லது நிலை மாற்றுகின்ற அல்லது ஒரு நிலையில் அல்லது இருப்பில் இருக்கின்ற பங்கெடுப்பாளர்.

   எ.கா : *கொடு* என்பதன் முதல்நிலை பங்கேற்பாளர், *நட, இற* என்பதன் பங்கேற்பாளர்.

4. அனுபவிப்பவர் (experiencer): ஒன்றைப்பற்றி தெரிவிக்கப்படும் அல்லது பயனிலையால் வெளிப்படுத்தப்பட்ட ஒரு உளநிலையை அனுபவிக்கும் பங்கெடுப்பாளர்.

   எ.கா : *காதலி* என்பதன் முதநிலைப் பங்கேற்பாளர், *வெறுஊட்டு* என்பதன் இரண்டாம் நிலைப் பங்கேற்பாளர்.

5. மூலவிடம்: நகர்வு எங்கிருந்து நிகழுகிறதோ அது.

எ.கா : *நீங்கு* என்பதன் இரண்டாம் நிலை பங்கேற்பாளர்.

6. குறியிடம்: நகர்வு எதைநோக்கி நிகழ்கிறதோ அது.

எ.கா : வந்துசேர் என்பதன் இரண்டாம் நிலை பங்கேற்பாளர்.

7. இடம்: பயனிலையால் விளக்கப்படும் செயலோ நிலையோ நிகழுமிடம்.

எ.கா : *வீழ்* என்பதன் இரண்டாம் நிலை பங்கேற்பாளர்.

பயன்பெறுபவர்: வினையால் வெளிப்படுத்தப்படும் செயலால் பயன்பெறும் பங்கேற்பாளர்.

எ.கா : *கொடு* என்பதன் இரண்டாம்நிலை பங்கேற்பாளர்.

மையப்பொருள் பாத்திரங்களின் படிநிலை ஒழுங்கு

(செய்பவர் (அனுபவிப்பவர் (குறியிடம்/மூலவிடம்/இடம் (தீம்/செயலுக்குள்ளாகுபவர்)

கொடு (செய்பவர் (குறியிடம்(தீம்)))

சந்தி: (செய்பவர் (தீம்))

1 2

பயப்படு: (அனுபவிப்பவர் (தீம்))

மையப்பொருள் மூலபாத்திரங்களை நோக்கி (Toward thematic proto-role)

Cruse (1986)

செய்பவர்: +விருப்பச்செயல், +செயன்மை, +செயலூக்கம் +முதன்முயற்சி

Dowty (1991)

செய்பவர்:

+விருப்பச்செயல் (ராமன் வேலை செய்கிறான்.)

+புலனணர்வு (ராமனுக்கு அது தெரியும்.)

+ஒரு நிகழ்வை நிகழச்செய்தல் (தொலைபேசி மணி தடை செய்தது.)

+சலனம் (காற்று கூரை பிய்ய வீசியது.)

செலுக்கு ஆளாகுபவர்:

+நிலைமாற்றம் (ராமன் கதவைத் திறந்தான்)

+கூடுதல் தீம் (ராமன் புத்தகம் எழுதுகிறான்)

+காரணத்தாக்க நிகழ்வு (புகைபிடிப்பது புற்றுநோயை உருவாக்கும்.)

+நிலையானது, மூல-செய்பவரை ஒப்பிடுகையில் (பேருந்து நிறுத்துமிடத்துக்குள் புகுந்தது.

தேர்வு கட்டுப்பாடுகள் (Selectional restrictons)

தேர்வுக்கட்டுப்பாடுகள் பங்கேற்பாளர்களின் பொருண்மைக் கூறில் கூடுதலான பயன்வழியியல் அளவையை அறிமுகப்படுத்தும். தேர்வுக்கட்டுப்பாடுகள் இயற்கை மொழியியல் ஆய்வில் பெரிதும் பயன்படுத்தப்படுகின்றன. இவை செயற்கை அறிதிறன் அறிவு உருப்படுத்த நுண்மையை அடிப்படையாக்கொண்டது. ஒரு பயனிலையின் ஒவ்வொரு பங்கெடுப்பாளரையும் ஒரு பட்டியல் பொருண்மைப் பண்புக்கூறுகளோடு தொடர்புபடுத்துவது இதன் அடிப்படைக் கொள்கையாகும்.

- [Fi] ஒரு தனிப்பட்ட பொருண்மைக் கூறு.
  எ.கா: மனிதவினம், விலங்கினம், உண்ணக்கூடியது போன்றவை.
- [F1^F2^...Fn] கட்டாயம் வரவேண்டிய கட்டுப்பாடுகளின் இணைப்பை வெளிப்படுத்தும் அலகுகளின் இணைப்பு.
- [F1vF2...vFn] கட்டுப்பாடுகளை வேறுபடுத்தல். ஏதாவது ஒன்று கட்டாயம் வரவேண்டும்.

- இணைப்புகள் மற்றும் வேறுபடுத்தல் என்பதன் கலவை.

எடுத்துக்காட்டாக *குடி* என்ற வினை பின்வரும் பொருண்மைப் பண்புக்கூறுகளைக் கொண்ட செயப்படுபொருளை வேண்டும்.

[திரவம்^உண்ணக்கூடியது]

தேர்வுக்கட்டுப்பாட்டில் பயன்படுத்தப்படும் பொருண்மை வகைளை வகை/துணைவகை உறவால் அமைப்பாக்கம் செய்யலாம்.



மேற்கண்ட விளக்கங்களின் அடிப்படையில் தமிழ் வினைகள் இராசேந்திரன் அவர்களின் தற்காலத் தமிழ்ச்சொற்களஞ்சியத்தை (இராசேந்திரன், 2001) அடியொற்றி பின்வரும் பொருண்மைக்களங்களாகப் பிரிக்கப்பட்டு அவைகளின் பங்கெடுப்பாளர் அமைப்பு இங்கு விளக்கப்பட்டுள்ளன. இத்தகைய பகுப்பு ஒவ்வொரு வினையும் ஏற்கும் பங்கெடுபாளர்களையும் அவற்றின் பங்களிப்பையும் தேர்வுக்கட்டுப்பாட்டையும் தெளிவாகப் புரிந்துகொள்ள உதவும். இது முந்தைய பகுதிகளில் விளக்கப்பட்ட வினை-பங்கெடுப்பாளர் அமைப்பின் அடிப்படையில் அமைந்த வாக்கியப் பொருண்மையியல் அமைப்பை உருவாக்க உதவும்.

(1) பௌதிக நிகழ்வுகள்

திரவம் சம்பந்தப்பட்டவை, காற்று சம்பந்தப்பட்டவை, பரவுதல், ஒலி குறித்தவை, எரிதல் குறித்தவை, அணைதல் குறித்தவை, ஒளி குறித்தவை, நிறம் குறித்தவை, தெளிவு குறித்தவை, சலனம் குறித்தவை, மாற்றம் குறித்தவை: காய்வு குறித்தவை, நனைவு குறித்தவை, குளிர்ச்சி குறித்தவை, பலத்தல் குறித்தவை, உறைதல் குறித்தவை, நெகிழ்தல் குறித்தவை, அவிழ்தல்

குறித்தவை, கரைதல் குறித்தவை, உயர்தல் குறித்தவை, தாழ்தல் குறித்தவை, உருமாற்றம் குறித்தவை,

(2) உடற்கூறு சம்பந்தப்பட்ட நிகழ்வுகள்

உட்கொள்ளுதல், ஜீரணம் சம்பந்தப்பட்டவை, வெளியேற்றுதல், இனப்பெருக்கம், உறக்கம்/விழிப்பு குறித்தவை, மயக்கம்/தெளிவு குறித்தவை, மூச்சு சம்பந்தப்பட்டவை, பிற அனிச்சை செயல்கள், உடல் வளர்ச்சி குறித்தவை, வாழ்தல் குறித்தவை, பிறத்தல் குறித்தவை, இறத்தல் குறித்தவை, புலனுணர்வு குறித்தவை.

(3) உணர்தல்

தொடு உணர்வு, கட்புல உணர்வு, நுகர்தல் உணர்வு, செவியுணர்வு, மெய்யுணர்வு

(4) உணர்ச்சிகள்

நேசித்தல், பக்தி கொள்ளுதல், விரும்புதல், மோகித்தல், இரங்குதல், அருளுதல், வெறுத்தல், பொறாமைப் படுதல், கோபித்தல், சாந்தப்படுதல், அடங்குதல், பொறுத்தல், திருப்திப்படுதல், அதிருப்திபடுதல், ஆச்சர்யப்படுதல், மயங்குதல், குழம்புதல், பதறுதல், துக்கப்படுதல், அழுதல், மகிழ்தல், சிரித்தல், பயப்படுதல், தைரியங்கொள்ளுதல், தளர்தல், கர்வப்படுதல், பிணங்குதல், பகைத்தல், ஜாக்கிரையடைதல், வெட்கப்படுதல், நம்புதல், சந்தேகித்தல், அவமானப்படுதல், குறுகுறுத்தல், அறிவுசம்பந்தப்பட்ட நிகழ்வுகள்.

(5) அறிதல்

முடமை, கற்றல், எண்ணுதல், யோசித்தல், நினைத்தல், மறத்தல், கற்பனை செய்தல், ஆய்தல், ஒப்பிடுதல், ஊகித்தல், நிரூபித்தல், நச்சயித்தல், தீர்வுகாணுதல், கண்டுபிடித்தல், சம்மதித்தல், பெருகுதல்

(6) கருத்துப்பரிமாற்றம்

குறிப்பாலுணர்த்துகை, குறிப்புகாட்டுகை, கண்குறிப்பு, முகக்குறிப்பு, கைக்குறிப்பு, தலைக்குறிப்பு, ஒலிக்குறிப்பு, சொல்லாலுணர்துகை, பேசுதல் குறித்தவை, வாதித்தல் குறித்தவை, கேட்டல், குறித்தவை, வேண்டுதல் குறித்தவை, அழைத்தல் குறித்தவை, சொல்லுதல், விடைகூறுதல், புழுகுதல், பசப்புதல், சொற்பொழிவாற்றுதல், அறிவித்தல், விளக்குதல், கற்பித்தல், முன்னறிவித்தல், கட்டளையிடுதல், புகழ்தல், வாழ்த்துதல், பழித்தல், பரிகசித்தல், சபதம் செய்தல், எதிர்த்தல், ஆற்றுதல், முறையிடுதல், பிரார்த்தித்தல், முழுமையற்ற பேச்சு, வழங்குதல் குறித்தவை

(7) சேர்க்கை

(7அ) சேர்த்தல் குறித்தவை

சேர்த்தல், அணிதல், சேகரித்தல், கலத்தல், தழுவுதல், கூடுதல், பழகுதல், உறவுகொள்ளுதல், ஒன்றுதல், கல்யாணம் குறித்தவை, சம்மதித்தல், ஒத்தல்

(7ஆ) பிரிவுகுறித்தவை

பிரித்தல், நீக்குதல், புறக்கணித்தல், வேறுபடுதல், சண்டையிடுதல்,

(8) கட்டுப்படுத்துகை

கட்டுப்படுத்தல், தடுத்தல், பிடித்தல், தண்டித்தல், கட்டாயப்படுத்தல், ஆள்தல், விடுதலை குறித்தவை, விடுதல், நழுவுதல், எதிர்த்தல்.

(9) சலனம்

முன்னேற்றங் குறித்த சலனம், திசை குறித்த சலனம், இடநோக்கு சலனம், மேல்நோக்கு சலனம், கீழ்நோக்கு சலனம், திசைகுறிக்காத சலனம், முன்னேற்றங் குறிக்காத சலனம், அசைதல், மறிதல்

(10) தாக்கம்

துண்டுபடுத்தாத் தாக்கம்: அடித்தல் பற்றியவை, மோதுதல் பற்றியவை, மிதித்தல் பற்றியவை, அமுக்குதல் பற்றியவை, திருகுதல் பற்றியவை, தொடுதல் பற்றியவை, பூசுதல், அப்புதல், கிறுக்குதல், துடைத்தல், பொருக்குதல், சீவுதல், துலக்குதல், தீட்டுதல், கடித்தல், கிளறுதல், துளைத்தல், கலக்குதல், கொல்லுதல், இழுத்தல், தள்ளுதல்; துண்டுபடுத்தும் தாக்கம்: வெட்டுதல் குறித்தவை, இரண்டுபடல் குறித்தவை, கிழித்தல் குறித்தவை, அற்றல், உடைத்தல் குறித்தவை, நசுக்குதல் குறித்தவை, சவைத்தல் குறித்தவை, அரைத்தல் குறித்தவை.

(11) கைமாற்றம்

கையிலிருந்து போதல்: கொடுத்தல், உரிமைமாற்றம் பற்றியவை, செலவழித்தல் பற்றியவை, செலுத்துதல் பற்றியவை, போடுதல் பற்றியவை, எறிதல் பற்றியவை, ஊற்றுதல் பற்றியவை, இழ்தல் பற்றியவை, தத்தம் செய்தல், கைவிடுதல், கைக்குவருதல்: வாங்குதல் பற்றியவை, திருடுதல் பற்றியவை, பிடுங்குதல் பற்றியவை, பறித்தல் பற்றியவை, எடுத்தல் பற்றியவை, உரிமைமாற்றம் பற்றியவை, சம்பாதித்தல் பற்றியவை, அடைதல் பற்றியவை, கிடைத்தல் பற்றியவை, கைப்பற்றுதல் பற்றியவை, வியாபாரம் குறித்தவை

(12) பல்கூட்டான செயல்கள்

செய்தல், சேவகம் செய்தல், கடன்புரிதல், உழைத்தல், உதவுதல், உபசரித்தல், மதித்தல், உண்டாக்குதல், ஆயத்தப்படுத்துதல், அழகுபடுத்துதல், பழுதுபார்த்தல், பதப்படுத்துதல், சுத்தம் செய்தல், குளித்தல், சிகிச்சை செய்தல், பயிற்சி செய்தல், சீர்படுத்துதல், முன்றேற்றுதல், சடங்குகள் மற்றும் விழாக்கள் நடத்துதல், கேளிக்கைகள், ஒழுகுதல், வாழ்தல், வசித்தல், தீங்கு செய்தல்

5.1 பௌதீக வினைகள்

பௌதீக வினைகளை நிகழ்தலைக் குறிக்கும் வினைகள் சூரியன், சந்திரன் தொடர்பான வினைகள், திரவம் தொடர்பான வினைகள், மழை பெய்தல் தொடர்பான வினைகள், காற்றின் இயக்கம் தொடர்பான வினைகள், பரவுதல் குறித்த வினைகள், எரிதல் குறித்த வினைகள், அணைதல் குறித்த வினைகள், ஒளிர்தல் குறித்த வினைகள், நிறம் குறித்த வினைகள், தெளிதல் குறித்த வினைகள், மாற்றம் குறித்த வினைகள், காய்தல் குறித்த வினைகள், நனைதல் குறித்த வினைகள், குளிர்தல் குறித்த வினைகள், பலத்தல் குறித்த வினைகள், உறைதல் குறித்த வினைகள், இளகுதலைக் குறிக்கும் வினைகள், இறுக்கம் இழத்தலைக் குறிக்கும் வினைகள், உயர்தலைக் குறிக்கும் வினைகள், தாழ்தலைக் குறிக்கும் வினைகள்,உருமாற்றம் குறித்த வினைகள், சுருக்கம் அடைதல் குறித்த வினைகள், மடிதல் குறித்த வினைகள், வளைதல் குறித்த வினைகள், உள்நோக்கி வட்டமாக மடங்குதல் குறித்த வினைகள், அழுத்தப்படுவதால் வெளிவருதல் குறித்த வினைகள், அளவில் பெரிதாதல் குறித்த வினைகள், மடங்கியது நேராதல் குறித்த வினைகள், பருமன் மிகுதல் குறித்த வினைகள், நீளுதல் குறித்த வினைகள், அளவில் குறைதல் குறித்த வினைகள், கரைதல் குறித்த வினைகள், சில/பல துண்டுகளாதல் குறித்த வினைகள், பிரிதல் குறித்த வினைகள், இற்றுப்போதல் குறித்த வினைகள், தூளாகுதல் குறித்த வினைகள், நசுங்குதல் குறித்த வினைகள், கெடுதல் குறித்த வினைகள், அளவில் கூடுதல் குறித்த வினைகள், எண்ணிக்கை அதிகரித்தல் குறித்த வினைகள், குறைதல் குறித்த வினைகள் என நாற்பத்தி மூன்று வினைகள் சேகரிக்கப்பட்டுள்ளன. மேலும் இதனை வினை, பொருள் பங்கெடுப்பாளர்கள், பங்கெடுப்பாளர்களின் புற உருப்படுத்தம், பங்கெடுப்பாளர்களின் அமைப்பு, எடுத்துக்காட்டு என ஆறு வகையாக பிரித்தாயப்பட்டுள்ளது.

5.1.1 நிகழ்தலைக் குறிக்கும் வினைகள்

வினை	பொருள்	பங்கெடுப்பாளர்கள்	பங்கெடுப்பாளர்களின் புற உருப்படுத்தம்	பங்கெடுப்பாளர்களின் அமைப்பு	எடுத்துக்காட்டு
நிகழ்	ஏற்படுதல், சம்பவித்தல், நடத்தல்	இவ்வினை ஒரு நிகழ்வை பங்கெடுப்பாளராக ஏற்கும்.	நிகழ்வு எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடர் வடிவில் உருப்படுத்தம் பெறும்.	பெ.தொ+ நிகழ்	நேற்று தஞ்சையில் தீவிபத்து நிகழ்ந்தது.
சம்பவி	சாவு, துன்பம் முதலியன நேர்தல் நிகழ்தல்	இவ்வினை ஒரு விளைவைப் பங்கெடுப்பாளராக ஏற்கும்.	சம்பவம் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடர் வடிவில் உருப்படுத்தம் பெறும்.	பெ.தொ+சம்பவி	அதிகாலை ஐந்து மணிக்கு அவருக்கு மரணம் சம்பவித்தது.
விளை	உண்டாக்குதல் அல்லது ஏற்படுதல்	இவ்வினை ஒரு விளைவைப் பங்கெடுப்பாளராக ஏற்கும்.	ஒரு விளைவு எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடர் வடிவில் உருப்படுத்தம் பெறும்.	பெ.தொ+விளை	தீவிரவாதிகளால் பொது சொத்துகளுக்குத் தீங்கு விளைந்தது.
நேர்	இவ்வாறு செய்ய வேண்டும் என்ற நோக்கம் இல்லாமலேயே நிகழ்தல்	இவ்வினை ஒரு நேர்வைப் பங்கெடுப்பாளராக ஏற்கும்.	நேர்வு எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடர் வடிவில் உருப்படுத்தம் பெறும்.	பெ.தொ+நேர்	அச்சிடுவதில் ஒரு சிறு தவறு நேர்ந்து விட்டது.

பலி	இவ்வாறு நடக்கும் என்று சொல்வது அல்லது இவ்வாறு நடக்க வேண்டும் என்று விரும்புவது உண்மையாகவே நடத்தல் அல்லது நிகழ்தல்	பலிப்பதை பங்கெடுப்பாளராக ஏற்கும்.	பலிப்பது எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடர் வடிவில் உருப்படுத்தம் பெறும்.	பெ.தொ+பலி	வேலை கிடைக்கும் என ஜோதிடர் கூறியது பலித்து விட்டது.
ஈடேறு	நோக்கம் விருப்பம் நிறைவேறுதல் அல்லது எதிர்காலக் கனவு	ஈடேறுவதைப் பங்கெடுப்பாளராக ஏற்கும்.	ஈடேறுவது எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடர் வடிவில் வரும்.	பெ.தொ+ஈடேறு	சதிகாரர்க ளின் திட்டம் ஈடேறவில்லை.
நிலவு	அறியக்கூடிய வகையில் காணப்படுதல்	நிலவுவது பங்கெடுப்பாளராக ஏற்கும்.	நிலவுவது எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடர் வடிவில் வரும்.	பெ.தொ+நிலவு	பருவமழை பெய்யாமல் நாட்டில் வறட்சி நிலவுகிறது.

5.1.2 சூரியன், சந்திரன் தொடர்பான வினைகள்

கூவினை	பொருள்	பங்கெடுப்பாளர்கள்	பங்கெடுப்பாளர்க ளின் புற உருப்படுத்தம்	பங்கெடுப்பாளர் களின் அமைப்பு	எடுத்துக்கா ட்டு
கூடி	இரவு முடிந்து	இவ்வினை ஒரு	பொழுது போன்ற	(பொழுது)+விடி	ஆறு

	காலைப் பொழுதின் வெளிச்சம் பரவுதல்	குறிப்பிட்ட பங்கெடுப்பாளரை ஏற்காது. பொழுது போன்ற ஒரு சில தொடர்புடைய சொற்கள் எழுவாயிடத்தை நிரப்பும்.	பெயர்த் தொடர்கள் போலி எழுவாயாக உருப்படுத்தம் பெறும்.		மணிக்குத் தான் பொழுது விடிந்தது.
புலர்	இரவு முடிந்து காலைப் பொழுதின் வெளிச்சம் பரவுதல்	இவ்வினை ஒரு குறிப்பிட்ட பங்கெடுப்பாளரை ஏற்காது. பொழுது போன்ற ஒரு சில தொடர்புடைய சொற்கள் எழுவாயிடத்தை நிரப்பும்.	பொழுது போன்ற பெயர்த் தொடர்கள் போலி எழுவாயாக உருப்படுத்தம் பெறும்.	(பொழுது)+புலர்	நேற்று போல் இன்றும் பொழுது புலர்ந்தது.
உதி, உதயமாகு	சூரியன், நிலா, நட்சத்திரம் ஆகியவை கண்ணுக்குப் புலனாகும் படி வானத்தில் தோன்றுதல்	ஒரு பங்கெடுப்பாளரை ஏற்கும்: உதிக்கும் பொருள்	உதிக்கும் பொருள் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடர் வடிவில் வரும்.	பெ.தொ+உதி	1.சூரியன் கிழக்கில் உதித்தது. 2.சூரியன் கிழக்கில் உதயமான து.
கிளம்பு	ஓர் இடத்திலிருந்து சூரியன்	ஒரு பங்கெடுப்பாளரை ஏற்கும்:கிளம்பம்	கிளம்பும் பொருள் எழுவாயாக முதல் வேற்றுமைத்	பெ.தொ+கிளம்பு	சூரியன் மேற்கில் கிளம்பியது

	புறப்படுதல்	பொருள்	தொடர் வடிவில் வரும்.		.
உயர்	ஒன்று தன் நிலையிலிருந்து மேல் நோக்கி எழும்புதல்	ஒரு பங்கெடுப்பாளரை ஏற்கும்: உயரும் பொருள்	உயரும் பொருள் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடர் வடிவில் வரும்.	பெ.தொ+உயர்	கதிரவன் கிழக்கில் உயர்ந்தது.
இருட்டு 1	பகல் பொழுது முடிந்து இருள் சூழ்தல்	இவ்வினை ஒரு குறிப்பிட்ட பங்கெடுப்பாளரை ஏற்காது. பொழுது போன்ற ஒரு சில தொடர்புள்ள சொற்கள் எழுவாயிடத்தை நிரப்பும்.	பொழுது போன்ற பெயர்த் தொடர்கள் போலி எழுவாயாக உருப்படுத்தம் பெறும்.	பொழுது+இருட்டு	பொழுது இருட்டுகிறது.
சாய்	பகல் பொழுது முடியும் நேரத்தை குறித்தல்.	இவ்வினை ஒரு குறிப்பிட்ட பங்கெடுப்பாளரை ஏற்காது. பொழுது, அந்தி போன்ற சொற்களுடன் சேர்ந்து வரும்.	அந்தி, பொழுது போன்ற காலம் தொடர்பான பெயர்ச் சொற்கள் எழுவாய் இடத்தை நிரப்பும்.	பெ.தொ+சாய்	1.அந்தி சாய்ந்தது. 2.பொழுது சாய்ந்தது.
முறை	பார்வையிலிருந்து விலகுதல்	ஒரு பங்கெடுப்பாளரை ஏற்கும்: மறையும் பொருள்.	மறையும் பொருள் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடர் வடிவில் வரும்.	பெ.தொ+மறை	சூரியன் மேற்கில் மறைந்தது.

அஸ்தமி	சூரியன், சந்திரன் மறைதல்.	ஒரு பங்கெடுப்பாளரை ஏற்கும்: மறையும் பொருள்.	அஸ்தமிக்கும் பொருள் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடர் வடிவில் வரும்.	பெ.தொ+அஸ்தமி	சூரியன் மேற்கில் அஸ்தமித்தது.
ஆடை	சூரியன் மேற்குத் திசையில் சென்று மறைதல்.	ஒரு பங்கெடுப்பாளரை ஏற்கும்: அடையும் பொருள்.	அடையும் பொருள் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடர் வடிவில் வரும்.	பெ.தொ+அடை	சூரியன் மேற்கை அடைந்தது.
தாழ்	சூரியனின் கதிர்கள் ஒளி குறைதல்	ஒரு பங்கெடுப்பாளரை ஏற்கும்: தாழும் பொருள்.	தாழும் பொருள் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடர் வடிவில் வரும்.	பெ.தொ+தாழ்	சூரியன் தாழ்ந்த பிறகு வெளியில் கிளம்பினான். வெயில் தாழ்ந்த பின் வீட்டிற்குவந்தான்.
ழிரகாசி	ஒளி வீசுதல், மினுங்குதல்	ஒரு பங்கெடுப்பாளரை ஏற்கும்: பிரகாசிக்கும் பொருள்.	பிரகாசிக்கும் பொருள் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடர் வடிவில் வரும்.	பெ.தொ+பிரகாசி	நிலவு வானத்தில் பிரகாசித்தது.
ஒளிவீசு	சூரியன் சந்திரன் என்பன ஒளியை வெளியிடுதல்.	ஒரு பங்கெடுப்பாளரை ஏற்கும்: ஒளிவீசும்	ஒளிவீசும் பொருள் எழுவாயாக முதல் வேற்றுமைத்	பெ.தொ+ஒளிவீசு	நிலவு வானத்தில் ஒளி

		பொருள்.	தொடர் வடிவில் வரும்.		வீசியது.
ஒளிவிடு	ஒளிவீசுதல்	ஒரு பங்கெடுப்பாளரை ஏற்கும்: ஒளிவிடும் பொருள்.	ஒளிவிடும் பொருள் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடர் வடிவில் வரும்.	பெ.தொ+ஒளிவிடு	நிலவு நடுவானில் ஒளிவிட்டது.
ஒளிர்	ஒளிவீசுதல	ஒரு பங்கெடுப்பாளரை ஏற்கும்: ஒளிரும் பொருள்.	ஒளிரும் பொருள் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடர் வடிவில் வரும்.	பெ.தொ+ஒளிர்	சூரியன் நடுவானில் ஒளிர்ந்தது.
காய்	நிலா, சூரியன் ஆகியவை	ஒரு பங்கெடுப்பாளரை ஏற்கும்: காயும் பொருள்.	காயும் பொருள் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடர் வடிவில் வரும்.	பெ.தொ+காய்	1.நிலா காயும் நாட்களில் இரவில் உலாவச் செல்வோம். 2. பகல் பன்னிரண்டு மணிக்கு நன்றாக வெயில் காய்கிறது.
மங்கு	ஒளி குறைதல்	ஒரு பங்கெடுப்பாளரை ஏற்கும்: மங்கும் பொருள்.	மங்கும் பொருள் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடர் வடிவில் வரும்.	பெ.தொ+மங்கு	மாலை நேரத்தில் கதிரவனின் ஒளி மங்கத் தொடங்கிய

					து.
இருட்டு 2	பகல் பொழுது முடிந்து இரவின் துவக்கமாக இருள் சூழ்தல்	இவ்வினை ஒரு குறிப்பிட்ட பங்கெடுப்பாளரை ஏற்காது. பொழுது போன்ற ஒரு சில தொடர்புடைய சொற்கள் எழுவாயிடத்தை நிரப்பும்.	பொழுது போன்ற பெயர்த் தொடர்கள் போலி எழுவாயாக உருப்படுத்தம் பெறும்.	பெ.தொ+இருட்டு	பொழுது இருட்டி விட்டது.

5.1.3 திரவம் தொடர்பான வினைகள்

வினை	பொருள்	பங்கெடுப்பாளர்கள்	பங்கெடுப்பாளர்களின் புற உருப்படுத்தம்	பங்கெடுப்பாளர்களின் அமைப்பு	எடுத்துக்காட்டு
ஒழுகு	துவாரம், காயம் முதலியவற்றிலிருந்து நீர், இரத்தம் போன்றவற்றை வெளியேறி வழிதல்.	ஒரு பங்கெடுப்பாளரை ஏற்கும்:ஒழுகும் பொருள்.	ஒழுகும் பொருள் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடர் வடிவில் வரும்.	பெ.தொ+ஒழுகு	ராஜா தூங்கும் போது அவன் வாயிலிருந்து எச்சில் ஒழுகியது.
கசி	இரத்தம், கண்ணீர், வியர்வை முதலியவை மிகச் சிறிய அளவில்	ஒரு பங்கெடுப்பாளரை ஏற்கும்: கசியும் பொருள்.	கசியும் பொருள் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடர் வடிவில் வரும்.	பெ.தொ+கசி	பானையில் சிறு ஓட்டை இருந்ததால் தண்ணீர் கசிந்தது.

	வெளிவருதல்.				
ஊறு	நீர், எச்சில் முதலியன சுரந்து வெளிவருதல்	ஒரு பங்கெடுப்பாளரை ஏற்கும்: ஊறும் பொருள்.	ஊறும் பொருள் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடர் வடிவில் வரும்.	பெ.தொ+ஊறு	தோண்டப் பட்ட கிணற்றில் தண்ணீர் ஊறியது.
சுர	பால், நீர் எச்சில் முதலியன தம் ஆதார இடத்திலிருந்து ஊறி வெளி வருதல்.	ஒரு பங்கெடுப்பாளரை ஏற்கும்: சுரக்கும் பொருள்.	சருக்கும் பொருள் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடர் வடிவில் வரும்.	பெ.தொ+சுர	பசுவின் மடியிலிருந்து பால் சுரந்தது.
சிந்து		ஒரு பங்கெடுப்பாளரை ஏற்கும்: சிந்தும் பொருள்.	சிந்தும் பொருள் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடர் வடிவில் வரும்.	பெ.தொ+சிந்து	தேனீர் பருகும் போது சட்டையில் சிந்தி விட்டது.
வடி	திரவம் கோடாக அல்லது சொட்டு சொட்டாக வெளியேறுதல், ஒழுகுதல்.	ஒரு பங்கெடுப்பாளரை ஏற்கும்:வடியும் பொருள்.	வடியும் பொருள் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடர் வடிவில் வரும்.	பெ.தொ+வடி	பானையிலிருந்து கஞ்சி வடிந்தது.
வழி	நிரம்பி வடிதல்	ஒரு பங்கெடுப்பாளரை ஏற்கும்:வழியும் பொருள்.	வழியும் பொருள் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடர் வடிவில் வரும்.	பெ.தொ+வழி	பானையிலிருந்து பால் பொங்கி வழிந்தது.
ததும்பு	பாத்திரத்தில் நீர் அல்லது	ஒரு பங்கெடுப்பாளரை	ததும்பும் பொருள் எழுவாயாக முதல்	பெ.தொ+ ததும்பு	மகனின் செயலைக்

	கண்களில் கண்ணீர் வழியக்கூடிய நிலையில் காணப்படுதல்	ஏற்கும்:ததும்பும் பொருள்.	வேற்றுமைத் தொடர் வடிவில் வரும்.		கண்டு தந்தைக்கு கண்ணீர் ததும்பியது.
பீச்சு, பீறிடு	நீர் முதலிய திரவம் வேகத்துடன் தாரையாக வெளிவருதல்.	ஒரு பங்கெடுப்பாளரை ஏற்கும்:பீச்சும்/பீறிடும் பொருள்.	பீச்சும்/பீறிடும் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடர் வடிவில் வரும்.	பெ.தொ+ பீச்சு/ பீறிடு	குழாயில் ஓட்டை விழுந்ததால் தண்ணீர் பீச்சியது/பீறிட்டது.
பெருகு	நீரின் அளவு அதிகரித்தல்	ஒரு பங்கெடுப்பாளரை ஏற்கும்:பெருகும் பொருள்.	பெருகும் பொருள் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடர் வடிவில் வரும்.	பெ.தொ+ பெருகு	கடும் மழையால் ஆற்றில் தண்ணீர் பெருகியது.
கரை -புரள்	நீர் மிக அதிகமாக வெளியேறுதல்	ஒரு பங்கெடுப்பாளரை ஏற்கும்:கரைபுரளும் பொருள்.	கரைபுரளும் பொருள் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடர் வடிவில் வரும்.	பெ.தொ+ கரைபுரள்	தமிழகத்தில் பெய்த தொடர் மழையால் ஆறுகளில் தண்ணீர் கரை - புரண்டோடியது.
பாய்	நீர் முதலிய திரவம் ஒன்றின் ஊடாக வேகத்துடன்	ஒரு பங்கெடுப்பாளரை ஏற்கும்:பாயும் பொருள்.	பாயும் பொருள் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடர் வடிவில்	பெ.தொ+ பாய்	வயலில் தண்ணீர் பாய்ந்தது.

	செல்லுதல்.		வரும்.		
ஓடு	நீர், இரத்தம் போன்ற திரவங்கள் குறிப்பிட்ட பாதையில் வழியாக பாய்தல்.	ஒரு பங்கெடுப்பாளரை ஏற்கும்:ஓடும் பொருள்.	ஓடும் பொருள் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடர் வடிவில் வரும்.	பெ.தொ+ ஓடு	நேற்று பெய்த கடும் மழையினால் சாலையில் தண்ணீர் ஓடியது.

5.1.4 மழை பெய்தல் தொடர்பான வினைகள்

வினை	பொருள்	பங்கெடுப்பாளர்கள்	பங்கெடுப்பாளர்களின் புற உருப்படுத்தம்	பங்கெடுப்பாளர்களின் அமைப்பு	எடுத்துக்காட்டு
பெய்	மழைத் துளிகளாகப் பெருமளவில் கீழ் இறங்குதல்:	ஒரு பங்கெடுப்பாளரை ஏற்கும்:பெய்யும் மழை.	பொருள் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடர் வடிவில் வரும்.	பெ.தொ+பெய்	பருவ காலம் தொடங்கி விட்டதால் இனி மழை பெய்யும்.
தூறு	மழை சிறுசிறு துளிகளாக விழுதல்.	ஒரு பங்கெடுப்பாளரை ஏற்கும்:தூறும் பொருள்.	பொருள் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடர் வடிவில் வரும்.	பெ.தொ+தூறு	அந்தி மழை என்பதால் தூறிக் கொண்டே இருக்கிறது.
(சாரல்) அடி	சாய்வாகவும் துளி துளியாகவும் விழுதல். மழை	சாரல் என்ற ஒரு குறிப்பிட்ட பங்கெடுப்பாளரை ஏற்று வரும்.	சாரல் போன்ற பெயர்த் தொடர்கள் எழுவாயாக உருப்படுத்தம் பெறும்.	பெ.தொ+சாரல்	சன்னல்களை மூடாததால் சாரல் அடிக்கிறது.

	அல்லது காற்றால் மழை அடித்து வரப்படுதல்.				
விழு	மழைத் துளிகளோ சிறு பனிக் கட்டிகளோ வேகமாக வானிலிருந்து கீழ் நோக்கி வருதல்.	ஒரு பங்கெடுப்பாளரை ஏற்கும்:விழும் பொருள்.	விழும் பொருள் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடர் வடிவில் வரும்.	பெ.தொ+விழு	1.மழை விழுந்தது. 2.ஆலங்கட்டி மழை விழுந்தது.
அடி	மழைத் துளிகள் பெருமளவில் வேகமாகக் கீழ் இறங்குதல்	ஒரு பங்கெடுப்பாளரை ஏற்கும்: அடிக்கும் மழை.	அடிக்கும் (மழை) பொருள் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடர் வடிவில் வரும்.	பெ.தொ+அடி	நேற்று சென்னையில் மழை பலமாக அடித்தது.
சிணுங்கு	மழை விட்டு விட்டு சிறுசிறு துளிகளாக வானிலிருந்து கீழ்வருதல்.	ஒரு பங்கெடுப்பாளரை ஏற்கும்: சிணுங்கும் மழை.	சிணுங்கும் மழை எழுவாயாக வரும்.	பெ.தொ+சிணுங்கு	மழை சிணுங்குகிறது.

5.1.5 காற்றின் இயக்கம் தொடர்பான வினைகள்

வினை	பொருள்	பங்கெடுப்பாளர்கள்	பங்கெடுப்பாளர்களின்	பங்கெடுப்பாளர்களின்	எடுத்துக்காட்டு

			புற உருப்படுத்தம்	அமைப்பு	
வீசு	காற்று உணரக்கூடிய வகையில் பரவுதல்.	ஒரு பங்கெடுப்பாளரை ஏற்கும்:வீசும் பொருள்.	வீசும் பொருள் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடர் வடிவில் வரும்.	பெ.தொ+வீசு	நூறு கி.மீ. வேகத்தில் புயல் காற்று வீசியது.
அடி	காற்று பலமாக அடித்தல்.	ஒரு பங்கெடுப்பாளரை ஏற்கும்:அடிக்கும் பொருள்.	அடிக்கும் பொருள் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடர் வடிவில் வரும்.	பெ.தொ+அடி	மணிக்கு நூற்றுநாற்பது கீ.மீ. வேகத்தில் புயல் காற்று அடித்தது.

5.1.6 பரவுதல் குறித்த வினைகள்

வினை	பொருள்	பங்கெடுப்பாளர்கள்	பங்கெடுப்பாளர்களின் புற உருப்படுத்தம்	பங்கெடுப்பாளர் களின் அமைப்பு	எடுத்துக்காட்டு
பரவு	திரவம், வாயு முதலியவை சுற்றிலும் செல்லுதல்.	ஒரு பங்கெடுப்பாளரை ஏற்கும்: பரவும் பொருள்.	பரவும் பொருள் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடர் வடிவில் வரும்.	பெ.தொ+பரவு	போபாலில் விஷ வாயு பரவியது.
வியாபி	காற்று முதலிய பொருள்கள் எங்கும் பரவுதல்.	ஒரு பங்கெடுப்பாளரை ஏற்கும்: வியாபிக்கும் பொருள்.	வியாபிக்கும் பொருள் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடர் வடிவில் வரும்.	பெ.தொ+வியாபி	காட்டுத் தீயினால் எங்கும் கரும்புகை வியாபித்திருந்தது.
படர்	ஒரு பரப்பில் பட்டு	ஒரு பங்கெடுப்பாளரை ஏற்கும்: படரும்	படரும் பொருள் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடர்	பெ.தொ+படர்	பொழுது விடிந்ததால் சூரிய ஒளி அறைக்குள்

	பரவுதல்.	பொருள்.	வடிவில் வரும்.		படர்ந்தது.

5.1.7 எரிதல் குறித்த வினைகள்

வினை	பொருள்	பங்கெடுப்பாளர்கள்	பங்கெடுப்பாளர்களின் புற உருப்படுத்தம்	பங்கெடுப்பாளர்களின் அமைப்பு	எடுத்துக்காட்டு
மூள்	தீ மூள்தல்	ஒரு பங்கெடுப்பாளரை ஏற்கும்: மூளும் பொருள்.	மூளும் பொருள் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடர் வடிவில் வரும்.	பெ.தொ+மூள்	ஆலையில் நெருப்பு மூண்டது.
பற்று	தீ பற்றுதல்	ஒரு பங்கெடுப்பாளரை ஏற்கும்: பற்றும் தீ.	பற்றும் தீ எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடர் வடிவில் வரும்.	பெ.தொ+பற்று	காட்டில் காய்ந்த மரங்கள் தீப்பற்றி எரிகின்றன.
பிடி	தீ பிடித்தல்	ஒரு பங்கெடுப்பாளரை ஏற்கும்: பிடிக்கும் தீ.	பிடிக்கும் தீ எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடர் வடிவில் வரும்.	பெ.தொ+பிடி	சமையல் செய்யும் போது அவள் அறியாமல் அவள் சேலை தீப்பிடித்தது.
எரி	தீ சுவாலையுடன் மேல் எழுதல்.	ஒரு பங்கெடுப்பாளரை ஏற்கும்: எரியும் பொருள்.	எரியும் பொருள் எழுவாயாக முதல் வேற்றுமைத்	பெ.தொ+எரி	அடுப்பில் தீ நன்றாக எரிந்தது.

			தொடர் வடிவில் வரும்.		
சுடர்விடு	ஒளி விடுதல்.	ஒரு பங்கெடுப்பாளரை ஏற்கும்:சுடர்விடும் பொருள்.	சுடர்விடும் பொருள் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடர் வடிவில் வரும்.	பெ.தொ+சுடர் விடும் பொருள்	விளக்கு சுடர்விட்டு எரிந்தது.
கொழுந்து விடு	பெரிய அளவில் எரிதல்.	ஒரு பங்கெடுப்பாளரை ஏற்கும்:கொழுந்து விடும் பொருள்.	கொழுந்து விடும் பொருள் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடர் வடிவில் வரும்.	பெ.தொ+கொழுந்து விடு	காட்டில் மரங்கள் கொழுந்து விட்டு எரிந்தன.
கனல்	கடும் சூட்டுடன் இருத்தல்.	ஒரு பங்கெடுப்பாளரை ஏற்கும்:கனலும் பொருள்.	கனலும் பொருள்	பெ.தொ+கனல்	அடுப்பில் நெருப்பு கனன்று கொண்டிருந்தது.
தகி	எரிப்பது போன்று வெப்பம் உடையதாக இருத்தல்.	ஒரு பங்கெடுப்பாளரை ஏற்கும்: தகிக்கும் பொருள்	தகிக்கும் பொருள் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடர் வடிவில் வரும்.	பெ.தொ+தகி	சூரியன் தகிக்கும் நேரம்.

5.1.8 அணைதல் குறித்த வினைகள்

வினை	பொருள்	பங்கெடுப்பாளர்கள்	பங்கெடுப்பாளர்களின் புற உருப்படுத்தம்	பங்கெடுப்பாளர்களின் அமைப்பு	எடுத்துக்காட்டு
அணை	நெருப்பு, விளக்கு நின்று போதல்.	ஒரு பங்கெடுப்பாளரை ஏற்கும்: அணையும் பொருள்.	அணையும் பொருள் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடர் வடிவில் வரும்.	பெ.தொ+அண	காட்டுத் தீ தானாக அணைந்தது.
அவி	நெருப்பு, விளக்கு அணைதல்.	ஒரு பங்கெடுப்பாளரை ஏற்கும்: அவியும் பொருள்.	அவியும் பொருள் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடர் வடிவில் வரும்.	பெ.தொ+அவி	விளக்கு அவிந்தது.

5.1.9 ஒளிர்தல் குறித்த வினைகள்

வினை	பொருள்	பங்கெடுப்பாளர்கள்	பங்கெடுப்பாளர்களின் புற உருப்படுத்தம்	பங்கெடுப்பாளர்களின் அமைப்பு	எடுத்துக்காட்டு
வீசு	ஒளியை உமிழ்தல்.	ஒரு பங்கெடுப்பாளரை ஏற்கும்: வீசும் பொருள்.	வீசும் பொருள் பொருள் எழுவாயாக முதல்	பெ.தொ+வீசு	பௌர்ணமியன்று வானில் நிலவு ஒளி வீசியது.

			வேற்றுமைத் தொடர் வடிவில் வரும்.		
பிரகாசி	ஒளி வீசுதல்.	ஒரு பங்கெடுப்பாளரை ஏற்கும்: பிரகாசிக்கும் பொருள்.	பிரகாசிக்கும் பொருள் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடர் வடிவில் வரும்.	பெ.தொ+பிரகாசி	நிலவு வானத்தில் பிரகாசித்தது.
எரி	விளக்கு முதலியவற்ற ஒளிரச் செய்தல்.	ஒரு பங்கெடுப்பாளரை ஏற்கும்:எரியும் பொருள்.	எரியும் பொருள் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடர் வடிவில் வரும்.	பெ.தொ+எரி	மின்சாரத்தினால் குழல் விளக்கு எரிந்தது.
மின்னு	ஒளிபட்டு பளபளத்தல் அல்லது விட்டு விட்டு ஒளிர்தல்.	ஒரு பங்கெடுப்பாளரை ஏற்கும்:மின்னம் பொருள்.	மின்னும் பொருள் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடர் வடிவில் வரும்.	பெ.தொ+மின்னு	புதிய கத்தி பளபளவென்று மின்னியது.
ஜொலி	மின்னுதல் மற்றும் பளபளத்தல்.	ஒரு பங்கெடுப்பாளரை ஏற்கும்:ஜொலிக்கும் பொருள்.	ஜொரிலிக்கும் பொருள் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடர் வடிவில் வரும்.	பெ.தொ+ஜொலி	அந்த மாளிகையில் வண்ண விளக்குகள் ஜொலித்தன.

மினுமினு	விட்டுவிட்டு பிரகாசத்துடன் ஒளிர்தல்.	ஒரு பங்கெடுப்பாளரை ஏற்கும்:மினுமினுக்கும் பொருள்.	மினுமினுக்கும் பொருள் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடர் வடிவில் வரும்.	பெ.தொ+மினுமினு	ராஜா அணிந்திருந்த பட்டுச்சட்டை மினுமினுத்தது.
பளபள	மினுமினுத்தல்.	ஒரு பங்கெடுப்பாளரை ஏற்கும்: பளபளக்கும் பொருள்.	பளபளக்கும் பொருள் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடர் வடிவில் வரும்.	பெ.தொ+பளபள	அவள் அணிந்திருந்த தங்கநகை பளபளத்தது.
மங்கு	ஒளி குறைதல்.	ஒரு பங்கெடுப்பாளரை ஏற்கும்:மங்கும் பொருள்.	மங்கும் பொருள் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடர் வடிவில் வரும்.	பெ.தொ+மங்கு	மின்சாரக் குறைவால் விளக்குகள் மங்கி எரிந்தன.

5.1.10 நிறம் குறித்த வினைகள்

வினை	பொருள்	பங்கெடுப்பாளர்கள்	பங்கெடுப்பாளர்களின் புற உருப்படுத்தம்	பங்கெடுப்பாளர்களின் அமைப்பு	எடுத்துக்காட்டு
வெளு	வெண்மையாகுதல்	வெளுக்கப் படும் பொருள்.	வெளுக்கும் பொருள் எழுவாயாக	பெ.தொ+ பெ.தொ-ஐ +வெளு	நன்றாக துவைத்தும் துணி வெளிக்கவில்லை.

			முதல் வேற்றுமைத் தொடர் வடிவில் வரும்.		
நரை	முதுமையின் அறிகுறியாக முடி வெள்ளை நிறமாதல்.	ஒரு பங்கெடுப்பாளரை ஏற்கும்:நரைக்கும் பொருள்.	நரைக்கும் பொருள் எழுவாயாக முதல் பெயர்த் தொடர் வடிவில் வரும்.	பெ.தொ+நரை	தாத்தாவுக்கு முடி நரைத்து விட்டது.
வெளிறு1	மேகங்கள் இல்லாமல் வானம் தெளிவாக இருத்தல்.	ஒரு பங்கெடுப்பாளரை ஏற்கும்:வெளிரும் பொருள்.	வெளிரும் பொருள் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடர் வடிவில் வரும்.	பெ.தொ+வெளிறு1	வானம் வெளிறிக் கிடந்தது.
வெளிறு2	பயம், நோய் முதலியவற்றால் இயல்பான நிறத்தை அல்லது களையை இழத்தல்.	ஒரு பங்கெடுப்பாளரை ஏற்கும்:வெளிரும் பொருள்.	வெளிரும் பொருள் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடர் வடிவில் வரும்.	பெ.தொ+வெளிறு2	இரத்தச் சோகையால் அவன் முகம் வெளிறியது.
கறு 1	இருட்டிக் கொண்டு வருதல்	ஒரு பங்கெடுப்பாளரை ஏற்கும்:கறுக்கும் பொருள்.	வானம் போன்றவை எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடர் வடிவில்	பெ.தொ+கறு	மேக மூட்டத்தால் வானம் கறுத்திருக்கிறது.

			வரும்.		
கறு 2	வெயிலால் அல்லது நோயால் உடல் கறுப்பு நிறம் அடைதல்.	ஒரு பங்கெடுப்பாளரை ஏற்கும்: கறுப்பவர்	கறுப்பவர் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடர் வடிவில் வரும்.	பெ.தொ+கறு	வெயிலில் அலைந்து ஆள் கறுத்து விட்டான்.
சிவ 1	சிவப்பு நிறம் அடைதல்.	ஒரு பங்கெடுப்பாளரை ஏற்கும்:சிவக்கும் பொருள்.	சிவக்கும் பொருள் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடர் வடிவில் வரும்.	பெ.தொ+சிவ	சூரியன் மறையும் போது கீழ்வானம் சிவந்தது.
சிவ 2	எண்ணெயில் அப்பளம், வடை போன்றவை வெந்து பொன்னிறம் அடைதல்.	ஒரு பங்கெடுப்பாளரை ஏற்கும்:பொன்னிறம் அடையும் பொருள்.	பொன்னிறம் அடையும் பொருள் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடர் வடிவில் வரும்.	பெ.தொ+சிவ	முறுக்கு எண்ணெயில் வெந்து சிவக்கத் தொடங்கியது.
சிவ 3 (வட்டார வழக்கு)	நோயினால் பாதிக்கப்பட்ட பயிர் திட்டுத் திட்டாகச் சிவப்பு நிறத்துடன் காணப்படுதல்.	ஒரு பங்கெடுப்பாளரை ஏற்கும்: சிவக்கும் பயிர்.	சிவக்கும் பயிர் எழுவயாக முதல் வேற்றுமைத் தொடர் வடிவில் வரும்.	பெ.தொ+சிவ	நோயினால் பாதிக்கப்பட்டு பயிர் சிவந்து விட்டது.

5.1.11 தெளிதல் குறித்த வினைகள்

வினை	பொருள்	பங்கெடுப்பாளர்கள்	பங்கெடுப்பாளர்களின் புற உருப்படுத்தம்	பங்கெடுப்பாளர்களின் அமைப்பு	எடுத்துக்காட்டு
கலங்கு	நீர், எண்ணெய் போன்ற திரங்கள் பிறவற்றுடன் சேர்ந்து தெளிந்த நிலை கெடுதல்.	ஒரு பங்கெடுப்பாளரை ஏற்கும்: கலங்கும் பொருள்.	கலங்கும் பொருள் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடர் வடிவில் வரும்.	பெ.தொ+கலங்கு	எருமை மாடுகளால் குளத்து நீர் கலங்கியது.
குழம்பு	சேறு, மண் முதலியவை நீருடன் கலந்து குழம்பாக இருத்தல்.	ஒரு பங்கெடுப்பாளரை ஏற்கும்: குழம்பும் பொருள்.	குழம்பும் பொருள் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடர் வடிவில் வரும்.	பெ.தொ+குழம்பு	மழை நீர் பட்டுச் சேறு குழம்பியிருந்தது.
தெளி	திரவத்திலுள்ள அழுக்கு, கசடு முதலியவை அடியில் தங்கி திரவம் கலங்கிய நிலையிலிருந்து மாறுதல்.	ஒரு பங்கெடுப்பாளரை ஏற்கும்: தெளியும் பொருள்.	தெளியும் பொருள் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடர் வடிவில் வரும்.	பெ.தொ+தெளி	கலங்கியிருந்த நீர் வெகு நேரத்திற்குப் பிறகு தெளிந்தது.

5.1.12 மாற்றம் குறித்த வினைகள்

வினை	பொருள்	பங்கெடுப்பாளர்கள்	பங்கெடுப்பாளர்களின் புற உருப்படுத்தம்	பங்கெடுப்பாளர்களின் அமைப்பு	எடுத்துக்காட்டு
மாறு	இருக்கும் நிலையிலிருந்து புதிய அல்லது வித்தியாசமான நிலைக்கு வருதல்.	ஒரு பங்கெடுப்பாளரை ஏற்கும்:மாறுபவர்	மாறுபவர் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடர் வடிவில் வரும்.	பெ.தொ+மாறு	வெப்பத்தால் தண்ணீர் ஆவியாக மாறியது.
மாறுபடு	மாற்றம் தெரியும்படி காணப்படுதல், வேறுபடுதல்.	ஒரு பங்கெடுப்பாளரை ஏற்கும்: மாறுபடுபவர்	மாறுபடுபவர் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடர் வடிவில் வரும்.	பெ.தொ+மாறுபடு	மனிதமூளை கணிப்பொறியின் செயல்பாட்டிலிருந்து மாறுபட்டது.
பிறழ், பிசகு1	ஒழுங்குமுறை மாறுபடுதல், இடம் பெயர்தல்.	ஒரு பங்கெடுப்பாளரை ஏற்கும்:பிறழ்வது.	பிறழும் பொருள் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடர் வடிவில் வரும்.	பெ.தொ+பிறழ்	1.நா பிறழ்ந்து பேசினான். 2.அவனக்குத் தோள் பட்டையில் மூட்டு பிறழ்ந்தது/பிசகியது.
பிசகு 2	ஓசை ஒழுங்கு விலகி மாற்றம் அடைதல்.	ஒரு பங்கெடுப்பாளரை ஏற்கும்:பிசகுவது	பிசகும் பொருள் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடர் வடிவில்	பெ.தொ+பிசகு	பாட்டில் ஓரிடத்தில் தாளம் பிசகிவிட்டது.

			வரும்.		
திரி	இலக்கணத்தில் ஓர் எழுத்து மற்றொரு எழுத்தாக மாறுவதைக் குறிப்பிடும்.	ஒரு பங்கெடுப்பாளரை ஏற்கும்:திரிவது	திரியும் பொருள் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடர் வடிவில் வரும்.	பெ.தொ+திரி	க் முன் வரும் ம் ங்-ஆகத் திரியும்.

5.1.13 காய்தல் குறித்த வினைகள்

வினை	பொருள்	பங்கெடுப்பாளர்கள்	பங்கெடுப்பாளர்களின் புற உருப்படுத்தம்	பங்கெடுப்பாளர்களின் அமைப்பு	எடுத்துக்காட்டு
காய்	வெப்பத்தால் ஈரப்பசை இல்லாமல் போதல்.	ஒரு பங்கெடுப்பாளரை ஏற்கும்:காயும் பொருள்.	காயும் பொருள் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடர் வடிவில் வரும்.	பெ.தொ+காய்	அதிக வெயிலால் நிலம் காய்ந்தது.
உலர்	ஈரம் காய்தல்.	ஒரு பங்கெடுப்பாளரை ஏற்கும்:உலரும் பொருள்.	உலரும் பொருள் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடர் வடிவில் வரும்.	பெ.தொ+ பெ.தொ-ஐ+உலர்	தலைமுடி இன்னும் ஈரம் உலரவில்லை.
வரள்,வறள்	ஈரமற்றதாகுதல், நீர் முதலியவை வற்றுதல்.	ஒரு பங்கெடுப்பாளரை ஏற்கும்:வரளும் பொருள்.	வரளும் பொருள் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடர் வடிவில் வரும்.	பெ.தொ+வரள்	கோடை வெப்பத்தில் நிலம் வரண்டு கிடந்தன.

வாடு	மரம், செடி, கொடி முதலியவை அதிக வெப்பம், நீரின்மை முதலியவற்றால் பசுமை இழக்கும் படியாகக் காய்ந்து சுருங்குதல்.	ஒரு பங்கெடுப்பாளரை ஏற்கும்:வாடும் பொருள்.	வாடும் பொருள் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடர் வடிவில் வரும்.	பெ.தொ+வாடு	பருவமழை பொய்த்துப் போனதால் தமிழகத்தில் நெற்பயிர்கள் வாடின.
வதங்கு	செடி, கொடி அல்லது காய்கறி நீர்த் தன்மை குறைந்து துவளுதல்.	ஒரு பங்கெடுப்பாளரை ஏற்கும்:வதங்கும் பொருள்.	வதங்கும் பொருள் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடர் வடிவில் வரும்.	பெ.தொ+வதங்கு	கடையில் காய்கறிகள் வதங்கிக் கிடந்தன.
கருகு	தாவரத்தின் இலை, தளிர் முதலியன வெப்பத்தால்	ஒரு பங்கெடுப்பாளரை ஏற்கும்:கருகும் பொருள்.	கருகும் பொருள் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடர் வடிவில் வரும்.	பெ.தொ+கருகு	நீரின்றி பயிர்கள் கருகிவிட்டன.

	அல்லது நோயால் காய்தல் அல்லது வாடுதல்.				

5.1.14 நனைதல் குறித்த வினைகள்

வினை	பொருள்	பங்கெடுப்பாளர்கள்	பங்கெடுப்பாளர்களின் புற உருப்படுத்தம்	பங்கெடுப்பாளர்களின் அமைப்பு	எடுத்துக்காட்டு
நனை	தண்ணீர், இரத்தம் முதலிய திரவப் பொருளால் ஈரமாதல்.	இரண்டு பங்கெடுப்பாளரை ஏற்கும்:நனையும் பொருள், நனைக்கும் பொருள்.	நனையும் பொருள் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடர் வடிவில் வரும். நனைக்கும் பொருள் ஏழாம் வேற்றுமைத் தொடராக வரும்.	பெ.தொ+ பெ.தொ-இல்+நனை	துணி துவைக்கும் போது சட்டைக்குள் இருந்த பணம் தண்ணீரில் நனைந்து விட்டது.
ஈரமாகு	நீரில் நனைவதால் பொருளுடன் சேரும் தன்மை.	இரண்டு பங்கெடுப்பாளரை ஏற்கும்:ஈரமாகும் பொருள், ஈரமாக்கும் பொருள்.	ஈரமாகும் பொருள் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடர் வடிவில் வரும். ஈரமாக்கும் பொருள் ஏழாம் வேற்றுமைத் தொடர் வடிவில் வரும்.	பெ.தொ+ பெ.தொ-இல்+ஈரமாகு	மழையில் நனைந்ததால் புடவை ஈரமாகியது.
கூட்டு	எண்களை ஒன்றோடு ஒன்று சேர்த்து மொத்த மாக்குதல். தொகை கணக்கிடுதல்.	இவ்வினை இரண்டு பங்கெடுப்பாளரை ஏற்கும். கூட்டுபவர், கூட்டப்படும் பொருள்.	கூட்டுபவர் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடர் வடிவில் வரும். கூட்டப்படும் பொருள் இரண்டாம் வேற்றுமைத் தொடர் வடிவில் வரும்.	பெ.தொ+ பெ.தொ- உடன்+ கூட்டு	ராஜா பத்தை மூன்றுடன் கூட்டினான் .
கழி	ஓர் எண்ணிலிருந்து மற்றோர் எண்ணை குறைத்தல்.	இவ்வினை இரண்டு பங்கெடுப்பாளரை ஏற்கும். கழிப்பவர், கழிக்கப்படும் பொருள்.	கழிப்பவர் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடர் வடிவில் வரும். கழிக்கப்படும் பொருள் இரண்டாம் வேற்றுமைத் தொடர் வடிவில் வரும்.	பெ.தொ+ பெ.தொ- ஐ+பெ.தொ.- இலிருந்து+கழி	ராஜா ஐந்தை பத்திலிருந்து கழித்தான்.
வகு	ஓர் எண்ணில் மற்றோர் எண் எத்தனை மடங்கு உள்ளது என்று கணககிடுதல்.	இவ்வினை இரண்டு பங்கெடுப்பாளரை ஏற்கும். வகுப்பவர், வகுக்கப்படும் பொருள்.	வகுப்பவர் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடர் வடிவில் வரும். வகுக்கப்படும் பொருள் இரண்டாம் வேற்றுமைத் தொடர்	பெ.தொ+ பெ.தொ- ஐ+வகு	ராஜா நூறை பத்தால் வகுத்தான்.

			வடிவில் வரும்.		
எண்ணு	வரிசையாக அல்லது முறைப்படி எண்களை கூறுதல்: எத்தனை வருகின்றன என்று கணக்கிடுதல்.	இவ்வினை இரண்டு பங்கெடுப்பாளரை ஏற்கும். எண்ணுபவர், எண்ணுப்படும் பொருள்.	எண்ணுபவர் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடர் வடிவில் வரும். எண்ணப்படும் பொருள் இரண்டாம் வேற்றுமைத் தொடர் வடிவில் வரும்.	பெ.தொ+ பெ.தொ-ஐ+எண்ணு	ரகு உண்டியலில் இருந்த பணத்தை எண்ணினான்.

5.3 தாக்க வினைகள்

தாக்க வினைகளை அடித்தல் வகை வினைகள்,மோதுதல் வகை வினைகள், மிதித்தல் வகை வினைகள், அழுத்துதல் வகை வினைகள், திருப்புதல் வகை வினைகள், தொடுதல் வகை வினைகள், தீட்டுதல் வகை வினைகள், கடித்தல் வகை வினைகள், கிளறுதல் வகை வினைகள், துளைத்தல் வகை வினைகள், கலக்குதல் வகை வினைகள், கொல்லுதல் வகை வினைகள், இழுத்தல்/தள்ளுதல் வகை வினைகள், வெட்டுதல் வகை வினைகள், இரண்டுபடுத்தல் வகை வினைகள், உடைதல் வகை வினைகள், நசுக்குதல் வகை வினைகள், மெல்லுதல் வகை வினைகள் என பதினெட்டு வினைகள் சேகரிக்கப்பட்டுள்ளன. மேலும் இவற்றை வினை, பொருள், பங்கெடுப்பாளர்கள், பங்கெடுப்பாளர்களின் உருப்படுத்தம், பங்கெடுப்பாளர்களின் அமைப்பு, எடுத்துக்காட்டு என ஆறு வகையாக பிரிக்கப்பட்டுள்ளது.

5.3.1 அடித்தல் வகை வினைகள்

வினை	பொருள்	பங்கெடுப்பாளர்கள்	பங்கெடுப்பாளர்களின் புற உருப்படுத்தம்	பங்கெடுப்பாளர்களின் அமைப்பு	எடுத்துக்காட்டு

அடி	கையால் அல்லது கம்பு முதலியவற்றால் அறைதல் அல்லது ஒன்றை மற்றொன்றின் மீது பலத்துடன் அறைதல்.	தாக்குபவர், தாக்கப்படுபவர், தாக்கும் கருவி, (விருப்பு), தாக்கப்படும் இடம் (விருப்பு)	தாக்குபவர் எழுவாயாகச் செயல்பட்டு முதல் வேற்றுமைத் தொடர் வடிவில் வரும்.தாக்கப்படுபவர்-ஐ-வேற்றுமைத் தொடராக வரும். தாக்கப்படும் இடம் இல்-வேற்றுமைத் தொடராக வரும்.தாக்கப்படும் கருவி ஆல்-வேற்றுமைத் தொடராக வரும்.	1.பெ.தொ+பெ.தொ-ஐ+பெ.தொ-ஆல்+பெ.தொ.இல்+அடி 2.பெ.தொ+பெ.தொ-ஐ+அடி	ராணி கார்த்தியை கம்பால் அவன் தலையில் அடித்தான்.
குட்டு	விரல் முட்டியால் தலையில் குத்துதல் அல்லது தலையின் பக்கவாட்டில் தட்டுதல்.	தாக்குபவர், தாக்கப்படுபவர், தாக்கப்படும் இடம், தாக்கும் கருவி (விருப்பு)	தாக்குபவர் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடராக வரும்.தாக்கப்படுபவர் செயப்படு பொருளாகச் செயல்பட்டு இல்-வேற்றுமைத் தொடராக வரும். தாக்கப்படும் இடம் இல்- வேற்றுமைத் தொடராக வரும். தாக்கும் கருவி ஆல்- வேற்றுமைத்	பெ.தொ+பெ.தொ-இல்+பெ.தொ-ஆல்+குத்து	அவன் அவளைத் தலையில் முட்டியால் ஓங்கி குட்டினான்.

			தொடராக வரும்.		
குத்து	விரல்களை மடக்கிக் கொண்டு உடம்பின் ஏதாவது ஒரு பகுதியில் பலமாகத் தாக்குதல்.	தாக்குபவர், தாக்கப்படுபவர், தாக்கும் கருவி, (விருப்பு), தாக்கப்படும் இடம் (விருப்பு)	தாக்குபவர் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடராக வரும்.தாக்கப்படுபவர் செயப்படு பொருளாகச் செயல்பட்டு ஐ-வேற்றுமைத் தொடராக வரும்.	பெ.தொ+ பெ.தொ-இல்+பெ.தொ-ஆல்+குத்து	ராஜா ஓங்கி அன்புமணியை வயிற்றில் குத்தினான்.
தாக்கு	கையாலும் ஆயுதங் களாலும் பலமாக அடித்தல்.	தாக்குபவர், தாக்கப்படுபவர், தாக்கும் கருவி, (விருப்பு)	தாக்குபவர் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடராக வரும்.தாக்கப்படுபவர் செயப்படு பொருளாகச் செயல்பட்டு ஐ-வேற்றுமைத் தொடராக வரும். தாக்கப்படும் இடம் இல்- வேற்றுமைத் தொடராக வரும். தாக்கும் கருவி ஆல்- வேற்றுமைத் தொடராக வரும்.	1.பெ.தொ+ பெ.தொ-ஆல்+பெ.தொ-ஐ+தாக்கு 2.பெ.தொ+பெ.தொ.+ஐதாக்கு	அவர்கள் அவனை அரிவாளால் தாக்கினர்.
உதை	காலால் பலமாக தாக்குதல்.	தாக்குபவர், தாக்கப்படுபவர், தாக்கும் கருவி,	தாக்குபவர் எழுவாயாக முதல் வேற்றுமைத்	1.பெ.தொ+ பெ.தொ.-ஐ+உதை	கபடி ஆடும் போது

		(விருப்பு), தாக்கப்படும் இடம் (விருப்பு)	தொடராக வரும்.தாக்கப்படுபவர் செயப்படு பொருளாகச் செயல்பட்டு ஐ-வேற்றுமைத் தொடராக வரும். தாக்கும் கருவி ஆல்- வேற்றுமைத் தொடராக வரும். தாக்கப்படும் இடம் இல்- வேற்றுமைத் தொடராக வரும்.	2.பெ.தொ+பெ.தொ.ஐ+ஆல்+உதை	ராமன் ஓங்கி ராஜாவை வயிற்றில் உதைத்தான்.
எற்று/ எத்து	காலால் உதைத்தல்.	தாக்குபவர், தாக்கப்படுபவர், தாக்கும் கருவி, (விருப்பு), தாக்கப்படும் இடம் (விருப்பு)	தாக்குபவர் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடராக வரும்.தாக்கப்படுபவர் செயப்படு பொருளாகச் செயல்பட்டு ஐ-வேற்றுமைத் தொடராக வரும்.	பெ.தொ+பெ.தொ.-ஐ+எத்து	கபடியில் ராமுவைப் பிடித்தவர்களை எத்தி தள்ளிவிட்டான்.
மிதி	ஒன்றின் மீது பலத்துடனும் வேகத்துடனும் காலைப் பதித்தல்.	தாக்குபவர், தாக்கப்படுபவர்.	தாக்குபவர் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடராக வரும்.தாக்கப்படுபவர் செயப்படு பொருளாகச்	பெ.தொ+பெ.தொ.-ஐ+மிதி	யானை தேங்காயை மிதித்து உடைத்தது.

			செயல்பட்டு ஐ-வேற்றுமைத் தொடராக வரும்.		

5.3.2 மோதுதல் வகை வினைகள்

வினை	பொருள்	பங்கெடுப்பாளர்கள்	பங்கெடுப்பாளர்களின் புற உருப்படுத்தம்	பங்கெடுப்பாளர்களின் அமைப்பு	எடுத்துக்காட்டு
மோது	ஒரு பரப்பில் பலத்தோடு இடித்தல்.	மோதுபவர், மோதப்படும் பொருள், மோதப்படும் இடம்	மோதுபவர் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடராக வரும். மோதப்படும் இடம் -இல் வேற்றுமைத் தொடராகவோ மீது –பின்னுருபுத் தொடராகவோ வரும்.	1.பெ.தொ+பெ.தொ.-இல்+மோது 2.பெ.தொ+பெ.தொ.ஐ+மோது 3.பெ.தொ+பெ.தொ.ஐ+பெ.தொ.மீது+மோது	தினேஷ் கதவில் மோதிக் கொண்டான்.
முட்டு	ஒன்றின் தலையை அல்லது தலையால் ஏதாவது ஒன்றின் மீது மோதுதல்.	முட்டுபவர், முட்டுமிடம், முட்டப்படும் பொருள்.	முட்டுபவர் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடராக வரும். முட்டப்படும் பொருள் செயப்படு பொருளாகச் செயல்பட்டு –ஐ வேற்றுமைத் தொடராக வரும்.	பெ.தொ+பெ.தொ.இல்+பெ.தொ-ஐ+முட்டு	ரமேஷ் சுவரில் தலையை முட்டிக் கொண்டான்.

இடி	முழங்கை முதலியவற்றால் பக்கவாட்டில் குத்துதல்,ஒருவரை கீழே தள்ளுவது போல் மோதுதல்.	இடிப்பவர், இடிக்கப்படுபவர், இடிக்கப்படும் பொருள்.	இடிப்பவர் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடராக வரும்.தாக்கப்படும் பொருள் செயப்படு பொருளாகச் செயல்பட்டு –ஐ வேற்றுமைத் தொடராக வரும்.	1.பெ.தொ+பெ.தொ.-இல்+இடி 2.பெ.தொ+செ.தொ.ஐ+இடி 3.பெ.தொ+செ.தொ.-ஐ+இல்+பெ.தொ+இடி	மேஜையின் முனை காலில் இடித்து இரத்தம் வந்தது.

5.3.3 மிதித்தல் வகை வினைகள்

வினை	பொருள்	பங்கெடுப்பாளர்கள்	பங்கெடுப்பாளர்களின் புற உருப்படுத்தம்	பங்கெடுப்பாளர்களின் அமைப்பு	எடுத்துக்காட்டு
மிதி	காலின் அடிப்பகுதி படும் வகையில் ஒன்றின் மீது காலைப்பதித்தல்,வேகத்துடன் காலை இறக்குதல்.	மிதிப்பவர், மிதிக்கப்படும் பொருள், மிதிக்கும் கருவி	மிதிப்பவர் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடராக வரும்.மிதிக்கப்படும் பொருள் செயப்படு பொருளாகச் செயல்பட்டு –ஐ வேற்றுமைத் தொடராக வரும். மிதிக்கப்படும் இடம் -இல் வேற்றுமைத் தொடராக வரும்.	1.பெ.தொ+பெ.தொ.-ஐ+மிதி 2.பெ.தொ+செ.தொ.ஐ பெ.தொ.-ஆல்+மிதி	அவன் நடந்து செல்கையில் சாணியை மிதித்து விட்டான்.

சமிட்டு (வட்டார வழக்கு)	சமிட்டு என்ற வட்டார வழக்கு மிதி என்பதன் ஒரு பொருள்	மிதிப்பவர், மிதிக்கப்படும் பொருள்.	மிதிப்பவர் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடராக வரும். மிதிக்கப்படும் பொருள் செயப்படு பொருளாகச் செயல்பட்டு -ஐ வேற்றுமைத் தொடராக வரும்.	பெ.தொ+பெ.தொ.ஐ+சமிட்டு	ராணி இருட்டில் சாணியை சமிட்டிவிட்டாள்.

5.3.4 அழுத்துதல் வகை வினைகள்

வினை	பொருள்	பங்கெடுப்பாளர்கள்	பங்கெடுப்பாளர்களின் புற உருப்படுத்தம்	பங்கெடுப்பாளர்களின் அமைப்பு	எடுத்துக்காட்டு
அழுக்கு	கீழ்நோக்கி அல்லது உள்நோக்கி அழுத்துதல்	அமுக்குபவர், அமுக்கப்படும் பொருள்	அமுக்குபவர் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடராக வரும். அமுக்கப்படுபவர்செயப்படு பொருளாகச் செயல்பட்டு -ஐ வேற்றுமைத் தொடராக வரும்.	பெ.தொ.+பெ.தொ.-ஐ+அமுக்குஅ	நிமிர முடியாதபடி யாரோ அவனை அழுக்கினார்கள்.

அழுத்து	கீழ் அல்லது உள்நோக்கிப் போகச் செய்தல்.	அழுத்துபவர், அழுத்தப்படும் பொருள், அழுத்தப்படும் இடம்.	அழுத்துபவர் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடராக வரும். அழுத்தப்படுபவர்செயப்படு பொருளாகச் செயல்பட்டு –ஐ வேற்றுமைத் தொடராக வரும்.	பெ.தொ+பெ.தொ-ஐ+அழுத்து	அவன் அவள் தோளை அழுத்தி உட்கார வைத்தான்.
அமிழ்த்து	நீர், சேறு முதலியவற்றில் அமுக்குதல்.	அமிழ்த்துபவர், அமிழ்த்தப்படும் பொருள், அமிழ்த்தப்படும் இடம்.	அமிழ்த்துபவர் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடராக வரும். அமிழ்த்தப்படும் பொருள் செயப்படு பொருளாகச் செயல்பட்டு–ஐ வேற்றுமைத் தொடராக வரும். அமிழ்த்தப்படும் இடம்-இல் வேற்றுமைத் தொடராக வரும்.	பெ.தொ+பெ.தொ-ஐ+பெ.தொ.-இல்+அமிழத்து	அவள் குடத்தை நீரில் அமிழ்த்தி நீர் மொண்டான்.
நெரி	இறுக்கி அழுத்துதல்	நெரிப்பவர், நெரிக்கப்படும் பொருள்.	நெரிப்பவர் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடராக வரும். நெரிக்கப்படுப	பெ.தொ+பெ.தொ-ஐ+நெரி	விஜய் கழுத்தை நெரித்து பீமன் கொலை

			வர் செயப்படு பொருளாகச் செயல்பட்டு-ஐ வேற்றுமைத் தொடராக வரும்.		செய்தான்.
இடுக்கு	கவட்டையில் அல்லது கவட்டை போன்ற உடல் பகுதியில் ஒரு பொருளை வைத்து அழுத்திப் பிடித்தல்.	இடுக்குபவர், இடுக்கப்படும் பொருள்.	இடுக்குபவர் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடராக வரும். இடுக்கப்படும் பொருள் செயப்படு பொருளாகச் செயல்பட்டு-ஐ வேற்றுமைத் தொடராக வரும்.	1.பெ.தொ+பெ.தொ-இல்+பெ.தொ-ஐ+இடுக்கு 2.பெ.தொ+பெ.தொ-ஆல்+பெ.தொ-ஐ+இடுக்கு	விஜய் கக்கத்தில் குடையை இடுக்கி வைத்திருந்தான்
கிள்ளு	தசையைப் பிடித்து வலிக்கும் படி விரல்களால் நெருக்குதல்.	கிள்ளுபவர், கிள்ளப்படும் பொருள், கிள்ளப்படும் இடம்.	கிள்ளுபவர் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடராக வரும்.கிள்ளப்படுபவர் செயப்படு பொருளாகச் செயல்பட்டு-ஐ வேற்றுமைத் தொடராக வரும்.	1.பெ.தொ+பெ.தொ-ஐ+கிள்ளு 2.பெ.தொ+பெ.தொ-ஐ+பெ.தொ-இல்+கிள்ளு	ராதை குழந்தையின் உதட்டை கிள்ளினான்.
கசக்கு	ஒன்றை உள்ளங்கையில் வைத்து மற்றொரு கையால்	கசக்குபவர், கசக்கப்படும் பொருள்.	கசக்குபவர் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடராக வரும்.கசக்கப்படுப	பெ.தொ+பெ.தொ-ஐ+கசக்கு	அவன் கண்ணில் தூசி விழுந்ததால் கண்ணைக்

	அல்லது இரு கைகளிலும் பிடித்து அழுத்தி தேய்த்தல், கண்களைக் கைகளால் அழுத்தித் தேய்தல்.		வர் செயப்படு பொருளாகச் செயல்பட்டு-ஐ வேற்றுமைத் தொடராக வரும்.		கசக்கினான்.
அரக்கு	உள்ளங் கையில் ஒன்றை வைத்துக் கசக்கி அல்லது காலால் மிதித்து அழுத்தித் தேய்த்தல்.	அரக்குபவர், அரக்கப்படும் பொருள்.	அரக்குபவர் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடராக வரும். அரக்கப்படுபவர் செயப்படு பொருளாகச் செயல்பட்டு-ஐ வேற்றுமைத் தொடராக வரும்.	பெ.தொ+பெ.தொ-ஐ+அரக்கு	பச்சிலையைக் கையில் வைத்து அரக்கிப் பிழிந்தான்.
பிசை	கையால் அழுத்தி புரட்டி உருட்டுதல்	பிசைபவர், பிசையப்படும் பொருள்.	பிசைபவர் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடராக வரும். பிசையப்படும் பொருள் செயப்படு பொருளாகச் செயல்பட்டு-ஐ வேற்றுமைத் தொடராக வரும்.	பெ.தொ+பெ.தொ-ஐ+பிசை	அவள் சாதத்தைப் பிசைந்தாள்.
பதி	அச்சுமுத்திரை போன்றவற்றைப்	பதிப்பவர், பதிக்கப்படும்	பதிப்பவர் எழுவாயாக முதல்	பெ.தொ+பெ.தொ-ஐ+பதி	குழந்தைத் தன் தாய்

	பதியும்படி அழுத்துதல்.	பொருள்.	வேற்றுமைத் தொடராக வரும். பதிக்கப்படும் பொருள் செயப்படு பொருளாகச் செயல்பட்டு-ஐ வேற்றுமைத் தொடராக வரும்.		மடியில் முகத்தைப் பதித்துக் கொண்டு அழுதது.
புதை	முகம், தலை முதலியவற்றை அழுத்தப் பதித்தல்.	புதைப்பவர், புதைக்கப்படும் பொருள்.	புதைப்பவர் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடராக வரும். புதைக்கப்படும் பொருள் செயப்படு பொருளாகச் செயல்பட்டு-ஐ வேற்றுமைத் தொடராக வரும்.	பெ.தொ+பெ.தொ-ஐ+புதை	அவள் தலையணையில் முகத்தைப் புதைத்துக் கொண்டு அழுதாள்.
பிதுக்கு	உள்ளிருப்பதை வெளியேற்றப் பக்கவாட்டில் அழுத்துதல்	பிதுக்குபவர், பிதுக்கப்படும் பொருள்.	பிதுக்குபவர் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடராக வரும். பிதுக்கப்படும் பொருள் செயப்படு பொருளாகச் செயல்பட்டு-ஐ வேற்றுமைத் தொடராக வரும்.	பெ.தொ+பெ.தொ-ஐ+பிதுக்கு	கமல் கன்னத்தில் உள்ள பருவை பிதுக்கி சீழை வெளியேற்றினான்.
பிழி	ஒன்றில்	பிழிபவர்,	பிழிபவர் எழுவாயாக	பெ.தொ+பெ.	அவன்

	இருக்கும் நீர், சாறு முதலியவை வெளியேற கையாலோ இயந்திரத்தாலே ா அழுத்துதல்.	பிழியப்படும பொருள்.	முதல் வேற்றுமைத் தொடராக வரும். பிழியப்படும் பொருள் செயப்படு பொருளாகச் செயல்பட்டு-ஐ வேற்றுமைத் தொடராக வரும்.	தொ-ஐ+பிழி	பழத்தைச் சாறு பிழிந்தான்.

5.3.5 திருப்புதல் வகை வினைகள்

வினை	பொருள்	பங்கெடுப்பாளர்கள்	பங்கெடுப்பாளர்களின் புற உருப்படுத்தம்	பங்கெடுப்பாளர்களின் அமைப்பு	எடுத்துக்காட்டு
திருப்பு	இருக்கும் திசையிலிருந்து மாற்றுதல், திருகுதல்.	திருப்புபவர், திருப்பப்படும் பொருள்.	திருப்புவர் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடராக வரும். திருப்பப்படும் பொருள் செயப்படு பொருளாகச் செயல்பட்டு-ஐ வேற்றுமைத் தொடராக வரும்.	பெ.தொ+பெ.தொ-ஐ+திருப்பு	அவன் தலையைத் திருப்பி பின்னால் பார்த்தான்.
திருகு	திருகாணி முதலியவற்றைச் சுற்றி உட்செலுத்துதல், திருப்புதல்.	திருகுபவர், திருகப்படும் பொருள்.	திருபவர் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடராக வரும். திருப்படும் பொருள் செயப்படு பொருளாகச்	பெ.தொ+பெ.தொ-ஐ+திருகு	அவன் திருப்புளியால் ஆணியைத் திருகினான்.

			செயல்பட்டு-ஐ வேற்றுமைத் தொடராக வரும்.		
முறுக்கு	துணி முதலியவற்றை சுருளும்படி திருப்புதல், திருகாணி போன்றவற்றை திருகுதல்.	முறுக்குபவர், முறுக்கப்படும் பொருள்	முறுக்குபவர் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடராக வரும். முறுக்கப்படும் பொருள் செயப்படு பொருளாகச் செயல்பட்டு-ஐ வேற்றுமைத் தொடராக வரும்.	பெ.தொ+பெ.தொ-ஐ+முறுக்கு	அவள் ஐமுக்காளத்தை முறுகிப் பிழிந்தாள்.
பிழி	நனைத்திருப்பதிலிருந்து முறுக்கி திரவத்தை வெளியேற்றுதல்.	பிழிபவர், பிழியப்படும் பொருள்.	பிழிபவர் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடராக வரும். பிழியப்படும் பொருள் செயப்படு பொருளாகச் செயல்பட்டு-ஐ வேற்றுமைத் தொடராக வரும்.	பெ.தொ+பெ.தொ-ஐ+பிழி	அவன் துணிகளைப் பிழிந்து உலர்த்தினான்

5.3.6 தொடுதல் வகை விகைள்

வினை	பொருள்	பங்கெடுப்பாளர்கள்	பங்கெடுப்பாளர்களின் புற உருப்படுத்தம்	பங்கெடுப்பாளர்களின் அமைப்பு	எடுத்துக்காட்டு
தொடு	கையைப் படச் செய்தல்,	தொடுபவர், தொடப்படும்	தொடுபவர் எழுவாயாக முதல்	பெ.தொ+பெ.தொ-ஐ+தொடு	ராஜா தன் பெற்றோரி

	படுவதன் மூலம் உணர்தல்.	பொருள், தொடும் கருவி (விருப்பு)	வேற்றுமைத் தொடராக வரும். தொடப்படுபவர் செயப்படு பொருளாகச் செயல்பட்டு-ஐ வேற்றுமைத் தொடராக வரும்.தொடும் கருவி -ஆல் வேற்றுமைத் தொடராக உருப்பத்தம் பெறும்.		ன் காலைத் தொட்டு வணங்கினான்
தீண்டு	பெரும்பாலும் மரபு	தீண்டப்படும் பொருள்.	தீண்டுபவர் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடராக வரும். தீண்டப்படும் பொருள் செயப்படு பொருளாகச் செயல்பட்டு-ஐ வேற்றுமைத் தொடராக வரும்.	பெ.தொ+பெ.தொ-ஐ+தீண்டு	ராஜநாகம் யாரையும் தீண்டியது இல்லை.
சீண்டு	விளையாட்டாகவோ அல்லது குறிப்பிட்ட நோக்கத்துடனோ கோபம், எரிச்சல்	சீண்டுபவர், சீண்டப்படும் பொருள்.	சீண்டுபவர் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடராக வரும். சீண்டப்படும் பொருள் செயப்படு பொருளாகச்	பெ.தொ+பெ.தொ-ஐ+சீண்டு	அவனைச் சீண்டாதே என்றான்.

	உண்டாகுமாறு தொட்டுத் தொலை தருதல்.		செயல்பட்டு–ஐ வேற்றுமைத் தொடராக வரும்.		
வருடு	மென்மையாகத் தொட்டுத் தடவுதல்.	வருடுபவர், வருடப்படும் பொருள்.	வருடுபவர் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடராக வரும். வருடப்படும் பொருள் செயப்படு பொருளாகச் செயல்பட்டு–ஐ வேற்றுமைத் தொடராக வரும்.	பெ.தொ+பெ.தொ-ஐ+வருடு	தாய் குழந்தையின் தலையைத் தொட்டு அன்போடு வருடினான்.
தடவு	உடலை வருடுதல்.	தடவுபவர், தடவப்படும் பொருள், தடவும் கருவி (விருப்பு)	தடவுபவர் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடராக வரும். தடவப்படும் பொருள் செயப்படு பொருளாகச் செயல்பட்டு–ஐ வேற்றுமைத் தொடராக வரும்.	பெ.தொ+பெ.தொ-ஐ+தடவு	தாய் மகளின் கன்னத்தைத் தடவி முத்தமிட்டாள்.
துழாவு/ துளாவு	கண்ணுக்கு எளிதில் புலப்படாத இடத்தில் அல்லது இருட்டில் உள்ள	துழாவுபவர், துழாவப்படும் பொருள், துழாவும் கருவி (விருப்பு)	துழாவுபவர் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடராக வரும். துழாவப்படும் பொருள் செயப்படு	பெ.தொ+பெ.தொ-ஐ+துழாவு	இருட்டில் கையால் துழாவி மின்விளக்கைக் போட்டான்

	பொருளைக் கையால் தடவி அறிதல்.		பொருளாகச் செயல்பட்டு-ஐ வேற்றுமைத் தொடராக வரும்.துழாவும் கருவி விருப்பாகச் செயல்பட்டு -ஆல் வேற்றுமைத் தொடராக வரும்.		.
தேய்	ஒன்றை மற்றொன்றின் மீது அழுத்தி முன்னும் பின்னுமாக இழுத்தல், உரசுதல்.	தேய்ப்பவர், தேய்க்கப்படும் பொருள்.	தேய்ப்பவர் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடராக வரும். தேய்க்கப்படும் பொருள் செயப்படு பொருளாகச் செயல்பட்டு-ஐ வேற்றுமைத் தொடராக வரும்.	1.பெ.தொ+ பெ.தொ-ஐ+தேய் 2.பெ.தொ+ பெ.தொ-இல்+பெ.தொ-ஐ+தேய்	அவன் செருப்பதைத் தரையில் தேய்த்து நடக்கிறான் .
உரசு	தேய்த்தல்.	உரசுபவர், உரசப்படும் பொருள்.	உரசுபவர் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடராக வரும். உரசப்படும் பொருள் செயப்படு பொருளாகச் செயல்பட்டு-ஐ வேற்றுமைத் தொடராக வரும்.	1.பெ.தொ+ பெ.தொ-ஐ+உரசு 2.பெ.தொ+ பெ.தொ-இல்+உரசு	பேருந்து ராஜாவை உரசிச் சென்றது.
உராய்	ஒழுங்கற்ற	உராயும்	உராயும் பொருள்	பெ.தொ+பெ.	கீழே

	முறையில் படுதல், உரசுதல்.	பொருள், உராயும் இடம்.	எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடராக வரும். உராயும் இடம் –இல் வேற்றுமைத் தொடராக வரும்.	தொ-இல்+உராய்	விழுந்ததால் முழங்கை உராய்ந்தது.
அரக்கு	உள்ளங்கையால் அல்லது காலால் அழுத்தித் தேய்த்தல்.	அரக்குபவர், அரக்கப்படும் பொருள்.	அரக்குபவர் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடராக வரும். அரக்கப்படும் பொருள் செயப்படுபொருளாகச் செயல்பட்டு –ஐ வேற்றுமைத் தொடராக வரும்.	பெ.தொ+பெ.தொ-ஐ+அரக்கு	ஊசி போட்டவுடன் அந்த இடத்தை அரக்கித் தேய்த்தான்.
ஒற்று	நீர், வியர்வை முதலியவற்றைத் துணி முதலியவை கொண்டு மென்மையாகத் தொட்டு உறிஞ்சச் செய்தல்.	ஒற்றுபவர், ஒற்றப்படும் பொருள், ஒற்ற உதவும் கருவி (விருப்பு)	ஒற்றுபவர் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடராக வரும். ஒற்றப்படும் பொருள் செயப்படுபொருளாகச் செயல்பட்டு –ஐ வேற்றுமைத் தொடராக	பெ.தொ+பெ.தொ-ஐ+பெ.தொ-ஆல்+ஒற்று	வியர்வையத் துணியால் ஒற்றித் துடைத்தான்.
முத்து/முத்தமிடு	கன்னம், உதடு முதலிய பகுதிகளில் உதட்டைப்	முத்தமிடுபவர், முத்தமிடப்படுபவர், முத்தமிடப்படும்	முத்தமிடுபவர் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடராக	1.பெ.தொ+பெ.தொ-இல்+முத்தமிடு 2.பெ.தொ+	தாய் தன் குழந்தையின் கன்னத்தில்

	பதியச் செய்தல்.	இடம்.	வரும். முத்தமிடப்படுபவர் செயப்படுபொருளாகச் செயல்பட்டு –ஐ வேற்றுமைத் தொடராக வரும்.	பெ.தொ-ஐ+முத்தமிடு	முத்தமிட்டாள்.

5.3.7 தீட்டுதல் வகை வினைகள்

வினை	பொருள்	பங்கெடுப்பாளர்கள்	பங்கெடுப்பாளர்களின் புற உருப்படுத்தம்	பங்கெடுப்பாளர்களின் அமைப்பு	எடுத்துக்காட்டு
கூராக்க,கூர்மையாக்கு	கத்தி போன்ற கருவிகளைக் கூர்மையாக்குதல்.	கூராக்குபவர், கூராக்கப்படும் பொருள்.	கூராக்குபவர் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடராக வரும். கூராக்கப்படும் பொருள் செயப்படு பொருளாகச் செயல்பட்டு –ஐ வேற்றுமைத் தொடராக வரும்.	பெ.தொ+பெ.தொ-ஐ+கூராக்கு	அவன் அரத்தால் கத்தியை கூராக்கினான்.
தீட்டு	கத்தி போன்ற கருவிகளைக் கூராக்குதல்.	தீட்டுபவர், தீட்டப்படும் பொருள்.	தீட்டுபவர் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடராக வரும். தீண்டப்படும் பொருள் செயப்படு பொருளாகச்	பெ.தொ+பெ.தொ-ஐ+தீட்டு	அவன் வாழையை வெட்டக் கத்தியைத் தீட்டினான்.

			செயல்பட்டு -ஐ வேற்றுமைத் தொடராக வரும்.		
அராவு/ ராவு	அரம் கொண்டு கத்தி போன்ற கருவிகளைக் கூராக்குதல்.	அராவுபவர், அராவப்படும் பொருள்.	அராவுபவர் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடராக வரும்.அராவப்படும் பொருள் செயப்படு பொருளாகச் செயல்பட்டு -ஐ வேற்றுமைத் தொடராக வரும்.	1.பெ.தொ+ பெ.தொ-இல்+முத்தமிடு 2.பெ.தொ+ பெ.தொ-ஐ+முத்தமிடு	அவன் கத்தியை அராவினான்

5.3.8 கடித்தல் வகை வினைகள்

வினை	பொருள்	பங்கெடுப்பாளர்கள்	பங்கெடுப்பாளர்களின் புற உருப்படுத்தம்	பங்கெடுப்பாளர்களின் அமைப்பு	எடுத்துக்காட்டு
கடி	உடலின் ஒரு பரப்பில் பற்களைப் பதித்து பலமாக அழுத்துதல்.	கடிப்பவர், கடிக்கப்படுபவர்.	கடிப்பவர் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடராக வரும். கடிக்கப்படுபவர் செயப்படு பொருளாகச் செயல்பட்டு -ஐ வேற்றுமைத் தொடராக வரும்.	1.பெ.தொ+ பெ.தொ-ஐ+கடி 2.பெ.தொ+ பெ.தொ-இல்+கடி	அவனை நாய் கடித்தது.

கொட்டு	உடலீன் ஒரு பரப்பில் பூச்சிகள், வண்டுகள், தேள் போன்றவை கொடுக்கால் குத்துதல்.	கொட்டுபவர், கொட்டப்படுபவர்.	கொட்டுபவர் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடராக வரும். கொட்டப்படுபவர் செயப்படு பொருளாகச் செயல்பட்டு –ஐ வேற்றுமைத் தொடராக வரும்.	பெ.தொ+பெ.தொ-ஐ+கொட்டு	அவனைத் தேள் கொட்டியது.
தீண்டு	உடம்பில் ஒரு பரப்பில் விஷப் பூச்சிகள் கடித்தல்.	தீண்டுவது, தீண்டப்படுபவர்.	தீண்டுபவர் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடராக வரும். தீண்டப்படுபவர் செயப்படுபொருளாகச் செயல்பட்டு –ஐ வேற்றுமைத் தொடராக வரும்.	பெ.தொ+பெ.தொ-ஐ+கொத்து	அவனை கருநாகம் தீண்டியது.
கொத்து	பறவைகள் அலகாலும் அணில், பாம்பு முதலியன உடலின் ஒரு பரப்பில் பல்லாலும் குத்துதல்.	கொத்துபவர், கொத்தப்படுபவர்.	கொத்துபவர் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடராக வரும். கொத்தப்படுபவர் செயப்படுபொருளாகச் செயல்பட்டு –ஐ வேற்றுமைத் தொடராக வரும்.	பெ.தொ+பெ.தொ-ஐ+கொத்து	அவனை காக்கா கொத்தியது.

5.3.9 கிளறுதல் வகை விகைள்

வினை	பொருள்	பங்கெடுப்பாளர்கள்	பங்கெடுப்பாளர்களின் புற உருப்படுத்தம்	பங்கெடுப்பாளர்களின் அமைப்பு	எடுத்துக்காட்டு
கிண்டு	கம்பு, கை முதலியவற்றால் மேல் கீழாகவோ அல்லது பக்கவாட்டிலோ ஒன்றை புரட்டுதல்.	கிண்டுபவர், கிண்டப்படும் பொருள்.	கிண்டுபவர் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடராக வரும். கிண்டப்படும் பொருள் செயப்படுபொருளாகச் செயல்பட்டு –ஐ வேற்றுமைத் தொடராக வரும்.	பெ.தொ+பெ.தொ-ஐ+கிண்டு	நெல்லைக் கிண்டி காய வைத்தான்.
கிளறு	கிளறுதல்	கிளறுபவர், கிளறப்படும் பொருள்.	கிளறுபவர் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடராக வரும். கிளறப்படும் பொருள் செயப்படுபொருளாகச் செயல்பட்டு –ஐ வேற்றுமைத் தொடராக வரும்.	பெ.தொ+பெ.தொ-ஐ+கிளறு	கோழி குப்பையைக் கிளறி புழுப் பூச்சிகளைத் தேடியது.
கொத்து	மண்வெட்டியால் வெட்டிக் கிளறுதல்.	கொத்துபவர், கொத்தப்படும் பொருள்.	கொத்துபவர் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடராக வரும். கொத்தப்படுபவர் செயப்படுபொருளாக	பெ.தொ+பெ.தொ-ஐ+கொத்து	அவர் தோட்டம் போடுவதற்காக நிலத்தைக் கொத்திக்

			ச் செயல்பட்டு –ஐ வேற்றுமைத் தொடராக வரும்.		கொண்டிருந்தார்.
குடை	விரலாலோ குச்சியாலோ கிண்டுதல்.	குடைபவர், குடையப்படும் பொருள்.	குடைபவர் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடராக வரும். குடையப்படும் பொருள் செயப்படுபொருளாகச் செயல்பட்டு –ஐ வேற்றுமைத் தொடராக வரும்.	பெ.தொ+பெ.தொ-ஐ+குடை	அவன் செவித் துரண்டியால் செவியை குடைந்தான்.
உழு	விதைக்கும் முன் கலப்பை போன்ற கருவி கொண்டு மண்ணைக் கிளறி விடுதல்.	உழுபவர், உழப்படும் பொருள்.	உழுபவர் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடராக வரும். உழப்படும் பொருள் செயப்படுபொருளாகச் செயல்பட்டு –ஐ வேற்றுமைத் தொடராக வரும்.	பெ.தொ+பெ.தொ-ஐ+உழு	அவன் வயலை உழுதான்.

5.3.10 துளைத்தல் வகை வினைகள்

வினை	பொருள்	பங்கெடுப்பாளர்கள்	பங்கெடுப்பாளர்களின் புற உருப்படுத்தம்	பங்கெடுப்பாளர்களின் அமைப்பு	எடுத்துக்காட்டு
துளை	உடலில் சிறு வழி	துளைப்பவர், துளைக்கப்படும்	துளைப்பான் எழுவாயாக முதல்	பெ.தொ+பெ.தொ-ஐ+துளை	

	உண்டாக்கி உள்ளே செல்லுதல் அல்லது துவாரம் போடுதல்.	பொருள்.	வேற்றுமைத் தொடராக வரும். துளைக்கப்படும் பொருள் செயப்படுபொருளாகச் செயல்பட்டு –ஐ வேற்றுமைத் தொடராக வரும்.		
குடை	துளைத்தல்	குடைபவர், குடையப்படும் பொருள்.	குடைபவர் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடராக வரும். குடையப்படும் பொருள் செயப்படுபொருளாகச் செயல்பட்டு –ஐ வேற்றுமைத் தொடராக வரும்.	பெ.தொ+பெ.தொ-ஐ+குடை	வண்டுகள் மரத்தைக் குடைந்து மரம் பட்டுப் போய்விட்டது.
துர (வட்டார வழக்கு)	துவாரம் போடுதல்.	துரப்பவர், துரக்கப்படும் பொருள்.	துரப்பவர் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடராக வரும். துரக்கப்படும் பொருள் செயப்படுபொருளாகச் செயல்பட்டு –ஐ வேற்றுமைத் தொடராக வரும்.	பெ.தொ+பெ.தொ-ஐ+துர	மரநாய் தென்னையிலுள்ள தேங்காய்களைத் துரந்து வீணடித்து விட்டன.
குத்து	துளைத்து உள்ளே	குத்துபவர், குத்தப்படும்	குத்துபவர் எழுவாயாக முதல்	பெ.தொ+பெ.தொ-ஐ+குத்து	கத்தியால் அவனைக்

	போகும்படி அழுத்துதல்.	பொருள்.	வேற்றுமைத் தொடராக வரும். குத்தப்படும் பொருள் செயப்படுபொருளாகச் செயல்பட்டு –ஐ வேற்றுமைத் தொடராக வரும்.		குத்தினான்.

5.3.11 கலக்குதல் வகை வினைகள்

வினை	பொருள்	பங்கெடுப்பாளர்கள்	பங்கெடுப்பாளர்களின் புற உருப்படுத்தம்	பங்கெடுப்பாளர்களின் அமைப்பு	எடுத்துக்காட்டு
கலக்கு	ஒரு திரவத்தை அல்லது ஒரு திரவத்தில் ஒன்றைப் போட்டுச் சுழலச் செய்தல்.	கலக்குபவர், கலக்கப்படும் பொருள்.	கலக்குபவர் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடராக வரும். கலக்கப்படும் பொருள் செயப்படுபொருளாகச் செயல்பட்டு –ஐ வேற்றுமைத் தொடராக வரும்.	பெ.தொ+பெ.தொ-ஐ+கலக்கு	அவன் காப்பியைக் கலக்கி குடித்தான்.
கடை	மத்து, கோல் முதலியவற்றை ஒன்றில் வைத்து வலமாகவும் இடமாவும் மாறி மாறி சுழலச் செய்தல்.	கடைபவர், கடையப்படும் பொருள்.	கடைபவர் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடராக வரும். கடையப்படும் பொருள் செயப்படுபொருளாக	பெ.தொ+பெ.தொ-ஐ+கடை	ராதை மோரைக் கடைந்தாள்.

			ச் செயல்பட்டு –ஐ வேற்றுமைத் தொடராக வரும்.		

5.3.12 கொல்லுதல் வகை வினைகள்

வினை	பொருள்	பங்கெடுப்பாளர்கள்	பங்கெடுப்பாளர்களின் புற உருப்படுத்தம்	பங்கெடுப்பாளர்களின் அமைப்பு	எடுத்துக்காட்டு
கொல்	ஒருவரைச் சாகடித்தல், கொலை செய்தல், உயிரைப் போக்குதல்.	கொல்பவர், கொல்லப்படுபவர்.	கொல்பவர் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடராக வரும். கொல்லப்படுபவர் செயப்படுபொருளாகச் செயல்பட்டு –ஐ வேற்றுமைத் தொடராக வரும்.	பெ.தொ+பெ.தொ-ஐ+கொல்	பங்கெடுப்பாளர்கள்
கொலை செய்	உயிர் இழக்கச் செய்தல் அல்லது சாகடிக்கும் வன்முறைச் செயலைச் செய்தல்.	கொலை செய்பவர், கொலை செய்யப்படுபவர்.	கடைபவர் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடராக வரும். கொலை செய்யப்படுபவர் செயப்படுபொருளாகச் செயல்பட்டு –ஐ வேற்றுமைத் தொடராக வரும்.	பெ.தொ+பெ.தொ-ஐ+கொலை செய்	அவரை அவன் துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்தான்.
சாகடி	கொல்லுதல், உயிரைப்	சாகடிப்பவர், சாகடிக்கப்படுபவ	சாகடிப்பவர் எழுவாயாக முதல்	பெ.தொ+பெ.தொ-ஐ+சாகடி	அவன் விஷப்

	போக்குதல்.	ர்.	வேற்றுமைத் தொடராக வரும். சாகடிக்கப்படுபவர் செயப்படுபொருளாகச் செயல்பட்டு –ஐ வேற்றுமைத் தொடராக வரும்.		புகையை அறைக்குள் செலுத்தி அவர்களைச் சாகடித்தான்.
வதம் செய்	புராணங்களில் தீயவர்களை அழிக்கும் செயல்.	வதம் செய்பவர், வதம் செய்யப்படுபவர்.	வதம் செய்பவர் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடராக வரும். வதம் செய்யப்படுபவர் செயப்படுபொருளாகச் செயல்பட்டு –ஐ வேற்றுமைத் தொடராக வரும்.	பெ.தொ+பெ.தொ-ஐ+வதம் செய்	இராமன் இராவணனை வதம் செய்தான்.
வதை செய்	துன்புறுத்தி சொல்லுதல்.	வதைப்பவர், வதைக்கப்படுபவர்.	வதைப்பவர் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடராக வரும். வதைக்கப்படுபவர் செயப்படுபொருளாகச் செயல்பட்டு –ஐ வேற்றுமைத் தொடராக வரும்.	பெ.தொ+பெ.தொ-ஐ+வதை செய்	உண்மையைக் கண்டறிய திருடனைப் போலிசார் கொடுமைப் படுத்தி வதை செய்தனர்.
பலி கொடு	தெய்வத்திற்கு காணிக்கையாக உயிர்கொலை செய்தல்.	பலி கொடுப்பவர், பலி கொடுக்கப்படுபவ	பலி கொடுப்பவர் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடராக	பெ.தொ+பெ.தொ-ஐ+பலி கொடு	காளிக்கு ஆட்டை பலி கொடுத்தன

		ர்	வரும்.பலி கொடுக்கப்படுபவர் செயப்படுபொருளாக ச் செயல்பட்டு -ஐவேற்றுமைத் தொடராக வரும்.		ர்.

5.3.13 இழுத்தல் /தள்ளுதல் வகை வினைகள்

வினை	பொருள்	பங்கெடுப்பாளர்கள்	பங்கெடுப்பாளர் களின் புற உருப்படுத்தம்	பங்கெடுப்பாளர் களின் அமைப்பு	எடுத்துக்கா ட்டு
இழு	கையால் அல்லது ஏதேனும் இணைப்பின் மூலம் தனக்கப் பின்னால் அல்லது தன்னை நோக்கி அல்லது மேல் நோக்கி வரச் செய்தல்.	இழுப்பவர், இழுக்கப்படும் பொருள்.	இழுப்பவர் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடராக வரும். இழுக்கப்படும் பொருள் செயப்படுபொருளா கச் செயல்பட்டு – ஐ வேற்றுமைத் தொடராக வரும்.	பெ.தொ+பெ. தொ-ஐ+பலி இழு	அவன் என் கையைப் பிடித்து இழுத்தான் .
வலி	துடுப்பு, கயிறு முதலியவற்றை இழுத்தல்.	வலிப்பவர், வலிக்கப்படும பொருள்.	வலிப்பவர் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடராக வரும். வலிக்கப்படும் பொருள்	பெ.தொ+பெ. தொ-ஐ+வலி	அவன் கயிற்றை இடது பக்கமாக வலித்தான் .

			செயப்படுபொருளாகச் செயல்பட்டு – ஐ வேற்றுமைத் தொடராக வரும்.		
தள்ளு	ஒருவரை அல்லது ஒன்றை ஒரு திசையில் விசையுடன் உந்துதல் அல்லது கீழே விழுமாறு செய்தல்.	தள்ளுபவர், தள்ளப்படுபவர்.	தள்ளுபவர் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடராக வரும். தள்ளப்படுபவர் செயப்படுபொருளாகச் செயல்பட்டு – ஐ வேற்றுமைத் தொடராக வரும்.	பெ.தொ+பெ.தொ-ஐ+தள்ளு	அவரைக் கீழே தள்ளிவிட்டான்.
உந்து	காற்று முன்னோக்கித் தள்ளுதல்.	உந்துபவர், உந்தப்படும் பொருள்.	உந்துபவர் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடராக வரும். உந்தப்படும் பொருள் செயப்படுபொருளாகச் செயல்பட்டு – ஐ வேற்றுமைத் தொடராக வரும்.	பெ.தொ+பெ.தொ-ஐ+உந்து	காற்று பாய்மரக் கப்பலை உந்திக் கரை சேர்ந்தது.
சுண்டு	சிறு பொருளை விரல்களால் விசையுடன் தள்ளுதல்.	சுண்டுபவர், சுண்டப்படும் பொருள்.	சுண்டுபவர் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடராக வரும். சுண்டப்படும் பொருள் செயப்படுபொருளா	பெ.தொ+பெ.தொ-ஐ+சுண்டு	அவன் நாணயத்தை சுண்டிப் போட்டான்.

			கச் செயல்பட்டு – ஐ வேற்றுமைத் தொடராக வரும்.		

5.3.14 வெட்டுதல் வகை வினைகள்

வினை	பொருள்	பங்கெடுப்பாளர்கள்	பங்கெடுப்பாளர் களின் புற உருப்படுத்தம்	பங்கெடுப்பாளர் களின் அமைப்பு	எடுத்துக்காட்டு
வெட்டு	கத்தி, அரிவாள் போன்றவற்றால் ஒரு பொருளைப் பகுத்தல் அல்லது நறுக்குதல்.	வெட்டுபவர், வெட்டப்படும் பொருள், வெட்டும் கருவி.	வெட்டுபவர் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடராக வரும். வெட்டப்படும் பொருள் செயப்படுபொருளாகச் செயல்பட்டு – ஐ வேற்றுமைத் தொடராக வரும். வெட்டும் கருவி – ஆல் வேற்றுமைத் தொடராக வரும்.	பெ.தொ+பெ.தொ-ஆல்+ பெ.தொ-ஐ+வெட்டு	பங்கெடுப்பாளர்கள்
துண்டி	ஒன்றாக இருப்பதை அல்லது ஒன்றோடொன்று இணைந்து இருப்பதை வெட்டியோ அறுத்தோ	துண்டிப்பவர், துண்டிக்கப்படும் பொருள், துண்டிக்கப்படும் கருவி.	துண்டிப்பவர் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடராக வரும்.துண்டிக்கப் படும் பொருள் செயப்படு பொருளாகச்	பெ.தொ+பெ.தொ-ஐ+துண்டி	ரயில் விபத்தில் அவன் தலை துண்டிக்கப் பட்டது.

	தனித்தனிப் பகுதிகளாக ஆக்குதல்.		செயல்பட்டு –ஐ வேற்றுமைத் தொடராக வரும்.		
நறுக்கு	காய்கள், பழம் போன்றவற்றைக் கத்தி போன்ற ஆயுதங்களால் சிறு துண்டாக வெட்டுதல் அல்லது அரிதல்.	நறுக்குபவர், நறுக்கப்படும பொருள், நறுக்கம் கருவி.	நறுக்குபவர் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடராக வரும். நறுக்கப்படும் பொருள் செயப்படுபொருளாகச் செயல்பட்டு – ஐ வேற்றுமைத் தொடராக வரும். நறுக்கும் கருவி – ஆல் வேற்றுமைத் தொடராக வரும்.	பெ.தொ+பெ. தொ-ஐ+நறுக்கு	அவள் காய்களை நறுக்கினாள்.
அறு	ஒரு பொருளைக் கத்தி போன்ற ஆயுதத்தால் முன்னும் பின்னும் நகர்த்தி வெட்டுதல்.	அறுப்பவர், அறுக்கப்படும் பொருள், அறுக்கும் கருவி.	அறுப்பவர் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடராக வரும். அறுக்கப்படும் பொருள் செயப்படுபொருளாகச் செயல்பட்டு – ஐ வேற்றுமைத் தொடராக வரும். அறுக்கும் ம் கருவி –ஆல் வேற்றுமைத்	பெ.தொ+பெ. தொ-ஐ+அறு	அவன் கதிர்களை அறுத்தான்.

			தொடராக வரும்.		
கத்தரி	கத்தரிக்கோலால் வெட்டுதல்.	கத்தரிப்பவர், கத்தரிக்கப்படுபவர், கத்தரிக்கப்படும் பொருள்.	கத்தரிப்பவர் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடராக வரும். கத்தரிக்கப்படும் பொருள் செயப்படுபொருளாகச் செயல்பட்டு – ஐ வேற்றுமைத் தொடராக வரும்.	பெ.தொ+பெ.தொ-ஐ+கத்தரி	வண்ணப் படத்தை கத்தரித்து எடுத்தான்.
கீறு	கத்தி போன்ற ஆயுதங்களால் நீளவாக்கில் வெட்டுதல்.	கீறுபவர், கீறப்படும் பொருள், கீறும் கருவி.	கீறுபவர் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடராக வரும். கீறப்படும் பொருள் செயப்படுபொருளாகச் செயல்பட்டு – ஐ வேற்றுமைத் தொடராக வரும். கீறும் கருவி – ஆல் வேற்றுமைத் தொடராக வரும்.	பெ.தொ+பெ.தொ-ஐ+ பெ.தொ-ஆல்+கீறு	அவன் பூசணிக்காயைக் கத்தியால் கீறி விற்பனை செய்தான்.
சீவு	மெல்லிய சுருளாக வெட்டி நீக்குதல்.	சீவுபவர், சீவப்படும் பொருள், சீவும் கருவி.	சீவுபவர் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடராக வரும். சீவப்படும் பொருள்	1.பெ.தொ+ பெ.தொ-ஐ+ பெ.தொ-ஆல்+வெட்டு 2.பெ.தொ+ பெ.தொ.-	அவள் பென்சிலைச் சீவினான்.

			செயப்படுபொருளாகச் செயல்பட்டு – ஐ வேற்றுமைத் தொடராக வரும். சீவும் கருவி – ஆல் வேற்றுமைத் தொடராக வரும்.	ஐ+சீவு	
மழி	தலை, முகம் போன்ற உடல் உறுப்புகளில் வளரும் முடியைப் கத்தி, பிளேடு போன்ற கருவிகளைக் கொண்டு நீக்குதல்.	மழிப்பவர், மழிக்கப்படும் பொருள்.	மழிப்பவர் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடராக வரும். மழியப்படும் பொருள் செயப்படுபொருளாகச் செயல்பட்டு – ஐ வேற்றுமைத் தொடராக வரும். மழிக்கும் கருவி – ஆல் வேற்றுமைத் தொடராக வரும்.	1.பெ.தொ+பெ.தொ-ஐ+மழி 2.பெ.தொ+பெ.தொ.-ஆல்+பெ.தொ-ஐ+மழி	அவன் முகத்தை மழித்துக் கொண்டான்.

5.3.15 இரண்டுபடுத்தல் வகை வினைகள்

வினை	பொருள்	பங்கெடுப்பாளர்கள்	பங்கெடுப்பாளர்களின் புற உருப்படுத்தம்	பங்கெடுப்பாளர்களின் அமைப்பு	எடுத்துக்காட்டு
பிள	பாறை, மரம் முதலியவற்றை இரண்டாக்குதல்	பிளக்குபவர், பிளக்கப்படும் பொருள், பிளக்கும் கருவி.	பிளப்பவர் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடராக வரும்.	பெ.தொ+பெ.தொ.-ஆல்+பெ.தொ-ஐ+பிள	அவன் கோடாலியால் விறகைப்

			பிளக்கப்படும் பொருள் செயப்படுபொருளாகச் செயல்பட்டு – ஐ வேற்றுமைத் தொடராக வரும். பிளக்கும் கருவி – ஆல் வேற்றுமைத் தொடராக வரும்.		பிளந்தான்.
முறி	மரம், கட்டை போன்ற உறுதியான பொருளை துண்டாக்குதல் அல்லது ஒடித்தல்	முறிப்பவர், முறிக்கப்படும் பொருள்.	முறிப்பவர் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடராக வரும். முறிக்கப்படும் பொருள் செயப்படுபொருளாகச் செயல்பட்டு – ஐ வேற்றுமைத் தொடராக வரும். மழிக்கும் கருவி – ஆல் வேற்றுமைத் தொடராக வரும்.	பெ.தொ+பெ.தொ-ஐ+முறி	அவள் கட்டையை முறித்து அடுப்பில் வைத்தாள்.
கீறு	துணி, காகிதம், தோல் போன்றவற்றைக் கை போன்ற உறுப்புகளால் இரண்டு படுத்துதல்.	கீறுபவர், கீறப்படும் பொருள்.	கீறுபவர் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடராக வரும். கீறப்படும் பொருள் செயப்படுபொருளாகச் செயல்பட்டு –	பெ.தொ+பெ.தொ-ஐ+கீறு	அவள் துணியைக் கீறித் துடைப்பதற்குப் பயன்படுத்தினாள்.

			ஐ வேற்றுமைத் தொடராக வரும்.		
கிழி	துணி, காகிதம், தோல் முதலியவற்றைக் கை போன்ற உறுப்புகளில் அல்லது ஒரு கருவியால் ஓரிடத்தில் பிரித்தல் அல்லது பிரிந்து போகுமாறு செய்தல்.	கிழிப்பவர், கிழிக்கப்படும் பொருள்.	கிழிப்பவர் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடராக வரும். கிழிக்கப்படும் பொருள் செயப்படுபொருளாகச் செயல்பட்டு – ஐ வேற்றுமைத் தொடராக வரும்.	பெ.தொ+பெ.தொ-ஐ+கிழி	தகரம் கையைக் கிழித்துவிட்டது.

5.3.16 உடைத்தல் வகை வினைகள்

வினை	பொருள்	பங்கெடுப்பாளர்கள்	பங்கெடுப்பாளர்களின் புற உருப்படுத்தம்	பங்கெடுப்பாளர்களின் அமைப்பு	எடுத்துக்காட்டு
உடை	துண்டாக்குதல், பிளத்தல்.	உடைப்பவர், உடைக்கப்படும் பொருள்.	உடைப்பவர் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடராக வரும். உடைக்கப்படும் பொருள் செயப்படுபொருளாகச் செயல்பட்டு – ஐ வேற்றுமைத் தொடராக வரும்.	பெ.தொ+பெ.தொ-ஐ+உடை	அவன் கண்ணாடியை உடைத்தான்.

தகர்	அழிந்து போகும் அல்லது உருக்குலைந்து போகும் வகையில் சிதறச் செய்தல்	தகர்ப்பவர், தகர்க்கப்படும் பொருள்.	தகர்ப்பவர் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடராக வரும். தகர்க்கப்படும் பொருள் செயப்படுபொருளாகச் செயல்பட்டு – ஐ வேற்றுமைத் தொடராக வரும்.	பெ.தொ+பெ.தொ-ஐ+தகர்	அவர்கள் பாலத்தை வெடிகுண்டு வைத்துத் தகர்த்தனர்.
நொறுக்கு	சிறுசிறு பகுதிகளாக ஆகுமாறு உடைத்தல்.	நொறுக்குபவர், நொறுக்கப்படும் பொருள்.	நொறுக்குபவர் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடராக வரும். நொறுக்கப்படும் பொருள் செயப்படுபொருளாகச் செயல்பட்டு – ஐ வேற்றுமைத் தொடராக வரும்.	பெ.தொ+பெ.தொ-ஐ+நொறுக்கு	அவன் அப்பளத்தை நொறுக்கி அவள் தலையில் போட்டான்.
இடி	கட்டப்பட்ட அமைப்பு ஒன்றைக் கருவியால் தாக்கி உடைத்தல், தகர்த்தல்.	இடிப்பவர், இடிக்கப்படும் பொருள்.	இடிப்பவர் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடராக வரும். இடிக்கப்படும் பொருள் செயப்படுபொருளாகச் செயல்பட்டு – ஐ வேற்றுமைத் தொடராக வரும்.	பெ.தொ+பெ.தொ-ஐ+இடி	அதிகாரிகள் போக்குவரத்துக்கு இடையூறாக இருந்த கட்டிடங்களை இடித்துத் தள்ளினார்.

தவிடு பொடியாக்கு	சிறுசிறு துண்டுகளாக்குதல் தூள் தூளாக்குதல்.	தவிடு பொடியாக்குபவர், தவிடு பொடியாக்கப்படும் பொருள்.	தவிடு பொடியாக்குபவர் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடராக வரும். இடிக்கப்படும் பொருள் செயப்படு பொருளாகச் செயல்பட்டு –ஐ வேற்றுமைத் தொடராக வரும்.	பெ.தொ+பெ.தொ-ஐ+தவிடு பொடியாக்கு	அவர்கள் அந்த கட்டிடத்தை இடித்து தவிடு பொடியாக்கினர்.
சுக்கு நூறாக்கு	சிறுசிறு துண்டுகளாக்குதல், தூள் தூளாக்குதல்.	சுக்கு நூறாக்குபவர், சுக்கு நூறாக்கப்படும் பொருள்.	சுக்கு நூறாக்குபவர் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடராக வரும்.சுக்கு நூறாக்கப்படும்பொருள் செயப்படுபொருளாகச் செயல்பட்டு – ஐ வேற்றுமைத் தொடராக வரும்.	பெ.தொ+பெ.தொ-ஐ+சுக்கு நூறாக்கு	அவள் கண்ணாடியைக் கீழே போட்டு சுக்கு நூறாக்கினாள்.

5.3.17 நசுக்குதல் வகை வினைகள்

வினை	பொருள்	பங்கெடுப்பாளர்கள்	பங்கெடுப்பாளர்களின் புற உருப்படுத்தம்	பங்கெடுப்பாளர்களின் அமைப்பு	எடுத்துக்காட்டு
நசுக்கு	ஒன்றை ஒரு	நசுக்குபவர்,	நசுக்குபவர்	பெ.தொ+பெ.	அவன்

	பரப்பில் வைத்து அழுத்தி தேய்த்து துகள்களாக்குதல்.	நசுக்கப்படும் பொருள்.	எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடராக வரும். சுக்கு நசுக்கப்படும் பொருள் செயப்படுபொருளாகச் செயல்பட்டு – ஐ வேற்றுமைத் தொடராக வரும்.	தொ-ஐ+நசுக்கு	பீடித் துண்டைக் காலில் போட்டு நசுக்கினான்.
நை	நையச் செய்தல், நசுக்குதல்.	நைப்பவர், நைக்கப்படும் பொருள்.	நைப்பவர் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடராக வரும். நைக்கப்படும் பொருள் செயப்படுபொருளாகச் செயல்பட்டு – ஐ வேற்றுமைத் தொடராக வரும்.	பெ.தொ+பெ.தொ-ஐ+நை	கார் சக்கரம் காலை நைத்து விட்டது.
சதை (வட்டார வழக்கு)	நசுக்குதல்	சதைப்பவர், சதைக்கப்படும் பொருள்.	சதைப்பவர் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடராக வரும். சதைக்கப்படும் பொருள் செயப்படுபொருளாகச் செயல்பட்டு –	பெ.தொ+பெ.தொ-ஐ+சதை	அவள் இஞ்சியை அம்மியில் வைத்துச் சதைத்து குழம்பில் போட்டாள்.

			ஐ வேற்றுமைத் தொடராக வரும்.		
மசி	நசுக்கி மாவு அல்லது கூழ் போன்ற மென்மையான நிலைக்கு வரச் செய்தல்.	மசிப்பவர், மசிக்கப்படும் பொருள்.	மசிப்பவர் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடராக வரும். மசிக்கப்படும்பொருள் செயப்படுபொருளாகச் செயல்பட்டு – ஐ வேற்றுமைத் தொடராக வரும்.	பெ.தொ+பெ.தொ-ஐ+மசி	அவள் பருப்பை வேகவைத்து மசித்துக் குழந்தைக்குக் கொடுத்தாள்.
அரை	நைத்து மாவாக்குதல் அல்லது கூழாக்குதல், பொடித்தல்.	அரைப்பவர், அரைக்கப்படும் பொருள்.	அரைப்பவர் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடராக வரும். அரைக்கப்படும் பொருள் செயப்படுபொருளாகச் செயல்பட்டு –ஐ வேற்றுமைத் தொடராக வரும்.	பெ.தொ+பெ.தொ-ஐ+அரை	அவள் சட்னிக்கு வேண்டி தேங்காயை அம்மியில் வைத்து அரைத்தாள்.
இடி	அரிசி, பருப்பு போன்றவற்றை உலக்கையால் குத்தி மாவு தயாரித்தல்.	இடிப்பவர், இடிக்கப்படும் பொருள்.	இடிப்பவர் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடராக வரும். இடிக்கப்படும் பொருள் செயப்படுபொருளா	பெ.தொ+பெ.தொ-ஐ+இடி	அவள் இடியாப்பத்திற்கு வேண்டி அரிசியை இடிக்கிறாள்.

			கச் செயல்பட்டு – ஐ வேற்றுமைத் தொடராக வரும்.		
பொடி	தூளாக்குதல்	பொடிப்பவர், பொடிக்கப்படும் பொருள்.	பொடிப்பவர் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடராக வரும்.பொடிக்கப்படும் பொருள் செயப்படுபொருளாகச் செயல்பட்டு – ஐ வேற்றுமைத் தொடராக வரும்.	பெ.தொ+பெ.தொ-ஐ+பொடி	அவள் மாத்திரையைப் பொடித்து தேனில் குழப்பி உண்டாள்.
நுணுக்கு	கல் முதலியவற்றால் தட்டி அல்லது அம்மியில் வைத்து பொடியாக்குதல்.	நுணுக்குபவர், நுணுக்கப்படும் பொருள்.	நுணுக்குபவர் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடராக வரும்.நுணுக்கப்படும் பொருள் செயப்படு பொருளாகச் செயல்பட்டு –ஐ வேற்றுமைத் தொடராக வரும்.	பெ.தொ+பெ.தொ-ஐ+நுணுக்கு	அவள் மாத்திரையை நுணுக்கித் தேனில் கலந்து குழந்தைக்குக் கொடுத்தாள்.

5.3.18 மெல்லுதல் வகை வினைகள்

வினை	பொருள்	பங்கெடுப்பாளர்கள்	பங்கெடுப்பாளர்	பங்கெடுப்பாளர்	எடுத்துக்கா

			களின் புற உருப்படுத்தம்	களின் அமைப்பு	ட்டு
மெல்லு	உணவுப் பாருள் முதலியவற்றை வாயில் போட்டு பற்களால் கடித்து அரைத்தல்.	மெல்லுபவர், மெல்லப்படும் பொருள்.	மெல்லுபவர் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடராக வரும். மெல்லப்படும் பொருள் செயப்படு பொருளாகச் செயல்பட்டு –ஐ வேற்றுமைத் தொடராக வரும்.	பெ.தொ+பெ. தொ-ஐ+மெல்லு	அரிசியை வாயில் போட்டு மென்றான்.
சவை (வட்டார வழக்கு)	மெல்லுதல்.	சவைப்பவர், சவைக்கப்படும் பொருள்.	சவைபவர் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடராக வரும்.சவைக்கப்படும் பொருள் செயப்படு பொருளாகச் செயல்பட்டு –ஐ வேற்றுமைத் தொடராக வரும்.	பெ.தொ+பெ. தொ-ஐ+சவை	அவள் எப்போதும் ஏதாவது வாயில் போட்டுக் கொண்டு சவைக்கிறாள்.
அரை	மெல்லுதல்.	அரைப்பவர், அரைக்கப்படும் பொருள்.	அரைப்பவர் எழுவாயாக முதல் வேற்றுமைத் தொடராக வரும். அரைக்கப்படும்	பெ.தொ+பெ. தொ-ஐ+அரை	அவன் எதையாவது வாயில் போட்டு அரைத்துக்

			பொருள் செயப்படு பொருளாகச் செயல்பட்டு –ஐ வேற்றுமைத் தொடராக வரும்.		கொண்டே இருக்கிறான்.

5.4 முடிவுரை

இவ்வியலில் தமிழ் வினைகள் யாவும் பொருண்மைக் கூறாய்வு அடிப்படையில் பொருண்மைக் களங்களாகப் பகுக்கப்பட்டு ஒவ்வொரு வினைக்கும் பங்கெடுப்பாளர் சட்டகம் தரப்பட்டுள்ளது. பங்கெடுப்பாளர் புற அமைப்பில் பெறும் வேற்றுமை உருபு அமைப்புகளும் விளக்கப்பட்டுள்ளது.

இயல் - 6

முடிவுரை

தமிழ் வாக்கியங்களின் பொருண்மையியல் அமைப்பு என்ற இவ்வாய்வு ஒரு வருணனை மொழியியல் ஆய்வாகும். தமிழ் வாக்கியங்களுக்குப் பொருண்மை அமைப்பு தரும் எந்த முனைப்பும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை என அறுதியிட்டுக் கூறலாம். சொற்பொருண்மையியல் அடிப்படையிலான ஆய்வுகள்தான் தமிழ்மொழிக்கு மேற்கொள்ளப்பட்டு ஆய்வு ஏடுகளாகவும் நூல்களாகவும் கட்டுரைகளாகவும் வெளிவந்து உள்ளன. தமிழின் பொருண்மைய அமைப்பை வடிவமைப்பதுதான் இவ்வாய்வின் முக்கிய குறிக்கோளாக அமைகின்றனது.

மேற்சொன்ன நோக்கத்தைப் பூர்த்திசெய்ய வேண்டி இரு பொருண்மையியல் கோட்பாடுகள் எடுத்துக்கொள்ளப்பட்டன. முதலாவது எடுத்துக்கொள்ளப்பட்ட ஆய்வச் சட்டகம் லீச் என்பவரால் விளக்கப்பட்டுள்ள ஆங்கில வாக்கியங்களின் பொருண்மையியல் அமைப்பு ஆகும். லீச் சொற்பொருண்மைக்கூறாய்வை அடிப்படையாக வைத்துக்கொண்டு தாக்க

உறவுகள் அடிப்படையில் ஆங்கில வாக்கியங்களின் பொருண்மையியல் அமைப்பை விளக்குகின்றார். இக்கோட்பாடு அடிப்படையில் தமிழ் வாக்கியங்களின் பொருண்மையியல் அமைப்பை விளக்கும் முயற்சி இங்கு மேற்கொள்ளப்பட்டள்ளது.

அடுத்ததாக தமிழ் வாக்கியங்களின் பொருண்மையியல் அமைப்பை விளக்க எடுத்துக்கொள்ளப்பட்ட ஆய்வுச் சட்டகம் சௌவா (Sowa, 1984) என்பவரால் விளக்கப்படும் 'கருத்துரு அமைப்பு' என்பதாகும். சொற்களையும் வாக்கியங்களையும் கருத்துருக்களாகவும் அவற்றிற்கிடையே வரும் உறவுகளாகவும் பகுத்தாயலாம் என்ற அடிப்டையில் தமிழ் வாக்கியங்களை ஆய முயற்சி எடுக்கப்பட்டுளது. இது ஒரு முழுமையான வருணனை ஆய்வல்ல. ஒரு மாதிரி ஆய்வுதான். தமிழ் வாக்கியங்களை இவ்வாறு ஆயவியலும் என்பதுதான் இங்கு விளக்கப்படுகின்றது. கருத்துருக்களுக்கு இடையிலுள்ள சாத்தியமான உறவுகளும் இங்கு பட்டியலிடப்பட்டுத் தரப்பட்டுள்ளன.

இதற்கு அடுத்தாக வினைகளின் பங்கெடுப்பாளர் அமைப்பு ஆய்வு தரப்பட்டுள்ளது. இது மேற்சொன்ற இரு ஆய்வுச் சட்டகத்திற்கும் அடிப்படையாக அமையும். தமிழ் வினைகள் யாவும் பொருண்மைக் கூறாய்வு அடிப்படையில் பொருண்மைக் களங்களாகப் பகுக்கப்பட்டு ஒவ்வொரு வினைக்கும் பங்கெடுப்பாளர் சட்டகம் தரப்பட்டுள்ளது. பங்கெடுப்பாளர் புற அமைப்பில் பெறும் வேற்றுமை உருபு அமைப்புகளும் விளக்கப்பட்டுள்ளது.

இவ்வாய்வில் முக்கியமாகத் தமிழ் வாக்கியங்களின் பொருண்மையியல் அமைப்பை வாய்பாட்டு விதிகளாகத் தர முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. தமிழ் சொற்களைப் பொருண்மைக்கூறு ஆய்வு அடிப்படையில் ஆய்ந்து அவற்றிற்கிடையே உள்ள உறவுகளைத் தர்க்கப் பொருண்மையியல் உறவுகளாக வெளிப்படுத்தவும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. தமிழ் வாக்கியங்களைத் தேற்றக்கூற்றுகளாகப் பகுத்து இத்தேற்றக் கூற்றுகளை வினைப்பாட்டின் பங்கெடுப்பாளர்களாகவும் பயனிலைகளாகவும் உருப்படுத்தம் செய்ய இயலும் என்பதும் இவ்வாய்வின் மூலம் வெளிப்படும். மேலும் சௌவாவின் (Sowa, 1984) கோட்பாடு அடிப்படையில் தமிழ் வாக்கியங்களைக் கருத்துருக்களாகவும் கருத்துரு உறவுகளாகவும் ஆய்ந்து கருத்துருவரைபடங்களாக மெய்படுத்தம் செய்யவும் முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. தமிழ் வாக்கியங்களின் பொருண்மையியல் அமைப்பை வாய்பாட்டு விதிகளாகத் **தருவது** இவ்வாய்வின் முதன்மையான செயல்பாடாகும். தமிழ் சொற்களைப் பொருண்மைக்கூறு ஆய்வு

அடிப்படையில் ஆய்ந்து அவற்றிற்கிடையே உள்ள உறவுகளைத் தர்க்கப் பொருண்மையியல் உறவுகளாக வெளிப்படுத்தவும் இவ்வாய்வு முயன்றுள்ளது. தமிழ் வாக்கியங்களைத் தேற்றக்கூற்றுகளாகப் பகுத்து இத்தேற்றக் கூற்றுகளை வினைப்பாட்டின் பங்கெடுப்பாளர்களாகவும் பயனிலைகளாகவும் உருப்படுத்தம் செய்ய இயலும் என்பதும் இவ்வாய்வின் மூலம் வெளிப்படும். மேலும் சொவாவின் (Sowa, 1984) கோட்பாடு அடிப்படையில் தமிழ் வாக்கியங்களைக் கருத்துருக்களாகவும் கருத்துரு உறவுகளாகவும் ஆய்ந்து கருத்துருவரைபடங்களாக மெய்படுத்தம் செய்யவும் இவ்வாய்வு முயன்றுள்ளது. தமிழ் வாக்கியங்களின் பொருண்மையியல் அமைப்பை வாய்பாட்டு விதிகளாகத் தரவும் இவ்வாய்வு முயன்றுள்ளது. தமிழ் சொற்களைப் பொருண்மைக்கூறு ஆய்வு அடிப்படையில் ஆய்ந்து அவற்றிற்கிடையே உள்ள உறவுகளைத் தர்க்கப் பொருண்மையியல் உறவுகளாக வெளிப்படுத்தவும் தமிழ் வாக்கியங்களைத் தேற்றக்கூற்றுகளாகப் பகுத்து இத்தேற்றக் கூற்றுகளை வினைப்பாட்டின் பங்கெடுப்பாளர்களாகவும் பயனிலைகளாகவும் உருப்படுத்தம் செய்யவும் இவ்வாய்வு முயன்றுள்ளது. மேலும் சொவாவின் (Sowa, 1984) கோட்பாடு அடிப்படையில் தமிழ் வாக்கியங்களைக் கருத்துருக்களாகவும் கருத்துரு உறவுகளாகவும் ஆய்ந்து கருத்துருவரைபடங்களாக மெய்படுத்தம் செய்யவும் முயற்சி செய்யப்பட்டுள்ளது.

இது தமிழ் வாக்கிய அமைப்பைப் பொருண்மையியல் அமைப்பில் தரும் முன்னோடியான ஆய்வாகும். இத்தகைய வாக்கியப் பொருண்மை அமைப்புகள் அறிவுப் பரிமாற்றத்திற்கும் செயற்கை அறிவு உருப்படுத்தத்திற்கும் அறிவுவள மேம்பாட்டிற்கும் கருத்துருசார் அகராதி உருவாக்கத்திற்கும் இயந்திர மொழிப்பெயர்ப்புக்கும் பயனுள்ளதாக அமையும். தகவல் மீட்பு அமைப்பொழுங்குகளிலும் செயற்கை அறிவு அமைப்பொழுங்குகளிலும் பயன்படும். இடைமொழி சார்ந்த இயந்திர மொழிப்பெயர்ப்புக்கு இது இன்றியமையாத இடைமுகமாக அமையும்.

துணை நூற்பட்டியல்

சண்முகம். செ., 1989. பொருண்மையியல். அண்ணாமலை நகர், அனைத்திந்திய மொழியியற் கழகம்.

இராசேந்திரன். எஸ்.எல்., 1991 "தற்காலத் தமிழ் சொற்களஞ்சிய உருவாக்கம்". (பகுதி 1) தமிழ்கலை, 9.1-4:55:76.

சக்திவேல்.சு.,& இராசேந்திரன். ச., 1994. சொற்கள் (வாழ்வும் வரலாறும்). சென்னை, மணிவாசகர் பதிப்பகம்.

இராசேந்திரன்.ச., 2001. "தற்காலத் தமிழ்ச் சொற்களஞ்சியம்". தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி, க்ரியா, சென்னை. இராசேந்திரன், ச. மற்றும் பாஸ்கரன், ச. 2004.

Chafe, W. 1970. Meaning and Structure of Language. Chicago University of chicago press.

---------- 2000. Meaning in Language: An Ingroduction to Semantics and pragmatics. Offord, New york: Oxford University Press.

Dixon,P.M.W. 1971.A Method of Semantics Description. In steinberg, D.D. and Jakobovits L.A.(ed) Semantics. New york: Cambridge University Press.

Fellbaum,C. 1990. English verbs as a Semantic Net. International Journal of Lexicography. 3.4:278-301.

Grimshaw.J.1990. Argument Structure Cambridge: MIT Press.

Gruber, J.1976. Lexical Structures in Syntax and Semantics. New York: North Holland.

Jakendoff, R. 1972. Semantic Interpretation in Generative Grammar. Cambridge. MA: MIT Press.

----------1983. Semantics and Cognition Cambridge M.A. : MIT Press.

----------1990. Semantics Structures. Cambridge M.A: MIT Press.

Katz,J.J. 1972. Semantic Therory. New York: Harpev & Row.

Katz.J.J. and Foder, J.A.1963. "The Structure of a Semantic Theory". Language.

Leech, G.N.1974. Semantics. Harmondsworth. Penguin.

Leherer, A. 1974. Semantic Fields and Lexical Structure. London: North Holland publishing company.

---------- 1993. English Verb Classes and Alternations. Chicago and London: University of chicago Press.

Lyons:J. 1963. Structural Semantics: Oxford. Blackwell.

---------- 1975. Linguistics Semantics. 2 Volumes New York. Cambridge University Press.

---------- 1995. Linguistics Semantics: An Introduction. Cambridge: cambridge University Press.

Pustyovsky.J. The Generative Lexion. Cambridge Massachusetts: The MIT Press.

---------- 1978. Syntax and Semantics of Tamil Verbs (manuscript) Ph.D. Thesis Poona: University of poona.

----------1981. Semantics Structure of Tamil Verbs In: 13th All India Teacher's Association Conference aayvukkovai, vol. 2.305-310.

---------- 1982. "Verbs of seeing in Tamil" Poona: Bulletin of the Deccan College Research Institute 41:151- 159.

---------- 1983. Semantic Structure of Directions Verbs of